Koviloor Digital Library

திண்டுக்கல் மாவட்டத் தொல்லியல் கையேடு

பொதுப் பதிப்பாசிரியர்
முனைவர் சீதாராம் குருமூர்த்தி இ.ஆ.ப.

ANo: 13601
HD

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
2007

Koviloor Digital Library

Koviloor Digital Library

வ 6-5
26.

திண்டுக்கல் மாவட்டத் தொல்லியல் கையேடு

பொது பதிப்பாசிரியர்

முனைவர் சீதாராம் குருமூர்த்தி, இ.ஆ.ப.

முதன்மை ஆணையர்

ஆசிரியர்கள்

பொ. இராசேந்திரன்

முனைவர் வெ. வேதாசலம்

முனைவர் சொ. சாந்தலிங்கம்

KOVILOOR ANDAVAR
A. No. 13601
LIBRARY, KOVILOOR

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

2007

ACC NO: 13601
ND

Koviloor Digital Library

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**Dindukkal Mavatta Tholliyal Kaiyedu**
Editor	:	Principal Commissinor
Copy Right	:	T.N. State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	186
Year	:	2007
Type Point	:	11
No.of. Pages	:	240
Paper Used	:	80 Gsm Maplitho
Type Setter	:	**Cavin Laser Printers** 19/9, Devaraja St, Triplicane, Chennai - 5 Cell: 9940351234
Printer	:	TAMCOS, Royapettah, Chennai- 600 014.
Publisher	:	**State Dept. of Archaeology,** Tamil Valarchi Valagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price		**Rs. 81/-**

NAVALAR ... LIBRARY KOVILOOR

Koviloor Digital Library

6-5

பதிப்புரை

'திண்டுக்கல் மாவட்டத் தொல்லியல் கையேடு' என்னும் இந்நூல் இம்மாவட்டத்தின் வரலாற்றைத் தொல்பழங்காலம் தொடங்கி அண்மைக்காலம் வரை விரிவாகக் கூறுகிறது. இயற்கையான மலைவளமும், நிலவளமும் மிக்க நிலப்பகுதியாகவும், பாண்டிய நாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் இணைப்பான நிலப்பரப்பாகவும் பாண்டிய நாட்டையும் சோழ நாட்டையும் இணைக்கும் எல்லைப்புறமாகவும் உள்ளது இம்மாவட்டம். கொடைக்கானல், சிறுமலை, பழனி முருகன் தலம் எனப் பல சிறப்பான வரலாறு மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் கொண்ட இடங்களையும் உள்ளடக்கியது இம் மாவட்டம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கிடைத்த தொல்பழங்காலச் சின்னங்களையும், வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ் - பிராமி கல்வெட்டுகளையும், கலையமுத்தூரில் கிடைத்த ரோமானிய நாணயங்களையும் கொண்டு இம்மாவட்டத்தின் தொன்மை வரலாறு அறியப்படுகிறது. அண்மையில் தமிழ் நாடு அரசுத் தொல்லியல் துறை கல்வெட்டு முனைப்புத் திட்டம் என்னும் வகையில் இம்மாவட்டத்தில் இதுவரை அறியப்பட்ட அனைத்துக் கல்வெட்டுகளையும் படிஎடுத்துப் படித்துள்ளது. அதன் அடிப்படையில் அனைத்துத் தகவல்களும் தக்க சான்றுகளுடன் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. அகழாய்வில் கிடைத்த அண்மைக்கால முடிவுகளும் கூட இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தின் பிற்கால வரலாற்றை அறிவதில் பெரிதும் துணை நிற்பவை பாளையப்பட்டு வம்சாவழிக் குறிப்புகள் ஆகும். அவை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு இந்நூலில் பிற்கால வரலாறு எழுதப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் சங்ககாலப் பாண்டியர், முற்கால மற்றும் பிற்கால பாண்டியர், கொங்குச்சேரர், கொங்குச் சோழர், விசய

Koviloor Digital Library

நகரர், மதுரை நாயக்கர், இசுலாமியர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிகளுக்குரிய ஆவணங்கள் கிடைத்துள்ளன. அவற்றை பகுத்து ஆய்வு செய்து விரிவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இத்தொல்லியல் கையேட்டினை எழுதுவதில் பெரும்பங்கு வகித்தவர்கள் மதுரைக் கல்வெட்டாய்வாளர்கள் திரு.பொ. இராசேந்திரன், முனைவர். வெ. வேதாசலம், தொல்லியல் அலுவலர் முனைவர் சொ. சாந்தலிங்கம் ஆகியோர் ஆவர். இதனை அச்சுக்குத் தயார் செய்து பதிப்பிக்கும் பணியில் முழுமையாகப் பணியாற்றியவர் சென்னைச் சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர் முனைவர் சு. இராசகோபால் இவர்கள் நால்வருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்து:க கொள்கிறேன்.

இத்துறையின் அனைத்து வெளியீடுகளுக்கும் நிதி உதவி அளித்து ஊக்குவித்துவரும் தமிழ் நாடு அரசிற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொல்லியல் ஆர்வலர்களும், வரலாற்று மாணவர்களும், அறிஞர்களும் இக்கையேட்டினை வரவேற்றுப் பயன் பெற வேண்டும் என்பது எனது அவா.

09-03-07 **சீதாராம் குருமூர்த்தி**

சென்னை - *8* முதன்மை ஆணையர்

Koviloor Digital Library

6-5

உள்ளடக்கம்

பதிப்புரை		
வரலாற்று பின்னணி		1–20
வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்		21–193
1.	ஒட்டன் சத்திரம் வட்டம்	21
2.	கொடைக்கானல் வட்டம்	46
3.	திண்டுக்கல் வட்டம்	59
4.	நத்தம் வட்டம்	106
5.	நிலக்கோட்டை வட்டம்	119
6.	பழனி வட்டம்	139
7.	வேடசந்தூர் வட்டம்	175
பிற்சேர்க்கை		194–213
படங்கள்		214–229

Koviloor Digital Library

Koviloor Digital Library

வரலாற்றுப் பின்னணி

தேனூறும் கனிகள் சிந்தும் சிறுமலை, கோடையிலே இளைப்பாற குளிர்தருக்கள் நிறைந்த கொடைக்கானல், பக்தி மணம் பரப்பும் முருகன் படைவீடுகளுள் ஒன்றான பழனிமலை என மலை வளமும், இயற்கை நிலவளமும் நிறைந்த நிலப்பரப்பு திண்டுக்கல் மாவட்டம். அண்மைக்காலத்தில் மதுரை மாவட்டத்தைத் தமிழ்நாடு அரசு மதுரை, தேனி, திண்டுக்கல் என மூன்று மாவட்டங்களாகப் பிரித்தது. திண்டுக்கல் பகுதியின் வரலாறு பாண்டிய நாட்டின், குறிப்பாக மதுரைப் பகுதியின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்தது. சமூக ரீதியாகவும், நிலவியல் தொடர்பாகவும், வரலாற்று அளவிலும் பெருமளவில் மதுரையோடு திண்டுக்கல் உறவு கொண்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தின் வரலாறு தொல்பழங்காலம் தொடங்கி அண்மைக்காலம் வரை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

தொல்பழங்காலம்

தமிழகத்தின் தென்பகுதியில் பழைய கற்காலப் பண்பாட்டுச் சான்றுகள் எவையும் இதுவரை கண்டறியப்படவில்லை. மதுரைக்கு அருகிலுள்ள ஆவியூர் என்னுமிடத்தில் கிடைத்த ஒரே ஒரு பழைய கற்காலக் கருவியைக் கொண்டு அக்கால மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர் எனக் கருதமுடியாது. வட மதுரை என்னுமிடத்தில் பழங்கற் காலக் கருவிகள் கிடைத்துள்ளன. ஆனால் .இவ்வூர் திருச்சி, திண்டுக்கல் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வடமதுரை அல்ல. திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்த ஓர் ஊராகும்.

அடுத்த கட்டமான நுண்கற்கருவிகள் மற்றும் புதியகற்காலக் கருவிகள் பயன்படுத்திய மக்களும் தற்போதைய திண்டுக்கல் மாவட்டத்தில் வாழ்ந்ததற்கான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் இம்மாவட்டத்திற்கு அருகாமையில் உள்ள தேனி மாவட்டம் போடி நாயக்கனூர் ஓடைப்பகுதியில்

Koviloor Digital Library

நுண்கற்கருவிகள் கண்டறியப்பட்டுள்ளன. சிலைமலை பகுதிகளில் ஒரு சில புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன.

தொல் பழங்காலத்தின் அடுத்த கட்டம் பெருங்கற் படைக்காலம் (Megalithic Period) ஆகும். இக்காலத்தில் இரும்பின் பயன்பாட்டை மக்கள் அறிந்தனர். எனவே, இதனை இரும்புக் காலம் (Iron age) அல்லது உலோக காலம் என்றும் கூறுவர். தமிழ்நாட்டில் சங்ககாலம் என்பதும் இக்காலத்தோடு ஒன்றிச் செல்லும். மக்கள் எழுத்தறிவு பெற்ற காலம் இதுவே எனக் கூறலாம். நிலையான தங்குமிடங்களை அமைத்துக் கொண்டு, வேளாண்மையை அறிந்த ஒரு கூட்டுச் சமூக வாழ்க்கையாக மக்கள் வாழ்ந்த காலம் இது எனவும் கருதலாம். தென் தமிழகத்தைப் பொறுத்த அளவில் கி.மு. 500 இல் இக்காலம் தொடங்குவதாகக் கருதலாம்.

பெருங்கற்காலச் சின்னங்கள்

பெரிய பெரிய கற்களைக் கொண்டு மக்கள் ஈமச்சின்னங்களை இக்காலத்தில் அமைத்ததால் இதனைப் பெருங்கற்படைக்காலம் எனக் கூறுவர். கல்திட்டை, கல்பதுக்கை, கற்குவை, முதுமக்கள் தாழிகள் எனப் பலவகையான வடிவங்களில் இக்காலத்திய ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டன. திண்டுக்கல் மாவட்டத்தில், நெய்க்காரப்பட்டி, அயிரைமலை, பெரிய கோட்டை, பழனி, கலையமுத்தூர், இரவிமங்கலம்., சிறுமலை, அம்பாத்துறை, கருமலை, அம்பிளிக்கை மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் தாண்டிக்குடி, கே.சி. பட்டி,பெருமாள்மலை, பன்றி மலை ஆகிய பகுதிகளிலும் இத்தகைய பெருங்கற்படைச் சின்னங்கள் மிகுதியாகக் கண்டறியப்பட்டுள்ளன. பொதுவாகப் பெருங்கற்காலப் பண்பாடு கருநாடகப் பகுதியிலிருந்து தமிழகத்திற்குப் பரவியதாகக் கூறப்படுவதுண்டு. திண்டுக்கல் மாவட்டத்தின் மேற்கில் அமைந்துள்ள கோவை,பெரியார் மாவட்டங்களிலும் குறிப்பாக ஆனைமலை, பொள்ளாச்சி, தாராபுரம் பகுதிகளிலும் மிகுதியான பெருங்கற்சின்னங்கள் கண்டறியப்பட்டுள்ளன. எனவே கொங்கு நாட்டுப் பகுதிகளிலிருந்தே பழனி மலைப் பகுதி வழியாகத் திண்டுக்கல் மாவட்டத்தில் இப்பண்பாடு பரவியிருக்க வேண்டும். சிறுமலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு மேற்பரப்பு ஆய்வில்

Koviloor Digital Library

முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றினுள் இரும்புக் கருவிகளும், இருபதுக்கும் மேற்பட்ட சூதுபவள (Carnelian Beads) மணிகளும் சேகரிக்கப்பட்டுள்ளன சூதுபவள மணிகள் செய்வதற்கான மூலக்கற்கள் குஜராத் பகுதியிலிருந்தே கொண்டுவரப்பட வேண்டும். ஈரோடு மாவட்டம் கொடுமணலில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் ஆயிரக்கணக்கில் சூதுபவள மணிகள் கிடைத்துள்ளன. அங்கிருந்து திண்டுக்கல் பகுதிக்கும் இம்மணிகள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

சங்ககாலம்

பெருங்கற்படைக் காலத்தைக் கி.மு. 500 முதல் கி.பி. 500 வரை தமிழகத்தில் கணக்கிடுவர். சங்ககாலம் என்பதும் இக்கால வரையரைக்குள் (கி.மு 300-கி.பி. 300) அடங்குவதே. சங்ககாலச் சிற்றரசர்கள் திண்டுக்கல் பகுதியில் பழனி, கொடைக்கானல் மலைக்குத் தலைவர்களாக இருந்து ஆட்சி செய்துள்ளனர். அவர்களைப் பற்றி சங்கப் புலவர்கள் பாடிய பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. சங்க காலத்தில் பழனி மலை பொதினி என (அக; 1- அடி 4) பெயர்பெற்றிருந்தது. இப்பகுதியை ஆவியர் குடியைச் சேர்ந்த பேகன் என்னும் குடித்தலைவன் ஆண்டு வந்தான். அவனை வேள் ஆவிக் கோப்பெரும் பேகன் என்று அழைப்பர். வேள் என்பது குறுநில மன்னர்களைக் குறிக்கும் முற்காலச் சொல் ஆகும். வேள் என்பதை தவறுதலாக வெள் ஆவிக் கோப்பெரும் பேகன் என்று அழைப்பதும் உண்டு. இம்மன்னனின் வீரத்தைப் பற்றியும், கொடைச் சிறப்பு பற்றியும் புலவர்கள் பலர் பாடியுள்ளனர். பரணர், கபிலர், அரிசில் கிழார் பெருங்குன்றூர்க்கிழார் ஆகிய புலவர்கள் பாடிய பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. (புறம் 141 - 147 பாடல்கள்) கடையேழு வள்ளல்களில் ஒருவனான பேகனை வரையாமரபின் மாரி போல கொடுக்கும் ஈரநெஞ்சம் கொண்டவன் என்றும். 'படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ' என மயிலுக்குப் போர்வை தந்த அவனது மென்மை உணர்வும் இலக்கியங்களில் போற்றப்பட்டுள்ளன. ஆனால் அவன் தனது மனைவியைப் பிரிந்து பரத்தை மாட்டு ஒழுகியபோது அவனைப் புலவர்கள் இடித்துரைத்தும் பாடியுள்ளனர். வையாவிக்கோ ஆண்ட நாடு என்பதால் பிற்காலத்தில் இப்பகுதி வைகாவூர் நாடு

Koviloor Digital Library

எனப்பெயர் பெற்றது. இவ்வூருக்கு (பழனி) வையாபுரி எனவும் ஒரு பெயர் வழங்கலாயிற்று.

'கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல்நாடன் பேகன்' (சிறுபாண். அடி. 85–87)

என்னும் இலக்கிய வரிகள் பேகனைப் பெருங்கல் நாடன் என்று சுட்டும். சங்க காலத்தில் பெருங்கல் நாடு என வழங்கப்பட்ட பெயரே பிற்காலத்தில் பொங்கலூர் நாடு(அ) பொங்கலூர்க்கா நாடு என மருவி வழங்கியது போலும். ஏனெனில் இப்பகுதியில் காணப்படும் பல கல்வெட்டுகள் (எடுத்துக் காட்டாகக் கீரனூர்) பொங்கலூர்க்கா நாடு என்ற ஒரு நாட்டுப் பெயரைத் தாங்கியுள்ளன. பொங்கலூர் என்பது ஓர் ஊரின் பெயராகும். இது தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ளது. பெருங்கல் என்பதற்கும் பொங்கல் என்பதற்கும் எழுத்தளவில் பெரும் வேறுபாடு இல்லை. எனவே ஏடு பெயர்த்து எழுதுபவர்களின் தவறால் ஏற்பட்ட திரிபாக இதனைக் கருதவும் வாய்ப்புள்ளது.

வையாவிக்கோப் பெரும் பேகனைப் பாடிய அதே பரணரும், அரிசில் கிழாரும் அதியமான் நெடுமான் அஞ்சியையும் பாடியுள்ளனர். எனவே இரண்டு சிற்றரசர்களும் சமகாலத்தவர்கள் என்பது தெளிவாகிறது. பழனிக்கு அருகில் உள்ள கலையமுத்தூரில் 63 ரோமானிய நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் ஆய்வுக்குக்கிடைத்தவை 49 காசுகளே. இவையாவும் கி.பி. 1-2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அதாவது சங்ககாலத்தினுள் அடங்கிய காலமே. கோவை மாவட்டத்தில் கிடைத்த அரிய மணிகளை வாங்குகின்ற வணிகர்களின் போக்குவரத்து இப்பகுதியில் இருந்ததாலேயே இங்கு ரோமானிய நாணயங்கள் கிடைக்கின்றன எனலாம். மேலும் பெருங்கல் நாடான இப்பகுதியிலும் அரிய கல் மணி வகைகள் கிடைத்திருக்கலாம். அதன் காரணமாகவும் இப்பகுதி பெருங்கல் நாடு எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

பழனிப் பகுதிக்கு அடுத்த மலைத் தொடர் கொடைக்கானல் மலைத்தொடராகும். கோடைக்கானல் என்றும் இதனைக் குறிப்பர். கோடை காலத்திற்கு இதமளிக்கும் சோலைகள் சூழ்ந்த

Koviloor Digital Library

பகுதியே கானல் எனப்படும். சங்ககாலத்திலேயே இப்பகுதியில் பாண்டியர்களுக்கு அடங்கிய சிற்றரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். இன்றைய பெருமாள்மலை அடிவாரத்திலுள்ள நிலப்பகுதி கடியன்கானல் எனப்பட்டது. கடியன் என்னும் பெயர் கொண்ட குறுநிலத்தலைவன் இப்பகுதியை ஆட்சி செய்துள்ளான். கடியன் நெடுவேட்டுவன் என்று அவனது பெயர் வழங்கப்பட்டுள்ளது. இவனைப் பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் பாடியுள்ளார்.

'தாள் உளம் தவுத்த வான்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருந'

(புறம். 205)

இப்பாடலில் அவனது வீரமும் கொடைச் சிறப்பும் விதந்து கூறப்பட்டுள்ளது. இவனுக்குப் பின் 'பண்ணி' என்னும் தலைவன் இப்பகுதியை ஆண்டுள்ளான். பெருந்தலைச் சாத்தனாரே இவனையும் பாடியுள்ளது கொண்டு கடிய நெடுவேட்டுவன் என்னும் கோடைப் பொருநனும், பண்ணி என்பவனும் தந்தை மகனாக இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

'வரைநிலை இன்றி இரவலர்க்கு ஈயும்
வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்
பண்ணி தைஇய பயம் கெழு வேள்வியின்'

(அகம். 13)

பண்ணி என்பவன் ' தென்னவன் மறவன்' என்று இப்பாடலில் சுட்டப்படுவதால் இவன் பாண்டியர்களுக்குப் படையுதவி செய்தவன், அல்லது பாண்டியர்களின் படைத்தலைவன் என்றும் கொள்ளலாம். இவன் பெயரால் 'பண்ணிமலை' என்று வழங்கிய மலைத் தொடர் தற்போது பன்றி மலை என, மருவி வழங்குகிறது.

திண்டுக்கல் மாவட்டத்திலேயே நத்தம் வட்டத்தில் சமுத்திராபட்டிக்கு வடக்கில் செந்துறைக்கு அருகில் சிறுகுடி என்னும் பழமையான ஊர் உள்ளது. பாண்டிய நாட்டிற்கும் சோழநாட்டிற்கும் இடையில் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள இச் சிறுகுடி சங்க இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளது. இச் சிறுகுடியின் தலைவன் பண்ணன் என்பவன். இவன் வள்ளன்மையைச் சோழப் பெருவேந்தன் குளமுற்றத்துத் துஞ்சிய

Koviloor Digital Library

கிள்ளிவளவனே சிறப்பித்துப் பாடியுள்ளான். இச்சோழன் சிறுகுடிப் பண்ணனைப் பசிப்பிணி மருத்துவன் என்றும் 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' (புறம் . 173) என்றும் புகழ்ந்து பாடியுள்ளது கொண்டு பண்ணனது பெருமை புலப்படும்.

சோழன் கிள்ளிவளவனைப் பாடிய கோவூர் கிழாரும் சிறுகுடிப் பண்ணனைப் புகழுந்து பாடி அவனது கொடைத் தன்மையை உணர்த்துகிறார் (புறம் : 70). மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் என்றும் புலவர், சிறுகுடிப் பண்ணனின் வள்ளன்மையைச் சிறக்கப்பாடுகிறார்.

'வெள்ளி தென்புலத்து உறைய, விளைவயல்
பள்ளம்வாடிய பயன் இல் காலை
....
பெயர்க்கும் பண்ணற் கேட்டி ரோ' (புறம் 388)

என, மழை வளம் குன்றி வறுமை மிக்க காலத்தும் சிறுகுடிப் பண்ணன் வரையாது வழங்குபவன் எனச் சுட்டுகிறார் புலவர்.

'தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை' (அகம் 54)

'பொய்கை சூழ்ந்த பொய்யா யாணர்
வாணர் சிறுகுடி' (அகம் – 117)

என அகநானூற்றிலும் சிறுகுடி சிறப்பித்துப்பேசப் படுகிறது. மழைவளமும், மலைவளமும் மிக்க பகுதி எனவும் பண்ணன் என்னும்தலைவனால், அவனது கொடைச் சிறப்பால் புகழ் பெற்ற பகுதி எனவும் மேற்கண்ட இலக்கிய அடிகள் உறுதிப்படுத்து கின்றன.

கோடை மலையின் ஒரு பகுதியில் இன்று தாண்டிக்குடி என்னும் சிற்றூர் உள்ளது. இது சங்ககாலத்தில் தான்றிக்குடி என அழைக்கப்பட்டிருக்கலாம். இப்பகுதியை ஆண்ட தலைவன் 'தாமன் தோன்றிக் கோமான்' என்பவன். இவனை ஐயூர் முடவனார் என்னும் புலவர் (புறம் 399) பாடியுள்ளார். சோழன் கிள்ளிவளவனைக் காணச் சென்ற புலவரின் வண்டி தான்றிக்

Koviloor Digital Library

கோமான் நாட்டினருகே பழுதுபட்டது. அதுகண்டு அவன் காளைகளையும், ஆநிரைகளையும் அவர்க்கு வழங்கி மகிழ்வித்தான். இக் கொடைத்தன்மையை அவர் பாடுகின்றார். இச்சங்க கால ஊரில் ஆயிரக்கணக்கான பெருங்கற் சின்னங்கள் குறிப்பாக முதுமக்கள் தாழிகள் உள்ளன என்பதை அண்மைக்கால அகழாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இவ்வாய்வுகளின் மூலம் கி.மு 5ஆம் நூற்றாண்டு முதலே இங்கு மனித வாழ்க்கை இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வளம்மிக்க சிறுமலை என்னும் ஒரு மலை இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது. இம்மலையில் பெருங்கற்காலச் சின்னங்களும், தொல்பழங்காலப் பாறை ஓவியங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில் காணப்படும் பகுதி அருவிமலை என அழைக்கப்படுகிறது. மிகவும் உயரமான மலைப்பகுதியில் இவ்வோவியங்கள் உள்ளன. மிகுதியாக வெள்ளை வண்ணமும், சிவப்பும் கையாளப் பட்டுள்ளன. விலங்கின வடிவங்கள், அவைகளுக்கிடையே ஏற்படும் சண்டைக் காட்சி, வேட்டைக் காட்சி, மான் உருவங்கள், பெருந் தலைப்பாகை அணிந்த மனித உருவங்கள் ஆகியவை காணப்படுகின்றன. இவை பெருங்கற் காலத்தை ஒட்டிய காலத்தவையாகும். சிலப்பத்திகாரத்தில் இம்மலை தென்னவன் சிறுமலை என பாண்டியனுக்குரிய மலையாகக் குறிப்பிடப்படுகிறது. இம்மலையின் இயற்கை வளமும் வருணிக்கப்படுகிறது.

சங்ககாலக் கல்வெட்டுக்கள்

தமிழகத்தில் சங்ககாலக் கல்வெட்டுகள் என்னும் வகையில் தமிழ் - பிராமி கல்வெட்டுகள் இதுவரை 94 கண்டறியப் பட்டுள்ளன. அவற்றுள் மதுரையைச் சுற்றி மட்டும் 60 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவற்றின் கால எல்லையாக கி.மு 300 முதல் கி.பி. 300 வரை வரையரை செய்யப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள் பெரும்பான்மையும் சமண சமயத்துறவிகள் வாழ்ந்த குகைகளில் கற்படுக்கைகள் உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. ஆனால் முதன் முறையாக சமண சமயத்தோடு சற்றும் தொடர்பில்லாத சாதாரண மக்களின் ஈமச்சடங்கோடு தொடர்புடைய கற்பதுக்கைகளில் அண்மையில் சில தமிழ்-பிராமி கல்வெட்டுக்கள் கண்டறியப் பட்டுள்ளன.

Koviloor Digital Library

திண்டுக்கல் மாவட்டத்தின் எல்லையிலுள்ள தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டத்தினுள் அடங்கிய புலிமான் கோம்பை என்னும் சிற்றூரில் கிடைத்த கல்வெட்டுகள் மிகவும் குறிப்பிடத் தக்கவை. 'கூடலூர் ஆகோள்' என்ற ஒரு சொல் இவ்வூர் கல்வெட்டு ஒன்றில் இடம் பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் சுட்டப்படும் ஆகோள் பூசல் அதே சொல்லாட்சியில் கல்வெட்டில் இடம்பெற்றிருப்பது இதுவே முதன் முறையாகும். எனவே சமணம் தமிழகத்திற்கு வருவதற்கு முன்பாகவே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றிருந்தார்கள் என்பதற்கு இக்கல்வெட்டு சிறந்த சான்றாகும். அடுத்து திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு வட்டத்தில் தாதம்பட்டி என்னும் இடத்தில் அண்மையில் ஒரு தமிழ் பிராமி கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது. நெடுங்கல் (Menhir) என்னும் பெருங்கற்படைச் சின்னத்தின் கல்லில் படுக்கைவசமாக இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது.

'.... அன் அடி ஒன் பாகல் பாளி கல்'

என்பது இக்கல்வெட்டின்பாடம் ஆகும். கல்வெட்டின் தொடக்கம் சிதைந்துள்ளதால் யாருடைய அடியவன் என்பதை அறிய முடியவில்லை. முற்சொன்ன புலிமான் கோம்பை சிற்றூருக்கும், தாதம்பட்டிக்கும் இடையே 3 கி.மீ தொலைவு தான் உள்ளது. எனவே சமகாலத்திலேயே இப்பகுதியின் பலவிடங்களில் இத்தகைய எழுத்தறிவு பரவியிருந்தது என்பது உறுதி. இக்கல்வெட்டுகளின் காலத்தை கி.மு. 3 ஆம் நூற்றாண்டு என்று கணித்துள்ளனர் ஆய்வாளர்கள்.

இவை தவிர திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் மேட்டுப் பட்டி என்னும் இடத்தில் 1906 ஆம் ஆண்டு திரு. பிரான்சிஸ் என்பவர் சில தமிழ் பிராமி கல்வெட்டுகளைக் கண்டறிந்துள்ளார். மீண்டும் திரு. வெங்கையா என்னும் கல்வெட்டறிஞர் இதே இடத்தில் 1908 ஆம் ஆண்டு சில கல்வெட்டுகளைக் கண்டுபிடித்தார். மொத்தம் பத்து கல்வெட்டுகள் இங்குள்ளன. அவை:

1.அமணன் மதிரை அத்திரன் உறை உதயனஸ

2. அந்தை அரிய்தி

Koviloor Digital Library

3. அந்தை இராவதன்

4. (ம) திர அந்தை (வி) ஸுவன்

5. அந்தை சேந்தன் அதன்

6. சந்தந்தை சந்தன்

7. பதின் (ஊர்) அதை

8. குவிர அ(ந்தை) சேய் அதன்

9. குவிரந்தை வேள் ஆதன்

10. திடி இல் அதன்.

இக்கல்வெட்டில் முதன் முதலாக மதிரை, ஊர்ப்பெயர் குறிப்பிடப்படுகிறது. அமணன் என்ற அடைமொழியோடு சமணப் பெரியவரின் பெயரும் இடம் பெறுகிறது. திண்டுக்கல் நகரில் அமைந்துள்ள மலையிலும் சமணர் படுக்கைகள் உள்ளன. ஆனால் அவற்றில் கல்வெட்டுகள் எவையும் இல்லை. எனினும் சங்ககாலத்திலேயே திண்டுக்கல் நகரிலும் சமணத் துறவியர் வாழ்ந்தார் என உறுதியாக நம்பலாம்.

முற்பாண்டியர் காலம்

பாண்டிய நாட்டின் மிக முக்கியமான பகுதிகள் மதுரை, நெல்லை, இராமநாதபுரம் மாவட்டப்பகுதிகளாகும். திண்டுக்கல் மாவட்டம் கொங்கு நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையில் எல்லைப் புறத்தில் அமைந்த நிலப்பரப்பு. எனவே பாண்டிய வேந்தர்கள் மையப்பகுதியில் செலுத்திய கவனத்தை எல்லைப்புறப் பகுதியான திண்டுக்கல் பகுதியில் அவ்வளவாகச் செலுத்தவில்லை என்றே கூறலாம். ஏனெனில் பாண்டியர் காலக் கல்வெட்டுகள் பாண்டியர்களின் கோயிற்பணி மற்றும் அறப்பணி என்பவை மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இப்பகுதியில் காணப்படுகின்றன. ஆனால் பாண்டியர்களுக்கும், கொங்கு நாட்டுத் தலைவர்களுக்குமிடையே போர்கள் மூண்டுள்ளன. தகடூர் அதியர் மரபினரும் கூடப் பாண்டியருடன் ஆயிரவேலி அயிலூர் என்ற இடத்தில் மோதித் தோற்றுள்ளனர். இப்போர்களின் போது பாண்டியமன்னர்கள் திண்டுக்கல் பகுதிகளைக் கடந்து சென்றே கொங்குப்பகுதிகளை வென்று தம் வசப்படுத்தியுள்ளனர்.

Koviloor Digital Library

'பூவிரியும் பொழிற் சோலைக் காவிரியைக்கடந்திட்டு
அழகமைந்த வார்சிலையின் மழகொங்கம் அடிப்படுத்தும்
ஈண் டொளிய மணி இமைக்கும் எழிலமைந்த நெடும் புரிசைப்
பாண்டிக் கொடுமுடி சென்றெய்திப் பசுபதியதன் பதுமபாதம்
பணிந்தேத்தி'

என்னும் வேள்விக்குடிச் செப்பேட்டு வாசகங்கள் பாண்டியன் மாறவர்மன் முதலாம் ராஜசிம்மனின் (கி.பி 730-765) கொங்கு நாட்டு வெற்றிகளைச் சுட்டி நிற்கின்றன. எனவே இக்காலகட்டத்தில் பாண்டியர்களின் நேரடி ஆட்சியிலேயே திண்டுக்கல் பகுதியும் இருந்தது என்பது உறுதி. முற்பாண்டியரின் கல்வெட்டுகள் சில 8 முதல் 10 ஆம் நூற்றாண்டுவரை இப்பகுதியில் நிகழ்ந்த சில நிகழ்வுகளைக் கூறுகின்றன.

நத்தம் வட்டத்தில் உலுப்பக்குடி என்னும் சிற்றூரில் வழிபடப்படும் நடுகல் ஒன்று கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இக்கல்வெட்டில் நத்தம் பகுதி துவராபதி நாடு எனக் குறிப்பிடப்படுகிறது. பிற்காலக் கல்வெட்டுகளும் நத்தம் பகுதியைத் துவராபதி என்றே உறுதி செய்கின்றன. இப்பகுதியை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ரணசிங்க துவராபதி வேளான் நிருவகித்து வந்துள்ளான். ரணசிங்கன் என்னும் பெயர் கோச்சடையன் ரணதீரன் (கி.பி. 700-730) என்னும் மன்னன் பெயரை ஒட்டி வழங்கியதாகலாம். இவனுடைய படை நாயகன் உடும்பக்குடியில் ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற போது அதனைத் தொடர்ந்து சென்று மீட்க முயன்ற போரில் பள்ளி வேள் ஆசாரிகன் என்பவன் இறந்து பட்டான். அவன் நினைவாக இந்நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் பாண்டிய அரசன் பெயர் குறிப்பிடப்படவில்லையாயினும் எழுத்தமைதி கொண்டு இதனை கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கருதலாம். கோச்சடையன் ரணதீரன் என்னும் மன்னன் காலத்தைச் சேர்ந்தது இந்நடுகல் என்றே கருதலாம்.

வேடசந்தூர் வட்டத்தில் பெரும்புள்ளி என்னும் ஊரில் கிடைத்துள்ள கல்வெட்டு கி.பி. 8-9 ஆம் நூற்றண்டளவில் இப்பகுதியில் நிலவிய அரசியல் சூழலை அறியும் வகையில் உள்ளது. இப்பகுதி பள்ளி நாடு என்றும் இதனை ஆட்சி செய்தவர்கள் 'பள்ளி வேளான்' என்னும் குறுநிலத் தலைவர்கள்

Koviloor Digital Library

என்றும் பெறப்படுகிறது. நான்கு பள்ளி வேளான்கள் பெரும்புள்ளி கல்வெட்டில் கூறப்படுகின்றனர். பள்ளி வேளான், பராந்தக வேளான், அண்ட வேளான் குறும்பராதித்தன் புள்ளன் நக்கன், பள்ளி வேளான் நக்கம் புள்ளன் ஆகியோர் இவர்கள். முதலில் குறிப்பிடப்படும் பள்ளி வேளான் முற்பாண்டியமன்னன் முதலாம் ராஜசிம்மன் காலத்திய (கி.பி. 730-768) குறுநிலத் தலைவன். இவன் ராஜசிம்மனுக்கு ஆதரவாகக் குழும்பூர் போரில் பங்கு கொண்டு பல்லவர்களை வெல்ல உதவினான் என்று பெரும் புள்ளிக் கல்வெட்டும், வேள்விக்குடிச் செப்பேடும் கூறுகின்றன.

பள்ளி வேளானின் மகன் பராந்தக வேளான் பாண்டியமன்னன் பராந்தக நெடுஞ்சடைய வரகுணனுக்கு (768-815கி.பி) ஆதரவாகச் சோழ நாட்டு இடவை என்னுமிடத்தில் போரிட்டுப் பல்லவரை வாகைசூட உதவினான். இவனது மகன் அண்ட வேளான் குறும்பராதித்தன் புள்ளன் நக்கன் என்பவன் பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (கிபி. 815-862) கீழ் ஆட்சி புரிந்த குறுநிலத் தலைவன். இவனது மகனே பள்ளிவேளான் நக்கம் புள்ளன். இவ்விருவரும் வடமதுரைக்கு அருகிலுள்ள இராமநாதபுரம் கலவெட்டில் கூறப்படுகின்றனர். இவர்கள் இருவரும் சேர்ந்து இராமநாதபுரத்தில் நீர்ப்பாசன ஏரி ஒன்றை உருவாக்கி அதற்குப் புள்ளனேரி என்றே பெயரிட்டனர்.

பழனி பகுதியில் முற்பாண்டியர் ஆட்சி நிலவியது என்பதற்குச் சான்றாக பழனிவட்டம் அய்யம்பாளையம் (தாத நாயக்கன்பட்டி -ஐவர்மலை) கல்வெட்டு அமைகிறது. மன்னன் இரண்டாம் வரகுணன் பெயரை (கி.பி. 862-900) இக்கல்வெட்டுத் தாங்கியுள்ளது. அவனது எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 870) இம்மலையில் பார்சுவநாதர் மற்றும் இயக்கியர் படிமங்களைச் செதுக்கி அவற்றின் பூசைக்கு 505 காணம் கொடையும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அம்மலையிலிருந்த சமணப் பள்ளிக்குப் பாண்டிய நாட்டின் ஒரு பிரிவான வெண்பு நாட்டு நால்கூரிலிருந்த (இன்றைய அருப்புக் கோட்டை - தூத்துக்குடி வழியில் உள்ள பந்தல் குடி கிராமம்) வந்த ஒருவன் ஒரு சமணத் திருமேனியைச் செய்தளித்துள்ளான். அச்சணந்தி என்ற சமணத்துறவியும் இம்மலையில் ஓர் உருவத்தைச் செதுக்கக் காரணமாயிருந்துள்ளார். இவர் பாண்டிய நாட்டில் அமைந்துள்ள, சமணமலை, அரிட்டாபட்டி, கொங்கர்புளியங்குளம்,

Koviloor Digital Library

கருங்காலக்குடி, சிதரால் எனப்பல சமணத் தலங்களுக்கும் சென்று திரு உருவங்கள் செய்தவர். எனவே முற்பாண்டியர் காலத்தில் பழனிப் பகுதிவரை சமணம் செழித்திருந்தது எனலாம். பாண்டிய நாட்டோடு நெருங்கிய உறவும் இருந்துள்ளது என்பதை அத்துடன் அறியலாம்.

கி.பி. பதினோராம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆட்சி செய்த வீரபாண்டியன் என்ற மன்னனால் வழங்கப்பட்டது சிவகாசிச் செப்பேடு. இச்செப்பேட்டை வழங்கும் போது மன்னன் அண்ட நாட்டு வீரபாண்டிய புரமான செல்லூர் என்னும் ஊரில் தங்கியிருந்தான். அண்ட நாடு என்பது இன்றைய ஒட்டன் சத்திரத்தைச் சார்ந்த பகுதியாகும்.

சிவகாசிச் செப்பேடு வீரபாண்டியனின் மூன்றாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. செப்பேட்டு வாசகம் மன்னன் முடிசூடும் போது சுலோகம் இயற்றிய பிராமணனுக்கு திருநெல்வேலிப் பகுதியில் நிலக் கொடை கொடுத்த செய்தியைக் கூறுகிறது. கி.பி. பதினோராம் நூற்றாண்டளவில் பாண்டிய நாட்டின் முக்கியமான மையப் பகுதிகள் சோழர் வசமாயின.

சோழர் செல்வாக்கு

பாண்டிய நாடு முதலாம் பராந்தக சோழனால் முதலில் வெல்லப்பட்டது. அவன் தன்னை மதுரை கொண்ட கோபரகேசரி எனக்கூறிக் கொண்டான். ஆயினும் அவனது வெற்றி குறுகிய காலமே நீடித்தது. அதன் பின்னர் முதலாம் இராசராசன் பாண்டியன் நாட்டை வெற்றிகண்டு தனது மகன் முதலாம் இராசேந்திரன், அவனது மகன்களைக் கொண்டுப் பாண்டிய நாட்டை நிர்வகித்தான். சோழபாண்டியர்கள் என்ற பெயரில் சோழர்கள் பாண்டிய மண்டலத்தை ஆட்சிச் செய்தனர். முதலாம் இராசராசன் மதுரையை வெற்றி கொள்ளும். போது அவனை மதுரையில் எதிர்த்துப் போரிட்டவன் அமரபுஜங்கன் என்னும் தலைவன். இவன் பாண்டிய மன்னன் அல்லன். தென் கொங்குப் பகுதியில் (தாராபுரம், பழனி பகுதிகள்) ஆட்சி செய்த கொங்குச் சேரமரபினன் ஆவான். கொங்குச்சேரர்களுக்கும், பாண்டியர் களுக்கும் மணவினை உறவுகள் இருந்தன. இதனால் பாண்டியர்கள் நலிவுற்றபோது மேற்கொள்ளப்பட்ட சோழப் படையெடுப்பை முறியடிக்கக் கொங்குச் சேரனான அமரபுஜங்கள் துணிந்தான் எனக்கூறலாம்.

Koviloor Digital Library

சோழர்களின் நேரடிச் செல்வாக்கு திண்டுக்கல் மாவட்டப்பகுதிகளில் அவ்வளவாக இல்லை. ஒரு சில சான்றுகள் அவர்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. நத்தம் நகரை ஒட்டி அமைந்துள்ள அய்யாகுளம் என்னும் கண்மாயின் கரையை ஒட்டிய சிறு பாறையில் சோழர் காலத்திய வேளக்காரப் படையினர் ஐவரின் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் இப்பகுதியில் வந்து தங்கிய படை வீரர்களின் பெயர்களாகும்., இவர்கள் இக்குளத்தை அமைத்து பாதுகாத்திருக்கலாம். பாண்டிய நாட்டில் சோழர்கள் தங்களது வாரிசுகளைச் சோழபாண்டியர் என்னும் பெயரில் ஆளுநர்களாக நியமித்து நிர்வாகத்தை நடத்தினர். நத்தம் பகுதியில் அத்தகைய ஆளுநன் விக்கி'ரம சோழ பாண்டியன் (கி.பி. 1050-79) என்ற பெயரில் ஆட்சி செய்துள்ளான். அவன் காலத்திய வணிகக் குழு கல்வெட்டு ஒன்று நத்தம் அருகில் சமுத்திராபட்டி என்ற இடத்தில் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டின்மூலம் இப்பகுதி 'பனியா நாடு' என்று பெயர் பெற்றிருந்தமை அறியவருகிறது. சமுத்திராபட்டி மிகச்சிறந்த வணிகத் தளமாகச் செயல்பட்டதையும் அதனை எறிவீரபட்டணமாக மாற்றினர் என்பதும் இக்கல்வெட்டின் மூலம் புலப்படுகிறது.

கொங்குச் சேரர் காலம்

ஒன்பது பத்தாம் நூற்றாண்டளவில் சேரர்களின் கிளைமரபினர் கொங்கு நாட்டுப் பகுதியில் சிற்றரசர்களாக ஆட்சி புரிந்துள்ளனர். இம்மரபின் முதல் அரசனாகக் கோக்கண்டன் என்பவனைக் கொள்ளலாம். கோக்கண்டன் ரவி, கோக்கண்டன் மாந்தரன், கோக்கண்டன் குட்டன் என்று சில மன்னர்கள் இம்மரபில் குறிக்கப்படுகின்றனர். கண்டன் தந்தையாக இருந்தால் மற்ற மூவரும் உடன் பிறந்தாராக இருக்கலாம். அமரபுஜங்கன் என்னும் தலைவனும் இம்மரபில் வந்தவனாக இருக்கலாம் பழனிக்கு அருகில் பெரியகோட்டை என்னும் ஊர்க் கல்வெட்டு ஒன்று கோக்கண்டன் குட்டன் என்னும் மன்னன் பெயரைக் கொண்டுள்ளது. ஒட்டன் சத்திரம் வட்டத்தில் கப்பலூர்ப்பட்டி என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று கோக்கண்டன் மாந்தரன் என்னும் மன்னன் பெயரைக் குறிக்கிறது. எனவே தென் கொங்கு எனப்பட்ட பழனி, தாராபுரம், ஒட்டன் சத்திரம்

Koviloor Digital Library

பகுதிகளில் கொங்குச் சேரர்களின் செல்வாக்கு பரவியிருந்தது என்று கொள்ளலாம்.

கொங்குச் சோழர்கள்

இம்மரபினர் கொங்கு நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் அல்லர். கோனாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள். இதனால் கொங்குச்சோழர்கள் என்னும் சொல்லாட்சி தவறு. கோனாட்டு ஆட்சியாளர்கள் என்றே குறிப்பிட வேண்டும் என்பது சில வரலாற்றாசிரியர்களின் கருத்து. வீரசோழன் முதலாக (கி.பி. 10ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி) பரகேசரி விக்கிரம சோழன் ஈறாக (கி.பி 1273 - 1303) மொத்தம் பதினோரு அரசர்கள் இம்மரபில் கொங்குநாட்டின் தலைவர்களாக இருந்துள்ளனர். இவர்களது பெயர்கள் குலோத்துங்கன், வீரராசேந்திரன், இராசாதிராசன், உத்தம சோழன், விக்கிரம சோழன் என வருவதால் நேரடி சோழ மரபினர்க்கும் இவர்களுக்கும் ஏதோ ஒரு வகை உறவு இருந்தது போலத் தோன்றும். ஆனால் அவ்வரச மரபோடு எவ்வித உறவும் கொண்டவர்களில்லை. இம் மரபினரின் கல்வெட்டுகள் பழனிப்பகுதிகளில் குறிப்பாகக் கீரனூரில் கணிசமான எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. கீரனூர் கோயிலை எடுத்தவர்கள் இவர்களே என்று கூடக் கருதலாம். பழனிக்கருகில் தாமரைக்குளம் கிராமத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று கோனாட்டு வேந்தர்களில் (கொங்குச் சோழர்களில்) ஒருவனான வீரசோழனின் (கி.பி 1192) பெயரைக் கொண்டுள்ளது.

பிற்பாண்டியர் காலம்

சோழர்கள் ஆட்சியின் கீழிருந்த பாண்டிய நாட்டை முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216-1238) மீட்டு மீண்டும் பாண்டியர் ஆட்சிக்கு உட்படுத்தினான். சோழ நாட்டையும் வென்று கொங்கு நாட்டுப் பகுதிகளையும் தன்வசப்படுத்திப் பிற்காலப் பாண்டியப் பேரரசாக உருவாக்கினர் பின்வந்த பாண்டியர்கள். திண்டுக்கல் பகுதிகளிலும் பிற்பாண்டியர் காலக் கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன.

முதலாம் சடையவர்மன் குலசேகரன் (கி.பி. 1190 – 1216)

Koviloor Digital Library

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216 – 1238)

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251–1271)

முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1253-1274)

ஆகிய மன்னர்களின் காலக்கல்வெட்டுகள் பல இப்பகுதிகளில் கிடைத்துள்ளன. பள்ளிவேளான், துவராபதி வேளான், போல மழவராயர், சேதிராயர் என வேறு சில குறுநிலத் தலைவர்கள் பாண்டியர்களுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி செய்துள்ளனர். நத்தம், ஆவினிப்பட்டி, ஆத்தூர், சித்தையன் கோட்டை, சித்தர்கள் நத்தம், கண்ணாபட்டி, தனிச்சியம், ரங்கமலை, பாடியூர், பிலாத்து, தாண்டிக்குடி, அம்மைய நாயக்கனூர், பழனி, கீரனூர், திண்டுக்கல் ஆகிய ஊர்களில் பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. இவை இப்பகுதியின் அரசியல், வணிக, சமயச் சூழலை அறிந்து கொள்ள உதவுகின்றன. குறிப்பாகக் கண்ணாபட்டி, பிலாத்து, நத்தம், தாண்டிக்குடி, சித்தையன் கோட்டை கல்வெட்டுகள் வணிகம் வணிகக்குழுக்கள் தொடர்பான பல செய்திகளைத் தருகின்றன. சடையவர்மன் வீரபாண்டியனின் பழனி கல்வெட்டு பழனி சுப்பிரமணியர் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைகள் பற்றிய செய்திகளைத் தருகிறது.

மழவராயர், சேதிராயர் என்னும் இரு வகைக் குறுநிலத் தலைவர்கள் திண்டுக்கல் பகுதியில் அம்மைய நாயக்கனூர், சித்தையன் கோட்டை கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளனர். மழவராய ஈஸ்வரம், சேதிராய ஈஸ்வரம் என்று தங்கள் பெயரால் கோயில்கள் எடுத்துள்ளனர். திண்டுக்கல் பகுதி பிற்பாண்டியர் காலத்தில் சில சிறுநாடுகளாகப் பிரிக்கப்பட்டு குறுநிலத் தலைவர்களின் கீழ் நிர்வகிக்கப்பட்டது. மழவராயர் என்பார் தென்கல்லகநாடு (தென்கரை, குருவித்துறை பகுதி) என்னும் பகுதியையும், சேதிராயர்கள் ஆற்றூர் நாடு, நெடுங்கள நாடு என்னும் (ஆத்தூர், சித்தையன் கோட்டை, பெரியகுளம்) பகுதியையும் நிர்வகித்தனர், இதுபோல பொங்கலூர்க்கா நாடு, வைகாவூர் நாடு, அண்ட நாடு, பள்ளி நாடு, கரைக்கோட்டு நாடு அதம்ப நாடு என்னும் சில உட்பிரிவுகள் பல்வேறு தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் அரசியல் ரீதியாக எவ்வித முக்கிய நிகழ்ச்சிகளும் இப்பகுதிகளில் இல்லை. எனினும்

Koviloor Digital Library

திருக்கோயில்களைப் பராமரித்தல், மக்கள் நலப்பணிகளைச் செய்தல், போன்ற செயல்கள் அமைதியாக நடந்தேறின எனக் கூறலாம்.

விஜய நகரர் ஆட்சி

பிற்பாண்டியர்களின் வாரிசுரிமைப் போரின் காரணமாக ஒற்றுமை குலைந்ததால் சுல்தானியர்களின் ஆட்சி பாண்டிய நாட்டில் ஏற்படலாயிற்று. மாலிக்காபூரின் படையெடுப்பின் (கி.பி 1311) போது மதுரை திண்டுக்கல் பகுதியில் பல அழிவுகள் ஏற்பட்டன. பெருஞ்செல்வம் கொள்ளையடிக்கப்பட்டது. கி.பி. 1370 வரையிலும் மதுரை சுல்தானியர்களின் ஆட்சி நிலவியது. மதுரையின் சுற்றுப்புறங்களில் பாண்டியர்கள் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தனர். கி.பி. 1336ல் எழுந்த விசயநகரப் பேரரசு தென்னாடு முழுவதையும் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர முயன்று அதில் வெற்றியும் கண்டது. விசயநகர வேந்தன் குமார கம்பணன் மதுரை சுல்தானியர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தான். அது முதல் விசயநகரர் அரசனின் தண்ட நாயகர்கள், அவர்களுக்கு அடங்கிய மகாபலி வாணாதி ராயர்களின் ஆட்சி மதுரை, திண்டுக்கல் பகுதியில் நடைபெற்றது. அழகர் கோயிலில் கோட்டை கட்டிக் கொண்டு வாணாதி ராயர்கள் சில காலம் தங்கள் நிர்வாகத்தை நடத்தினர். அவர்களில் திருமாலிருஞ்சோலை நின்ற மாவலி வாணாதிராயன் (கி.பி. 1453-1477) என்பவனின் இரண்டு கல்வெட்டுகள் திண்டுக்கல் பகுதியில் கிடைத்துள்ளன. திண்டுக்கல் மலைக்கோட்டையில் ஒன்றும், தாடிக்கொம்பு சௌந்தரராஜப் பெருமாள் கோயிலிலும் காணப்படுகின்றன. சுந்தரத் தோளுடையான் மாவலி வாணாதிராயன் (கி.பி. 1477-1488) கல்வெட்டு ஒன்று நிலக்கோட்டை வட்டம் சித்தர்மலையில் காணப்படுகிறது.

திண்டுக்கல் பகுதியில் விசயநகர அரசர்கள் பலரது கல்வெட்டுகள் கிடைக்கின்றன. மல்லிகார்ச்சுனராயர், கிருஷ்ண தேவராயர், அச்சுதராயர், சதாசிவராயர், ராமராயர் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் திண்டுக்கல், பழனி, தாடிக்கொம்பு, அகரம்,பெரியகோட்டை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இவர்கள் காலத்தில் கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. நிர்வாகத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டன.

Koviloor Digital Library

பிற்பாண்டியர் காலத்திலிருந்த நாட்டுப் பிரிவுகள் மாறி சீர்மை என்னும் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது. திண்டுக்கல் சீர்மை, ராஜராஜபுரம் (தாராபுரம்) சீர்மை, மதுரைசீர்மை எனப் பெரும் பிரிவுகள் தோன்றின. அது போல வேளான், மழவராயர், சேதிராயர் போன்ற குறுநிலத்தலைவர்கள் இக்கால வரலாற்றில் மறைந்தனர். அவர்களுக்கு மாற்றாக விசய நகர அரசர்களின் நம்பிக்கைக்குரிய தண்ட நாயகர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் தெலுங்கு மொழி பேசுபவர் களாகப் பெரிதும் அமைந்தனர். அதன் காரணமாகத் தெலுங்கு, கன்னடம் பேசும் மக்களின் குடியேற்றம் பெருமளவில் திண்டுக்கல் பகுதியில் ஏற்படலாயிற்று சுல்தான்களின் ஆட்சியின் போது இசுலாமிய மக்களின் குடியேற்றமும் கணிசமான அளவில் திண்டுக்கல் பகுதியில் நிகழ்ந்தது.

மதுரை நாயக்கர்கள்

விசயநகர அரசர் கிருஷ்ண தேவராயர் காலத்தில் மதுரைப் பகுதியில் அரசியல் குழப்பம் நீடித்தது. இதனை முடிவுக்குக் கொண்டுவரவும் தமது நேரடி ஆட்சியை நிலைநாட்டவும் நாகம நாயக்கரை அனுப்பினார் கிருஷ்ண தேவராயர். அதிலிருந்து மதுரை, திண்டுக்கல் சீர்மைகள் மதுரை நாயக்கர்களின் ஆளுகையின் கீழ் வந்தன. நாகமநாயக்கரின் மகன் விசுவநாத நாயக்கர் (கி.பி. 1530) மதுரை நாயக்க மரபின் முதல் அரசராக பட்டம் எய்தினார். இம்மரபில் 1736 வரை மொத்தம் 13 அரசர்கள் ஆண்டனர். அவர்களில் ஏழாவதாக ஆட்சிக்கு வந்தவரே புகழ்மிக்க திருமலை நாயக்கர்.

விசுவநாத நாயக்கரின் தளவாயாகவும் முதல் அமைச்சராகவும் திகழ்ந்தவர் அரியநாத முதலியார். முதல் மூன்று நாயக்க மன்னர்களிடமும் அவர் பணியாற்றியவர். அவரே பாளையப்பட்டு முறையை இப்பகுதியில் அறிமுகப்படுத்தி நிர்வாகத்தைச் சீராக்கியவர். திண்டுக்கல் பகுதியில் மட்டும் 18 பாளையங்கள் அமைந்தன. (26 என்று கூறுவதும் உண்டு) இப்பாளையங்களில் பெரும்பாலும் தெலுங்கு மொழிபேசு பவர்களே தலைவர்களாக இருந்தனர். அரசுகளின் தலை நகர் தொலை தூரத்தில் இருந்த மையாலும் நேரடி ஆட்சிக்கு பாளையப்பட்டு மிகுதியும் உருவாக்கப்பட்டன. திண்டுக்கல்

Koviloor Digital Library

பாளையமாக இல்லாவிடினும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தளமாகத் திகழ்ந்தது. தமிழகத்தின் மேற்குப் பகுதியிலிருந்து மைசூர் அரசர்கள், கொங்குநாடு வழியாக அடிக்கடி மதுரை அரசுகளோடு மோதினர். அச்சமயத்தில் மதுரைக்கு நுழைவாயிலாக அமைந்த திண்டுக்கல் முதலில் அச்சுறுத்தலுக்குள்ளானது. எனவே அந்நிலைமையைச் சமாளிக்க திண்டுக்கல்லில் கோட்டை கட்டவேண்டியதும், பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியதும் அவசியமாயிற்று.

விசய நகரர் ஆட்சிக் காலத்திலேயே பல தண்டநாய கர்களும், அரசியல் தலைவர்களும் தெலுங்கு, கன்னட மொழி பேசுபவர்களாக நியமிக்கப்பட்டனர். மதுரை நாயக்கர் விசுவநாதர் தனது பாளையங்களுக்கும் அத்தகையவர்களையே தலைவர்களாக்கினார். தொடக்கத்தில் மதுரை நாயக்கர்கள் விசயநகர மன்னர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தபோதிலும் நாளடைவில் சுயாட்சி பெறவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கும் ஏற்பட்டது. முத்துவீரப்ப நாயக்கர் (கி.பி 1609-1623) இதற்கான முயற்சியை மேற்கொண்ட போதும் அவருக்குப் பின் வந்த திருமலை நாயக்கர் காலத்தில் தான் (கிபி 1623-1659) இம்முயற்சி வெற்றி பெற்றது.

கி.பி. 1620ல் மைசூர் மன்னர் சாமராச உடையாரின் படை முகிலன் தலைமையில் வந்தது. ஆனால் திண்டுக்கல் பகுதியின் பாளையக்காரர்களான விருபாட்சி பாளையக்காரரும், கன்னிவாடி பாளையக்காரரும் மைசூர் படைகளை முறியடித்தனர். கொங்கு நாட்டுப் பகுதியை வசப்படுத்திக் கொள்வதில் மதுரை நாயக்க மன்னர்களுக்கும், மைசூர் உடையார்களுக்குமிடையே போட்டி நிலவியது. இக்கால கட்டத்தில் மைசூர்ப் படைகளைச் சமாளிக்கவும் வேறு சில அரசியல் காரணங்களுக்காகவும் திருமலை நாயக்கர் மதுரைக்குத் தலை நகரை மாற்றி மாளிகை ஒன்றும் கட்டிக் குடியேறினார். இதற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் மைசூர்ப் பகையை முறியடிப்பதும் மீண்டும் வராமல் அவ்வெல்லையைக்காப்பதும் ஒரு காரணம் எனலாம்.

திருமலை நாயக்கருக்கும், மைசூர் மன்னர் சாம்ராஜ உடையார், அவருக்குப் பின்வந்த கண்டிரவ நரசராஜன்

Koviloor Digital Library

ஆகியோருக்கமிடையே மோதல்கள் நிகழ்ந்தன. இதனை மைசூர் போர்கள் என்றும் மூக்கறுப்புப் போர் என்றும் கூறுவர். இப்போர்களில் திருமலை நாயக்கரே வெற்றி பெற்றார். இவ்வெற்றிக்குப் பெரிதும் துணை நின்றவர்கள் இராமப்பையன் என்னும் தளபதியும், கன்னிவாடிப் பாளையக்காரரான அரங்கண்ண நாயக்கரும் ஆவர். இரண்டாவது போரில் இராமநாதபுரம் இரகுநாத சேதுபதியும் படையுடன் வந்து உதவினார். திருமலை நாயக்கரின் ஆட்சி ராமேஸ்வரம் திருநெல்வேலி, சேலம் வரை பரவியிருந்தது. அதனை நிர்வகிக்கப் பாளையக்காரர்களை தவிர வேறுசில அதிகாரிகளையும் அவர் நியமித்தார். அவ்விதம் நியமிக்கப் பட்டவர்களில் திண்டுக்கல் பகுதிக்கு அதிகாரியாக விளங்கியவர் அனந்த நாராயண அய்யர் என்பவர் ஆவார். இந்த அதிகாரியின் பெயர் கொண்ட கல்வெட்டுகள் வேடபட்டி, மேட்டுக்கடை, கொத்தபள்ளி ஆகிய இடங்களில் உள்ளன. சித்தரேவு செப்புப்பட்டயம் ஒன்றும் இவரால் வழங்கப்பட்டுள்ளது.

திருமலை நாயக்கருக்குப்பின் தலைநகரம் மீண்டும் திருச்சிக்கு மாறியது. மதுரை நாயக்கர் மரபின் இறுதி ஆட்சியாளராகிய மீனாட்சி அரசி சந்தா சாகிப்பினால் வஞ்சிக்கப்பட்டதால் அவள் தன்னுயிரை மாய்த்துக் கொண்டாள். இக்காலத்தில் அக்காரெட்டி, ரங்காரெட்டி என்னும் இருவர் திண்டுக்கல் பகுதியின் அதிகாரிகளாக இருந்தனர். பங்காரு நாயக்கர் என்பவர் மதுரை, திண்டுக்கல் பகுதியின் ஆட்சியாளராக மேற்கொண்ட முயற்சிகள் சந்தா சாகிப்பினால் முறியடிக்கப்பட்டன. அம்மைய நாயக்கனூர் அருகே நடைபெற்ற போரில் பங்காரு நாயக்கர் தோல்வியுற்று ஓடினார். மதுரை நாயக்க அரசு இத்துடன் முடிவுக்கு வந்தது. ஆர்க்காட்டு நவாப்பின் ஆளுகையின் கீழ் திண்டுக்கல் பகுதிகளும் சேர்ந்தன. அதன்பின் மைசூர்உடையாரின் ஆட்சியின் கீழ் இப்பகுதி கொண்டுவரப்பட்டது. பாளையப்பட்டுத் தலைவர்களின்வரிச்சுமை அதிகரித்தது. மைசூர் மன்னர் வேங்கடப்பய்யர் என்பவரைத் திண்டுக்கல்லுக்கு வரிவசூல் செய்யும் சுபேதாராக நியமித்தார். ஆனால் பாளையக்காரர்கள் அவருக்குக் கட்டுப்படத் தயாராக இல்லை. எனவே அவரது வேண்டுகோளை ஏற்று மைசூர் மன்னர் ஹைதர் அலியை ராணுவப் பொறுப்பாளராகத் திண்டுகல்லுக்கு அனுப்பினார்.

Koviloor Digital Library

அவன் கலகம் செய்து பல பாளையக்காரர்களைக் கட்டுப்படுத்தினான்.

திண்டுக்கல் பகுதிக்கு வந்த ஹைதர்அலி பெரும் பொருளைச்சேர்த்துக் கொண்டு மைசூர்க்குத் திரும்பினான். திண்டுக்கல் பகுதியை ஆரணிராமநாயக்கர் நிர்வகித்தார். ஆயினும் பாளையக்காரர்கள் கலகம் செய்தவண்ணம் இருந்தனர். ஹைதர் அலிக்குப்பின் திப்பு சுல்தான் திண்டுக்கல் கோட்டையை வலுப்படுத்தினான். அவன் மதுரையையும் வெற்றி கொள்வதற்காகச் சோழவந்தான் வரை சென்று முற்றுகையிட்டான். ஆனால் கான்சாகிப் என்னும் முகமது யூசுப்கானின் திறமையால் மதுரை காப்பாற்றப் பட்டது. திண்டுக்கல் பகுதியில் உள்ள நத்தம் கோட்டையும் யூசுப்கானால் வலுப்படுத்தப்பட்டது. பின்னர் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி திண்டுக்கல் பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. திண்டுக்கல் சீர்மைப் பாளையக் காரர்களும், சிவகங்கை மருது சகோதரர்களும் ஆங்கிலேயர்க்கு எதிராகப் போரிட்டும் வெற்றி பெற இயலவில்லை. திண்டுக்கல் தனிப்பகுதியாக ஆக்கப்பட்டு முதல் ஆட்சியராக (Collector) 'மெக்களூட்' என்னும் ஆங்கிலேயர் நியமிக்கப்பட்டார். கி.பி 1811 முதல் திண்டுக்கல் ஆங்கிலேயரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்திய விடுதலைக்குப் பின் மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கிய திண்டுக்கல் பகுதி 15-9-1985 முதல் புதிய மாவட்டமாகச் செயல்பட்டு வருகிறது.

Koviloor Digital Library

1. ஒட்டன் சத்திரம் வட்டம்

இடையகோட்டை (எடையகோட்டை)

ஒட்டன் சத்திரம் வட்டத்திற்குள் அமைந்துள்ள புலியூர் நத்தம் குறுவட்டத்திற்குள் நங்காஞ்சி ஆற்றின் கரையில் திண்டுக்கல்லிலிருந்து சுமார் 34 கி.மீ தொலைவிலும், மாம்புரைக்குத் தென் கிழக்கில் எட்டு கி.மீ. தூரத்திலும், புலியூர் நத்தத்திற்கு வடக்காக அமைந்துள்ளது. முன்பு திண்டுக்கல் சீர்மையிலிருந்த பாளையங்களுள் ஒன்றான இடையக் கோட்டையில் ஆற்றிற்கருகில் பதினாறு கொத்தளங்க (காவலரண்க) ளுடன் கோட்டை ஒன்று கட்டப்பட்டுள்ளது. கோயமுத்தூர் அரவக்குறிச்சிக் குட்பட்டிருந்த இந்த பாளையம், ஹைதர் அலி காலத்தில் திண்டுக்கல்லுடன் சேர்க்கப்பட்டது. கி.பி. 1871 அளவில் இந்த பாளையத்தின் உரிமையாளராக முத்து வெங்கடாத்திரி நாயக்கர் இருந்துள்ளார். இவர் 1872 இல் இறந்தபின் அவரது மகன் இலட்சுமிபதியின் கட்டுப்பாட்டில் 03-10-1902 வரை இந்த பாளையம் இருந்துள்ளது. இலட்சுமிபதி இறந்தபோது அவரது மகன் 14 வயதுடைய சிறுவனாக இருந்துள்ளார். 'பாளையப்பட்டு வம்சாவளிக் குறிப்புகளால் இச்செய்திகளை அறிகின்றோம்.

கப்பலூர்ப்பட்டி

இச்சிற்றூரில் புதிய கல்வெட்டு ஒன்று கண்டறியப் பட்டுள்ளது. இவ்வூரில் மிக அண்மையில் கட்டப்பட்ட தண்ட பாணிகோயிலின் முன்புறமுள்ள திடலில் நிறுத்தப்பட்டுள்ள இக்கல்வெட்டுத் தூண் சுமார் ஆறடி உயரமும் ஓர் அடி அகலமும் கொண்டது. தமிழ்மொழியில் தமிழ் எழுத்தாலான இக்கல்வெட்டு இப்பகுதியில் ஆட்சி செய்த சேர மரபினரின் வரலாற்றில் ஒரு புதிய ஒளியைப் பாய்ச்ச வல்லதாய் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

இக்கல்வெட்டு கோக்கண்டன் மாந்தரன் என்னும் அரசனின் ஆறாம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. மழ நாட்டு ஆன்மூர்க்கூற்றம் என்னும் ஒரு நாட்டுப்பிரிவைக் குறிப்பிடுகிறது. இதன் கீழ்க்கூற்றில் அமைந்த புங்கம்பாடி என்னும் ஊரின் ஆசாரி மகளும், தாயும் எவ்வகையிலோ இறந்து போயினர். அவ்விருவரையும் நினைவு கூறும் வகையில் தண்ணீர் தருமம் செய்கின்ற நோக்கத்தில் கிணறு ஒன்று வெட்டப்பட்டு நீர் இறைக்க வட்டு (சக்கரம்) ஒன்றையும் அமைத்துள்ளனர் என்ற செய்தியை இக்கல்வெட்டு தருகிறது.

மாம்ப(ா)ரை / மாண்புரை பாளையம்

ஒட்டன் சத்திரம் வட்டத்திலுள்ள சின்னக்காம்பட்டி குறுவட்டத்தில் உள்ள எம். அத்தப்பம்பட்டி கிராமத்திற் குட்பட்ட உள்கிராமமாக, இடைய கோட்டைக்கு வடமேற்கில் எட்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மாம்பாரை (மாண்புரை) கிராமத்தை மையமாகக் கொண்டு முன்பு மாம்பாறை பாளையம் செயல்பாட்டிலிருந்துள்ளது. 'பாளையப்பட்டு வம்சாவளி'யில் இப்பாளையப்பட்டினைக் குறித்த செய்திகள் உள்ளன.

தலையநாட்டு சேந்தமங்கலத்து எல்லைக்கு மேற்காகவும், தலைய நாட்டு பொருளூர் எல்லை நாகன் கரடுக்குக் கிழக்காகவும், இடையகோட்டையார் எல்லைக்கு மேற்கு எல்லைக் கிணற்றுக்கு வடக்காகவும், தலைய நாட்டு எல்லைக்குத் தெற்காகவும், கசுபா நாகம்பட்டி, சாமிநாதன் வலசை, எல்லைப்பட்டி, பாறைப்பட்டி, கதிரியா பாளையம், அய்யம் பாளையம், அத்தப்பம்பட்டி, வடுகப்பட்டி, கணவாய்ப்பட்டி, (நாக்கியா) கவுண்டன் வலசை, பாழ் கிராமங்கள் உட்பட 11 கிராமங்களையும், மூன்று மலைகளையும் உள்ளடக்கியதாக மாம்பரை பாளையப்பட்டு இருந்துள்ளது. இந்த பாளையப்பட்டிற்குள் பழைய கோட்டை ஒன்றும், ரெங்க விலாசம் கோட்டை ஒன்றும் இருந்துள்ளன.

வெங்கிலிய கம்பளத்தார் வகுப்பைச் சேர்ந்த இந்த பாளையக்காரர்கள், இரணவா சிங்கம், ஒண்டி முத்து துராயி, நிகளம் (காலில் அணிந்துகொள்ளக் கூடியது) தங்க மிஞ்சி, சாமுத்திரோகர் வண்டயம், வெள்ளைப் பக்கர டால், பகல் தீவெட்டி, சுருட்டி, சூரியபான், உபய சாமரம், வெட்டுப் பாவாடை, விசிறி, பிடிசெம்பு, காளாஞ்சி, பூசக்காரக் குடை, ஐந்துமுக, ஏழுமுக தீவெட்டி, குதிரைக்கு முன் ஜல்லி, பின் ஜல்லி,

Koviloor Digital Library

அண்டமணிகால், அந்தை, கலிகிதுராயி போன்ற விருதுகளுக்கு உரியவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

மாம்பரை பாளையப்பட்டுக்குரிய பாளையக் காரர்களின் மரபு வழிப் பட்டியல் கீழ்வருமாறு அமைகிறது.

1. சகரன் தம்மைய நாயக்கர்
2. தம்மைய நாயக்கர் மகன் தொப்புள நாயக்கர் – 12 வருடம்
3. அவர் மகன் பொம்மள நாயக்கர்
4. அவர் மகன் பெருமாள் நாயக்கர் – 60 வருடம்
5. அவர் மகன் பொம்மள நாயக்கர் – 75 வருடம்
6. அவர் மகன் போர்க்கருது நாயக்கர் – 65 வருடம்
7. அவர் மகன் மலையப் பொம்மு நாயக்கர் – 75 வருடம்
8. அவர் மகன் குமார கருது நாயக்கர் – 90 வருடம்
9. அவர் மகன் வெங்கிடராம நாயக்கர் – 60 வருடம்
10. அவர் மகன் பரசுராம நாயக்கர்

இவர்களுள் சகரன் தம்மைய நாயக்கர், கொட்டியம் நாகம நாயக்கர் காசிக்குச் சென்று பிள்ளைவரம் வேண்டி, தவசு செய்து, விசுவநாத சுவாமியால் புத்திர சந்தானம் அருளப்பெற்ற போது, நாகம நாயக்கருக்கு உதவியாக உடன்சென்று வந்ததாகக் கூறப்படுகிறது. வடக்கிலிருந்து ராயர் சமஸ்தானத்தின் மீது படையெடுப்பு நிகழ்ந்தபோது, மதுரை விசுவநாத நாயக்கருடன், சகரன் தம்மைய நாயக்கரும் உடன் சென்று போர் புரிந்து ராயர் சமஸ்தானத்திற்கு வெற்றி ஈட்டித் தந்துள்ளார். நாகம நாயக்கரைக் கைது செய்து மதுரையிலிருந்து அழைத்துச் சென்று விசயநகர வேந்தர் முன் நிறுத்திய போது, சகரன் தம்மைய நாயக்கரின் மகன் தொப்புள நாயக்கர், விசுவநாத நாயக்கருக்கு உதவியாக உடன் சென்று வந்ததாகக் கூறப்படுகிறது. விசுவநாத நாயக்கர் மதுரை நாயக்க மன்னராக முடி சூட்டிக் கொண்டதும், தம்முடைய மதுரைக் கோட்டையில், திருமஞ்சனக் கோட்டை வாசல் பிரதட்சணமாக (வலமாக - clockwise) நாற்பதாம் கொத்தளத்தைக் காத்து வரும் பொறுப்பைத் தொப்புள நாயக்கருக்கு வழங்கியுள்ளார். பழனிக்குக் கிழக்காகவும், முக்காத வழிக்குக் கிழக்காகவும், ஆம்பராவதிக்குத் தெற்காகவும் மாம்பரை

Koviloor Digital Library

மலைக்கருகில் இருந்தால் பழனி சுப்பிரமணியரைத் தரிசிக்க ஏதுவாக இருக்கும் என்ற தொப்புள நாயக்கரின் வேண்டுகோளை ஏற்று விசுவநாதநாயக்கர் தொப்புளநாயக்கருக்கு அவர் விரும்பிய பகுதியை வழங்கியதாகச் செய்தி உள்ளது.

விசுவநாத நாயக்கர் காலத்தில் நடை பெற்ற கயத்தாற்றுப் போரில், தளவாய் விசனபாகம் கேசப்ப நாயக்கருடன், தொப்புள (தொப்பள) நாயக்கரும் கலந்து கொண்டுள்ளார்.

திருமலை நாயக்கர் காலத்தில் தளவாய் இராமப்பய்யர், சேதுபதி மீது படையெடுத்துச் சென்ற போது, 72 பாளையக்காரர்களும் உடன் சென்று போரில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். மலைய பொம்மு நாயக்கரின் படை மற்ற பாளையப்பட்டுக்களின் படைகளுக்கு முன்பாக நடத்திச் செல்லப்பட்டுள்ளது. பாம்பனுக்கும் இராமேசுவரத்திற்கும் இடையில் பாலம் அமைத்த போது, வேண்டிய பொருட்களை வரவழைத்துக் கொடுத்து மலைய பொம்மு நாயக்கர் அணையைக் கட்ட பெரிதும்உதவியுள்ளார். போரின் இறுதியில் மலைய பொம்மு நாயக்கர் மரணமடைய, அவருடைய மகன் குமார கருது நாயக்கருக்கு, இராமப்பய்யர் பாக்கும் வெத்திலையும் வழங்கிப் பட்டம் சூட்டி வைத்துள்ளார். அதன்பின்னர், குமார கருது நாயக்கர் இராமேசுவரத்திலிருந்து மதுரைக்கு வந்து, திருமலை நாயக்கரைச் சந்தித்து உத்தரவு வாங்கிக் கொண்டு மாம்பரைக்கு வந்து சேர்ந்துள்ளார்.

வெங்கிடராம நாயக்கர் காலத்தில் மாம்பரைப் பாளையப்பட்டை மைசூரார் கைப்பற்றிக் கொண்டுள்ளனர். பரசுராம நாயக்கர் காலத்தில் மாம்பரைப் பாளையப்பட்டு ஆங்கிலேயர் வசமாகியுள்ளது.

விருப்பாட்சி

பழனி திண்டுக்கல் சாலையில் சத்திரப்பட்டிக்கு மேற்கில் மூன்றுகல் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. பெரிய கோட்டையிலிலுள்ள சோழீசுரராலயத்திற்கு வடக்கிலுள்ள பாறையில் காணப்படும் சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள திருப்பாக்கியம் என்ற ஊரே இந்த விருப்பாட்சி என்பர். இக்கருத்து ஏற்புடையதாயின் இவ்வூரில் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் அயிரபிராட்டீசுவரமுடையார் கோயில் நல்ல நிலையில் வழிபாட்டிலிருந்துள்ளதெனலாம். (க.ஆ.அ 459/1907)

Koviloor Digital Library

இவ்வூருக்கு இக்கோயிலால் அரியபிராட்டிச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரும் வழங்கியுள்ளது. நாயக்கர் காலத்தில் பாளையப்பட்டாக விளங்கிய விருப்பாட்சி பாளையம் மலைகளும் காடுகளும் நிறைந்தபகுதியாக விளங்கியிருக்கிறது. 9000 சக்கரத்திலிருந்து (பணம்) 12000 சக்கரம் வரை வருமானம் உடைய ஜமீனாகத் திகழ்ந்துள்ளது. விருப்பாட்சி பாளையப் பட்டின் அதிகாரத்தில் கீழ்க்கண்ட பாளையக்காரர்கள் இருந்துள்ளனர்.

1. திருமலை சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1381 முதல் 1426 வரை
2. கதிரி திருமலை சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1426 முதல் 1455 வரை
3. திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1456 முதல் 1482 வரை
4. திருமலை பலபத்திர ராம சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1482 முதல்1514 வரை
5. திருமலை எர்ர தம்ம சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1514 முதல் 1551 வரை
6. திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கர்– கி.பி 1551 முதல் 1581 வரை
7. திருமலை நயினாத்தை சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1581 முதல் 1601 வரை
8. திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1602 முதல் 1642 வரை
9. திருமலை தாசரி சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1642 முதல் 1667 வரை
10. திருமலை பாப்பன் சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1667 முதல் 1678 வரை
11. திருமலை சின்னப்பபாப்பன் நாயக்கர் – கி.பி. 1678 முதல் 1685 வரை
12. திருமலை முத்துவேல் சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1685 முதல் 1699 வரை
13. திருமலை வெங்கிட சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1699 முதல் 1709 வரை
14. திருமலை எதிராமானுஜகிரி சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1709 முதல் 1759 வரை (தன் தந்தையுடன் கூட இருந்து ஆட்சியைக் கவனித்து வந்துள்ளார்)
15. திருமலை சப்பாணி சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1710 முதல் 1724 வரை
16. திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1724 முதல் 1734 வரை
17. திருமலை தாசிரி சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1734 முதல் 1754 வரை
18. திருமலை கதிர சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1754 முதல் 1762 வரை
19. திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் – கி.பி. 1762 முதல் 1802 வரை

Koviloor Digital Library

20. முத்துவேல் நாயக்கர் (19 ஆவது பாளையக்காரருடன் பட்டத்திலிருந்து தூக்கிலிடப்பட்டவர்)

21. திருமலை குப்பள நாயக்கர் மகனான திருமலை பொன்னப்ப நாயக்கர்.

இந்த பாளையக்காரர்கள் தொட்டிய கம்பளத்தார்கள். இவர்கள் துவக்கத்தில் இசுலாமிய அரசர்களிடமும் பின்னர் விசயநகர வேந்தர் திருமலைராயரிடம் பணியாற்றியவர்கள். இவர்கள் விசயநகர வேந்தரிடம் வந்து சேர்ந்த வருடம் கி.பி. 1381. அச்சமயத்தில் டில்லி பாதுசாவின் சார்பாக பாலு சாயிபு என்பவர் விசயநகரப் பேரரசின் மீது படையெடுத்துவர, விசயநகரப் பேரரசின் சார்பாக விருப்பாட்சிப் பாளையக்காரரின் முன்னோரான மேல்ப்பட்டி சின்னப்ப நாயக்கர் படை நடத்திச்சென்று பாலுசாயிபுடன் போரிட்டு வெற்றி கண்டார். இராயரவர்கள் மிகவும் மகிழ்ந்து சின்னப்ப நாயக்கருக்கு, இரணவா சிங்கம்பாஷிகம், தலையில் வைக்கிற ஒட்டிரேகு துராயி, கழுத்திலணிந்து கொள்ளும் வீரகாண்டாமணி, வலது காலிலே அணிந்து கொள்ளும் சாமுதுரோக வண்டயம், வலது காலில் அணிந்து கொள்ளும் நிகளம் சங்கிலி, இரண்டு கால்களிலும் பெருவிரலுக்கடுத்த விரலில் அணிந்து கொள்ளும் தங்க உருட்டு மிஞ்சி (மெட்டி - 2), சிங்க லாடத்துடன் கனக பல்லாக்கு, அம்பாரியுடனே யானை, வெங்கல பேறியுடனே ஒட்டகை, முன்செல்லி - பின்செல்லி, அண்டத்துமணி, புலித்தோல், கரடித்தோல், முகப்பட்டா, கல்கிதுறாயியுடன் குதிரை; பகல்தீவெட்டி, வெள்ளைடால், வெள்ளைக்குடை, வராகக் கொடி, பச்சுரட்டி, வெட்டுப் பாவாடை, வெண்சாமரம், போன்ற விருதுகளை வழங்கிச் சிறப்புச் செய்துள்ளார்.

அத்துடன் மேல்பட்டி சின்னப்ப நாயக்கரின் வம்சா வளியினர் தங்கள் பெயருக்கு முன்னால் ராயரின் பெயராகிய திருமலையைப் பயன்படுத்திக் கொள்ளவும் மன்னர் அனுமதித்தார். இதனால், விருப்பாட்சி பாளையக்காரர்கள் அனைவரின் பெயரும் திருமலை என்ற சிறப்பு முன்னொட்டோடு துவங்குவதாக இருப்பதைக் காணலாம். அதன் பின்னர் ராயர் இவர்களைத் தம் நாட்டின் தென்பகுதிக்குச் சென்று, அங்கே பூமியை ஜாகீராக அனுபவித்துக் கொண்டு கம்பளத்துரைகளாக புத்திர பவுத்திர பாரம்பரியமாக பாளையக்காரரென்று அனுபவித்து கொள்ளச் சொன்னதின் பேரில், திருமலை சின்னப்ப நாயக்கர் தென்பகுதிக்கு வந்து, வீடுகள்

Koviloor Digital Library

உண்டுபண்ணி உருவாக்கிய ஊர் குத்துலுப்பை எனப் பெயர் பெற்றது. இவருடைய தம்பி அப்பண நாயக்கர், குத்துலுப்பைக்குத் தெற்காக காடுவெட்டி வீடுகட்டி கொத்தப்பள்ளி தாதம் கோட்டை என்ற ஊரை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. இவருடைய மற்றொரு தம்பியான எர்ரண நாயக்கர் குத்துலுப்பைக்குக் கிழக்காக ரெங்கமலைச் சாரலில் இடையகோட்டை என்ற ஊரை உருவாக்கி அங்கு குடியமர்ந்துள்ளார்.

திருமலை சின்னப்ப நாயக்கர் தன் தம்பிகளின் இருப்பிடங்களுக்கு மேற்காகத் தன் இருப்பிடம் இருக்குமாறு ஊர் உண்டாக்கி, கோட்டையமைத்துக் கொண்டார். தன் தம்பிகள் இரண்டு பேருக்கும் தான் பெரியவன் என்ற வகையில், தான் கோட்டை கட்டி உருவாக்கிய ஊருக்குப் பெரியவன் கட்டிய கோட்டை என்ற பொருளில் பெரியகோட்டை என்ற பெயர் வழங்கலாயிற்று. பெரிய கோட்டையில் கதிரநாதருக்கும், குல தெய்வமாகிய லெகுவம்மனுக்கும், ஈசுவரனுக்கும் திருமலை நாயக்கர் கோயில் கட்டியதாகக் கூறப்படுகிறது. குலதெய்வமான லெகுவம்மன் கோயிலில் விருப்பாட்சி பாளையக்காரரின் வம்சத்தினர், பிறந்த குழந்தைகளுக்குக் காதுகுத்து நடத்துவ தென்றும், மொட்டை போடுவதென்றும், பெயர் வைப்ப தென்றும், முடிவெடுக்கப்பட்டது. வராககிரிமலை சாரலிலே வீடுகளைக் கட்டி, பெருமாள் குளம் என்ற குளத்தை வெட்டி, நீல மலை அழகருக்கும், விருப்பாட்சி ஈசுவரனுக்கும் கோயில் கட்டி விருப்பாட்சி பட்டணமென்ற பெயர் விளங்கச் செய்துள்ளார்.

விருப்பாட்சிப் பட்டினத்திற்குக் கிழக்கில் கலக்கார்ப்பன குன்றின் மேல் கறிக்கரப்பன் கோயிலென்ற பெயரில் குளந்தை வேலப்பர் கோயிலும் விருப்பாட்சிப் பட்டினத்திற்குக் கிழக்கில் வராககிரி சரிவில் குழந்தை வேலர் மலையில் குழந்தை வேலர் கோயிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

திருமலை சின்னப்ப நாயக்கரின் சேவகர்களில் குறிப்பிடத் தக்கவர்களாக விளங்கியவர்களுள், சிக்கம நாயக்கர் என்பவர் பட்டி என்ற கிராமத்தையும், கள்ளமந்த நாயக்கர் என்பவர் கள்ளிமந்தயம் என்கிற ஊரையும், கறியப்ப நாயக்கர் என்பவர் கரியாம்பட்டி என்கிற கிராமத்தையும், புலியப்ப நாயக்கர் என்பவர் புலியூர் நத்தம் என்ற ஊரையும், குறி சின்னம நாயக்கர் என்பவர்

Koviloor Digital Library

கீரனூர் என்ற ஊரையும், கொத்த வேலப்ப நாயக்கர் என்பவர் கொத்தயம் என்ற ஊரையும், மஞ்ச நாயக்கர் பட்டி என்ற கிராமத்தையும், சிந்தலவாட நாயக்கர் என்பவர் சிந்தலவாடப் பட்டி, என்ற கிராமத்தையும், பொடப்ப நாயக்கர் என்பவர் பொடுவார் பட்டி என்ற கிராமத்தையும், பொருளாண்டி என்பவர் பொருனாயக்கர் பட்டி, வேலப்ப நாயக்கர் என்பவர் குறுமப்பட்டி என்ற கிராமத்தையும் உருவாக்கியுள்ளதாகக் 'பாளையப்பட்டு வம்சாவளி' கூறுகிறது.

திருமலை சின்னப்ப நாயக்கருடைய மகன் கதிர திருமலை சின்னப்ப நாயக்கர் பட்டத்திலிருந்த காலத்தில், மதுரை விசுவநாத நாயக்கர் மதுரைக் கோட்டை எழுபத்திரண்டு கொத்தளங்களில் ஒன்றின் பொறுப்பை நாயக்கருக்கு வழங்கியுள்ளார். அத்துடன் தங்க மோகன மாலை, முத்துக்கோத்த தங்க சரம், தும்பிப் பதக்கம், தகுடி தலைப்பாகை போன்ற வெகுமதிகளையும் விசுவநாத நாயக்கர் விருப்பாட்சி பாளையக்காரருக்கு வழங்கி சிறப்புச் செய்துள்ளார்.

அவருடைய மகன் திருமலை குப்பள நாயக்கர் பெரிய மலையில் பெரியூர் என்ற ஊரை உருவாக்கி, மங்களநாத சுவாமி கோயிலும் கட்டியுள்ளார். இதற்கு மேற்கில் தண்ணீர் பாய்ச்சலில் மகாளியீசுவரர் கோயில் உள்ள இடத்தில் பாச்சலூர் என்ற ஊரை உருவாக்கியுள்ளார். வடகாடு, கண்ணனூர், வெண்ணமலை என்கிற பெயர்களில் மலைக் கிராமங்களை உருவாக்கி குண்ணுவர், பொலையர் போன்ற காடு வாழும் சாதி மக்களை வரவழைத்து அக்கிராமங்களில் குடியமர்த்தி பலா, செண்பகம், நார்த்தை, எலுமிச்சை, கொளுமிச்சை, மா, வாழை, மஞ்சள் போன்றவற்றை வளர்க்கச் செய்துள்ளார்.

இவருக்கு திருமலை பலபத்திரராமசின்னப்ப நாயக்க பட்டக்காரர் என்றும் ரெகுராம நாயக்கரென்றும் இரு புதல்வர்கள் இருந்துள்ளனர். திருமலை பலபத்திர ராம சின்னப்ப நாயக்கர் விருப்பாட்சிப் பாளையக்காரராகப் பட்டம் ஆண்டு கொண்டிருக்க அவரது தம்பி ரெகுராம நாயக்கர் மனம் ஒப்பாமல், ரெங்கமலைக்குக் கிழக்காக வந்து கவுதமர் கோட்டை, குட்டம், கல்வாரப்பட்டி, கூவனூத்து, புதுக்கோட்டை போன்ற

Koviloor Digital Library

கிராமங்களை உருவாக்கி அப்பகுதியினை ஆளத்தலைப்பட்டார்.

திருமலை பலபத்திர சின்னப்ப நாயக்கரவர்கள் காலத்தில் குழந்தை வேலப்பருக்கு மலையின் கீழே கோயில் கட்டப் பட்டுள்ளது. நங்காஞ்சியாற்றில் அணைகட்டப்பட்டுள்ளது. சின்னக்குளம், பெரியகுளம் என்ற பெயரில் இரண்டு குளங்கள் வெட்டப்பட்டுள்ளன. உம்பிலியரைக் குடியமர்த்தி உம்பிலியப் பட்டி என்ற பெயரில் ஊர் உருவாக்கப்பட்டுள்ளது. கனககிரி குழந்தை வேலப்பருக்கு உற்சவ விக்கிரகங்கள் செய்யப்பட்ட தோடு, இரதமும் உருவாக்கப்பட்டு, தைத்திங்களில் திருவிழாவும், தேரோட்டமும் நடத்திவர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திருமலை எர்ரதம்ம சின்னப்ப நாயக்கர் என்பவர் விருப்பாட்சி பாளையப்பட்டில் நான்காவதாகப் பட்டத்திலிருந் துள்ளார். இவர் காலத்தில் சடையன்குளமும், சடையன் குளத்தணையும் உருவாக்கப்பட்டுள்ளன. மறுகால் தண்ணீர் வீண் போகாமல் சேமிக்கப்பட வேண்டுமென்பதற்காகச் செங்குளம், கருங்குளம் என்ற குளங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. சடையன் குளத்திற்குப் பின்னால், அழகநாச்சியம்மன் கோயில், சிவன் கோயில் ஆகிய கோயில்கள் கட்டப்பட்டதோடு அக்கிரஹாரம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. தம்முடைய அண்ணனை விட்டுப் பிரிந்து சென்று சில கிராமங்களைத் தன்பொறுப்பில் வைத்துக் கொண்டிருந்த இவருடைய சித்தப்பாவாகிய ரெகுநாத நாயக்கர் அறுபது வயதை அடைந்ததும், இதற்குமேல் தனியாக இருப்பது சரியில்லையென்று நினைந்து, அண்ணன் மகனே நம்முடைய மகன் என்று மொழிந்து, தாம் உருவாக்கிய கவுதம்கோட்டை, குட்டம், கல்லாறைப்பட்டி, பூவனூத்து, புதுக்கோட்டை ஆகிய ஐந்து கிராமங்களைச் சேர்ந்த உப கிராமங்களையும், திருமலை எர்ரதம்ம சின்னப்ப நாயக்கரிடம் ஒப்படைத்து, அவருடன் தம் இறுதிக் காலத்தைக் கழித்துள்ளார்.

இவருக்கடுத்தபடியாகத் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கர் பட்டமேற்றார். இவர் பட்டத்திலிருந்த காலத்தில் தாசரி நாயக்கர் என்பவரின் பெயரால் தாசரிப்பட்டி என்ற கிராமமும், புதுகுடி நாயக்கரின் பெயரால் புதுக்கோட்டை கிராமமும், இலக்கம நாயக்கர் என்பவர் பெயரால் லக்கனக்கோட்டை என்ற கிராமமும், அத்தப்ப நாயக்கர் என்பவர் பெயரால் அத்திக்

Koviloor Digital Library

கோட்டை என்ற கிராமமும், கொல்லம நாயக்கர் என்பவரின் பெயரால் கொல்லப்பட்டி என்ற கிராமமும், சின்ன வேலப்ப நாயக்கர் என்பவரின் பெயரால் சின்ன வேலம்பட்டி என்கிற கிராமமும், காளாஞ்சி நாயக்கர் என்பவரின் பெயரால் காளாஞ்சிப்பட்டி என்கிற கிராமமும், சிந்தம நாயக்கர் என்பவரின் பெயரால் சிந்தல்பட்டி என்கிற கிராமமும், அன்னம நாயக்கர் என்பவரின் பெயரால் அன்னம நாயக்கர் பட்டி என்கிற கிராமமும், காப்பிலிய லக்கணன் என்பவரின் பெயரால் காப்பிலியப்பட்டி என்கிற கிராமமும், அப்பள நாயக்கர் என்பவர் பெயரால் அம்பிளிகை என்ற கிராமமும், வீரப்ப நாயக்கர் என்பவரின் பெயரால் விறலப்பட்டி என்கிற கிராமமும் உருவாக்கப் பட்டத் தாகக் 'பாளையப்பட்டு வம்சாவளி' யில் குறிப்புகள் உள்ளன.

இவருக்கடுத்து இவருடைய மகன் நயினாத்தை சின்னப்ப நாயக்கர் என்பவர் பதவி வகித்துள்ளார். இவர் காலத்தில் வைகானி, மண்டவாடி, தங்கச்சி அம்மாபட்டி ஆகிய மூன்று கிராமங்கள் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. மதுரை நாயக்க மன்னர் முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் (கி.பி. 1609 - 1623) தஞ்சை வேந்தரோடு போர் செய்து கொண்டிருந்த சமயம் பார்த்து மைசூர் மன்னர் இராச உடையார் முகிலன் என்பவர் தலைமையில் படையை அனுப்பித் திண்டுக்கல்லைத் தாக்கச் செய்தார். முகிலன் கணவாயிக்குக் கீழ்ப்பட்ட இடங்களில் சீமைகட்டிக்கொண்டு திண்டுக்கல்லுக்கு வந்திறங்கியுள்ளார். இத்தருணத்தில், திருமலை நயினாத்தை சின்னப்ப நாயக்கரவர்கள் பாளையக்காரரைக் கூட்டிச் சென்று, முகிலனைக் கணவாயிக்குக் கீழே இருக்கவொட்டாமல் துரத்தியடித்துள்ளார். இவரது வீரச் செயலைப் பாராட்டிய கர்த்தா, இவருக்கு, பச்சை பாலா, வெள்ள கட்டின பாலா ஆகியவற்றை வழங்கியதோடு, விருப்பாட்சி சீர்மைக்கு வடக்கில் கணவாய் வரைக்கும் கர்த்தாக்களின் குமார வர்க்கமாக இருந்து பாதைகாவற் பணியைச் செய்து வரும் சிறப்பையும் வழங்கியுள்ளார். அத்துடன் 'பாதை காவலர்' என்ற பட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

இவருக்கடுத்து பட்டமேற்ற இவருடைய மகன் திருமலை கும்பள சின்னப்ப நாயக்கர் நல்லதங்காள் ஓடையாற்றில் அணையைக் கட்டி, வாய்க்கால் வெட்டியுள்ளார். இவர்

Koviloor Digital Library

காலத்தில் கருங்குளம், சிந்தல்வாடம்பட்டியிலுள்ள கவுண்டன் குளம், மஞ்ச நாயக்கன் பட்டியிலுள்ள செங்குளம், பொடுவார் பட்டியிலுள்ள பெரியகுளம் ஆகிய நான்கு குளங்கள் வெட்டப்பட்டு நீர்ப்பாசன வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன.

திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் விருப்பாட்சிப் பாளையக்காரராக இருந்தபோது, மதுரையில் நாயக்க மன்னராக திருமலை நாயக்கர் இருந்துள்ளார். மைசூர் ஆட்சியாளராக சாமராஜ உடையார் விளங்கியுள்ளார். சாமராஜ உடையார் ஹரிசூர நந்திராஜா என்ற படைத்தலைவரின் கீழ் பெரும்படை ஒன்றை அனுப்பி மதுரை நாட்டைக் கைப்பற்ற முயன்றுள்ளார். அப்படையும் மதுரை நாயக்கருக்குட்பட்டிருந்த பகுதியின் வடமேற்கு எல்லை வழியாக, நுழைந்து திண்டுக்கல்லை நெருங்கி முற்றுகையிடத் தலைப்பட்டுள்ளது. இத்தருணத்தில் திருமலை நாயக்கரின் சார்பாகப் பெரும்படை ஒன்று இராமப்பய்யரின் தலைமையில் மைசூர் படையை எதிர்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இராமப்பய்யரும் எதிரிகளைக் கடுமையாகத் தாக்கிப் புறங்காட்டி ஓடச்செய்து மைசூர் வரை விரட்டிச் சென்றுள்ளார். இந்தப் போரின் செலவினங்களுக்காக வேண்டி, இராமப்பய்யர் கேட்டுக் கொண்டபடி, விருப்பாட்சிப் பாளையத்தின் சார்பாக 1000 கோபால சக்கரம் பொன் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் போரில் விருப்பாட்சிப் பாளையமும் பங்கெடுத்துக் கொண்டுள்ளது.

திருமலை நாயக்கரின் சார்பாக இராமப்பய்யரும், அரங்கண்ண நாயக்கரும் தளவாய் சேதுபதி மீது போர் தொடுத்துச் சென்று இராமநாதபுரம், இராமேசுவரம் பகுதிகளில் போரிட்டுத் தளவாய் சேதுபதியைச் சிறைப்படுத்தி மதுரைக்குக் கொணர்ந்த போரிலும் விருப்பாட்சிப் பாளையக்காரர் பங்கெடுத்துக் கொண்டுள்ளார். இதனால் மிகவும் மகிழ்ந்து போன திருமலை நாயக்கர், மயிலிறகுக் குஞ்சமுள்ள தங்கக் காப்பு, இரத்தினம் பதித்த பெரிய அளவிலான பச்சை வண்ணத் தங்கக் கடகம், பாஜி பந்து, வைர, ரத்தினம், புதைப்புள்ள கைக்கட்டு, கோவைக்காய் போல் உள்ள தங்கத் தாயத்தாலான கைக்கட்டு, முத்துமாலை, கழுத்தில் அணிந்து கொள்ளும் கண்டசரம் ஆகிய ஐந்து வெகுமதிகளை வழங்கிச் சிறப்புச் செய்துள்ளார்.

Koviloor Digital Library

இவருக்கடுத்து பாளையக்காரரான இவரது மகன் திருமலை தாசரி சின்னப்ப நாயக்கர் காலத்தில், கொத்தயம் கிராமத்தில் நல்லதங்கை ஆற்றுப்பாசனத்தில் வேப்பங்குளமென்ற குளமொன்றும், பொருளூரில் சின்னக்குளமென்ற குளமொன்றும் வெட்டப்பட்டுள்ளன.

மைசூர் மன்னனாக கந்திருவ நரசராஜா (கி.பி. 1638 - 1659) இருந்தபோது, மைசூர் படை மதுரையைக் கைப்பற்ற எண்ணி, சத்தியமங்கலம் வழியாக, திண்டுக்கல் வரை முன்னேறி வந்து விட்டது. இவர்கள் தங்கள் கையில் அகப்பட்ட ஆண், பெண், குழந்தை என அனைவரின் மூக்குகளையும் அறுத்துக் கொண்டே வந்ததால், இப்போர் மூக்கறுப்புப் போர் என்று பெயர் பெற்றது. திண்டுக்கல் வரை முன்னேறி வந்துவிட்ட மைசூர்ப் படையினரை இரகுநாதசேதுபதியின் துணையுடன் வந்த மதுரைப்படை, மைசூருக்கே விரட்டியடித்து மதுரைக்கு வெற்றி தேடித் தந்தது. இந்தப் போரில் மதுரை சார்பாகத் திருமலை நாயக்கரின் தம்பியான குமாரமுத்துவும் (முத்துராச நாயக்கர்), அரங்கண்ண நாயக்கரும் படை நடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது. இந்தப்போர் முடிந்து இவர்கள் மதுரைக்குத் திரும்புவதற்கு முன்னதாக, 1659 பிப்ரவரியில் (விளம்பி ஆண்டு மாசித்திங்கள் 4ஆம் நாளில்) திருமலை நாயக்கர் இயற்கை எய்திவிட, அவரது புதல்வர், முத்துவீரப்ப நாயக்கர் (1659) மாசித்திங்கள் 5 ஆம் நாளில் மதுரை மன்னராக முடிசூட்டிக் கொண்டுள்ளார். இதை ஏற்க மறுத்து குமார முத்து, மதுரையைத் தாக்க விரும்பிய போது, அரங்கண்ண நாயக்கர் முத்துவீரப்ப நாயக்கருக்கும், குமாரமுத்துவுக்குமிடையில் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திப் போர் நிகழாதவாறு பார்த்துக் கொண்டார். இந்தச் சமாதான முயற்சியில் விருப்பாட்சிப் பாளையக்காரர் திருமலை தாசரி சின்னப்ப நாயக்கரும் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இந்த உடன்படிக்கையின்படி, குமாரமுத்துவுக்குச், சிவகாசிச் சீமை, திருநெல்வேலியின் சில பகுதிகள் ஆகியவற்றை முழு உரிமையோடு ஆட்சி புரியும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்து பட்டமேற்ற திருமலை பாப்பண சின்னப்ப நாயக்கர் காலத்தில் சொக்கநாத நாயக்கர் (1659 - 1682) மதுரை நாயக்க மன்னராக இருந்துள்ளார். சொக்கநாத நாயக்கர் தஞ்சாவூர் மீது படையெடுத்துச் செல்லுமுன்னர், பாளையப்பட்டார்

Koviloor Digital Library

அனைவரையும் திருச்சிக்கு வரவழைத்துப் போரில் பங்கெடுக்கச் செய்துள்ளார். இப்போரில் விருப்பாட்சிப் பாளையப்பட்டும் பங்கேற்றுள்ளது. நாயக்க மன்னரின் அரண்மனைச் செலவினங் களுக்காக வேண்டி விருப்பாட்சிப் பாளையப்பட்டின் சார்பாகக் கோபாலி சக்கரம் ஆயிரம் பொன் வழங்கி வரப்பட்டுள்ளது.

திருமலை பாப்பண சின்னப்ப நாயக்கருக்குப் பின்னர் அவருடைய மகன் சின்னப்ப நாயக்கர் பட்டமேற்று, மதுரை நாயக்க மன்னருக்கு ஆண்டொன்றுக்கு கோபாலி சக்கரம் ஆயிரம் பொன் செலுத்தி வந்துள்ளார். இவர் பட்டத்திலிருந்த போது விருப்பாட்சியில் கதிரனார் சிங்கப்பெருமாள் கோயிலும், சிவன் கோயிலும் கட்டப்பட்டுள்ளன. இரண்டு தெருக்களில் நூறு வீடுகளுடன் கூடிய அக்கிரஹாரம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சத்திரம் கட்டப்பட்டுள்ளது.தலைக்குத்தில் பாறையைப் பிளந்து வாய்க்கால் உருவாக்கப்பட்டுள்ளது. இவர் பாகவதம், இராமாயணம், புராணக் கதைகள் கேட்பதில் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளார்.

இவருக்குப் பின்னர் இவரது மகன் திருமலை முத்துவேல் சின்னப்ப நாயக்கர் பட்டமேற்றுள்ளார். இவர் காலத்தில் பெரியகோட்டை கோயிலுக்கு இரதமும், உற்சவ விக்கிரகங்களும் செய்தளிக்கப்பட்டதோடு, புரட்டாசித் திங்களில் இரத உற்சவம் நடத்திவரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெரியகோட்டை குளம், என்ற குளம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கம் வேதவியாச பட்டரய்யங்கார் என்பவருக்கு மண்டவாடி என்கிற கிராமம் சர்வமானியமாக விடப்பட்டுள்ளது.

இவருக்கடுத்து விருப்பாட்சியின் பாளையக்காரராகப் பதவி வகித்த திருமலை வெங்கிட சின்னப்ப நாயக்கர் காலத்தில் நீலமலை அழகர் கோவில் மண்டபத்தில், இப்பாளையக் காரருடைய முன்னோர்களின் கற்சிற்பங்கள் செய்து வைக்கப் பட்டுள்ளன. இவருடன் இவருடைய மைந்தர் திருமலை எதிராமானுஜகிரி சின்னப்ப நாயக்கர் உடன் ஆட்சியாளராக இருந்து, பாளையப்பட்டின் நிர்வாகத்தினைத் தன்னுடைய தந்தையாருடன் சேர்த்து கவனித்து வந்துள்ளார். திருமலை எதிராமானுஜகிரி சின்னப்ப நாயக்கருக்குப்பின் பாளையக் காரராகப் பதவி ஏற்ற திருமலை சப்பாணி சின்னப்ப நாயக்கர், சிறுவயதினராக இருந்ததால், இவரது பாட்டியான நல்லிகாமம்மாள் பாளையப்பட்டின் பணிகளைக் கவனித்து

Koviloor Digital Library

வந்துள்ளார். இவர் காலத்தில் விருப்பாட்சிப் பாளையப்பட்டின் சார்பாக மதுரை நாயக்க அரசுக்கு ஆண்டொன்றுக்கு 2000 கோபாலி சக்கரம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. இவர் காலத்தில் வெங்கிமலைக்கு ஆளேறிப்போகும் படிவழி ஏற்படுத்தப் பட்டுள்ளது. பூசை, நெய்வேத்தியங்களுக்கும், லிங்கம் கட்டிகளுக்கும் மானியம் விடப்பட்டுள்ளது. அத்துடன் விருப்பாட்சிக்குக் கிழக்காக நல்லிக்காமம்மாள் பெயரால் ஒரு கல் மண்டப சத்திரமும் உருவாக்கப்பட்டுள்ளது. முத்து சமுத்திரம் என்ற பெயரில் குளம் ஒன்றும் வெட்டப்பட்டுள்ளது.

அடுத்து பாளையக்காரராகப் பட்டமேற்ற திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கர் காலத்தில், காவேரியம்மா பட்டி, கரட்டுப்பட்டி, ரெட்டியப்பட்டி ஆகிய மூன்று ஊர்கள் உருவாக்கப்பட்டதோடு காவேரியம்மாபட்டி குளமும் வெட்டப்பட்டுள்ளது.

இவருக்கடுத்து பாளையக்காரரான திருமலை தாசரி சின்னப்ப நாயக்கர் ஆட்சிக்காலத்தில் மதுரை நாயக்க அரசு மரபில் ஆட்சி பீடத்திலிருந்தவர் மீனாட்சி அரசி (1732 - 1736). மதுரை நாட்டு மன்னனாகும் ஆசையில் பங்காரு திருமலை, தளவாய் வேங்கடச்சாரியாரின் துணையோடு மீனாட்சியைக் கவிழ்க்க முயற்சித்தார். இந்த குழப்ப நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய ஆற்காட்டு நவாப்பான தோஸ்து அலிகான், தன் மகன் சப்தர் அலிகான், மருமகன் சந்தா சாகிபு ஆகியோர் தலைமையில் ஆற்காட்டுப் படையைத் திருச்சிக்கு அனுப்பினார். பல்வேறு குழப்பங்களுக்குப் பின்னால் சந்தா சாகிபு மீனாட்சி அரசியைத் திருச்சிக் கோட்டையிலேயே சிறைப்படுத்த, அரசி தற்கொலை செய்து கொண்டார். அடுத்து சந்தா சாகிப்பின் படை பங்காரு வசமிருந்த திண்டுக்கல்கோட்டையையும் கைப்பற்றியது. இதனால் மதுரை நாயக்கராட்சி முடிவுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து விருப்பாட்சி பாளையப்பட்டின் சார்பாக வகையிருப்பாக ஆண்டொன்றுக்கு கோபாலி சக்கரம் 4000 பொன்னை இசுலாமிய ஆட்சியாளர்களுக்குச் செலுத்தி வர வேண்டியதாயிற்று.

திருமலை தாசரி சின்னப்ப நாயக்கருக்குப் பின்னர் விருப்பாட்சி பாளையக்காரராக திருமலை கதிர சின்னப்ப

Koviloor Digital Library

நாயக்கர் பட்டத்திலிருந்த காலம் (1754 - 1762) ஹைதர் அலியின் வளர்ச்சிக் காலமாக இருந்தது. கி.பி. 1722 ல் கோலார் மாவட்டத்தில் புதிக்கோட்டில் (Budikote) பிறந்து மைசூர் உடையார் அரசில் சாதாரணப் போர் வீரராகத் தன் வாழ்க்கையைத் துவங்கி, 1749 இல் பெங்களூருக்கருகில் தேவஹல்லி முற்றுகையில் தன் திறமையை வெளிப்படுத்தி ஐம்பது குதிரைப் படை வீரர்களும் 200 காலாட்படை வீரர்களும் உள்ள படைப்பிரிவின் தலைவராகி, விடாமுயற்சியின் பயனாக திண்டுக்கல்லின் பௌஜ்தாரா (படைத்தளபதி) யானார்.

பின்னர் மைசூர் உடையார் மன்னர் சிக்க கிருஷ்ண ராஜாவைத் தம் கைப்பாவை ஆக்கிக்கொண்டு நாட்டின் ஆட்சிப்பொறுப்பு முழுவதையும் தாமே மேற்கொள்ளலானார். இக்காலக்கட்டத்தில் விருப்பாட்சிப்பாளையம் வகையிறுப்பாக வருடம் ஒன்றுக்கு கோபாலி 4500 பொன் என செலுத்திப் பின்னர் வருடம் ஒன்றுக்கு 3250 பொன் வீதம் தாராபுரம் கெட்டிக்கு வழங்கி வரலானார்கள். கி.பி. 1751 அளவில் பாளையங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வெங்கய்யா என்பவரின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. ஹைதர் அலி விருப்பாட்சியை நோக்கி வந்தபோது எல்லையிலேயே ஹைதர் அலியை, விருப்பாட்சி பாளையக்காரரின் பிரதிநிதி சந்தித்து 75,000 சக்கரம் பொன் வழங்க இசைந்துள்ளார்.

திருமலை கதிர சின்னப்ப நாயக்கருக்குப் பின்னர் இவரது மைந்தர் திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் பாளையக் காரராகப் பட்டமேற்றார். கி.பி. 1772 இல் மீர்சாயுபு (Mirsahab) என்பவர் கட்டுப்பாட்டிற்குள் திண்டுக்கல் நாடு கொண்டுவரப்பட்டது. 1784 அளவில் மீர்சாயுபுக்குப் பின் சயிது சாய்பு திண்டுக்கல் அதிகாரியானார். இவர் காலத்தில் (1762 - 1782) ஹைதர் அலியின் மரணத்திற்குப் பின் அவரது புதல்வரான திப்புசுல்தான் (1782 - 1799) மைசூர் அரியணையிலிருந்து, ஆங்கிலேயரைத் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருந்தார். 1790இல் வில்லியம் மெடோஸ் (William Medows) சென்னை கவர்னரானார். இவருடைய தலைமையில் ஆங்கிலேயப்படை திண்டுக்கல், கோயமுத்தூர், பாலக்காடு போன்ற பல பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு கஜல்ஹட்டி கணவாய் வழியாக மைசூரைத் தாக்க முற்பட, இந்த தாக்குதலை திப்பு முறியடித்துள்ளார்.

Koviloor Digital Library

விருப்பாட்சி பாளையப்பட்டிலமைந்திருந்த சில கிராமங்கள்

கரியாம்பட்டி

கரியாம்பட்டி, ஒட்டன் சத்திரம் வட்டம்; கள்ளிமந்தயம் குறுவட்டத்தில் அமைந்துள்ளது. விருப்பாட்சி பாளையக் காரர்களில் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1426 - 1455) சேவகர்களில் முக்கியமானவர்களுள் ஒருவரான கரியப்ப நாயக்கர் என்பவர் பெயரால் இக்கிராமம் உருவாக்கப் பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

குத்துலுப்பை / குத்திலுப்பை

சின்னக்காம்பட்டி குறுவட்டத்தில் அமைந்துள்து, விருப்பாட்சி பாளையக்காரர்களின் முன்னோரான திருமலை சின்னப்ப நாயக்கர் விசயநகரப் பேரரசின் பகுதியிலிருந்து தென்பகுதிக்கு வந்ததும் குத்து குத்தாயிருந்த இலுப்ப மரத்தடியில் அதிக வீடுகளை உண்டு பண்ணி உருவாக்கிய கிராமமே 'குத்துலுப்பை' என்று பெயர் பெற்றதாகக் கருதப்படுகிறது.

கொத்தப்பள்ளி தாதம்கோட்டை

விருப்பாட்சி பாளையக்காரரின் முன்னோரான திருமலை சின்னப்ப நாயக்கர், தன் தம்பி அப்பண்ண நாயக்கருக்குப் பூமிவிட எண்ணி, குத்துலுப்பைக்குத் தெற்காகக் காடுகளை அழித்து வீடுகளைக் கட்டிக்கொள்ளத் தன் தம்பியை அனுமதித்ததன் பேரில் அப்பண்ண நாயக்கரால் உருவாக்கப்பட்ட கிராமமே கொத்தம்பள்ளி தாதம்கோட்டை என்று பெயர் பெற்றதாகக் குறிப்புள்ளது.

கண்ணனூர்

விருப்பாட்சி பாளையக்காரர்களின் மரபுவழிப் பட்டியலில் மூன்றாமவரான திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் (கி.பி. 1456 - 1482) காலத்தில் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் கண்ணனூர் கிராமத்தில், குண்ணுவர், பொலையர் போன்ற காடு வாழும்

Koviloor Digital Library

மக்களைக் குடியேற்றி, அப்பகுதியில் பலா, செண்பகம், நாரத்தை, எலுமிச்சை, கொளுமிச்சை, மா, வாழை, மஞ்சள் போன்றவை பயிர் செய்யப்பட்டு வந்தததாகக் கருதப்படுகிறது.

வெண்ணலை

இந்த மலைகிராமம், விருப்பாட்சி பாளையக்காரர்களில் திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் காலத்தில் (கி.பி. 1456 - 1482) உருவாக்கப்பட்டுள்ளது.

கவுதமபுரம், கவுதம் கோட்டை

விருப்பாட்சி பாளையக்காரர்களுள் நான்காமவரான பலபத்திர ராம சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1482 - 1514) தம்பியான ரெகுராம நாயக்கர் ரெங்கமலைக்குக் கிழக்கில் இவ்வூரை உருவாக்கினார்.

பெரியூர்

விருப்பாட்சி பாளையக்காரரான திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் (கி.பி. 1456 - 1482) காலத்தில் இவ்வூர் உருவாக்கப்பட்டு, மங்களநாத சுவாமிக்கு கோயில் கட்டப்பட்டது.

பாச்சலூர்

பெரியூருக்கு மேற்காக மாகாளியீசுரர் கோயில் உள்ள பகுதியில், தண்ணீர் பாய்ச்சலில் உருவாக்கப்பட்ட கிராமமென்பதால் இவ்வூருக்குப் பாச்சலூரென்று பெயர் ஏற்பட்டதாகக் கருதுவர். இவ்வூர் விருப்பாட்சி பாளையக்காரரான திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் (கி.பி. 1456 - 1482) காலத்தில் உருவாக்கப்பட்டது.

வடகாடு

பாச்சலூர் அருகில் உருவாக்கப்பட்ட மலைகிராமமான வடகாட்டில், குண்ணுவர், பொலையர் போன்ற காடு வாழும் மக்கள் குடியேற்றப்பட்டு, அங்கு மரம் செடி வகைகள்

Koviloor Digital Library

வளர்க்கப்பட்டுள்ளன. இந்த கிராமம், விருப்பாட்சி பாளையக்காரரான திருமலை குப்பள சின்னப்ப நாயக்கர் காலத்தில் உருவாக்கப்பட்டது.

குட்டம், கல்வாரப்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர் பலபத்திர ராம சின்னப்ப நாயக்கர் (கி.பி. 1482 - 1514) காலத்தில் அவர் தம்பி ரெகு ராம நாயக்கர் ரெங்கமலைக்குக் கிழக்கில் இவ்வூரை உருவாக்கினார்.

கூவனூத்து

விருப்பாட்சி பாளையக்காரர் பலபத்திர ராம சின்னப்ப நாயக்கர் (கி.பி. 1482 - 1514) காலத்தில் அவர் தம்பி ரெகு ராம நாயக்கரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டது.

உம்பிலியப்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர் பலபத்திர ராம சின்னப்ப நாயக்கர் (கி.பி. 1482 - 1514) காலத்தில் இவ்வூர் உருவாக்கப்பட்டுள்ளது. இவர் கனககிரி குழந்தை வேலப்பருக்கு மலையின் கீழே கோயிலைக்கட்டி, அவருக்கு உற்சவ விக்கிரகங்களைச் செய்து வைத்து, இரதம் உருவாக்கி மலையைச் சுற்றித் தேரோடி வரவும் ஏற்பாடுகள் செய்துள்ளார். நங்காஞ்சி ஆற்றில் அணை கட்டியதோடு, சின்னகுளம், பெரியகுளம் என்ற இரு குளங்களையும் பாளையக்காரர் வெட்டுவித்துள்ளார்.

சிந்தல வாடப்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களில் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1426 - 1455) சேவகர்களில் ஒருவரான சிந்தலவாட நாயக்கரின் பெயரில் இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

பொடுவார் பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களில் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் (கிபி. 1426 - 1456) சேவகர்களுள் ஒருவரான பொடப்ப நாயக்கரின் பேரில் இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

பொருநாயக்கர் பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களுள் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1426 - 1456) சேவகர்களில் ஒருவரான பொருளாண்டி என்பவரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டது.

குறுமப்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களுள் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1426 - 1456) சேவகர்களில் ஒருவரான வேலப்ப நாயக்கரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டது.

புலியூர் நத்தம்

விருப்பாட்சி பாளையக்காரர்களில் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1426 - 1455) சேவகர்களில் ஒருவரான புலியப்ப நாயக்கர் என்பவரின் பெயரால் புலியூர் நத்தம் என்ற கிராமம் உருவாக்கப்பட்டது.

கீரனூர்

விருப்பாட்சி பாளையக்காரர்களில் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் சேவர்களில் ஒருவரான குறி சின்னம நாயக்கரால் இவ்வூர் உருவாக்கப்பட்டது.

கொத்தயம்

விருப்பாட்சி பாளையக்காரர்களில் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் சேவர்களில் ஒருவரான கொத்த வேலப்ப நாயக்கர் பெயரால் இவ்வூர் உருவாக்கப்பட்டுள்ளது.

மஞ்ச நாயக்கர் பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களில் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் சேவர்களில் ஒருவரான மஞ்ச நாயக்கரின் பெயரில் இவ்வூர் உருவாக்கப்பட்டது என்பர்.

Koviloor Digital Library

தாசரிப்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1551 முதல் 1581 வரை) காலத்தில், தாசரி நாயக்கர் என்பவரின் பெயரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

தேவத்தூர்

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1551 முதல் 1581 வரை) காலத்தில், தேவ நாயக்கர் பெயரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

வேலூர்

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கரின் (கி.பி.1551 முதல் 1581 வரை) காலத்தில், வேலப்ப நாயக்கர் என்பவரின் பெயரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

பொட்டி காமபட்டி

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1551 முதல் 1581 வரை) காலத்தில், பொட்டி காம நாயக்கர் என்பவரின் பெயரால் இந்த கிராமம் உருவாக்கப் பட்டுள்ளதென்பர்.

வராககிரிகோட்டை

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1551 முதல் 1581 வரை) காலத்தில், வராககிரி நாயக்கர் பெயரில் இந்த ஊர் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதுவர்.

இலக்கன கோட்டை - இலக்கையன் கோட்டை

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1551 முதல் 1581 வரை) காலத்தில், இலக்கன நாயக்கரின் பெயரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

Koviloor Digital Library

இவ்வூரின் பெயர் காலப்போக்கில் மருவி இன்று லெக்கையன் கோட்டை என்று வழங்கிவருகிறது. ரெங்கநாதபுரம், சாலைப்புதூர், குழந்தைவேல் கவுண்டன் புதூர் ஆகியவை இவ்வூரின் உள்கிராமங்களாகும்.

அத்திக்கோட்டை

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1551 முதல் 1581 வரை) காலத்தில், அத்தப்ப நாயக்கர் என்பவரின் பெயரால் இந்த கிராமம் உருவாக்கப் பட்டுள்ளது.

கொல்லப்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களுள் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கர் (கி.பி. 1551 முதல் 1581 வரை) பட்டத்திலிருந்த சமயத்தில் கொல்லம நாயக்கரின் பெயரால் கொல்லப்பட்டி என்ற கிராமம் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. குட்டில நாயக்கன்பட்டி, கொல்லப்பட்டி புதூர் ஆகியவை இவ்வூரின் உள்கிராமங்களாக அமைந்துள்ளன.

அன்னம நாயக்கர் பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களுள் வராககிரி சின்னப்ப நாயக்கரின் காலத்தில் அன்னம நாயக்கர் என்பவரின் பெயரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

காப்பிலியப்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களுள் வராககிரி சின்னப்ப நாயக்கரின் காலத்தில் காப்பிலயலக்கணன் என்பவரது பெயரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. கொசவபட்டி, கிருஷ்ண கவுண்டன் புதூர், குள்ளவீரன் பட்டி, சூரப்ப நாயக்கனூர் ஆகிய ஊர்களுக்கருகில் இவ்வூர் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

அம்பிளிக்கை, சின்னக்காம்பட்டி குறுவட்டம்

விருப்பாட்சி பாளையக்காரர்களுள் வராககிரி சின்னப்ப நாயக்கரின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1551 முதல் 1581 வரை) அப்பள நாயக்கர் என்பவரது பெயரால் இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. இவ்வூர் செங்காட்டு புதூர், பெயில் நாயக்கன்பட்டி, கல்யாணத்தேவன்பட்டி, பூலாம்பட்டி, நல்லூர்பட்டி ஆகிய கிராமங்களுக்கருகிலுள்ளது.

இவ்வூரில் மரத்தினடியிலுள்ள தனிக்கல் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டிலிருந்து கி.பி.1729 ஆம் ஆண்டில் திருமலை சின்னப்ப நாயக்கர், கனககிரியிலுள்ள விசுவநாத சுவாமிக்கு சடையன் குளத்திற்கு மேற்கிலும், கோபாலபுரத்திற்குக் கிழக்கிலுமுள்ள சில நிலங்களைக் கொடையாக ஈந்துள்ள மையைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

சின்னவேலம்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களுள் வராககிரி சின்னப்ப நாயக்கரின் காலத்தில் (கி.பி. 1551 முதல் 1581 வரை) சின்னவேலப்ப நாயக்கர் என்பவரின் பெயரால் சின்னவேலம்பட்டி என்ற கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

காளாஞ்சிப்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர்களுள் வராககிரி சின்னப்ப நாயக்கரின் காலத்தில் காளாஞ்சி நாயக்கர் என்பவர் பெயரால் இவ்வூர் உருவாக்கப்பட்டுள்ளது. புது காளாஞ்சிப் பட்டி, கல்லுபட்டி, ரெங்கவலசு, பெயில் நாயக்கன்பட்டி, பாவையூர் போன்றவை இவ்வூருக்கருகிலுள்ளன.

நல்லிகாமகபுரம்

திருமலை சப்பாணி சின்னப்ப நாயக்கர் (கிபி. 1710 - 1724) காலத்தில், அவர் சார்பாக அவரது பாட்டியான நல்லிக்காமம்மாள் விருப்பாட்சி பாளையத்தின் பணிகளைப் பொறுப்பாகக் கவனித்து வந்துள்ளார். இவர் காலத்தில் பூதிபுரம் அக்கிர ஹாரத்திற்கு இவ்வம்மையாரின் பெயரால் நல்லிக்காமக புரம் என்ற பெயர் வழங்கிவந்துள்ளது.

Koviloor Digital Library

காவேரியம்மா பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கர் காலத்தில் (கி.பி. 1724 - 1734) இந்த கிராமம் உருவாக்கப்பட்டுள்ளதோடு, காவேரியம்மா பட்டி குளமும் வெட்டப்பட்டது.

கரட்டுப்பட்டி

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கர் காலத்தில் (1724 - 1734) இந்த கிராமம் உருவாக்கப் பட்டுள்ளது.

ரெட்டியப்பட்டி (ஒட்டன் சத்திரம் குறுவட்டம்)

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை வராககிரி சின்னப்ப நாயக்கர் காலத்தில் (1724 - 1734) இந்த கிராமம் உருவாக்கப்பட்டது.

விருப்பாட்சி பாளையக்காரர்களில் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் (கி.பி. 1426 - 1455) சேவகர்களில் ஒருவரான சிக்கம நாயக்கரால், உருவாக்கப்பட்டு, சிக்கம நாயக்கர் குடிபடையுடன் இருந்த ஊராக 'பட்டி' என்ற ஊர் கருதப்படுகிறது.

கள்ளிமந்தயம் (கள்ளிமந்தயம் குறுவட்டம்)

விருப்பாட்சிப் பாளையக்காரர்களில் முதலாமவரான திருமலை சின்னப்ப நாயக்கரின் சேவகர்களில் முக்கியமானவர் களுள் ஒருவரான கள்ள மந்த நாயக்கர் என்பவர் உருவாக்கி குடிபடையுடன் இருந்த ஊராகக் கள்ளி மந்தயம் கருதப்படுகிறது.

மண்டவாடி (சின்னக்காம்பட்டி குறுவட்டம்)

விருப்பாட்சி பாளையக்காரர் திருமலை முத்துவேல் சின்னப்ப நாயக்கர் காலத்தில் (கி.பி. 1685 - 1699) ஸ்ரீரங்கம் வேதவியாச பட்டரய்யங்கார் அவர்களுக்கு சர்வமானியமாக விடப்பட்டுள்ளது.

ஒத்தையூர்:

ஒட்டன்சத்திரம் வட்டத்திலுள்ள தேவத்தூர்குறு வட்டத்திலிருக்கும் சிக்கம நாயக்கன் பட்டிகிராமத்தின் உட்கடை

Koviloor Digital Library

கிராமமான ஒத்தையூரில் சர்வே எண் 304,2 இல் அமைந்துள்ள கந்தசாமிக் கவுண்டரின் துணைவியார் திருமதி செல்லாத்தாளின் புஞ்சை நிலத்தில் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த முதுமக்கள் தாழி கண்டறியப்பட்டுள்ளதால், இப்பகுதியில் சங்க காலத்திலேயே மக்கள் வாழ்ந்துள்ளனர் எனலாம்.

பொருளூர் நல்ல பெரிய கவுண்டர் மரபு வழியினர்

ஒட்டன் சத்திரம் வட்டத்திற்குள் அமைந்துள்ள தேவத்தூர் குறுவட்டத்திற்குள் பொருளூர் அமைந்துள்ளது. பொருளூர் பாளையக்காரர்கள் மேல்கரை தலைய நாட்டு பட்டக்காரர் என்றழைக்கப்பட்டுள்ளனர். இந்த பாளையக்காரர்கள் நல்ல பெரியாயி கவுண்டர் என்றும், வள்ளல் பெரியாயி கவுண்டர் என்றும், சிறப்புப் பட்டப்பெயரால் சுட்டி அழைக்கப் பட்டுள்ளனர். கி.பி 1379 முதல் இப்பாளையக் காரர்களின் மரபு வழியைத் தெரிந்து கொள்ள முடிகிறது. நல்ல பெரிய கவுண்டரின் மரபு வழிப் பட்டியல் கீழ் வருமாறு:

1. நல்ல சிறுவு பெரியாயிக் கவுண்டர் – 22 ஆண்டுகள்
2. நல்ல பெரியாயி கவுண்டர் – 36 ஆண்டுகள்
3. வள்ளல் பெரியாயி கவுண்டர் – 42 ஆண்டுகள்
4. நல்ல பெரியாயி கவுண்டர் – 15 வருடங்கள்
5. வள்ளல்பெரியாயி கவுண்டர் – 8 வருடங்கள்
6. நல்ல பெரியாயி கவுண்டர் – 10 வருடங்கள்
7. வள்ளல் பெரியாயி கவுண்டர் – 26 ஆண்டுகள்
8. நல்ல பெரியாயி கவுண்டர் – 52ஆண்டுகள்
9. வள்ளல் பெரியாயி கவுண்டர் – 44 ஆண்டுகள்
10. நல்ல பெரியாயி கவுண்டர் – 25 ஆண்டுகள்
11. வள்ளல் பெரியாயி கவுண்டர் – 22 ஆண்டுகள்
12. நல்ல பெரியாயி கவுண்டர் – 29 ஆண்டுகள்
13. வள்ளல் பெரியாயி கவுண்டர் – 46 ஆண்டுகள்

மேற்குறிப்பிடப்பட்டவர்களுள் இரண்டாவது பட்டக்காரர் நல்ல பெரியா(யி) கவுண்டர் காலத்தில் மருளப்பட்டியில்

Koviloor Digital Library

கோட்டை கட்டப்பட்டுள்ளது. ஐந்தாவது பட்டத்திலிருந்தவரான வள்ளல் பெரியா கவுண்டர் காலத்தில் கிளா கூண்டல் கிராமத்தில் கோட்டை கட்டப்பட்டுள்ளது.

வெரியப்பூர் (வெரியம்பூர்)

ஒட்டன் சத்திரம் வட்டத்திலுள்ள புலியூர் நத்தம் குறுவட்டத்தில், ஒட்டன் சத்திரத்திற்கு வடகிழக்கில், சுமார் 6½ கி.மீ. தூரத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள இராம சமுத்திரம் கண்மாயின் கிழக்கிலுள்ள பாறையில் கொங்கு மன்னன் இராச கேசரிவர்மன் வீரராஜேந்திரனின் கல்வெட்டொன் றுள்ளது. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு அண்ட நாடு என்ற நாட்டுப் பெயரைக் குறிப்பிடுவதுடன் நின்று விடுகிறது. இப்பகுதி 13 ஆம் நூற்றாண்டளவில் கொங்கு மன்னன் இராசகேசரி வர்மன் வீரராசேந்திரனின், ஆட்சிக் குட்பட்டிருந் தெனக் கருதலாம்.

தங்கச்சி அம்மா பட்டி

ஒட்டன் சத்திரம் குறுவட்டத்தில் அமைந்துள்ள தங்கச்சி அம்மா பட்டியில், கிழக்குப் பகுதியில் விநாயகர் கோயிலுக்கருகில், தாழி கண்டறியப்பட்டுள்ளதால், சங்க காலத்திலோ அல்லது சங்கம் மருவிய காலத்திலோ இப்பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இத்தாழி வளைவுகளுடன் 104 செமீ உயரத்திலும், வளைவு நீக்கி 96 செமீ. உயரத்திலுமுள்ளது. இந்த தாழியின் வாய் விட்டம் 53 செ.மீ, கழுத்துச் சுற்றளவு 150 செமீ தாழியின் நடுப்பகுதிச் சுற்றளவு 214 செமீ அடிப்பகுதியின் சுற்றளவு 50 செமீ., இவ்வூருக்குக் கிழக்கில், வடகாடு மலையில் தோன்றி அரவக்குறிச்சி பள்ளபட்டிக்கருகில் குடவனாற்றில் கலக்கின்ற நங்காஞ்சி ஆறு ஓடுவதால், இவ்வாற்றை ஒட்டி சங்ககாலக் குடியிருப்பு ஒன்றிருந்துள்ளதெனலாம்.

Koviloor Digital Library

2. கொடைக்கானல் வட்டம்

தாண்டிக்குடி

கோடைமலைப்பகுதியில் அமைந்த முக்கிய தொல்லியல்சார் ஊர்களில் இது ஒன்றாகும். கடல்மட்டத்திலிருந்து 4400 அடி உயரத்தில் மலைகள் சூழ்ந்த செழிப்பான ஊர். மருதாநதி என்ற காட்டாற்றின் இடது கரையில் உள்ளது. இவ்வூரிலுள்ள கி.பி. 13ஆம் நூற்றாண்டு, குலசேகர பாண்டியன் கல்வெட்டின் மூலம் இவ்வூருக்கு தான்றிக்குடி என்ற பெயர் வழங்கியதை அறியமுடிகிறது. தான்றி என்பது ஒருவகை மரத்தின் பெயர். இம்மரங்கள் இவ்வூர் பகுதியில் இன்றும் அதிக அளவில் உள்ளன. தான்றி மரங்களைச் சார்ந்த குடியிருப்பு என்ற பொருளில் இவ்வூருக்குத் 'தான்றிக்குடி' என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். வத்தலக்குண்டிலிருந்து பண்ணைக்காடு வழியாகவும், வத்தலக்குண்டிலிருந்து அய்யம்பாளையம் வழியாகவும் இவ்வூருக்கு வருவதற்கு மலைச்சாலைகள் உள்ளன.

2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைகழகத்தினர் தாண்டிக்குடியில் நடத்திய அகழாய்வுகள் மூலம் இவ்வூரில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கு முன்பாக மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிபடுத்தும் அரிய தொல்லியல் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. மருதாநதியின் வலதுகரையில் தாண்டிக்குடிக்கும் பொம்மகாட்டுக்கும் இடையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெருங்கற்படைக்கால ஈமச் சின்னங்கள் உள்ளன.

சங்ககாலத்தில் தாமன்தோன்றிக்கோன் என்பவன் தோன்றிமலையை ஆண்டான். இவன் ஆண்ட மலை கருவூருக்கு அருகிலுள்ளது என்பர். மற்றொரு சாரார் அம்மலை தாண்டிக்குடி மலையே என்று கருதுகின்றனர். இதற்குப் பொருத்தமாக இம்மலையை ஆண்ட தாமன்தோன்றிக் கோனைப்

Koviloor Digital Library

புகழ்ந்து பாடிய ஐயூர்முடவனாரின் பாடலில் இது அருவிகள் விழும் வானளவு உயர்ந்த மலை (புறம்-399) என்று குறிப்பிடப்படுகிறது. இப்பாடலில் ஐயூர் முடவனார், தோன்றிக்கோனை அறவோன், சிறந்தமறவன், மள்ளன், பழங்குடியின் வழிதோன்றல் என்று புகழ்ந்து கூறுகின்றார். அவர் சோழநாட்டிலுள்ள கிள்ளிவளவனைக் காணச் செல்லும்போது அவர் சென்ற வண்டியின் காளை தோன்றிக்கோன் நாட்டின் அருகில் காயமுற்று நின்றது. இதனை அறிந்த தோன்றிக்கோன் அவருக்கு நல்ல காளையோடு ஆநிரைகளையும் அளித்தான் என்று ஐயூர்முடவனார் தோன்றிக்கோனைப் புகழ்ந்து பாடியுள்ளார். தோன்றிக்கோன் ஆண்ட மலையே தான்றிமலை என்று மாறி தற்போது தாண்டிக்குடிமலை என்று வழங்குகிறது எனக் கருதுகின்றனர்.

தாண்டிக்குடியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈமச்சின்னங்கள் இருப்பதை 1928ல் முதன்முதலில் கண்டறிந்தவர் ஆங்கிலேடு என்ற ஆங்கிலேயர் ஆவார். இவர் அக்காலத்தில் மதுரைமாவட்ட ஆட்சியராக இருந்தவர். அதற்குப் பின்னர் தமிழ்ப் பல்கலைகழகத்தினரே இதில் முழுமையாக ஆய்வு செய்தனர். இப்பகுதி மக்கள் இச்சின்னங்களை வாலியர்வீடு, பேத்து என்று அழைக்கின்றனர்.

பல்வேறு காலகட்டத்தைச் சார்ந்த ஈமக்குழி, கல்பதுக்கை, கல்திட்டை, முதுமக்கள்தாழி என்ற நான்குவகையான ஈமச்சின்னங்கள் தாண்டிக்குடிப் பகுதியில் கண்டறியப் பட்டுள்ளன. இவற்றில் பழமையானது ஈமக்குழியாகும். ஈமக்குழிகள் இரும்புக் காலத்திற்கு முன்பாக கி.மு. 1500 அளவில் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றில் எவ்வித இரும்புப் பொருட்களும் கிடைக்கவில்லை. மற்ற வகையினைச் சார்ந்த ஈமச்சின்னங்களின் காலத்தினை கி.மு. 500ல் இருந்து கிபி200 வரைக் கொள்ளலாம். ஆங்கிலேயர் காலத்தில் தாண்டிக்குடிப் பகுதியில் இருந்த ஈமச்சின்னங்களில் எடுக்கப்பட்ட தொல்பொருட்கள் செண்பகனூர் அருங்காட்சியகத்தில் உள்ளன.

தாண்டிக்குடியில் காப்பி ஆராய்ச்சி வளாகத்தின் உட்புறம் செய்யப்பட்ட அகழாய்வில் பரற்கற்கள் நிறைந்த கற்பதுக்கை கண்டறியப்பட்டது. இக்கல்லறையின் உட்புறம் நான்கு

Koviloor Digital Library

மூலைகளிலும் நான்கு முதுமக்கள் தாழிகள் ஒன்றை ஒன்று காணும் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டில் இதுபோன்று கல்லறைக்குள் நான்கு தாழிகள் வைத்து ஈமச்சடங்குகள் செய்யும் முறை கண்டறிந்தது இதுவே முதல்முறையாகும். இக்கல்லறையின் மேலே வைத்து மூடப்பட்ட மூடுகல் மூன்று டன் எடை கொண்ட பெருங்கல்லாகும். கல்லறையின் கீழ்புறத்தில் இடுதுளையும் வழிநடையும் காணப்பட்டன. ஐம்பதிற்கும் மேற்பட்ட வட்ட வடிவ தாங்கிகள் தட்டுகள், கிண்ணங்கள் இவ்வகழ்வாய்வுக் குழியில் வைக்கப் பட்டிருந்தன இவை மண்ணாலானவை இவற்றோடு இரும்பாலான வாட்கள், கத்திகளும் இருந்தன. இவற்றில் ஒருவாள் இரண்டு வட்டவடிவ தாங்கிகள், ஒரு கிண்ணத்தின் மேல் வைக்கப்பட்டிருந்தது. இது படையலின்போது வாளுக்கு அளித்த முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

பொம்மகாட்டுப் பகுதியில் செய்யப்பட்ட அகழாய்வில் மிகவும் அழகான கட்டுமானத்தைக் கொண்ட கல்லறைகள் கண்டறியப்பட்டன. இவை வட்டவடிவ இடுதுளைகள் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டில் இதுபோன்று சிறப்பான கட்டுமானத்தைக் கொண்ட கல்லறை வேறு எங்கும் காண்பது அரிது. இக்கல்லறையில் வழக்கமாகக் கிடைக்கும் படையல் பொருட்களுடன் இப்பகுதி மக்களின் செல்வச் செழிப்பை உணர்த்தும் வகையில் முன்னூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட சூதுபவளமணிகளும் பளிங்குகல் மணிகள் சிலவும் கிடைத்தன. இங்கு கிடைத்த சூதுபவளமணிகள் இப்பகுதியில் செய்யப்பட்டவை அல்ல. இவை வடமாநிலத்தில் குறிப்பாக குஜராத் மாநிலப் பகுதியிலிருந்து வந்தவையாகத் தோன்றுகின்றன.

தாண்டிக்குடி முருகன்கோயில் பகுதியிலும், சேதுக்காடு பகுதியிலும் ஆறு இடங்களில் அகழாய்வுகள் செய்யப்பட்டன. முருகன்கோயிலுக்கு அருகிலேயே மிகப்பழமையான (கி.மு. 1500) ஈமக்குழிகளிலிருந்து ஈமத்தாழிகளும் மட்கலயங்களும் கண்டெடுக்கப்பட்டன. இக்குழிகளில் வைக்கப்பட்டிருந்த இருபத்தாறு மட்பானைகளும் கிழக்குநோக்கியே வைக்கப்பட்டிருந்தன. இவை ஈமச்சடங்குகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு முறையாகச் செய்யப்பட்டன

Koviloor Digital Library

என்பதைக் காட்டுகின்றன. மண்ணாலான பிரிமணைகள், கிண்ணங்கள், தட்டுகள், பானைகள் என்று பல வடிவங்களில் மட்கலன்கள் ஈமக்குழியில் கிடைத்தன. இவற்றில் பிரிமணை மற்றும் வட்டு ஒன்றின் மீது கருப்புவண்ணத்தில் மாவிலை போன்ற இலை வடிவம் ஓவியமாக வரையப்பட்டிருந்தமை ஓவியக்கலை நுட்பம் இப்பகுதியில் மிகப் பழங்காலத்தில் இருந்துள்ளதைக் காட்டி வியப்பில் ஆழ்த்தியது. வெளி மாநிலங்களில் புதியகற்கால, செம்புக்கால கால கட்டடங்களைச் சார்ந்தவையாக கிடைத்துள்ள மட்கலன்களோடு தாண்டிக்குடி ஈமக்குழியில் கிடைத்த மட்கலன்கள், ஒப்பிடத்தக்கவையாகும். இத்தகைய மட்கலன்கள் தமிழ்நாட்டில் கிடைத்தவற்றில் காலத்தால் மிகவும் பழமையானவை. மேலும் இத்தகைய கலன்கள் தாண்டிக்குடியிலேயே முதன்முதலில் கண்டறியப்பட்டுள்ளன.

இரும்புக்காலத்தினைச் சார்ந்த கற்பதுக்கை, கல்திட்டை ஆகியவற்றில் செய்யப்பட்ட அகழாய்வுகளில் இரும்புப் பொருட்களும் மட்கலன்களும் கல்மணிகளும் கிடைத்தன. கற்பதுக்கையும், கல்திட்டையும் கிழக்குநோக்கிய நிலையில் முன்புறம் முற்றத்துடன் காட்சியளித்தன. கல்லறையும் அதற்கு முன்பிருந்த முற்றமும் இடுதுளையோடு இணைக்கப்பட்டிருந்தன. இடுதுளைகள் பலகைக்கற்கள் கொண்டு மூடப்பட்டிருந்தன. கல்லறைக்கு மேலே மூடுகற்கள் இருந்தன. சேதுக்காடு பகுதியில் இருந்த கல்லறையில் இருநூறுக்கும் மேற்பட்ட அழகுமிக்க சூதுபவளமணிகள் கண்டெடுக்கப்பட்டன. இம்மணிகள் சிலவற்றில் வெள்ளை வண்ணம் தீட்டப்பட்டிருந்தது.

கற்பதுக்கைகளில் செய்யப்பட்ட அகழாய்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பளிங்கு, அகேட், சூதுபவளம், ஸ்டியடைட் போன்ற அரிய கல்மணிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவற்றில் எண்ணூறுக்கும் மேற்பட்டவை ஸ்டியடைட் மணிகளாகும். இவை 5. மி.மி. அளவுடையன. தமிழகத்தில் முதன்முதலில் இவை தாண்டிக்குடி கற்பதுக்கைகளிலே கண்டறியப்பட்டுள்ளன. ஸ்டியடைட்டை சிந்துவெளி மக்கள் அதிக அளவில் பயன்படுத்தியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தாண்டிக்குடி கற்பதுக்கைகளில் கிண்ணங்கள், பிரிமணைகள், பானைகள் போன்ற மட்கலன்கள் கண்டெடுக்கப்பட்டன.

Koviloor Digital Library

அகழாய்வு செய்யப்பட்ட கல்திட்டை ஒன்று தெற்குநோக்கிய மூன்று அறைகளைக் கொண்டதாய் ஒழுங்கான முறையில் பலகைக்கற்கள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றைச் சுற்றிச் செவ்வகவடிவச் சுவர் எழுப்பப்பட்டு அவை பரற்கற்களால் நிரப்பப்பட்டிருந்தன. இக்கல்திட்டையில் இடுதுளைகள் இல்லை. கற்பதுக்கை, மற்றும் கல்திட்டைகளில் இரும்பால் செய்யப்பட்ட அம்புமுனைகள், கோடாரிகள், வாட்கள், கத்திகள் ஆகியன கிடைத்தன. தாண்டிக்குடியில் பெருங்கற்படைகால மக்கள் வாழ்ந்த வாழ்விடங்களிலும் அகழாய்வு செய்யப்பட்டது. இவற்றில் கருப்பு - சிவப்பு பானை ஓடுகளும் சிவப்பு பூச்சுடைய பானை ஓடுகளும் கிடைத்தன.

குஜராத் போன்ற வடமாநிலங்களோடு தொடர்புடைய வணிகர்கள் சூதுபவளமணிகளைக் கொடுத்து இப்பகுதியில் விளைந்த மிளகு, ஏலம் போன்ற வாசனைப் பொருட்களைப் பெற்றிருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம்.

தாண்டிக்குடியில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. கி.பி. 1280ஆம் ஆண்டைச் சார்ந்த எம்மண்டலமும் கொண்டருளிய மாறவர்மன் குலசேகர பாண்டியன் கல்வெட்டு தான்றிக்குடி (தாண்டிக்குடி) ஊரார்க்கும் தாண்டிக்குடி அருகிலுள்ள மணலூர் ஊரார்க்கும் இடையே பகை நிலவிவந்தது என்றும் அதனை இருவரும் பேசி தீர்த்துக்கொள்வது என்றும் முடிவெடுத்து அம்முடிவினைக் கல்வெட்டாகப் பொறித்ததைத் தெரிவிக்கிறது. இதனை இருவரும் மீறக்கூடாது என்றும் மீறினவர் தங்கள் தாய்க்குத் தாங்களே கணவன் ஆகும் கொடுமைக்கு ஆளானவர் என்றும் இக்கல்வெட்டு கூறுகிறது. இவ்விரண்டு ஊரவர்கள் சொல்ல இக்கல்வெட்டை வெட்டியவன் மயிந்திரமங்கலத்திலுள்ள கல்தச்சன் வல்லாளப் பெருமாள் உய்யன் ஆவான். இக்கல்வெட்டு குறிக்கும் மணலூர் மலைமண்டலத்தோடு (சேரநாடு) தொடர்புடைய பேரூராக விளங்கியுள்ளது. கல்வெட்டு இவ்வூரை 'மலைமண்டலத்து ஐய்யப்பொழில் பேரூரான மணலூர்' என்று குறிப்பிடுகிறது. ஐய்யப்பொழில் என்ற அடைமொழி இதற்குக் கொடுக்கப் பட்டுள்ளமையால் இவ்வூருக்கு அக்காலத்தில் தென்னிந்தியாவில் புகழ்பெற்று விளங்கிய அய்ஹோளே திசையாயிரத்து ஐநூற்றுவர் என்ற வணிகர் குழுவினரோடு இருந்த தொடர்பு புலப்படுகிறது.

Koviloor Digital Library

நாலாயிரம் அடிகளுக்கு மேல் உயர்வான தாண்டிக்குடி மலைப்பகுதியில் வணிகநகரம் அமைக்கப் பட்டுள்ளதை முதன்முறையாக தாண்டிக்குடி பாண்டியர் கல்வெட்டு உணர்த்துகிறது.

இக்கல்வெட்டு அருகில் உள்ள பட்டத்து விநாயகர் கோயிலில் கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீரனுக்காக எடுக்கப்பட்ட நடுகல் கல்வெட்டு ஒன்று உள்ளது. தனிக்கற் பலகையில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு கோம்பையிலே நடந்த சண்டையில் இறந்துபோன தேசஆண்டி என்பவனுக்காக எடுக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. கல்வெட்டு பொறித்த கற்பலகையில் வலதுகையில் வாளும் இடதுகையில் துப்பாக்கியும் ஏந்தி நிற்கும் தேச ஆண்டியின் புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது. அவனது வலப்புறம் வணங்கி நிற்கும் அடியாரின் உருவம் சிறிய உருவமாகக் காட்சியளிக்கிறது.

சோலைக்காடு

பன்றிமலைக்கு எதிரே தெற்கே அமைந்த உயர்ந்த குன்றுப்பகுதி சோலைக்காடாகும். குறைந்த அளவு மக்கள் வசிக்கும் இவ்விடத்தில் ஊருக்கு வெளிப்புறம் 'வாலியர் வீடு' என்றழைக்கப்படும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறந்தவர்களை அடக்கம் செய்த பெருங்கல் சின்னங்களைக் காணலாம்.

கே.சி.பட்டி

இவ்வூர் பன்றிமலையிலிருந்து தாண்டிக்குடி செல்லும் வழியில் உள்ளது. இவ்வூரிலும் 'வாலியர் வீடு' என்றழைக்கப்படும் பழமையானப் பெருங்கற் சின்னங்கள் காணப்படுகின்றன. இதுபோல பாச்சலூரிலும் பெருங்கற்படைச் சின்னங்கள் காணப்படுகின்றன.

கோடைகானல்

திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்த புகழ்வாய்ந்த கோடைகாலச் சுற்றுலாத்தலம் இதுவாகும். கோடைகானல் என்பது கானல் என்ற ஒருவகைக் கொடியின் பெயரால் ஏற்பட்ட

Koviloor Digital Library

பெயராகும். இது மாடுகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. கோடைகானல் போன்று கடியங்கானல், தாமற்சாலை வஞ்சன்கானல், கொச்சிகானல் என்று பல கானல்கள் கோடைமலையில் உள்ளன. குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த பகுதிகள் கானல் என்று அழைக்கப்படும். கோடைமலையிலும் குளிர்ச்சி பொருந்திய சோலைகள் நிறைந்த காடுகள் காணப்படுவதால் இம்மலை கோடைகானல் மலை என்று பெயர் பெற்றிருக்கலாம். சங்க இலக்கியம் கூறும் குறிஞ்சி மலர்கள் இம்மலையில் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கின்றன.

தற்போது கோடைகானல் நகரமாக விளங்கும் பகுதி ஆங்கிலேயர் காலத்திலிருந்து உருவானது. ஆனால் அதற்கு முன்பு இதற்கு அருகேஅமைந்த வேடபட்டி என்ற ஊரைச் சார்ந்ததாக இது இருந்தது. வேடப்பட்டியே தற்போது வில்பட்டி என்று வழங்குகிறது. பெருமாள்மலை அடிவாரத்திலுள்ள கடியங்கானல் என்ற பகுதி கடியன் என்ற சங்ககாலக் குறுநிலத்தலைவன் பெயரினை நினைவூட்டுகிறது. கடியன் நெடுவேட்டுவன் என்பவன் கோடைமலைக்குரிய தலைவனாய் இருந்தான் என்று புறநானூறு (பா. 205) கூறுகிறது. கோடைப்பொருநன் என்று அழைக்கப்பட்ட பண்ணி என்பவனும் அம்மலையை ஆண்டான் என்று அகநானூறு (பா.36) தெரிவிக்கிறது. எனவே கோடைகானல் மலைப்பகுதி சங்ககாலச் சிற்றரசர்களால் ஆளப்பட்ட பகுதி என்று கூறலாம்.

கோடைப்பொருநன் கடிய நெடுவேட்டுவன்

புறநானூறு 205ஆம் பாடலின் அடிக்குறிப்பில் கோடைமலையை ஆண்ட கடியநெடுவேட்டுவன் என்ற மன்னன் குறிப்பிடப்படுகின்றான். இப்பாடலில் ‘கோடைப்பொருநன்’ என்றும் ‘நோன்சிலை வேட்டுவன்’ என்றும் பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் இவனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவன் விரைவாகச் செல்லும் குதிரைப்படையை உடையவன். அஞ்சிவந்தோர்க்கு அடைக்கலமாய் விளங்குகின்றவன். தன்னோடு போர் செய்யும் பகைவரின் முயற்சியை முறியடிக்கும் வாள்படையை உடையவன். வெண்மையான முல்லைப்பூக் கொடியை வேலியாக உடைய கோடைமலைத் தலைவன். விரைந்து செல்லும் மான்கூட்டத்தை அதனைவிட விரைவாகச்

Koviloor Digital Library

சென்று அழிக்கும் நாயினையும் வில்லையும் உடைய வேட்டுவன் புதுமழை பொழிய எவ்வாறு மேகங்கள் கடலுக்குச் சென்று தவறாது நீருடன் திரும்புவது உறுதியோ அதுபோன்று கோடைப்பொருநனை நாடிச் சென்ற பரிசிலர்கள் (இரவலர்கள்) கொம்புகளையுடைய யானையை அவனிடம் பரிசிலாகப் பெற்றுத் திரும்புவார்கள் என்று பெருந்தலைச்சாத்தனார் கூறுகின்றார்.

கோடைப்பொருநன் பண்ணி

கோடைமலைக்குத் தலைவனாக பண்ணி என்பவனும் சங்ககாலத்தில் இருந்திருக்கின்றான். இவன் கடியநெடு வேட்டுவனுக்குப் பின்னர் கோடைமலையை ஆண்டிருக்க வேண்டும். கோடைமலைக்குத் தலைவனாக விளங்கிய இவன் பாண்டியமன்னர்க்குக் கட்டுப்பட்டு ஆண்டவன் என்பதை அகநானூறு 13 ஆம் பாடல் எடுத்துக்கூறுகிறது. கடியநெடுவேட்டுவனைப் பாடிய பெருந்தலைச்சாத்தனாரே இப்பாடலைப் பாடிய புலவர் ஆவார். இவனது வீரத்தையும் கொடையையும் இப்பாடலில் பெருந்தலைச் சாத்தனார் எடுத்துக்கூறுகின்றார். இவன் 'தென்னவன் மறவன்' என்றும் 'கோடைப்பொருநன் பண்ணி' என்றும் அழைக்கப்பட்டான். தென்னவன் என்றழைக்கப்பட்ட பாண்டியர்க்குப் படையுதவி அளித்து அவரது படைத்தலைவனாக விளங்கியமையால் 'தென்னவன்மறவன்' என்று கூறப்பட்டான். களவேள்விகள் பல செய்து சிறந்த பயனைப் பெற்றவன். குழிகள் பறித்து அவற்றில் வீழ்ந்த யானைகளைத் தனக்கென வைத்துக் கொள்ளாமல் தன்னை நாடி வந்த பரிசிலர்களுக்கு உடனே கொடுத்துவிடும் கொடைத்திறம் கொண்டவன் என்று பெருந்தலைச்சாத்தனார் கோடைப்பொருநன் பண்ணியைப் புகழ்ந்து கூறுகின்றார்.

சங்ககாலத்தினைத் தொடர்ந்து முற்காலப் பாண்டியர், சோழர், பிற்காலப்பாண்டியர் ஆட்சியில் கோடைமலை இருந்துள்ளது. இம்மலையின் மேல்பகுதி சேரர்வசம் இருந்திருக்கிறது. விசய நகர நாயக்கர் மன்னர் ஆட்சியும் இம்மலையில் இருந்துள்ளது. இறுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டு அவர்கள் விரும்பிக் கோடையில் வந்து தங்கும் இடமாக மாறியது.1821ல் பி.எஸ். உவார்டு என்பவர் பழனிமலைத் தொடரில் நிலஅளவை செய்ய கோடைகானலுக்கு வந்தார். இவரையே

Koviloor Digital Library

கோடைகானலுக்கு வந்த முதல் ஆங்கிலேயராகக் கருதுகின்றனர். 1824ல் ஜே.சி.ரால்டன், சி.ஆர். காட்டன் என்ற இருவரும் 1836ல் உவைட் என்பவரும் செண்பகனூர் வரை வந்துள்ளனர். மதுரை, திண்டுக்கல் பகுதியில் கிறித்துவ மதபோதகர்கள் கோடை வெப்பத்தைத் தாங்கமுடியாமல் சிறுமலையில் தங்கினர். அது அவர்களது உடல்நலத்திற்கு ஒத்துவராத நிலையில் கோடைக்கானல் மலைக்கு வந்து தங்குவது வழக்கமானது. 1835ல் இதற்காக இவர்கள் இரண்டு வீடுகளைக் கோடைக்கானலில் கட்டினர். இவர்களைத் தொடர்ந்து கோடைக்கனாலில் ஜான்பிளாக்பர்ன், தாமஸ் கிளார்க் போன்ற பல ஆங்கில அதிகாரிகள் இங்கு வீடுகள் கட்டினர். திராவிடமொழிகள் பற்றி முதன்முதலில் ஆய்வு செய்து 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற ஆங்கில நூலை எழுதிய கால்டுவெல் இம்மலையிலுள்ள கிளார்க் கட்டிய வீட்டில் தங்கி தனது வாழ்நாளைக் கழித்துள்ளார். சென்னை மாநில கவர்னர்களான சார்லஸ் டிரெவிலியான், லார்டுநேப்பியர் போன்றவர்கள் இம்மலைக்கு வந்து தங்கியுள்ளனர்.

மதுரை மாவட்ட ஆட்சியராக (1860-67)ல் இருந்த வி.எச்.லீவிஞ்சு என்பவர் இங்கு தங்கியிருந்த போது பயனில்லாமல் ஓடிய சிற்றாற்றைத் தடுத்து கோடைக்கானல் ஏரியை உருவாக்கினார். அருள்திரு கயர் என்ற கிறித்தவப் பாதிரியார் இங்கு கத்தோலிக்க மாதாகோயில் ஏற்பட வழிவகுத்தார்.

வில்பட்டி

இக்கிராமம் கோடைகானல் நகரம் உருவாவதற்கு முன்னிருந்த பழைய ஊராகும். இவ்வூர் சுப்பிரமணியர் கோயிலில் (வேடியப்பன் கோயில்) கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு உள்ளது. கங்கப்பனின் மகன் செம்மன் கும்பமன்னு என்பவன் குறிப்பிடப்படுகின்றான். சித்தார்த்தி வருடம் கார்த்திகை 18ஆம் தேதி திங்கள்கிழமை இக்கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது.

பண்ணைக்காடு

தாண்டிக்குடியிலிருந்து பண்ணைக்காடு செல்லும் வழியில் பண்ணைக்காட்டிற்கு முன்பாக 'சங்கரன்போத்து' என்ற

Koviloor Digital Library

இடமுள்ளது. இங்கே தாண்டிக்குடியில் காணப்படுவதுபோல் பல பெருங்கற்படை சின்னங்கள் காணப்படுகின்றன. இவை பல அறைகளைக் கொண்ட கல்திட்டைகளாக உள்ளன. திட்டமிட்டுப் பலகைக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன. பெரிய மூடுகற்கள் கொண்டு மூடப்பட்டுள்ளன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே பண்ணைக்காட்டில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை இவை காட்டுகின்றன. இங்குள்ள ஈமச்சின்னங்களை ஆங்கிலேயர் காலத்திலேயே கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளனர். வத்தலக்குண்டிலிருந்து கோடைகானல் செல்லும் வழியில் அமைந்த முக்கிய ஊராக பண்ணைக்காடு விளங்குகிறது. இவ்வூரில் பளியர்கள் என்ற பழங்குடிமக்கள் வாழ்கின்றனர்.

பெருமாள்மலை

பண்ணைக்காட்டிலிருந்து கோடைகானல் செல்லும் வழியிலுள்ளது. இங்கு உயரமான குன்றின் உச்சியில் பெருங்கற்படை சின்னங்கள் காணப்படுகின்றன. பலகைக் கற்களைக் கொண்டு கல்திட்டைகளை எழுப்பி அவற்றிலுள்ள அறைகளில் இறந்தவர்களின் ஈமப்பொருட்களை வைத்துள்ளனர். இங்குள்ள கல்திட்டைகள் மிகப்பெரிய பலகைக் கற்களைக் கொண்டு மூடப்பட்டுள்ளன. இவ்வளவு பெரிய பலகைக்கற்களை எவ்வாறு பெயர்த்து வந்து அவற்றைக் கொண்டு கல்லறைகளை அக்காலமக்கள் எழுப்பினர் என்பது மிக வியப்பாக உள்ளது.

செண்பகனூர்

செண்பகனூர் பகுதியிலும் பழங்காலத்தினைச் சார்ந்த ஈமக்கல்லறைகள் காணப்படுகின்றன. செண்பகனூரில் அருட்காட்சியகம் ஒன்று உள்ளது. இதில் கோடைமலை, தாண்டிக்குடி பகுதியிலுள்ள ஈமக்கல்லறைகளிலிருந்து எடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள், பானைகள், தட்டுகள், செப்புப்பொருட்கள், இரும்புப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கோடைமலையின் பழம்பெருமையை அறிய விரும்புவர்களுக்கு இக்காட்சியகம் சிறந்த விருந்தாக அமையும். கிறித்தவ பாதிரிமார்களை உருவாக்கும் ஆங்கிலேயர் காலத்தில் உருவான பழமையான பாதிரியார் பயிற்சி கல்லூரி இங்கு

Koviloor Digital Library

இருந்துள்ளது. 1980ல் இது சென்னைக்கு மாற்றப்பட்டது. இங்கு இலத்தீன், கிரேக்கம், தமிழ், ஆங்கிலம் போன்ற பல மொழிகள் கற்றுக் கொடுக்கப்பட்டன. கிறித்தவ பாதிரிமார் எழுதிவைத்த வரலாற்றிற்கு உதவும் அரிய ஆவணங்கள் இங்கிருந்தன.

பூம்பாறை

கோடைமலையிலுள்ள பழமையான ஊர்களில் இதுவும் ஒன்றாகும். இது பூம்பாறை என்றும் பூம்பிறை என்றும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. பூம்பாறைநாட்டுப் பூம்பாறை என்று இங்குள்ள குழந்தைவேலப்பர் கோயில் கல்வெட்டு இதனைப் பற்றித் தெரிவிக்கிறது. கல்வெட்டில் இக்கோயில் முருகன் திருக்கைவேலப்பர் என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளார். இவ்வூரிலுள்ள முருகன்கோயில் கோடைமலையிலுள்ள பழமையான கோயில்களில் ஒன்றாகும். இவ்வூரில் இரண்டு தமிழ் கல்வெட்டுகள் உள்ளன. தான்றிக்குடி ஊரார் திருக்கைவேலப்பர் கோயிலுக்கு நிலமளித்ததை ஒரு கல்வெட்டு கூறுகிறது. சிவன்கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டு பள்ளங்கை, பூம்பிறை ஊரவர்கள் சேர்ந்து கோயிலுக்கு நிலமளித்ததைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் பள்ளங்கை என்ற ஊர் தற்போது பள்ளங்கி என்ற பெயரில் கோடைமலையில் உள்ளது. பூம்பாறை முருகன்கோயில் இப்பகுதி மக்களால் போற்றிக் கொண்டாடப்படும் கோயிலாக இன்றும் விளங்கிவருகிறது. இதனை கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் பாடியுள்ளார். எனவே இக்கோயில் 15 ஆம் நூற்றாண்டிற்கு முன்பாகவே தோற்றம் பெற்றிருக்க வேண்டும். முருகன் மலைக்குரிய குறிஞ்சிநிலக் கடவுளாதலின் இங்கு வாழும் மக்கள் இதனைத் தங்களது குலதெய்வமாகப் போற்றிக் கொண்டாடி இருக்க வேண்டும். இதன் பெருமையை உணர்ந்த அருணகிரிநாதரும் இதனைத் தனது திருப்புகழில் புகழ்ந்து பாடியுள்ளார்.

போளூர்

கொடைகானல் மேல்கோடியில் பல முக்கிய ஊர்கள் உள்ளன. இவற்றில் மன்னாடிமார் வாழும் போளூர்

Koviloor Digital Library

குறிப்பிடத்தக்க ஊராகும். இவ்வூரில் விநாயகர் கோயிலுக்கு அருகிலுள்ள எழுத்துப்பாறையில் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இதன் அருகில் யானை, காளை, நாகம் முதலிய உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. எழுத்துப்பாறையில் உள்ள கல்வெட்டு இப்பகுதிகளில் கி.பி.14 ஆம் நூற்றாண்டிற்கு முன்பாகவே குடியேற்றங்கள் ஏற்பட்டுவிட்டதைக் காட்டுகிறது. இக்கல்வெட்டில்போரூர் என்ற ஊர் பேராலூர் என்று குறிப்பிடப்படுகின்றது. மேலும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் பூண்டி என்ற கிராமம் போரூருக்கு அருகிலேயே உள்ளது. எழுத்துப்பாறையில் உள்ள கல்வெட்டு பின்வரும் அரிய செய்தியைத் தருகின்றது. பேராலூரில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு அளவில் குடியேற்றப்பட்ட மன்றாடிமார் (மன்னாடிமார்) இனத்தவர்கள் இரு பிரிவினராகத் தங்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களை (காணி) அனுபவித்து வந்தனர். இவர்களில் வெயிலன் என்றவன் உள்ளிட்ட ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரோடு முரண்பட்டனர். அது பகையாய் மாறியது. பகையாய் மாறிய குடிகள் பேராலூரிலிருந்து அகற்றப்பட்டு அருகிலுள்ள இடைக்கரை பூண்டி என்ற பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். மற்றொரு பிரிவினர் தொடர்ந்து பேராலூரிலேயே இருக்கும்படி செய்யப்பட்டனர். பேராலூரில் இருந்த குடியினர் அரசனுக்கு விசுவாசமாக நடப்போம் என்றும் அரசனுக்கு எதிராகச் செயல்பட்டவரைப் பிடித்து அரசனிடம் ஒப்படைப்போம் என்றும் உறுதிசெய்து எழுதிக்கொடுத்தனர். இதுவே பேராலூரில் எழுத்துப்பாறையில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இன்றும் போரூர் என்று மாறிய பேராலூரில் மன்னாடிமார்கள் அதிகம் வாழ்ந்து வருகின்றனர். இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களில் ஒருவராக 'மனைவென்றிகொண்ட பெருமாள்மன்றாட்டி' என்பவர் கல்வெட்டில் குறிப்பிடப் படுகின்றார்.

கிழாவரை

போரூருக்கு அருகிலுள்ள கிழாவரை என்ற கிராமத்திலும் போரூரில் காணப்படுவது போன்ற கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்

Koviloor Digital Library

கல்வெட்டு ஒன்று உள்ளது. ஊருக்கு வெளிப்புறமுள்ள பாறையொன்றில் இது பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது மிகவும் பொறிந்து சிதைந்துள்ளது. இதுவும் இப்பகுதியில் நடைபெற்ற குடியேற்றம் பற்றியும் குடியேறிய மக்கள் அரசனிடம் விசுவாசமாக நடந்து கொள்வோம் என்ற உறுதிமொழி பற்றியும் கூறுகிறது.

மஞ்சம்பட்டி

கோடைகானல் மலையின் மேல்திசையில் மலை முடிவடையும் அடிவாரத்தில் காட்டு விலங்குகள் நிறைந்த காட்டுப்பகுதியில் இவ்வூர் உள்ளது. மன்னவனூரிலிருந்து இவ்வூருக்கு மலைமீதிருந்து இறங்கி வரலாம். இவ்வூரை ஒட்டி நாவலாறு என்ற ஆறு ஓடுகிறது. இதன் கீழ்கரையில் எழுத்துப்பாறையில் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. எழுத்துக்கள் தேய்ந்துள்ளன. இதன் நடுவில் புடைப்புச் சிற்பமாக யானை, காளை, பாம்பு முதலிய உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டினை மடவார், இராசபுரம், தேவரையூர் ஊரவையினர் சேர்ந்து வெட்டுவித்துள்ளனர். அரசனின் முப்பத்திமூன்றாவது ஆட்சியாண்டு இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. ஆனால் எந்த அரசனின் ஆட்சியாண்டு என்பது தெரியவில்லை. கல்வெட்டில் வேங்கை(புலி) ஒன்றை வென்ற செயல் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு ஆவணத்தில் கையொப்பம் இட்ட பலரது பெயர்கள் கல்வெட்டின் இறுதியில் காணப்படுகின்றன. மஞ்சம்பட்டி மேற்கே உள்ள தளிஞ்சி என்ற ஊரில் நாயக்கர்காலக் கல்வெட்டுகளும், பழமையான பெருங்கற் சின்னங்களும் காணப்படுகின்றன. இவ்வூரின் வடக்கே உள்ள பாறையில் நாவிசன் என்பவன் தோற்றுவித்த உரல் பற்றித் தெரிவிக்கும் கல்வெட்டு உள்ளது. இது பாறையில் தானியங்கள் குத்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

Koviloor Digital Library

3. திண்டுக்கல் வட்டம்

அகரம்

தாடிக்கொம்புக்கு அருகிலுள்ள அகரத்தில் கிருஷ்ணதேவ மகாராயர் காலத்தினைச் சார்ந்த கி.பி. 1522 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இது கிருஷ்ணதேவராயர்க்குப் புண்ணியமாகப் பொட்டி பொம்மைநாயக்கனூர், கொண்டசமுத்திரம் ஆகிய இரண்டு ஊர்களைத் தானமாகத் தந்ததைத் தெரிவிக்கிறது. குடகனாற்றின் குறுக்கே கிருஷ்ணதேவராயர் காலத்திற்கு முன்பு கட்டப்பட்டிருந்த அணை சிதைவுற்றது என்றும் கி.பி. 1522ல் மீண்டும் புதுப்பித்துக் கட்டப்பட்டு அதிலிருந்து 'காவிரிவல்லவன் வாய்க்கால்' என்ற பெயரில் வாய்க்கால் ஒன்று வெட்டப்பட்டது என்றும் இக்கல்வெட்டு கூறுகிறது. குடகனாற்றில் கட்டப்பட்ட அணை 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தற்பொழுது சீரமைக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிக்கத்தக்கதாகும்.

தாடிக்கொம்பு

திண்டுக்கல்லிலிருந்து கரூவூருக்குச் செல்லும் பண்டைய பெருவழியில் இவ்வூர் உள்ளது. தெலுங்குபேசும் மக்கள் குடியேற்றத்தால் தாடிக்கொம்பு என்ற தெலுங்குப் பெயர் இவ்வூருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். தாடிக்கொம்பு என்பதற்கு பனைமரக்கூட்டம் என்று பொருள் (தாடி = பனைமரம், கொம்பு = கூட்டம்) இதனால் புராண வரலாற்றிலும் இவ்வூர்க்குத் 'தாலவனம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. தாலம் என்பதும் பனைமரத்தை, குறிப்பாகக் கூந்தல்பனையைக் குறிக்கும் சொல்லாகும். குடகனாற்றின் வடகரையில் அமைந்த இவ்வூர் ஆங்கிலேயர் காலத்தில் கி.பி. 1801 வரை இப்பகுதியின்

தலைமையிடமாக இருந்திருக்கிறது. திண்டுக்கல்லில் அடிக்கடி போர் நிகழ்ந்துள்ளதால் அமைதியை நாடித் திண்டுக்கல்லில் வாழ்ந்த மக்கள் இவ்வூரில் குடியேறியதாகவும் கூறுகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் பழனிக்கு அடுத்து மிகச்சிறப்பு வாய்ந்த கோவில் இவ்வூரில் உள்ளது. சௌந்தரராசப் பெருமாளுக்கும் சௌந்தரவல்லி தாயாருக்கும் எடுக்கப்பட்ட இக்கோயில் நாற்புறமும் திருமதிலால் சூழப்பட்டுக் காண்பவரை ஈர்க்கும் கோபுரவாயிலுடன் உள்ளது. தேரோடும் வீதிகள் சூழ்ந்த பெரிய திருமதிலின் உட்புறம் ஐந்து சன்னதிகளும் உள்ளன. தளவரிசையில் விழும் மழைநீர் நிற்காமல் எளிதில் ஓடிமறையும் வகையில் இக்கோயில் கட்டப்பட்டிருப்பதைத் தாடிக்கொம்பு கோயிலின் புதுமைகளில் ஒன்றாகக் கூறுகின்றனர். இக்கோயிலில் பாண்டியர்காலத் துண்டுக்கல்வெட்டுகளும், நாயக்கர் காலக் கல்வெட்டுகளும் உள்ளன. இவை இக்கோயில் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டு விசயநகர - மதுரைநாயக்கர் காலத்தில் புதுப்பித்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்து கின்றன. இக்கோயில் மகாமண்டபமும், ஊஞ்சல்மண்டபமும், அரங்கமண்டபமும் கலைச்சிறப்பு வாய்ந்த தூண்களையும் சிற்பங்களையும் கொண்டுள்ளன. மகாமண்டபத்தில் இசைத் தூண்கள் உள்ளன. அரங்க மண்டபத்திலுள்ள தூண்களில் காண்பவர் கண்ணைக் கவரும் வண்ணம் பெரிய தோற்றத்துடன் ஒரே கல்லில் சிற்பங்களுடன் வடிக்கப்பட்ட பதினான்கு தூண்கள் உள்ளன. இவற்றில் மகாபாரதம், இராமாயணம், தொடர்பான சிற்பங்களோடு சைவ - வைணவ சிற்பங்களும் காணப்படுகின்றன. பொதுமக்களிடத்து காணும் சைவ - வைணவ ஒற்றுமையைக் காட்டும் வகையில் இவை விளங்குகின்றன. அச்சிற்பங்கள் 1. கருடன் மீது அமர்ந்து வில்லம்புடன் போர்க் கோலத்தில் காட்சிதரும் இராமர் 2. அர்ச்சுனன் 3. வைகுண்ட நாதர் 4. கருடநாராயணன் 5. நரசிம்மர் 6. திரிவிக்கிரமர் 7. வேணுகோபாலன் 8. வீரபத்திரர் 9. ஊர்த்துவ தாண்டவர் 10. காளி 11. மன்மதன், ரதி 12. கார்த்தவீரியன் ஆகியவையும் நாயக்க அரச உருவங்களுமாகும்.

தாடிக்கொம்பு கோயிலிலுள்ள சிற்பங்கள். சிற்பிகளும் போற்றி மதித்த கலைச்சிறப்பு வாய்ந்த சிற்பங்களாகத் திகழ்கின்றன.இதனை அவர்கள் சொல்வதாகக் கூறும் வாசகம் பொதுமக்கள் வழக்கில் உள்ளது. சிற்பிகள் கோயிலை நிர்மாணம்

Koviloor Digital Library

செய்யும்போதோ அல்லது திருப்பணி வேலை செய்யும்போதோ 'தாரமங்கலம் விதானத்தையும், தாடிக்கொம்பு கோயில் சிற்பங்களையும், ஆவுடையார்கோயில் கொடுங்கையையும் திருவீழிமிழலைக் கோயில் வௌவால் நெற்றி மண்டபத்தையும் தவிர்த்து சிற்பம் மற்றும் கட்டட வேலைகளைச் செய்து தருவோம்' என்று எழுதித்தருவார்கள் என்று கூறுகின்றனர். எனவே தமிழ்நாட்டில் நாயக்கர்காலக் கலைச்சிறப்பு வாய்ந்த சிற்பங்கள் காணப்படும் இடங்களில் ஒன்றாகத் தாடிக்கொம்பைக் கூறலாம்.

இக்கோயில் கருவறை, மண்டபம், பிரகாரங்கள் ஆகியவற்றில் முழுமையற்ற நிலையில் தமிழ்க் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.இக்கோயில் திருப்பணியின்போது இவை சிதைவுற்றிருக்க வேண்டும். பலதுண்டுகளாய்ப் போன இவற்றிலிருந்து முழுமையான செய்திகளை அறிந்துகொள்ள முடியவில்லை. சௌந்தரராசப்பெருமாள் கோயில் கருவறைக்கு முன்புள்ள மண்டபத்தின் தென்புறத்தில் கி.பி.13 ஆம் நூற்றாண்டு துண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. ஒரு துண்டுக்கல்வெட்டில் கோயிலின் பெயர் சுந்தரராசப்பெருமாள் என்று குறிப்பிடப்படுகிறது. திருவாத்தியாயன கல்யாண உற்சவத்திற்காகத் தானம் தந்ததை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. முதல் பிரகாரத்திலுள்ள வடக்கு, தெற்கு, மேற்குச் சுவர்களில் காணப்படும் துண்டுக் கல்வெட்டுகளும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலப்பாண்டியர் காலத்தவையாகும். பாண்டிய அரசன் பிறந்த நாளான அஸ்தநட்சத்திரத்தன்று கோயிலில் சிறப்பு வழிபாடு செய்ய தானம் தந்ததையும் இக்கோயில் நிர்வாகத்தினர் பற்றியும் இவை கூறுகின்றன. மற்றொரு துண்டுக்கல்வெட்டு அமரபுயங்கர சதுர்வேதிமங்கலம் பற்றித் தெரிவிக்கிறது. கருவறை சுவரிலுள்ள கி.பி. 15ஆம் நூற்றாண்டு கல்வெட்டு இறைவன் பெயரால் எழுதப்பட்டதாகும். இதில் இக்கோயில் நிர்வாகம் பற்றி குறிப்பிடப்படுகிறது.

சிறுமலை

திண்டுக்கல் மாவட்டத்தில் பழனிமலைத்தொடரை அடுத்து வளமிக்க மலை இதுவாகும். பழனிமலைக் குன்றுகளோடு ஒப்பிடும்போது இது சிறியதாக இருப்பதால் இது சிறுமலை

Koviloor Digital Library

என்று பெயர் பெற்றிருக்கலாம். இராமாயண இதிகாசத்தோடு தொடர்புபடுத்தி இதற்கு ஒரு புராணக் கதையும் கூறுகின்றனர். அனுமன் சஞ்சீவிமலையைத் தூக்கிச் செல்லும்போது அதில் ஒரு பகுதி சிதறி விழுந்தது. அதுவே சிறுமலைஆனது என்றும் கூறுகின்றனர். இம்மலை கடல்மட்டத்திலிருந்து, 4400 அடி உயரமுடையது. இருபது கிலோ மீட்டர்நீளமுள்ளது. இம்மலையில் 3000 அடி உயரத்தில் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற சமதளங்கள் உள்ளன. இம்மலையிலிருந்து சந்தானவர்த்தினி என்ற ஆறு உற்பத்தியாகிறது. புதூர், பழையூர், அரளிகாடு, தாழைக்காடு, தவிட்டுக்கடை போன்ற பலவூர்கள் இம்லைத் தொடரில் உள்ளன. சிறுமலையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்தமைக்கான தடையங்கள் காணப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்படை சின்னங்கள் சிறுமலையில் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் முதுமக்கள் தாழிகள் கிடைத்தன. தாழிகளில் இரும்புக் கருவிகளும் சூதுபவளமணிகளும் இருந்தன. சிறுமலையில் உள்ள குகைத்தளங்களில் பாறைவோவியங்கள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் சிறப்பித்துக் கூறப்பட்ட மலை சிறுமலையாகும்..

திண்டுக்கல்லிலிருந்து மதுரை செல்லும் சாலையில் பள்ளபட்டியிலிருந்து வடக்காக சென்றால் சிறுமலையின் அடிவாரத்தினை அடையலாம். அங்கிருந்து மலைமீது ஏறிச்சென்றால் அருவிமலை என்ற உயரமான பகுதியினை எட்டலாம். அங்கு மின்பெட்டி என்றழைக்கப்படும் பகுதியில் சிறுகுகை ஒன்று உள்ளது. இதில் பெரும்பாலும் வெள்ளை வண்ணத்தாலும் சிறிதளவு செங்காவி நிறத்திலும் வரையப்பட்ட பாறைவோவியங்கள் காணப்படுகின்றன. இவற்றின் மேல்புறம் காணப்படும் ஓவியங்கள் வரலாற்றின் தொடக்ககாலத்தினைச் சார்ந்தவை. இவற்றின் காலத்தினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கருதலாம். இங்குள்ள ஓவியங்களில் மனித உருவங்கள், விலங்குகளின் உருவங்கள், விலங்குகள் மோதும் சண்டை, விலங்குகளை வேட்டையாடுதல் போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதுபோன்ற வெள்ளை வண்ணத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் விருதுநகர் மாவட்டம் மகாலிங்கசாமி மலையில் குளிராட்டி என்ற இடத்திலுள்ள குகையில் உள்ளன.

Koviloor Digital Library

சிறுமலைக் குகையில் தட்டையான வடிவிலுள்ள மனித உருவங்கள், அடர்த்தியான வெள்ளைநிற பூச்சால் வரையப்பட்டுள்ளன. ஒருமனித உருவத்தில் செவ்வண்ண நிறத்தில் மார்பில் சன்னவீரம் அணிந்தது போன்று காட்டப்பட்டுள்ளது. மனித உருவங்களின் தலைப்பகுதியினைச் சுற்றி வட்டவடிவக் கோடுகளும், தலைப்பாகையும் காணப்படுகின்றன. சிறுமலை ஓவியத்தில் காணப்படும் ஒரு முக்கியக்காட்சி விலங்குகளிடையே சண்டை மூட்டி அதனைச் சுற்றி நின்று ஆர்வத்துடன் மனிதர்கள் காணும் காட்சியாகும். இடது கையில் நீண்ட குச்சியைக் கொண்டு விலங்குகளின் சண்டையைத் தீவிரப்படுத்தும் ஒருவன் நிற்கின்றான். அவனை சுற்றிக் கைகளை உயர்த்தியும் வளைத்தும் விலங்குகளை உற்சாகமூட்டும் மனிதர்கள் காணப்படுகின்றனர். பண்டைய மக்கள் ஆட்டுக்கிடாக்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் காட்சி போன்று இவ்வோவியக்காட்சி உள்ளது. சிறுமலை பாறைவோவியத்தில் பலமனிதர்களிடையே நிற்கும் இனக்குழு தலைவன் போன்ற பெரிய மனித உருவம் ஒன்று இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. சிறுமலை குகையில் குகைதளத்தின் மேல்புறத்தில் வரையப்பட்ட ஓவியங்களைப் பார்த்து அதேபோன்று பிற்காலத்தார் வரைந்த ஓவியங்கள் குகைத்தளத்தின் கீழ்பகுதியில் காணப்படுகின்றன. சிறுமலையில் மற்றொரு புறத்தில் 'புறாக்கூடு' என்றழைக்கப்படும் இடத்தில் உள்ள குகையிலும் பாறைவோவியங்கள் காணப்படுகின்றன. இவை மிகவும் சிதைந்து அழிந்துவிட்டன. ஓவியங்கள் வரையப்பட்டதற்கான தடையங்களை மட்டும் இங்கு காணமுடிகிறது.

தென்னவன் சிறுமலை

சிலப்பதிகாரக் காலத்திலும் சிறுமலை பெரும்புகழுடன் விளங்கியுள்ளது. இது பாண்டிய மன்னர்களுக்கு உரிமையுடைய வளமை வாய்ந்தமலை என்று சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. இளங்கோவடிகள் இதனைத் 'தென்னவன் சிறுமலை' என்று குறிப்பிடுகின்றார். தென்னவன் என்பது பாண்டிய மன்னருக்குரிய சிறப்புப் பெயராகும். கொடும்பாளூரிலிருந்து மதுரைக்குச் செல்லும் மூன்று வழிகளில் வலப்பக்கமாகச் சென்ற வழியின் இடப்புறத்தில் சிறுமலை இருந்தது என்று சிலப்பதிகாரம்

Koviloor Digital Library

கூறுகிறது. இம்மலை சிலப்பதிகார காலத்திலிருந்தே மலைவாழைக்குச் சிறப்பு பெற்றிருந்ததைச் சிலப்பதிகாரம் மூலம் உணரமுடிகிறது.

சிறுமலையின் மலைவளத்தினை ஆறு வரிகளில் இளங்கோவடிகள் தம் காவியத்தில் எடுத்துக் கூறுகின்றார். ஐவனம் என்னும் வெண்ணெல்லும், கணுக்கள் அற்ற கரும்பும், விளைந்து அறுக்கும் பருவத்தினையுடைய பூந்தினையும், வளமான புனத்தில் விளைந்த வரகும், வெள்ளைநிற உள்ளியும், மஞ்சளும் அழகிய கொடிகளையுடைய கவலையும் வாழையும் கமுகும், தெங்கும் மாமரமும் பலாமரமும் நிறைந்து காணப்படும் பல அடுக்கங்களைக் கொண்ட உயரமானமலை சிறுமலை என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

ஐவன வெண்ணெல்லும் அறைக்கண் கரும்பும்
கொய்பூந் தினையும் கொழும்புன வரகும்
காயமும் மஞ்சளும் ஆய்கொடி கவலையும்
வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழ்அடுக்கத்து ஓங்கிய

தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும் (காடுகாண் காதை - அடி 80-85)

இன்றும் சிலப்பதிகாரம் கூறுவது போன்று திண்டுக்கல்லிலிருந்து மதுரைக்குச் செல்லும் பெருவழியின் இடப்புறத்தில் (கிழக்குப்புறம்) நீண்ட அழகிய வளமை வாய்ந்த தொடராகச் சிறுமலை காட்சியளிக்கிறது.

சிறுமலையில் உள்ள கிராமப்பகுதி ஒன்றில் பிற்காலப் பாண்டியர் காலத்துச் சிவன்கோயில் ஒன்று இருந்து அழிந்துள்ளது. இவற்றில் பிற்காலப் பாண்டியர் காலத்துச் சிற்பங்கள் உள்ளன. பாண்டியர் காலத்திற்குப் பின்னர் சிறுமலைப் பகுதி விசயநகர வேந்தர், மதுரை நாயக்கர் ஆட்சியில் இருந்துள்ளது. மதுரை நாயக்கர் காலத்தில் இம்மலை அம்மையநாயக்கனூர் பாளையக்காரர்க்குச் சொந்தமாக இருந்தது. ஆங்கிலேயர் காலத்தில் இம்மலையில் கிறித்தவ சமயத்தினர் தங்கி சமயப்பணி செய்ய முற்பட்டனர். கோடைகாலத்தில் தங்குவதற்கு முதலில் சிறுமலையையே ஆங்கிலேயர் தேர்ந்தெடுத்தனர். ஆனால் இம்மலையில் ஏற்பட்ட

Koviloor Digital Library

கொடிய காய்ச்சலின் பாதிப்பால் இம்மலையை விட்டுக் கோடைகானல் மலைப்பகுதிக்குச் சென்றனர்.

மேல்கரைப்புதூர்

தாடிக்கொம்புக்கு அருகிலுள்ள அகரத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் மேல்கரைப்புதூர் உள்ளது. இவ்வூர்க் கோட்டை மேட்டுப்பகுதியில் தனிக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்க்கல்வெட்டு ஒன்று கண்டறியப் பட்டுள்ளது. இக்கல்வெட்டு விசயநகரவேந்தர் சதாசிவராயர் காலத்தது. இவருக்குப் புண்ணியமாக அளிக்கப்பட்ட நிலக்கொடை பற்றியும் தானமாகத் தரப்பட்ட நிலத்தின் எல்லைகள் பற்றியும் கல்வெட்டு கூறுகிறது. இதில் தானமாக அளிக்கப்பட்ட கொண்டசமுத்திரம் என்ற ஊரின் எல்லைகளாக பூமிபுரம், ஜக்கயநாயக்கனூர் முதலிய ஊர்கள் சொல்லப்பட்டுள்ளன.

ஆவிளிப்பட்டி

மாரியம்மன்கோவிலுக்கு அருகில் நடப்பட்டுள்ள கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு சடையவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியனின் எட்டாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1108) கிழாற்றூரில் சுந்தரபாண்டியனான பள்ளிவேளான் என்பவன் மனைவி பிடாரிகோயில் எடுத்துள்ளதைத் தெரிவிக்கிறது. மேலும் இதற்காகப் பள்ளிவேளான் நிலங்கள் அளித்துள்ளான். பெரியகுளத்தில் ஒரு மா நிலமும் கரைகோட்டுநாட்டு குளத்தூரில் இரண்டு மாவும் வேறொரு இடத்தில் இரண்டு மா நிலமும் அளிக்கப்பட்டன. இப்பிடாரியம்மன் உருவத்தைக் கோயிலில் பிரதிஷ்டை செய்த சிராளன்இராசேந்திரசோழனுக்கும் காணியாக நிலமளிக்கப்பட்டதையும் கூறுகிறது. மற்றொரு கல்வெட்டு அழகன்கொல்லையில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு கிழாற்றூர் ஊரவர்கள் ஆண்டபிள்ளை என்பவனுக்கு அரணிவிக்கான் என்று பெயர் சூட்டி இறையிலியாக நிலமளித்ததைக் கூறுகிறது.

மேட்டுக்கடை

காவிரிசெட்டியபட்டி என்றும் இவ்வூர் அழைக்கப்படுகிறது. இவ்வூரின் தென்பகுதியில் அழகர்கோயில் அருகிலுள்ள

Koviloor Digital Library

மல்லாத்தான் பாறையில் கி.பி. 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று பொறிக்கப் பட்டுள்ளது. இது சீரங்கனாதனான அனந்தநாராயணனுக்கு பட்டவிருத்தியாக இருந்த நிலம் பற்றிக் கூறுகிறது. குதிரைச்சுனை என்றழைக்கப்பட்ட உப்புக்குளத்தின் நீர் பாய்ச்சலுக்கு உட்பட்ட நிலமும் புஞ்சையும் பட்டவிருத் திக்குரிய நிலமாக இருந்தன.

வேடப்பட்டி

இவ்வூரிலும் சீரங்கனாதனான அனந்தநாராயணன் என்பவருக்குப் பட்டவிருத்தியாக நிலம் அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கும் கல்வெட்டு உள்ளது. இவருக்கு அரசுடையான் என்பவன் மனைநிலமும் கொடுத்துள்ளதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இராமராஜபுரம்

இவ்வூரிலுள்ள பாறையில் கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்க்கல்வெட்டு காணப்படுகிறது. இதனருகில் பாண்டியரின் மீன் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இது புண்ணியவாட்டி வயக்கல் என்ற நிலம் பற்றிக்கூறுகிறது. அழகன் அதிகமழகியான் என்பவன் விண்டவரான புண்ணியவாட்டி பேரால் அளித்துள்ளதை இக்கல்வட்டு தெரிவிக்கிறது.

க.பாறைப்பட்டி

கன்னிவாடி அருகிலுள்ள இவ்வூரில் பெருமாள்கோயில் முன்புள்ள பாறையில் சிதைந்துபோன நாயக்கர்காலத் தமிழ்க்கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இப்பகுதியை ஆண்ட பொம்மயநாயக்கர், பெரிய பொம்மயா நாயக்கர் வீரண உடையார் ஆகியோர் பெயர்களைக் குறிப்பிட்டு இப்பகுதியில் மனைநிலம் தானமாகத் தரப்பட்டுள்ளதை இது தெரிவிக்கிறது.

ஆத்தூர்

இவ்வூரின் பெயர் கல்வெட்டுகளில் ஆற்றூர் என்று குறிப்பிடப்படுகிறது. சித்தையன்கோட்டை அருகிலுள்ள சிவன்கோயில் கல்வெட்டில் ஆற்றூர் நாட்டிலுள்ள 'ஆற்றூரான

Koviloor Digital Library

எறிவீரதளம்' என்று குறிப்பிடப்படுகிறது. எறிவீரதளம் என்ற பெயருக்கு வணிக வீரர்கள் காவல்புரிந்த வணிகநகரம் என்று பொருள். இதனால் கி.பி. 13 ஆம் நூற்றாண்டளவில் இவ்வூர் முக்கிய வணிகத்தளமாக விளங்கியுள்ளது எனலாம்.

இவ்வூரில் கண்டறியப்பட்ட கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு இவ்வூரின் பாசன ஏரி 'ராஜராஜன் அழகம்பெருமாள்' என்று பெயர் பெற்றிருந்ததைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. இவ்வேரி ரா
3. ஜ ராஜன் அழ
4. கம் பெருமாள்
5. திருநாமம்

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் இராஜராஜன் அழகம்பெருமாள் பாண்டிய அரசனின் அதிகாரியாக இருக்கலாம். ஆத்தூரில் நிலத்தைச் சீர்திருத்தும்போது கி.பி.9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புத்தர் சிலை ஒன்று கிடைத்து இன்று அதனை வழிபட்டு வருகின்றனர். இவ்வுருவத்தினை அண்மையில் உளிகொண்டு திருத்தம் செய்துள்ளனர்.

ஆத்தூரில் பழமையான சிவன்கோயில் மற்றும் பெருமாள்கோயில்கள் இருந்துள்ளன. இவை பிற்காலத் திருப்பணியின்போது சிதைந்து அழிவுற்றன. இவற்றில் இருந்த 13 ஆம் நூற்றாண்டுப் பாண்டியர்களின் கல்வெட்டுகள் ஆத்தூர் கன்னிமார் கோயிலிலும் சீத்தாராமன் குளக்கரைக் கோயிலிலும் இன்று காணப்படுகின்றன. இவை கோயிலுக்கு இறையிலியாக வரிநீக்கி அளித்த நிலக்கொடை பற்றியும் பதினெண்பூமி மஹாதேவர் என்றழைக்கப்பட்ட சிவன்கோயில் குறித்தும் தெரிவிக்கின்றன.

தற்போது ஆத்தூரிலுள்ள காசிவிசுவநாதர் கோயிலில் பெருமாள்கோயில் பற்றி தெரிவிக்கும் நாயக்கர்காலக் கல்வெட்டு இருக்கிறது. மதுரை நாயக்க மன்னரான கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் புண்ணியமாக நயினாதநாத முதலியார் என்பவர் சிவலச்சிறகு சென்னராசப் பெருமாள் கோயிலிலே நெய்வேத்தியம்

Koviloor Digital Library

செய்வதற்கும் பிராமணர்க்குச் சத்திரம் ஒன்று ஏற்படுத்துவதற்கும் சித்தையன்கோட்டையிலுள்ள அழகர் திருவிடையாட்டப் பகுதியில் ஏழுமா நிலமளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. திண்டுக்கல் சாலையில் தற்போது ஆதிலெட்சுமிபுரம் என்ற பெயரில் சீவலசிறகு என்றழைக்கப்படும் ஊர் உள்ளது. இவ்வூரிலுள்ள கோயிலுக்கே இந்நிலக்கொடை அளிக்கப் பட்டுள்ளது. கல்வெட்டில் குறிப்பிடப்படும் சீவலசிறகு சென்னராசப் பெருமாள்கோயில் தற்போது சௌந்தரராசப் பெருமாள்கோயில் என்ற பெயரில் உள்ளது. ஆத்தூரில் இருந்து அழிந்துபோன பெருமாள்கோயிலில் இருந்த பாண்டியர்காலத் திருமால் சிற்பம் ஒன்று தற்போது ஊரின் வெளிப்புறத்தில் உள்ள வயல்வெளியில் காணப்படுகிறது.

சித்தையன்கோட்டை

சித்தையன்கோட்டைக்கு அருகில் அழகர்நாயக்கன்பட்டிப் பகுதியில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிவன்கோயில் ஒன்று வயல்வெளியில் காணப்படுகிறது. மிகுந்த கலை வேலைப்பாடு கொண்ட கோயிலாக இது காட்சியளிக்கிறது. தென்புற தேவகோட்டங்களில் தெய்வ உருவங்கள் வண்ண ஓவியமாகத் தீட்டப்பட்டு அழிந்த நிலையில் உள்ளன. தமிழ்நாட்டில் பிற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த ஓவியங்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இக்கோயில் ஓவியங்களே சான்றாக உள்ளன. தமிழ்நாட்டில் வேறு பிற்காலப்பாண்டியர் ஓவியங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. இக்கோயிலின் தெற்குப்புற தேவகோட்டங்களில் ஒன்றில் தட்சிணாமூர்த்தியின் உருவமும் மற்றொரு தேவகோட்டத்தில் நடராசர், சிவகாமியின் உருவங்களும் காணப்படுகின்றன.

இங்குள்ள ஒரு கல்வெட்டு ஆற்றூர் நாட்டு ஆற்றூரின் மேல்பால் இருந்த இக்கோயிலை எழுமப்பொத்தி அஞ்சாத பெருமாளான சேதிராயன் என்பவன் தனது தந்தையின் பெயரால் சேதிராய ஈஸ்வரம் என்று கட்டினான் என்றும் நெடுங்காட்டிலுள்ள ஆலங்குளத்தின் வடபால் இருந்த வீரபுரந்தரன் என்ற குளத்தை இக்கோயிலுக்குத் தந்தான் என்றும் தெரிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டு இக்கோயில் எடுத்தபின்பு இப்பகுதியில் திருமடைவளாகம், திருநந்தவனம் ஆகியவை

Koviloor Digital Library

அமைக்க இறையிலியாக நிலம் அளிக்கப்பட்டதைக் கூறுகிறது. கோயிலின் வடபுறத்திலும் மேல்புறத்திலும் அதிட்டானங்களில் உள்ள கல்வெட்டுகள் இக்கோயிலின் அன்றாடச் செலவினங் களுக்காக நிலமளிக்கப்பட்டதைக் கூறுகின்றன. இவ்வூரில் ஆமுண்டார்மடம் என்ற சைவமடம் ஒன்று இருந்திருக்கிறது. இதில் தலைவராக ஸ்ரீநந்திதேவர் . . . . பெரியதேவர் என்பவரது சீடர் ஞானமுத்திதேவர் இருந்துள்ளார். இம்மடத்தின் செலவினங் களுக்காக மடப்புற இறையிலியாக ஐந்துமா நிலமளிக்கப் பட்டதைக் கோயிலின் வடபுற அதிட்டானத்திலுள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது. சேதிராயன் கோட்டையே பிற்காலத்தில் சித்தையன் கோட்டை என மாறியுள்ளது.

பொம்மையக்கவுண்டன்பட்டி

இவ்வூரில் பெரியதனம் செய்த பொம்மையக்கவுண்டன் என்பவர் பெயரால் இவ்வூர் பொம்மையக்கவுண்டன்பட்டி என்று பெயர் பெற்றுள்ளது. செம்பட்டிக்கு அருகில் அமைந்துள்ளது. இவ்வூரில் திருமலைநாயக்கர் காலத்தினைச் சார்ந்த நான்கு செப்பேடுகள் கண்டறியப்பட்டன. இவை இவ்வூர் பெரியகுடி பொ. பொம்மையன் என்பவரிடம் உள்ளன. இச்செப்பேடுகளில் மூன்று செப்பேடுகள் கி.பி. 1654ஆம் ஆண்டைச் சார்ந்தவையாகக் குறிப்பிடப்படுகின்றன. ஆனால் பிற்காலத்தில் எழுதப் பட்டவையாகத் தோன்றுகின்றன.

திருமலைநாயக்கர் திண்டுக்கல் பகுதியில் வந்து தங்கியிருக்கும்போது சிவிலிசிறகைச் சார்ந்த பெரியதனம் பொம்மையகவுண்டன் என்பவன் அவரைச் சென்று பார்த்தான். திருமலைநாயக்கர் முன்பாக அரிசி, பருப்பு, ஆட்டுக்கிடாயோடு, பாதகாணிக்கையும் வைத்து மரியாதை செய்தான். அவன் கேட்டுக்கொண்டபடி சாதியில் பெரியதனம் அதிகாரம் வழங்கி கம்பிளி, காளாஞ்சி, பிடிசெம்பு மரியாதைகள் வழங்கினார். சமூகத்தில் நல்லவை கெட்டவை போன்ற காரியங்களில் முடிவெடுத்தல், சாதியில் சேர்த்துக் கொள்ளல், விலக்கி வைத்தல் போன்ற அதிகாரங்களையும் கொடுத்து பட்டம் அளித்தார். கவுண்டமார் சாதியார் பொம்மையக்கவுண்டனுக்கு வரி கொடுக்க வேண்டும் என்றும் ஆணை வழங்கினார் என்று முதல் செப்பேடு தெரிவிக்கிறது. இரண்டாவது செப்பேடும் இதே செய்தியைக் கூறினாலும் முதல் செப்பேட்டிலிருந்து சற்று மாறுபடுகிறது.

Koviloor Digital Library

சிவிலிசிறகு கூளப்பநாயக்கன் பாளையப்பகுதியைச் சார்ந்ததாக இருப்பதால் கூளப்பநாயக்கனும் திருமலைநாயக்கரோடு சேர்ந்து பொம்மையக்கவுண்டனுக்குப் பெரியதனம் அதிகாரம் வழங்கியதை இரண்டாவது செப்பேடு தெரிவிக்கிறது. இச்செப்பேட்டில் டம்பாசாலை, முன்னிலைக்கோட்டை, எங்கைமேடு முதலிய ஊர்கள் பெரியதனக்காரர் அதிகாரத்திற்கு உட்பட்ட ஊர்களாகக் கூறப்படுகின்றன. மூன்றாவது, சிவல்சிறகைச் சார்ந்த பதினெட்டு நாட்டார்களின் பிரதிநிதிகள் பத்துபேர்கள்சேர்ந்து தாங்கள் செய்த முடிவைத் (முதலிரண்டு செப்பேடுகளில் காணப்படும் முடிவு) திருமலை நாயக்கரிடம் சென்று எடுத்துக்கூறி செப்பேட்டு ஆணை பெற்றதைத் தெரிவிக்கிறது. பொம்மையக்கவுண்டன், ஆலவட்டகவுண்டன், பொம்மயக்கவுண்டன், கொடியெப்பக்கவுண்டன், பெரிய பொம்மயக்கவுண்டன், கறமலைக்கவுண்டன், பூசாரி வடமலைக் கவுண்டன், நாகதாசயக்கவுண்டன், பழனிமுத்துக்கவுண்டன், கெப்பயக்கவுண்டன் ஆகியோரது பெயர்கள் இச்செப்பேட்டில் குறிப்பிடப்படுகின்றன. சீவிலிசிறகு பெரியதனம் குறித்த மூன்று செப்பேடுகளையும் திண்டுக்கல் வடக்குவாசல் முனிசு வேலை செய்த மீனாட்சி ஆசாரி தயாரித்துள்ளார். நான்காவது செப்பேடு, அல்லிநகரம (தேனிக்கு அருகில் உள்ளது) உருவான வரலாற்றையும் அதற்கு நாட்டாண்மை யார் என்பதைத் திருமலைநாயக்கர் முன்னிலையில் முடிவுசெய்து ஆணை வழங்கியதையும் கூறுகிறது. கன்னிவாடியிலிருந்து வந்து அல்லிநகரத்தில் குடியேறிய காப்பிலிய பொம்மையக்கவுண்டன் மகன் சின்னாக்கவுண்டனுக்கும் பால்பயக்கவுண்டன் என்பனுக்கும் யார் ஊரில் முதலில் குடியேறியது? யார் நாட்டாண்மை பதவிக்கு உரியவர்? என்பதில் சண்டையேற் பட்டது அப்போது அன்னஞ்சியில் திருமலைநாயக்கர் தங்கியிருப்பதை அறிந்து சின்னாக்கவுண்டன் திருமலைநாயக்கர் முன்னே பாதகாணிக்கையோடு அரிசி, பருப்பு, நெய், காய்கறி ஆகியவற்றையும் வைத்து தனது வழக்கை எடுத்துக் கூறினான். மேலும் பாளையக்காரர் என்னுடைய நியாயத்தைக் கேட்கவில்லை என்று முறையிட்டான். திருமலைநாயக்கர் அவனது வழக்கை விசாரித்துச் சின்னாக்கவுண்டனுக்கே ஊர் சொந்தம் என்றும் நாட்டாண்மை பதவிக்கு அவன் உரியவன் என்றும் ஆணைவழங்கி செப்பேடும் வழங்கச் செய்தார்.

Koviloor Digital Library

பாப்பயக்கவுண்டன் தவறு செய்தவன் எனவே அவனிடம் பன்னிரண்டு ரூபாய் அபராதம் வாங்க வேண்டும் என்றும் திருமலைநாயக்கர் கட்டளையிட்டார். சின்னக்கவுண்டனுக்குரிய மானியம் என்ன என்பதையும் இச்செப்பேடு தெரிவிக்கிறது. இப்பட்டயத்திற்குச் சாட்சியாகக் கையொப்பம் இட்டவர்களாக உள்ளூர் பெத்தநாயக்கன், அன்னஞ்சி பாளையக்காரன், கன்னப்ப சேறுவைகாரன், திருமலை கண்டநாயக்கன், திருமலை போடிநாயக்கன் ஆகியோர் பட்டயத்தில் குறிப்பிடப் படுகின்றனர். இச்செப்பேடும் பிற்காலத்தில் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. இச்செப்பேட்டை அன்னஞ்சிக்கோட்டை அளகப்பன் ஆசாரி செய்துள்ளான்.

பன்றிமலை

திண்டுக்கல் மாவட்டத்துப் பழனிமலைக் குன்றுகளில் முக்கியமான குன்றாக பன்றிமலைக் குன்று உள்ளது. திண்டுக்கல்லில் இருந்து தருமத்துப்பட்டி வழியாகவும் அய்யம்பாளையம் வழியாகவும் இம்மலைக்கு வரலாம். வாழை, காப்பித் தோட்டங்கள் நிறைந்த வளமான மலைப்பகுதி இதுவாகும். இங்கு மூவேந்தர் சின்னம் பொறித்த கல்வெட்டு ஒன்று உள்ளது. மதுரைத் திருவிளையாடல் புராணத்தில் வரும் பன்றிக்குப் பால் கொடுத்த திருவிளையாடல் இம்மலையில் நடந்தமையால் இது பன்றிமலை என்று பெயர் பெற்றதாகக் கருதுகின்றனர். பாண்டிய அரசனால் வேட்டையில் தம் தாய் தந்தையரை இழந்து பசியால் தவித்த பன்றிக்குட்டிகளுக்கு ஆலவாய் சொக்கர் கருணை காட்டி பன்றி அவதாரம் எடுத்து பால் ஊட்டினார் என்று திருவிளையாடல் புராணம் கூறுகிறது. பன்றிகள் இம்மலையில் நிறைந்திருந்தமையால் இது பன்றிமலை என்றும் பெயர் பெற்றிருக்கலாம்.

சங்ககாலச் சிற்றரசர்களில் ஒருவனான 'பண்ணி' என்பவன் இம்மலையை ஆண்டதால் இம்மலை 'பண்ணிமலை' என்று பெயர் பெற்றது. பின்னர் 'பண்ணிமலை' என்பதே பன்னி மலையாகி அதன்பின்னர் பன்றிமலையானது என்று கருதுகின்றனர். பெருந்தலைச்சாத்தனார் என்ற புலவர் பண்ணியின் பெருமையைப் பற்றிப் பாடிய அகநானூற்றுப் (பா.13) பாடல் ஒன்று உள்ளது. இதில் இவன் கோடைமலைக்குரிய

Koviloor Digital Library

(கோடைகானல்மலை) தலைவனாகவும் குறிப்பிடப்படுகின்றான். எனவே பன்றிமலைப் பகுதி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்ககாலச் சிற்றரசர் ஆண்ட பகுதியாகத் திகழ்ந்துள்ளது எனலாம்.

ஆடலூர்

பன்றிமலைக்கு அருகிலுள்ள ஆடலூர் மலைப்பகுதியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வீடுகள் (பெருங்கற்படை சின்னம்) உள்ளன. இவை இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்டநினைவுச் சின்னங்களாகும்.

அம்பாத்துறை

அம்பாத்துறை கிராமம், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டத்தில் சின்னாளப்பட்டி குறுவட்டத்தில் திண்டுக்கல்லுக்கு தெற்கே 11 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரின் பெயர் 'மேலக்கோட்டை' என மக்கள் வழக்கில் அழைக்கப்படுகிறது.

கி.பி. 7-ம் நூற்றாண்டில் கூன் பாண்டியன் என்ற நின்ற சீர் நெடுமாற பாண்டியன் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு தஞ்சையிலிருந்து வரும் வழியில் வனப் பகுதியிலிருந்த காளி கோயிலில் வழிபட்டுவிட்டுவரும் சமயம் முனிவர் ஒருவர் கூறிய அறிவுரைக்கு இணங்க அம்பாத்துறை கிராமத்திற்கு வந்தார். அம்பாத்துறை கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள நடுப்பட்டி, பெருமாள்கோவில்பட்டி, தொப்பம்பட்டி, ஜம்புதுறைக் கோட்டை, ஊத்துப்பட்டி, கீழக்கோட்டை ஆகிய ஊர்களில் 108 கிணறுகள் வெட்டினார். அக்கிணறுகளிலிருந்து தவளை விழாத தண்ணீர் எடுத்து அம்பாத்துறை காளி கோவிலுக்குப் பூசை செய்தார். அதன் பிறகு நோய் நீங்கியதாக நாட்டார் வழக்கில் வழி வழியாக, இன்றளவும் பேசப்படுகிறது. அம்பாத்துறை ஊர் நுழையுமிடத்திற்கு அருகே கல் கட்டுமானத்துடன் காணப்படும் 'பாண்டியன் கிணற்றினை' இன்றும் நாம் காணலாம். வருவாய் ஆவணத்திலும் இப் பெயரிலேயே கிணறு குறிக்கப்படுகிறது.

அம்பாத்துறை கிராமத்தில் தற்போதுள்ள பத்திர காளியம்மன் கோவிலுக்கு தென்கிழக்கே உள்ள பழைய பால் பண்ணையின் படிக்கல்லாகக் காணப்படும் பழைய கோயிலில்

Koviloor Digital Library

முப்பட்டைக் குமுதக் கல்லில் கி.பி. 13-ம் நூற்றாண்டு எழுத்தமைதியில் தமிழில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இத்துண்டுக் கல்வெட்டில் சிவன் கோவிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் பற்றிய குறிப்புமட்டும் காணப்படுகிறது. இங்கு கி.பி. 13-ம் நூற்றாண்டில் ஒரு சிவன் கோவில் இருந்து மறைந்துள்ளது. இக்கோவிலிலிருந்த நந்தி ஒன்று ஊரில் கீழ்புறத்திலுள்ள ஒரு வீட்டினருகே உள்ளது. பாண்டியர் கலைப்பாணியில் உள்ள இந்நந்தி இச்சிவன் கோவில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் எழுப்பப்பட்டதை உறுதி செய்கிறது. சிவன் கோவிலுக்கு வழங்கப்பட்ட நிலத்தின் எல்லைகளைக் குறிக்கும் சூலக்கல்லும், அதனருகே ஒருநந்தியும் ஊரின் கிழக்கே உள்ள ஒரு ஆலமரத்தின் அடியில்உள்ளன.

கி.பி. 1600ல் விசுவநாத நாயக்கரால் நிறுவப்பட்ட 72 பாளையங்களுள் அம்பாத்துறையும் ஒரு பாளையமாக இருந்துள்ளது. கி.பி. 1801 முதல் அம்பாத்துறை சமீனாக, கம்பளத்து நாயக்கர் குலப்பிரிவில் வந்தோரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.அச்சமீன் வரலாறுகுறித்த ஓலைச்சுவடி ஒன்றும் தற்போது இக்குடும்பத்தாரிடம் உள்ளது. சமீன் காலத்தில் கட்டப்பட்ட அரண்மனை இன்றும் அப்படியே உள்ளது. கூன் பாண்டியனால் வழிபடப்பட்ட காளி கோவில் பாளையக் காரர்களால் விரித்துக்கட்டப்பட்டு, பின் சமீன் காலத்தில் முற்றிலும் பிரித்து மாற்றிக் கட்டப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. தற்போதுள்ள கோவில் முற்றிலுமாக சமீன் காலத்தில் கட்டப்பட்டதாகும். இங்குள்ள காட்டுமாரியம்மன் கோவிலில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் திருவிழாவில் பூக்குழி (திமிதி) இறங்குதல் சுற்று வட்டாரங்களில் மிகவும் பிரபலமான ஒரு விழாவாகும்.

அகிலமெல்லாம் அருள்புரியும் இறையருளால்
எந்நாட்டிலும் நன்னாடெனப் பன்னாட்டவரும் பகரானின்ற
தென்னாட்டிற்கோர் திலகமெனும் பாண்டியனாட்டின் வடபால்
எவ்வளமும் குன்றாதிலங்கும் அம்பாத்துறை நகரின்கண்
கூன் பாண்டியன் என்ற சௌந்தர பாண்டியனால்
கடஸ்தாபனம் செய்து 108 நாட்கள் நாள்தோறும்

புதிய வாவி உண்டாக்கி அபிசேக ஆராதனைகள்
செய்து வந்த அருள்மிகு பத்திரகாளியம்மன்

– தனிப்பாடல்

திண்டுக்கல்

பாண்டிய நாட்டின் வட எல்லையாகவும், கொங்குப் பகுதியின் தென்கிழக்கெல்லையாகவும், சோழர்களின் தென் எல்லையாகவும், பழனி மலைக்கும், சிறுமலைக்கும்இடையிலும், சென்னை - திருநெல்வேலி தொடர் வண்டித்தடத்தில் மதுரைக்கும் திருச்சிக்கும் நடுவிலும், திண்டுக்கல் அமைந்துள்ளது.

திண்டுக்கல் மலையானது திண்டு போன்ற அமைப்புடையதால் திண்டுக்கல் (திண்டு + கல்) என்றழைக்கப்படுவதாகக் கருதப்படுகிறது. அரை வட்டமான பஞ்சணை போன்று அகலமான மேற்பரப்புள்ள மலையை இப்பெயர் சுட்டுவதாகக் கருதலாம். திண்டி என்ற பெயரில் அசுரன் ஒருவன் இருந்ததாகவும், அவனது தொல்லைகளைத் தாங்க முடியாமல் தேவர்கள் வேண்டிக் கொள்ள, தேவர்களின் வேண்டுகோளை ஏற்று சிவபெருமான் அவ்வசுரனை அழித்ததாகவும், இறக்கும்போது, அவ்வசுரன் வேண்டிக் கொண்டதற்கேற்ப இம்மலைக்கு 'திண்டுக்கல்' என்ற பெயரேற்பட்டதாகவும் ஒரு கதை உண்டு. 'திண்டி' என்ற சொல் புளியமரத்தைக் குறிக்குமென்றும் புளியமரங்கள் நிறைந்துள்ள பகுதியில் அமைந்துள்ள மலை என்ற பொருளில் இவ்வூருக்குத் திண்டிக்கல் என்று பெயரேற்பட்டு அப்பெயரே காலப்போக்கில் திண்டுக்கல் என்று வழங்கி வருவதாகவும் ஒரு காரணம் சொல்லப்பட்டு வருகிறது.

பாலக்காட்டுக் கணவாயிலிருந்து ஆனைமலை, வடபூதி நத்தம், சின்னகலயமுத்தூர், பழனி, மதுரை வழியாக அழகன்குளம் (இராமநாதபுரம்) சென்றடைந்த பண்டைய பெருவழி ஒன்று திண்டுக்கல் வழியாகச் சென்றுள்ளது. கொற்கைக்கும் சென்றிருக்கலாம். கல்வெட்டுகள் குறிப்பிடுகின்ற வீர நாராயணப் பெருவழியாக இப்பெருவழியை இனம் காண்பர். மேற்குக் கரையிலிறங்கும் யவன வணிகர்கள், தமிழ்நாட்டின் உட்பகுதியிலமைந்துள்ள வணிக நகரங்களுக்கும், கிழக்குக் கடற்கரைப் பட்டினங்களுக்கும் செல்வதற்குக் குமரி முனையைச் சுற்றிக் காலத்தை வீணாக்காமல், விரைவில் சென்றடைய

Koviloor Digital Library

இப்பெருவழி மிகுதியும் பயன்பட்டுள்ளது. இத்தகைய பெருவழிகளை ஒட்டியே சமணப் பள்ளிகளும், சமண முனிவர்களின் வாழ்விடங்களும் அமைவதற்கேற்ப திண்டுக்கல் மலையிலும் சமணப்படுக்கைகள் காணப்படுகின்றன. இந்த சமண படுக்கைகள், சங்க காலத்தில் திண்டுக்கல்லில் சமண முனிவர்கள் இருந்துள்ளமையை உறுதிப்படுத்தும் மிகச் சிறந்த தொல்லியல் சான்றுகளாகும். திண்டுகல்லில் உள்ள 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோனேரின்மை கொண்டான் என்ற அரசாணைச் சொற்றொடருடன் உள்ள கல்வெட்டில் காணப்படும் பள்ளிச் சந்தம் பற்றிய குறிப்பிலிருந்து கி.பி. 13ஆம் நூற்றாண்டளவிலும் திண்டுக்கல் பகுதியில் சமணம் நிலைபெற்றிருந்தமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. திண்டுக்கல் மலைக் கோட்டையிலுள்ள சிவாலயம் 'திண்டீசுவரம்' எனப்படுகிறது. திருநாவுக்கரசர் சுட்டுகின்ற வைப்புத் தலங்களுள் ஒன்றாக இச் சிவாலயத்தையும் கருதுவர். இக்கருத்து ஏற்புடையதாயின், கி.பி. ஏழாம் நூற்றாண்டளவிலேயே திண்டுக்கல்லில் சைவ சமயம் நன்கு வளர்ச்சியடைந்த நிலையிலிருந்துள்ள தெனலாம்.

திண்டுக்கல் கோட்டை

திண்டுக்கல் மலையின் பாறையில் வெட்டப்பட்டுள்ள 600 படிகளைக் கடந்து சென்றால் மலை மீதமைந்துள்ள கோட்டையை அடையலாம். அறுநூறு படிகளைக் கடந்து சென்றதும் கோட்டைக்குள் செல்ல ஒரே ஒரு நுழைவாயிலுள்ளது. இவ்விடத்தில் பொறிக்கப்பட்டுள்ள பெர்சிய மொழிக் கல்வெட்டிலுள்ள இசுலாமிய இறைவழிபாட்டு வாசகமானது துன்பங்களிலிருந்து இப்பகுதியைக் காக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறது. கோட்டைச் சுவரானது கற்களாலும்,செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. இந்த கோட்டைக்குள் குண்டு துளைக்காத வகையிலமைக்கப்பட்டுள்ள சாலை வடிவிலான நீண்டு உருண்ட கூரை உடைய கட்டடங்கள் சில உள்ளன. குற்றவாளிகளையும், ஒத்துழைப்பு நல்காது எதிர்த்துப் போராடிய பாளையக்காரர்களையும் இந்த கோட்டைக்குள் சிறைவைத்திருந்தனர். பாறையிலுள்ள சில ஆழமான பிளவுகளில் கோடை காலத்திலும், சுனைத் தண்ணீரிருப்பதைக் காணலாம். இந்த கோட்டை திருமலை

Koviloor Digital Library

நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டு, சையது சாயிபு காலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் இக்கோட்டையைப் பலப்படுத்தியுள்ளனர்.

பாறைக்குக் கீழே தென்கிழக்குப் பகுதியில் பழைய கோட்டை ஒன்றுள்ளது. இந்த கோட்டை மதுரை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம். இந்த பழைய கோட்டையில் 11 காவலரண்களும் (கொத்தளங்கள்) ஆழமான அகழியும் காணப்படுகின்றன.

மைசூர் மன்னராக இருந்த சாமராஜ உடையார், ஹரி சூரநந்தி ராஜா என்ற படைத்தலைவரின் தலைமையின் கீழ் படை ஒன்றை மதுரையைக் கைப்பற்ற அனுப்பினார். அச்சமயத்தில் மதுரையில் திருமலை நாயக்கர் ஆட்சியிலிருந்தார். மைசூர் படையானது மதுரை நாட்டின் வடமேற்கு எல்லை வழியாக முன்னேறி திண்டுக்கல்லை முற்றுகையிடத் துவங்கியது. இந்த மைசூர்படையெடுப்பை முறியடிப்பதற்காக மதுரை நாயக்கரின் படை இராமப்பய்யர் தலைமையில் திண்டுக்கல்லுக் கனுப்பப்பட்டது. இராமப்பய்யரின் படை திண்டுக்கல்லை அடைந்து முற்றுகையிட்டிருந்த மைசூர்ப் படை வீரர்களைச் சூழ்ந்து கொண்டது. திண்டுக்கல் பாளையக்காரராக இருந்த அரங்கண்ண நாயக்கர் மதுரை நாயக்கருக்கு 7000 பொன் வழங்கியுதவினார். மைசூர்ப் படை பின்வாங்க, இராமப்பய்யர் அவர்களை மைசூர் வரை துரத்திச் சென்று மைசூர் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார்.

மதுரை நாயக்க மரபின் இறுதி அரசியான மீனாட்சிஅரசி நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டபின், சந்தா சாகிபு திண்டுக்கல்லைக் கைப்பற்றப் படை ஒன்றை அனுப்பியுள்ளார். திண்டுக்கல் அச்சமயத்தில் பங்காரு திருமலையின் வசம் இருந்தது. சந்தா சாகிபுவின் படை கோவிந்தையா, இராவணய்யா ஆகியோர் தலைமையில் திண்டுக்கல்லைத் தாக்கி வெற்றி பெற்றது. அதன் பின்னர் தன் உடன் பிறந்தார்களுள் ஒருவரான சதக் சாஹேப்பை (Saduck Saheb) சந்தா சாகிபு திண்டுக்கல்லுக்கு ஆளுநராக நியமித்துள்ளார். கி.பி. 1741 இல் மராட்டியர் திருச்சியை முற்றுகையிட்டுக் கைப்பற்றி சந்தா சாகிப்பை சதாராவுக்குக்

Koviloor Digital Library

கொண்டு சென்றனர். சதக் சாஹிபின் மரணத்திற்குப் பின்னர், பர்க்கி வெங்கடராயர் திண்டுக்கல் பகுதியின் பொறுப்பாள ராகியுள்ளார். இச்சமயத்தில் திண்டுக்கல் மைசூர் மன்னர்களின் கட்டுப்பாட்டிலிருந்துள்ளது. பர்க்கி வெங்கடராயர் திண்டுக்கல்லில் உள்ள அபிராமி அம்மன் பத்மகிரீசுவரர் கோயிலுக்குத் திண்டுக்கல்லை ஒட்டியுள்ள சில ஊர்களைத் தானமாக அளித்துள்ளார். பர்க்கி வெங்கட ராயருக்குப் பின்னர் வெங்கடப்பர் திண்டுக்கல் பகுதியின் பொறுப்பாளராக இருந்துள்ளார். வெங்கடப்பருக்குப் பின் நாமகிரிராஜா இப்பகுதியின் பொறுப்பாளராகியுள்ளார். கி.பி. 1751 அளவில் வெங்கடப்பரின் கட்டுப்பாட்டின் கீழ் பாளையங்களும், பர்க்கி வெங்கடராயரின் மகனான ஸ்ரீநிவாசராயரின் கட்டுப்பாட்டில் அரசு நிலங்களும் இருந்துள்ளன. கி.பி. 1755 அளவில், பல பாளையக்காரர்களிடமிருந்து உரிய தொகையை வசூலிக்க இயலாது போனதால், வெங்கடப்பர், ஹைதர் அலியின் உதவியை நாடினார். ஹைதர் அலியும் 700 குதிரைப்படை வீரர்கள், ஆயிரம் காலாட்படை வீரர்கள், 4 பீரங்கிப்படையுடன் படை நடத்திவந்து, அம்மைய நாயக்கனூர், நிலக்கோட்டை பாளையக்காரர்களின் உதவியுடன் பழனி பாளையக்காரரை முதலில் கட்டுப்படுத்தினார். பழனி பாளையக்காரருக்கு 1,75,000 சக்கரம் தண்டம் விதித்தார். அடுத்து ஹைதர் அலி விருப்பாட்சி பாளையத்தின் மீது படைநடத்தி செல்ல விருப்பாட்சி பாளையக்காரர் 75,000 சக்கரம் வழங்க இசைந்துள்ளார். அடுத்து கன்னிவாடி பாளையத்தின் மீது கவனம் திரும்ப, கன்னி வாடி பாளையக்காரர் 3,00,000 சக்கரம் வழங்க இணங்கி, உடனடியாக 70,000 சக்கரத்தை வழங்கியுள்ளார். அதன்பின், எரியோடு (எறியோடு) பாளையக்காரர் 70,000 சக்கரமும், சொக்கம்பட்டி பாளையக்காரர் 30,000 சக்கரமும் தர ஒப்புக் கொண்டுள்ளனர். போடி நாயக்கனூர் பாளையக்காரர் எதிர்த்துப் போரிட்டுத் தோற்றோடிப் போனதால், அவரது பாளையம் ஹைதர் அலியால் கையகப்படுத்தப்பட்டது. அடுத்து கம்பம் பாளையக்காரர் 10,000 சக்கரம் செலுத்த இசைவு தெரிவித்துள்ளார். அடுத்து ஹைதரின் படை உத்தம பாளையத்தின் பக்கம் திரும்ப, கம்பம் கூடலூர் பாளையக்காரர்கள் வந்து ஹைதரைச் சந்தித்துப் பணம் செலுத்துவதாக உறுதியளித்தும், பணத்தை உரிய முறைப்படி செலுத்தாததால், மேற்குறித்த பாளையங்கள் கையகப்படுத்தப்பட்டன. ஹைதர்

Koviloor Digital Library

அலி, இங்ஙனம் திண்டுக்கல் சீர்மைக்குட்பட்ட பாளையங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். ஹைதர் அலி மீண்டும் திண்டுக்கல்லுக்கு வந்து கன்னிவாடி பாளையக்காரரை சிறைப்படுத்தி பெங்களூருக்கனுப்பினார். ஹைதர் அலி திண்டுக்கல்லிலிருந்து திரும்புவதற்கு முன்னர், ஸ்ரீநிவாசராயர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவர் வசமிருந்த பொறுப்புகளும் வெங்கடப்பர் வசமே ஒப்படைக்கப்பட்டன. வெங்கடப்பருக்குப் பின்னர் சூரிய நாராயண முதலி அப்பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளார். அத்துடன் ஆரணி இராமநாயக்கர் தலைமைப் பாளையக்காரராக்கப்பட்டு, திண்டுக்கல் சீர்மை அதிகாரமும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகக் கருதுவர். இதனால் ஆரணி இராம நாயக்கர் பிற பாளையக்காரர்களின் கலகங்களைஅடக்க வேண்டியவராக செயல்பட்டுள்ளார்.

1765 அளவில் ஹைதர் அலி திண்டுக்கல் பௌஜ்தாராக நியமிக்கப்பட்டுள்ளார். திண்டுக்கல்லில் ஹைதர் தனது படை வலிமையைப் பலப்படுத்திப் பீரங்கிப்படையைப் பெருக்கிக் கொண்டதோடு, படைச்சாலையையும், ஆய்வுக்கூடத்தையும் அமைத்ததாகக் கூறப்படுகிறது. கி.பி. 1767 இல் கர்னல் உட் (Colonel Wood) திண்டுக்கல்லைத் தாக்கிக் கைப்பற்றி எட்டு மாத காலம் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வைத்துள்ளார். அதன்பின்னர் ஏற்பட்ட உடன்படிக்கை ஒன்றின் மூலம் திண்டுக்கல் பகுதி மீண்டும் ஹைதரின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது.

1772 அளவில் திண்டுக்கல் பகுதி மீர்சாயிபுவின் கட்டுப்பாட்டிலிருந்துள்ளது. இவர் ஹைதர் அலியின் மைத்துனர். மீர் சாயிபுவின் (மீர் ரசலி கான்) துணைவியாரான அமீன்-உன்-நிசா-பேகம் இறந்ததும், அவருக்குத் திண்டுக்கல்லில் தெற்குப் பகுதியில் கல்லறை எழுப்பப்பட்டுள்ளது. இப்பகுதி இவ்வம்மையாரின் பெயரால் பேகம்பூர் என்றழைக்கப்பகிறது. பேகம்பூரில் உள்ள மசூதிக்கு மீர்சாயிபு சில கிராமங்களைச் சர்வ மானியமாக வழங்கியுள்ளார்.

ஏப்ரல் 1783 இல் கர்னல் லாங் (Colonel Lang) கட்டுப்பாட்டில் திண்டுக்கல் பகுதி இருந்துள்ளது. மங்களூர் உடன்படிக்கையின் படி சூலை 1784 இல் திண்டுக்கல் பகுதி திப்பு சுல்தானின்

Koviloor Digital Library

கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. மீர் சாயிபுவின் உறவினராக சையது சாயிபு என்பவர், திண்டுக்கல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கி.பி. 1788 இல் திப்பு சுல்தான் திண்டுக்கல்லுக்கு வந்துள்ளார். ஆகஸ்டு 1790இல், திண்டுக்கல், கர்னல் ஜேம்ஸ் ஸ்டூவர்ட் (Colonel James Stuart) கட்டுப்பாட்டிற்குட்பட்டுள்ளது.

கி.பி. 1790இல் சென்னை கவர்னராக இருந்த வில்லியம் மெடேசின் தலைமையிலான ஆங்கிலப்படை திண்டுக்கல், கோயமுத்தூர், பாலக்காடு ஆகிய இடங்களைக் கைப்பற்றியுள்ளது. அலெக்சாண்டர் மக்லூட்டு (Alexander Mc Leod) 6-9-1790 இல் திண்டுக்கல்லுக்கு மாவட்ட ஆட்சியராக்கப்பட்டார். 1792 மார்ச்சில் ஸ்ரீரங்கபட்டினத்தில் ஆங்கிலேயருக்கும், திப்பு சுல்தானுக்குமிடையிலேற்பட்ட சமாதான உடன்படிக்கையின் படி திண்டுக்கல், கோயமுத்தூர், தர்மபுரி மாவட்டங்கள் ஆங்கிலேயர்க்குக் கிடைத்தன.

அலெக்சாண்டர் மக்லூட்டுக்கடுத்து ஜான் ராங்கம் (John Wrangham) (ரெங்கதுரை) அவர்களும் அவருக்கடுத்து ஜார்ஜ் வின்ச் (George Wynch) (உஞ்சிதுரை) அவர்களும், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியராகியுள்ளனர். இக்காலக்கட்டத்தில் பாளையக்காரர்கள் மாவட்ட ஆட்சியருக்கு உரிய மரியாதையை சரியாக செலுத்தவில்லை எனக் கருதப்படுகிறது. இக்குறைச்பாட்டை சரிசெய்வதற்காக வில்லியம் ஹாரிங்கடன் (William Harrington) கேப்டன் வில்லியம் மக்லூடு (William Mc Leod) அடங்கிய குழு திண்டுக்கல் மாவட்டப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளது.

அதன்பின்னர் தாமஸ் போயர் குர்தீசு (Thomas Bowyer Hurdis) (ஆர்டீசு, ஹுர்தீஸ், துரை) என்பவர் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திண்டுக்கல் பகுதியிலிருந்து ஆங்கிலேயருக்குத் தொடர்ந்து நல்ல வருவாய் கிடைத்து வந்துள்ளது. 1790-91 முதல் 1795-96 முடிய (பசலி ஆண்டு 1200 - 1205) 59180 பகோடாவும் 1796-97 முதல் (பசலி 1206-1211) 86, 543 பகோடாவும் கிடைத்துள்ளன.

பசலி ஆண்டு 1214 இன் இறுதியில் (1804-05) இந்த வருவாயின் அளவு 1,13,315 ஸ்டார் பகோடா அளவிற்கு உயர்ந்து விடும் என

Koviloor Digital Library

ஹார்திஸ் (Hurdis) கணக்கிட்டிருந்தார். 1803 ஆண்டு திசம்பர் திங்களில் ஹார்திஸ்க்கு பதவி உயர்வு கிடைத்ததைத் தொடர்ந்து ஜார்ஜ் பாரிஸ் (George Parish) மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரானார். இவர் 1812 வரை இப்பதவியிலிருந்தார். 1812 முதல் 1828 வரை ரௌஸ் பீட்டர் (Rous Peter) மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்துள்ளார். பீட்டர் பாண்டியன் என்று பொதுமக்களால் அன்புடன் அழைக்கப்படும் இவர் மீனாட்சியம்மன் கோயிலுக்கும் அழகர் கோயிலுக்கும் விலையுயர்ந்த ஆபரணங்களை வழங்கியிருப்பதாகக் கருதப்படுகிறது.

ரௌஸ் பீட்டர், திண்டுக்கல் சீர்மையிலிருந்து வசூலிக்கப்பட்டு வரும் தொகையினை மறு மதிப்பீடு செய்து குறைக்க வேண்டுமென வருவாய்க் கழகத்திற்குப் (Board Of Revenue) பரிந்துரைத்தார். ரௌஸ் பீட்டரைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியாளரான ஹென்றி விவேசும் (Henry Viveash) திண்டுக்கல் பகுதியில் வசூலித்து வரும் தொகையினைக் குறைத்திட வேண்டுமென 1831 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வருவாய்க் கழகத்திற்கு, அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

திண்டுக்கல் பகுதி முதன் முதலில் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் வந்த போது திண்டுக்கல் சீர்மையில் 26 பாளையங்கள் இருந்தன. அவற்றுள் எரியோடு, பழனி, விருப்பாட்சி ஆகிய மூன்று பாளையங்களும், ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட்ட காரணத்திற்காக, ஆங்கிலேயர்களால் காலப்போக்கில் கையகப்படுத்தப்பட்டுவிட்டன. அடுத்து பாளையக்காரராகப் பதவியேற்பதற்கு உரிய வாரீசுகளில்லாத காரணத்திற்காக தேவதானப்பட்டி, மடூர், ரெட்டையம்பாடி பாளையங்கள் ஆங்கிலேயர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டன. தாங்கள் ஆங்கிலேயருக்குச் செலுத்திவர வேண்டிய தொகையினைச் சரிவர செலுத்தாமல் நிலுவை வைத்து வந்த காரணத்திற்காக இடையன் கோட்டை, நிலக்கோட்டை, பல்லியப்ப நாயக்கனூர், சந்தையூர், சுக்காம்பட்டி போன்ற பாளையங்களை அவ்வப் பாளையக்காரர்கள் இழக்க நேர்ந்தது. இந்த பாளையங்களில் பல மீண்டும் உரியவர்கள் வசமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. சில விற்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

கி.பி. 1860 இல் தாடிக்கொம்பு மற்றும் நிலக்கோட்டை வட்டங்களை இணைத்துத் திண்டுக்கல் வட்டம் உருவாக்கப்பட்ட தென்பர். திண்டுக்கல் நகராட்சிக்கு 1884 ஆம் ஆண்டிலேயே 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்டு அடுத்தாண்டே நகராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. 1865 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நகர்மேம்பாட்டு விதி X (Town Improvement Act X of 1865) இன்படி இந்த நகராட்சி செயல்பட்டு வந்துள்ளது. இந்த வகையில் திண்டுக்கல் நகராட்சி 140 ஆண்டுகாலமாகச் செயல்பட்டு வருவதாகக் கருதலாம்.

திண்டீசுவரம்

திண்டுக்கல் மலைக்கோட்டையிலுள்ள திண்டீசுவரம் எனும் சிவாலயம், திருநாவுக்கரசர் சுட்டுகின்ற வைப்புத்தலமாகக் கருதப்படுகிறது. தாமரை மொட்டு வடிவில் திண்டுக்கல் மலை தோன்றியதால் இம்மலைக்கு 'பத்மகிரி' என்று பெயர் வழங்கியதாகவும், அதனால் மலைமீது எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குப் 'பத்மகிரிநாதர்' என்ற பெயர் வழங்கி வருவதாகவும் கருதப்படுகிறது. இங்கு முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் கல்வெட்டொன்று மிகவும் சிதைந்த நிலையிலுள்ளது. முதலாம் குலசேகரபாண்டியன் காலத்தில் இச்சிவாலயம் நல்ல நிலையில் வழிபாட்டிலிருந்துள்ளமையை இக்கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இங்குள்ள மற்றொரு பாண்டியர் கல்வெட்டான வீரபாண்டியன் கல்வெட்டும் முற்றுப் பெறாத நிலையிலுள்ளதால், இக்கோயிலைப் பற்றிய விரிவான செய்திகளைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அச்சுத தேவராயர், விஜயரங்க சொக்கநாதர், கிருஷ்ணராச உடையார் காலத்திலும் இக்கோயில் சிறப்பான நிலையில் வழிபாட்டிலிருந்துள்ளமையை இங்குள்ள கல்வெட்டுக்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

சீனிவாசப் பெருமாள் கோயில் / ஆஞ்சநேயர் கோயில்

திண்டுக்கல் மலையின் அடிவாரத்திலமைந்துள்ள சீனிவாசப்பெருமாள் கோயில் விஜய நகர வேந்தர் காலத்தில் அச்சுத தேவராயரால் கட்டப்பட்ட கோயிலாகக் கருதப்படுகிறது.

Koviloor Digital Library

திண்டுக்கல்லில் ஆஞ்சநேயர் கோயில் ஒன்றும் சிறப்பான நிலையில் வழிபாட்டிலிருந்து வருகிறது.

தீப்பாய்ச்சியம்மன் கோயில்

இறந்துவிட்ட கணவனின் உடலோடு சிதையில் விழுந்து இறந்து போகும் பெண்களின் நினைவாக மகாசதிக்கற்கள் (மாசதிக்கல்) எழுப்பப்பட்டு வழிபடப்பட்டு வருவது போன்றே, கணவனின் சிதையோடு தீயில் விழுந்து எரிந்த பெண்களின் நினைவாக தீப்பாச்சியம்மன் (தீப்பாய்ந்த அம்மன்) கோயில்களும் உருவாக்கப்பட்டுள்ளன. திண்டுக்கல்லில் இத்தகைய தீப்பாச்சியம்மன் கோயில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோட்டை - மாரியம்மன் கோயில்

திண்டுக்கல் மலைக் கோட்டையின் அடிவாரத்தில் 'கோட்டை மாரியம்மன்' என்ற பெயரில் மாரியம்மன் கோயிலொன்று வழிபாட்டிலிருந்து வருகிறது. மாரியம்மன் கோயில் திருவிழாவில் தீச்சட்டி சுற்றுவது பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மேள தாளங்கள் முழங்க, ஆண்களும், பெண்களும் தீச்சட்டி தாங்கி நேர்த்திக்கடன் செலுத்துவது திண்டுக்கல் மாரியம்மன் திருவிழாவில் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். திண்டுக்கல்லில், மலையடிவாரத்தில், வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுக்கொரு கோயில் உள்ளது.

கிறித்துவம்

திண்டுக்கல்லில் உள்ள அவர் லேடி ஆஃப் டாலர்ஸ் (Our Lady of Dolours) என்ற கிறித்தவ தேவாலயம் கி.பி. 1729 இல் கட்டப்பட்டுள்ளமை, பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே திண்டுக்கல்லில் கிறித்தவர்கள் பரவலாக இருந்துள்ளமையை உறுதிப்படுத்துகிறது. ரோமன் கத்தோலிக்க சமய வழிபாட்டுக் குழுவினர் (Roman Catholic Congregations) திண்டுக்கல்லில் பெரும் எண்ணிக்கையில் இருந்துள்ளனர். இலங்கையிலுள்ள ஜாஃப்னா கிறித்தவ சமயக் கழகத்தின் (Jaffna Mission) ஒரு கிளையாக கி.பி. 1834 இல் அமெரிக்கன் மதுரை மிஷன் (American Madurai Mission) உருவான மறு ஆண்டான 1835

Koviloor Digital Library

இலேயே அதன் அமைப்பு திண்டுக்கல்லிலும், 1857 ல் வத்தலக்குண்டிலும் வேரூன்றிவிட்டது. இலெய்ப்ஜிக் இவான் ஜெலிக்கல்லுத்தரன் மிஷனைச் (Leipzig Evangelical Lutheran Mission) சேர்ந்த கிறித்தவ சமயக் குழுவினர் 1882 இல் திண்டுக்கல் பகுதிக்கனுப்பப் பட்டுச் சமயப் பணி ஆற்றியுள்ளனர்.

அமெரிக்க மிஷனைச்சேர்ந்த கிறித்தவப் பாதிரியாரும் மருத்துவருமான. செஸ்டர், எம்.டி., (Rev. E.Chester/ M.D.,) அவர்கள் 1860 முதல் 1902 வரை திண்டுக்கல்லில் மருத்துவப் பணியாற்றி யுள்ளார். இவருடைய மருத்துவப் பணியைப் பாராட்டி நினைவு கூறும் வகையில், திண்டுக்கல் நகராட்சி மருத்துவமனைக்கு நகராட்சி, 'செஸ்டர் மருத்துவமனை', (Chester Hospital) என்று பெயர் சூட்டியது.

ஆங்கிலேயர்களின் கல்லறைகள்

திண்டுக்கல் பகுதி ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிலிருந்த போது, பல ஆங்கிலேயர்கள் திண்டுக்கல்லில் பணிபுரிந்துள்ளனர். அவர்களில் சிலரும், அவர்களுடைய குடும்பத்தினர் சிலரும் மரணமடைந்த போது, அவர்கள் திண்டுக்கல்லில் அடக்கம் செய்யப்பட்டு அவர்கள் நினைவாகக் கல்லறைகள் எழுப்பப் பட்டுள்ளன. இப்பகுதி பழைய பிராட்டஸ்டன்டு கல்லறை எனச் சுட்டப்படுகிறது. இங்குள்ள கல்லறையிலுள்ள நினைவுக் கற்களுள் சில குறிப்பிடத்தகுந்தவையாக உள்ளன. திண்டுக்கல்லில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஹுர்திஸ் (Hurdis / ஆர்டீசுதுரை) அவர்களுடைய சகோதரியான ஹேரியட் ஹுர்திஸ், (Harriot Hurdis) (கி.பி. 1802), லெப்டினென்ட் தாமஸ் வில்சன் (Lieutenant Thomas Wilson) (கி.பி. 1815), (உயர் இராணுவ அதிகாரிக்கு நிர்வாகப் பணிகளில் உதவியாளராகப் பணியாற்றிய இராணுவ அதிகாரி; Adjutant) மேஜர் ஜான் லம்பே (Major John Lambe / கி.பி. 1828) இராணுவ அதிகாரி வில்லியம் பக்லே (William Buckley; கி.பி. 1834), திண்டுக்கல்லில் உதவி மாவட்ட ஆட்சியராக இருந்த இராபர்ட் டேவிட்சன் (Robert Davidson; கி.பி 1841), கறித்தவப் பாதிரியார் மரியாதைக்குரிய வில்லியம் ஹரிக்கே; (Rev. William Hickey; கி.பி.1870) ஆகியோரின் கல்லறைகள் குறிப்பிடத்தக்கவை.

Koviloor Digital Library

திண்டுக்கல் - பேகம்பூர் - பேகம் கல்லறை

பாறைக்குத் தெற்கில் அமைந்துள்ளது பேகம்பூர் என்னும் பகுதி. இதனருகில் ஒரு சிறிய பள்ளி வாசலும் அதில் ஒரு இசுலாமிய கல்லறையுமுள்ளது. அதில் உள்ள பெர்சிய மொழி கல்வெட்டிலிருந்து, இக்கல்லறை, மீர் சாயிபு என்றழைக்கப்பட்ட மீர் ரசலி கானின் துணைவியாரான அமீர் -உன்-நிசா-பேகம் அவர்களின் நினைவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஹைதர் அலியின் துணைவியாருடைய சகோதரியின் கணவரான மீர் சாயிபுவின் கட்டுப்பாட்டில் திண்டுக்கல் பகுதி கி.பி. 1772 முதல் 1782 வரை இருந்துள்ளது.

திண்டுக்கல் சமீன்

திண்டுக்கல் சமீன் வம்சாவளியின் முன்னவரான ஆரணி ராமண நாயக்கர், தம்முடைய சகோதரர்களுடனே தெற்கு நோக்கி வந்து திண்டுக்கல் கசுபாவுக்குட்பட்ட சீலைப்பாடி கிராமத்திற்கு வந்து சேர்ந்த போது, அந்த கிராமத்தின் காவல் உரிமை மீது மடூர் சமீன்தாரும், எரியோடு சமீன்தாரும் போட்டி போட்டுக் கொண்டிருந்துள்ளார்கள். இத்தருணத்தில் ஆரணி ராமண நாயக்கர் மேற்குறிப்பிட்ட சீலைப்பாடி கிராமத்தில் அரண்மனை கட்டி, கல்க்கோட்டை போட்டு, குடிகளைத் குடியமர்த்தித் தானும் அக்கிராமத்தின் குடியிருப்புக் காரராகியுள்ளார். அச்சமயத்தில் மீனாட்சி மதுரை நாயக்க மரபின் அரசியாக வீற்றிருக்க. அவர் சார்பாகத் திண்டுக்கல்லின் அதிகாரிகளாக அக்கா ரெட்டி ரெங்காரெட்டி ஆகியோர் இருந்துள்ளனர்.

சீலைப்பாடிக்குக் கிழக்கிலமைந்துள்ள முள்ளிப்பாடி கிராமத்தில் 4000 சக்கரம் பொன் மதிப்பீட்டில் கோபால கிருஷ்ணன் கோயிலைக் கட்டி, சுவாமியை எழுந்தருளுவித்து, அவ்விறைவனுக்கு மடூர் சமீன்தாரான வீரப்ப நாயக்கரின் உதவியுடன் 1000 பொன் மதிப்புள்ள முத்து ஆரத்தையும், வெள்ளைக் கொடையையும் வழங்கியுள்ளார். அத்துடன் அவ்விறைவனின் வழிபாட்டுச் செலவினங்களுக்காக வேண்டி 15 சக்கரம் ரூ. 1 25 பொன் மதிப்பு மற்றும் சக்கரம் ரூ 60 பொன் மதிப்புடைய நிலங்களையும் வழங்கியுள்ளார். புதுவாடி கோட்டையின் பேரில் நடைபெற்ற எல்லைத் தகராறு சண்டையில்

Koviloor Digital Library

நெஞ்சில் அம்புக் காயம் பட்டு ஆரணி ராமண நாயக்கர் மரணமடைந்த ஆண்டு 1716 என்று சொல்லப்படுகிறது.

இவருக்கடுத்து, இவரது மகன் ஆரணி இராம நாயக்கர் இளவயதுக்காரராக இருந்ததைக் கவனத்தில்கொண்டு, இராம நாயக்கரின் துணைவியார் மங்கம்மாள் மகன் சார்பாகப் பணிகளைக் கவனித்து வந்துள்ளார். அத்தருணத்தில் மதுரை நாயக்க அரச மரபில் மீனாட்சி அரசியாரின் துரைத்தனம் முடிந்து, அக்கா ரெட்டி, ரெங்கா ரெட்டி ஆகியோரின் பதவியும் பறிபோக, மைசூர் மன்னருக்குக் கட்டுப்பட்ட பகுதியாகத் திண்டுக்கல் ஆனது. மைசூர் மன்னனின் சார்பாகத் திண்டுக்கல் பகுதியைச் சுபேதார் வெங்கிடப்பய்யர் கவனித்து வரலானார். அச்சமயத்தில் திண்டுக்கல்லைச் சேர்ந்த பாளையக்காரர் செலுத்த வேண்டிய பணத்தைச் சரிவர செலுத்தாதிருந்ததால், வெங்கிடப்பய்யர் ஆரணி இராம நாயக்கரை வரவழைத்து 1000 பேர்களையும், பல்லக்கையும் கொடுத்து மேற்படிப் பணம் செலுத்தாத பளையக்காரனை ஒடுக்கச்சொல்ல, அதன்படி பிறமலை நாட்டுக் கள்ளர்களையும், அப்பாஜி கவுண்டராகிய பாளையக்காரரையும் ஒடுக்கியுள்ளார். ஹைதர் அலி கெச்சல் ஹட்டி (கெச்சலூட்டு?) கணவாய்க்கு வந்திறங்கி திண்டுக்கல் சேகரம் பழனி பாளையக்காரர் பேரிலே சண்டை செய்து, பின்னர் விருபாட்சி பாளையக்காரரைக் கண்டுபேசி, அதன் பின்னர் திண்டுக்கல் வந்து சேர்ந்ததும், சுபேதார் வெங்கிடப்பய்யர் ஹைதர் அலியிடம், கன்னிவாடி பாளையக்காரரைப் பிடித்து ஸ்ரீரங்கபட்டினத்திற்கு அனுப்பிவிட்டு, ஆரணி இராம நாயக்கருக்கு ஒட்டு பவுஜூதாரி குடுத்தால், தான் திண்டுக்கல்லில் சிறப்பாகப் பணியாற்ற ஏதுவாக இருக்கும் என்று கூறியுள்ளார். சுபேதார் வெங்கிடப்பய்யரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு ஆரணி ராம நாயக்கருக்கு, பனோஜி கதம்பா, துக்கோஜி நளிகி, கானோஜி கேசரா, ரசால் சிங்கு ஆகிய நான்கு அம்பாரிக்கார சர்தார்களையும், 6000 குதிரைகள் 12 பீரங்கிகள், 12,000 பேர்களையும் வழங்கி, ஒட்டு பவுஜூதாரியும் குடுத்து, அத்துடன் உபய வெண்சாமரம் வீசுதல், தலைப்பாகையில் கட்டுகிற முத்து துறாய் சுவர்ணம், கழுத்தில் அணிந்து கொள்ளும் பச்சைக் கல் பதக்கம், உடுகறையாய்த் தரிக்கின்ற வஸ்திரங்கள் போன்ற விருதுகளையும் வழங்கியுள்ளார். அதன்பின் சுபேதார்

Koviloor Digital Library

வெங்கிடப்பய்யர் ஸ்ரீரங்கபட்டினத்திற்கனுப்பப்பட்டு, திண்டுக்கல் அதிகாரியாக சூரிய நாராயண முதலியார் நியமிக்கப் பட்டுள்ளார். போடி நாயக்கன் என்கிற பாளையக்காரன், விருப்பாட்சி குப்பள நாயக்கன், இடையகோட்டை பாளையக்காரன், நிலக்கோட்டை கூளப்ப நாயக்கன், ஆயக்குடி பாளையக்காரன், அம்மட்டறை பாளையக்காரன், எர்ர ஜக்கய நாயக்கனூர் பாளையக்காரன், யேமுகுலாபுரம் பாளையக்காரன் தவசிமடு பாளையக்காரன், எரியோடு வல்லக் கொண்டம நாயக்கர், பல்லியப்ப நாயக்கர், மாம்பாறை பாளையக்காரன் ஆகியோரெல்லாம், தாமாய் வந்து கண்டு கொள்ளுமளவிற்கு ஆரணி இராம நாயக்கர் சிறப்பான நிலையில் இருந்துள்ளார். இவரது திறமையைக் கண்ட ஹைதர் அலி சிரங்கபட்டினத் திலிருந்து இவருக்கு பச்சைப் பல்லக்கு, சிங்கமுகம், வெட்டுப்பாவாடை, பச்சைக்கல் பெரிய கடுக்கன் போன்ற வெகுமதிகளை வழங்கியதோடு, திண்டுக்கல் சீமை அதிகாரத்தையும் வழங்கியுள்ளார். அதன்பின் இராம நாயக்கர் தமக்கு வேண்டியவர்களை தமது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளுக்கு அதிகாரிகளாக நியமித்துள்ளார். கத்திபால குருவப்ப நாயக்கர் என்பவருக்கு பழனி, ஆயக்குடி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 51 ஆண்டுகள் பதவியிலிருந்த பின், அவர் சிரங்கபட்டினத்தில் இயற்கை எய்தியுள்ளார். இவரது காலத்தில் சிலைப்பாடி எல்லையில் சேசாத்திரி நாயக்கன் கோட்டை கட்டப்பட்டுள்ளது. சின்ன சிலைப்பாடியில் தெப்பக்குளம் ஒன்றும், புதுக்குளம் ஒன்றும், நான்கு கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன; திண்டுக்கல் அக்கிரஹாரத்தில் அலமேலம்மாள் தெப்பக்குளம் தோண்டப்பட்டது. பெரிய குளத்தில் கோபாலகிருஷ்ணசுவாமி கோயிலும், மண்டபமும் கட்டப்பட்டது.

ஆரணி இராம நாயக்கருடைய மைந்தர் ஆரணி விஜய வேங்கிடபதி நாயக்கர் ஸ்ரீரங்கப்பட்டினம் சென்று ஹைதர் அலியைப் பேட்டி காணக்காத்திருந்தும் அவருக்குத் திண்டுக்கல் அதிகாரம் கிட்டாமல் போய்விட்டது; மீர்சாய்பு என்பவருக்குத் திண்டுக்கல் அதிகாரம் வழங்கப்பட்டுவிட்டது. அதனால் விஜய வேங்கிடபதி நாயக்கர், தன்னுடைய மாமனாரும் பழனி அதிகாரத்திலிருந்தவருமான கத்திபாலகுருவப்ப நாயக்கரிடம்

Koviloor Digital Library

சென்று அவருடன் சேர்ந்து கொண்டார். கத்திபால குருவப்ப நாயக்கர் இறந்தவுடன், அவருடைய மகன் கத்தி ரெங்கசாமி நாயக்கரும், ஆரணி விசய வெங்கிடபதி நாயக்கரும், இனி ஹைதர் அலி தங்களுக்கு அதிகாரம் எதுவும் வழங்க மாட்டார் என்று முடிவு செய்து ஆங்கிலேயக் கும்பினியாரிடம் சேர்வதென்று முடிவு செய்தனர். அம்முடிவின்படி, மேஜர் ஜெனரல் லிகுசீன் துரையவர்களைக் கண்டார்கள். கர்னல் பார்ப்பசன் துரையவர்கள், இவர்கள் இருவரையும் திண்டுக்கல்லுக்கு அழைத்து வந்து ஆரணி விஜய வேங்கிடபதி நாயக்கரைத் திண்டுக்கல் ராஜாவாகப் பட்டம் கட்டி, பட்டக் காணிக்கையாக இலட்சம் ரூபாயும் வாங்கிக் கொண்டுள்ளார். கத்தி ரெங்கசாமி நாயக்கருக்குப் பழனி சீர்மையை வழங்கி ஆண்டொன்றுக்கு ஆற்காடு ரூபாய் 30,000 செலுத்தி வரச்செய்துள்ளார். ஆரணி விஜய வேங்கிடபதி நாயக்கரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்ட பகுதிகளாகக் கரூர், அரவக்குறிச்சி, தாராபுரம், கோளம்பம், சக்கிரிகிரி போன்ற பகுதிகளும் இருந்ததால், திண்டுக்கல்லுக்கு ஆற்காடு ரூபாய் 1,80,000 கரூர்க்கு ரூ. 1,000,00 அரவகுறிச்சிக்கு ரூ. 70,000 தாராபுரம் குளம்பம் சகிரகிரிக்கு ரூ. 3,000,00 என ஆகமொத்தம் ஆற்காடு ரூ.6,50,000 ஐ ஆங்கிலேயருக்குச் செலுத்திவர வேண்டும் என நிபந்தனையும் விதித்துள்ளனர். அடுத்து ஹைதர் அலிக்கும் ஆங்கிலேயருக்கு மிடையில் போர் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்த நாயக்கர் இருவரையும் மதுரையைச் சேர்ந்த கூட்டப்புளி, தேனூரில் வந்திருக்கச் செய்தனர். இந்த சமயத்தில் செயிது சாயிபு இவர்களைக் கைது செய்ய முயற்சிப்பதை அறிந்து திருச்சியைச் சேர்ந்த லக்கய நாயக்கனூர் புத்தா நத்தத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கிருக்கும் போது கத்தி ரெங்கசாமி நாயக்கர் இறந்து போனார். அதன் பிறகு ஜெனரல் மேடோசு துரையவர்கள் (General Meadows) விசய வேங்கிடபதி நாயக்கரை வரவழைத்து அவருக்குத் திண்டுக்கல் அதிகாரத்தை மீண்டும் வழங்கினார். இங்ஙனம் வேங்கிடபதி நாயக்கர் திண்டுக்கல் அதிகாரத்திலிருந்து வரும்போது, மேஜர் மக்லூட் திண்டுக்கல்லுக்கு மாவட்ட ஆட்சியராக வந்துசேர, திண்டுக்கல் அதிகாரம் யாருக்குரியது என்பதில் குழப்பமேற்பட்டுவிட்டது. மக்லூட் துரை இது குறித்து சென்னைக் கெழுதித் தெளிவு படுதததுவதாகக் கூறியுள்ளார். அடுத்து, மக்கலூட் சென்னைக்கழைக்கப்பட்டு அவருக்குப்

Koviloor Digital Library

பதிலாக மேஜர் ரெங்கதுரை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியராக வந்துள்ளார். இத்தருணத்தில் தம்முடைய குழப்பநிலைக்குத் தெளிவு காண வேண்டி சென்னை செல்ல சீலைப்பாடிக்கு வேங்கடபதி நாயக்கர் வந்து சேர்ந்துள்ளார். அத்தருணத்தில் வேங்கடபதி நாயக்கர், சில குழப்பங்களால் திண்டுக்கல் மலையின்மேல் பாராவில் வைக்கப்பட்டுள்ளார். திண்டுக்கல் கோட்டையின் கமாண்டராயிருந்த கர்னல் கேபிஜீ துரையிடம் தன் நிலையை விளக்கிப் பாராவைவிட்டு வெளியில் வந்த வேங்கடபதி நாயக்கர் நான்கு ஆண்டுகள் நோய்வாய்ப் பட்டவராக சீலைப்பாடியிலேயே தங்கியிருந்து மரணமடைந் துள்ளார். அதன்பின்னர் அவரது துணைவியார் கிருஷ்ணம்மாள், அவருடைய மகன் ஆரணி குருவப்ப நாயக்கர், மற்றுமுள்ள அவர் குடும்பத்தினர் சீலைப்பாடியிலேயே தொடர்ந்து குடியிருந்து வந்துள்ளனர்.

கதிரி

இவ்வூர் திண்டுக்கல் பகுதியில், பழைய கன்னிவாடி ஜமீனில் அடங்கியிருந்ததாகக் கருதப்படுகிறது. ஆந்திராவில் அனந்தப்பூர் மாவட்டத்தில் கதிரி என்ற ஊரும், நரசிம்மசுவாமி கோயிலும் இருப்பது போன்றே இவ்வூரின் பெயரும், இவ்வூரிலுள்ள நரசிங்கப்பெருமாள் என்று கோயிலின் பெயரும் காணப் படுவதால், இவ்விரு பகுதிகளுக்கிடையில் தொடர் பிருந்ததாகக் கருதலாம். கி.பி. 1804 அளவில் கன்னிவாடிக் கதிபதியாக இருந்த ஸ்ரீ ராமா என்ற மலையாண்டி அப்பய நாயக்கர் என்பவர், நரசிங்கப்பெருமாள் கோயில் தாசியான முதற்கொத்து பெரியகாமு என்பவரின் மகளான அன்னம் என்பவருக்குக் காணியாச்சிப் பட்டய மளித்துள்ளார். இதன்படி பெருமாள் கோயில் முதற் கொத்துப் பணிக்காக வேண்டி அன்னம் என்பவருக்கு மானியமாக நஞ்சை, புஞ்சையும் வழங்கப்பட்டிருந்த தோடு ஊதியமும் (சம்பளமும்) வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இவருடைய பணிக்குப் பெரிய மேளம், சங்கீத மேளம் ஆகியவற்றைச் சேவகமாகக் கொள்ளவும், அதற்குண்டான சம்பளத்தைக் கோயிலிலே வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப் பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

மடூர், மருனூத்து

இவை திண்டுக்கல் வட்டத்திற்குள் அமைந்துள்ள சிலுவத்தூர் குறு வட்டத்திற்குள், திண்டுக்கல்லுக்குக் கிழக்கில் 11 மற்றும் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. இவை திண்டுக்கல் சீர்மையிலிருந்த 26 பாளையங்களைச் சேர்ந்தவையாகத் திகழ்ந்துள்ளன.

பலக்கானூத்து

திண்டுக்கல் வட்டத்தில் பலக்கானூத்து குறுவட்டத்திற்குள் அமைந்துள்ளது. பழனி சாலையில் திண்டுக்கல்லுக்கு மேற்கில் 24 கி.மீ. தொலைவிலமைந்துள்ள இவ்வூர் கன்னிவாடி பாளையத் திற்குட்பட்ட பகுதியாக இருந்திருக்கிறது. இவ்வூரில், கி.பி. 1840இல், கோட்ட சிரேஸ்தாராக இருந்த சிந்தாமணி வெங்கடராவ் என்பவராலும், கி.பி. 1843 இல் அன்றைய ஆயக்குடி பாளையக்காரரின் துணைவியாராலும் சத்திரம் அமைக்கப் பட்டுள்ளது. கி.பி. 1836-37 இலிலும் பின்னர் 1838 முதல் 1841 வரையிலும் திண்டுக்கல் மாவட்ட உதவி ஆட்சியராகப் (Sub - Collector) பணியாற்றிய இராபர்ட் டேவிட்சன் (Robert Davidson) என்பவர் இவ்வூரில் ஒரு பங்களா கட்டியிருந்ததாகவும், கருதுவர். இவ்வூரில் அவருடைய கல்லறை உள்ளது.

முள்ளிப்பாடி

திண்டுக்கல் வடக்கு குறுவட்டத்தைச் சேர்ந்த சீலைப்பாடி கிராமத்திற்குக் கிழக்கிலமைந்துள்ள முள்ளிப்பாடி கிராமத்தில் திண்டுக்கல் சமீன்தாரின் வம்சாவளியைச் சேர்ந்த ஆரணி ராம நாயக்கரவர்கள், சக்கரம் 4000 பொன் செலவில் கோவில் கட்டி, கோபாலகிருஷ்ண சுவாமியைப் பிரதிட்டை செய்துள்ளார். அவர், மடூர் சமீன்தாராக இருந்த திருமலை வீரப்பனாயக்கரிடம் பேசி, இத்திருக்கோயிலுக்கு 1000 பொன் மதிப்பில், முத்து ஆரமும், வெள்ளைக் குடையும் கிடைக்கச் செய்தார். இக்கோயிலுக்கு, பாறைப்பாடிக்குக் கிழக்கில் அக்கினி மூலையில் அமைந்துள்ள தாழைகுளமும், அக்குளத்தைச் சேர்ந்த நஞ்சையும், இந்நஞ்சைக்கு மேற்கில் இரண்டு கல விதைப்புறவுள்ள, 15 சக்கரம் ரூ. 125 பொன் மதிப்பில் வாங்கப்பட்ட, பாரைப்படி புஞ்சை நிலமும், முள்ளிப்பாடியில் புஞ்சைத் தோட்டம் ஒன்றும், மேற்படியூர்

Koviloor Digital Library

குளத்தில் நஞ்சை ஒரு செய் நிலமும், சீலைப்பாடிக்கு மேலிருந்த மாலையடி புஞ்சை நிலமும் வழங்கப்பட்டன.

மேட்டுக்கடை

இவ்வூருக்குத் தெற்கிலுள்ள பாறையில் காணப்படும் 16ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டிலிருந்து, இந்த மலையில், குதிரைகளின் பயன்பாட்டிற்காக வேண்டி 'உப்பளக்குளம்' என்ற பெயரில் சுனை ஒன்றினை ஸ்ரீரங்கன் அனந்த நாராயணன் என்பவர் ஏற்படுத்தியுள்ளதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

சீலைப்பாடி

திண்டுக்கல் சமீன்தாரின் மரபுவழியைச் சேர்ந்த ஆரணி இராமண நாயக்கரவர்கள் சகோதரர்களுடனே, சக ஆண்டு 1593 (கி.பி. 1671) அளவில் சுசுபா திண்டுக்கல்லைச் சேர்ந்த சீலைப்பாடி கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அச்சமயத்தில் மடூர் சமீன்தாரும், எரியோடு சமீன்தாரும், இவ்வூரின் காவல் பொறுப்பைத் தங்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அச்சயமத்தில் ஆரணி இராமண நாயக்கர் இவ்வூரின் அரண்மனை கட்டி இவ்வூரின் குடியிருப்புக் காரரானார். இவர், இவ்வூருக்கு, மேல் இருந்த ஆறுமரக்கால் விதைப்புறவு உள்ள மாலையடி புஞ்சை நிலத்தை முள்ளிப்பாடியிலுள்ள கோபாலகிருஷ்ணன் கோவிலுக்கு வழங்கியுள்ளார். சீலைப்பாடி கிராமத்திலிருந்த கிடாவெட்டி சொக்கலிங்கம் சங்கர் என்பவரிடமிருந்து சக்கரம் 60 பொன்னுக்குச் சுத்தக்கிரயமாக இந்த நிலத்தை வாங்கி, பிரபவ ஆண்டு ஆவணித்திங்கள் 15ஆம் நாளில் தானம் பண்ணிக் கொடுத்துள்ளார். சீலைப்பாடி எல்லையில் சேஷாத்திரி நாயக்கன் கோட்டை ஏற்படுத்தப்பட்டது சின்ன சீலைப்பாடியில் புதுக்குளம் ஒன்றும், தெப்பக்குளம் ஒன்றும், நான்கு கிணறுகளும் தோண்டப்பட்டன.

எமக்கலாபுரம் (பாளையம்)

திண்டுக்கல் வட்டம், சாணார்பட்டி குறுவட்டத்திற்குள் எமக்கலாபுரம் அமைந்துள்ளது. இவ்வூரின் பெயரில் சுட்டப்படும் எமக்கலாபுரம் சமீனின் முன்னவரான காமுலக்கய நாயக்கர்,

Koviloor Digital Library

காமவார குலத்தில் தோன்றி கூடலூர் தேவனாம்பட்டினத்தில் குடியிருந்து, பெரியதனம் செய்து கொண்டு நாட்டாண்மை யாயிருந்தவராகக் கருதப்படுகிறார். இவர், விசயநகர வேந்தரிடமிருந்த அடங்காத குதிரையை அடக்கியதால், விசயநகர வேந்தரால் "மானதேசி என்கிற வண்டனாகிய குதிரை மேல் கொண்ட காமுல நாயக்கர்" என்று சிறப்பாக அழைக்கப் பட்டுள்ளார். இவருக்கு விசயநகர வேந்தர், சிங்க முகப் பல்லாக்கு, பஞ்சவர்ண வெட்டுப்பாவாடை, சந்திர காவி வெட்டுப்பாவாடை, உபய வெண்சாமரம், சந்திர காவி டால், அனுமந்தடால், சூலடால், சிவத்தப்பட்டு, சுருட்டி, உபய பூசக்கரக் குடை, குடைமேல் குடை, வீர கண்டாமணி விருது,சாமத் துரக வெண்டயம், முத்து மோகன மாலை, ஒட்டகத்தின் மேல் நகரா, யானைமேல் அம்பாரி போன்றவற்றை வழங்கிச் சிறப்பித்ததோடு, கூடலூர் தேவனாம் பட்டினத்தைப் பாளையப்பட்டாக இனாமாக வழங்கிச் சிறப்புச் செய்துள்ளார்.

விசுவநாத நாயக்கர் மதுரை நாயக்கராகப் பட்டமேற்க வந்தபோது, காமுலக்கய நாயக்கரும், அவருடன் அனுப்பட, காமுலக்கய நாயக்கர் சிறுமலைக்கு வடக்கில், எமக்கலாபுரம் என்ற ஊரையடுத்து வடபுறமாக வந்து குடியமர்ந்துள்ளார்.

விசுவநாத நாயக்கர் காலத்தில் நடைபெற்ற போரில் காமுலக்கய நாயக்கர் மரணமடைந்ததால், விசுவநாத நாயக்கர் காமுலக்கய நாயக்கரின் மரபிள் வந்த அனந்தய்ப நாயக்கரை மதுரைக் கழைத்துக், குதிரைக்கு ஒற்றைமுகச் சல்லி, முன்கால் வெண்டயம், சிங்க முக வெண்டயம், சிங்க முகத்துராய் போன்ற பல்வேறு விருதுகளை வழங்கியதோடு எமக்கலாபுரம், சாணார்ப்பட்டி, பஞ்சைப்பட்டி, போன்ற கிராமங்களையும், துர்க்கையம்மன் சிலைக்குக் கிழக்கிலுள்ள மலையையும் இனாமாக வழங்கி,'எமக்கலாபுரம் பாளையப்பட்டென்று' பேருண்டாக்கிக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. மதுரை கோட்டையிலிருந்த 72 கொத்தளங்களுள் திருமஞ்சன வாசல் பிரதட்சணமாக 7வது கொத்தளத்தின் காவல் பொறுப்பும் அனந்தப்ப நாயக்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எமக்கலாபுரம் பாளையக்காரர்களின் மரபுவழிப் பட்டியல் கீழ் வருமாறு:

Koviloor Digital Library

1. காமுலக்கய நாயக்கர் – 30 ஆண்டுகள்
2. காமுலக்கய நாயக்கர் – 35 ஆண்டுகள்
3. இலகும நாயக்கர் – 17 ஆண்டுகள்
4. அனந்தப்ப நாயக்கர் – 75 ஆண்டுகள்
5. காமுலக்க நாயக்கர் – 27 ஆண்டுகள்
6. இலகும நாயக்கர் – 33 ஆண்டுகள்
7. அனந்தப்ப நாயக்கர் – 25 ஆண்டுகள்
8. காமுலக்கய நாயக்கர் – 65 ஆண்டுகள்
9. இலகும நாயக்கர் – 30 ஆண்டுகள்
10. அனந்தப்ப நாயக்கர் – 20 ஆண்டுகள்
11. காமுலக்கய நாயக்கர் – 21 ஆண்டுகள்
12. அனந்தப்ப நாயக்கர் –
13. இலகும நாயக்கர் –

இவர்களுள் 10 வது பட்டத்துக்குரியவரான அனந்தப்ப நாயக்கர் காலத்தில், இப்பகுதி மைசூராரின் ஆதிக்கத்திற்குட்பட, மைசூராரின் பிரதிநிதியாகத் திண்டுக்கல் சீர்மையின் பொறுப்பிலிருந்த பர்க்கி வெங்கிடராயர் (Birk Venkata Rau) அவர்கள் எமக்கலாபுரம் பாளையத்திற்குத் தோப்பாப் பணமாக 100 நிர்ணயித்துள்ளார். இவருக்குப்பின் பட்டமேற்ற காமுலக்கய நாயக்கர் காலத்தில் ஹைதர் அலி இப்பாளையத்திற்கு 130 பணம் தோப்பாப்பணமாக நிர்ணயித்துள்ளார். காமலுக்கய நாயக்கருக்குப் பின் பட்டமேற்ற அனந்தப்ப நாயக்கர் காலத்தில் எமக்கலாபுரம் பாளையத்திற்குத் தோப்பாப் பணம் 300 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அடுத்து பட்டத்திற்கு வந்த இலகும நாயக்கர் காலத்தில் எமக்கலாபுரம் பாளையம் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிக்குள் வர, மக்கலூட்டுத்துரை, இப்பாளையத்திற்கு, வகையிருப்பாக 450 பணம் நிர்ணயித்துள்ளார்.

தவசிமடை (பாளையம்)

திண்டுக்கல் பகுதியில் சிறுமலைச் சரிவில், சிறுமலைக்கு மேற்கில் தவசிமடை அமைந்துள்ளது. தவசிமேடு, தவசி மடு என்றும் அழைக்கப்படுகிறது. துவக்கத்தில் இசுலாமியருக்குட் பட்ட பகுதியிலிருந்து, இசுலாமியருக்குப் பெண் கொடுக்க

Koviloor Digital Library

மறுத்து, அதனால் மதுரைக்கு வடமேற்கிலுள்ள சிறுமலைப் பகுதிக்கு வந்து, இப்பகுதியில் தங்கள் தெய்வங்களை நோக்கி ஆராதனை பண்ணி மகாதவசு பண்ணிக் கொண்டிருந்த இடம் என்ற பொருளில் (தவசி(கள்) மடு) இப்பெயர் வழங்கிவருவதாகக் கூறப்படுகிறது. சந்திரசேகர பாண்டியனுக்கும், வீரசேகர சோழனுக்கு மிடையில் ஏற்பட்ட போரினைத் தீர்த்து வைக்க வந்த நாகம நாயக்கர், திண்டுக்கல்லுக்கு வந்து பழனிக்கு இறைவழிபாட்டிற்குப் பயணப்படும் போது உடல் நலம் குன்றிப்போக, தவசிமடுவில் தவசு பண்ணிக் கொண்டிருந்த சோத்தள நாயக்கர் (கொத்தள நாயக்கர்) அழைக்கப்பட்டு, அவரால், நாகம நாயக்கர் குணமாக்கப்பட்டுள்ளார். இதனால் பெரிதும் மகிழ்ந்த நாகம நாயக்கர், அவர் தவசு பண்ணிக் கொண்டிருந்த இடத்தில், காடுகளை அழித்துக் கிராமங்களை உருவாக்கித் தவசிமடு பாளையம் என்ற பெயரில் பாளையத்தை உருவாக்கி அதன் பாளையக் காரராக இருக்கப் பணித்துள்ளார்.

அடுத்து நாகம நாயக்கரின் மகன் விசுவநாத நாயக்கர், மதுரை நாயக்க வேந்தராகப் பொறுப்பேற்றதும், தவசிமடு பாளையக்காரருக்கு, மதுரைக் கோட்டையில் திருமஞ்சன வாசலுக்குப் பிரதட்சணமாக 72-வது கொத்தளத்தின் காவல் பொறுப்பை வழங்கியுள்ளார் விசுவநாத நாயக்கர்.

கயத்தாற்றின் மேல் போருக்குச் சென்றபோது, கூடாரத்தைக் காத்துக் கொள்ளுமாறு சோத்தள நாயக்கரை விசுவ நாதர்பணிக்க, கயத்தாற்றில் சோத்தள நாயக்கர் மரணமடைந்துள்ளார். இவர் 60 ஆண்டுகாலம் பதவியிலிருந்ததாகக் கூறப்படுகிறது.

இவருக்கடுத்து இவரது மகன் ரெகுராம சோத்தள நாயக்கர் 42 ஆண்டு காலம் பதவியிலிருந்துள்ளார். இவருக்கு அடுத்து இவரது குமாரன் ரெகுராம சோத்தள நாயக்கர் பட்டமேற்று 49 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார். நான்காவதாக இவருடைய மகன் ரெகுராமு சோத்தள நாயக்கர் 50 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார். ஐந்தாவதாகப் பட்டமேற்ற இவரது மகன் ரெகுராம சோத்தள நாயக்கர் 2 ஆண்டுகளும், ஆறாவதாகப் பட்டமேற்ற இவரது மகன் பொன்னுசாமி சோத்தளநாயக்கர் 10, ஆண்டுகளும் துரைத்தனம் பண்ணியுள்ளனர்.

ஏழாவதாகப் பட்டமேற்ற இவருடைய மகன் ரெகுராமு சோத்தள நாயக்கர் காலத்தில் மதுரை நாயக்க வேந்தராகத்

Koviloor Digital Library

திருமலை நாயக்கர் இருந்துள்ளார். அச்சமயத்தில், சேதுபதி மீது இராமப்பய்யன் படை நடத்திச் சென்று போரிட, இப்போரில் இராமப்பய்யனுடன் தவசிமடு பாளையக்காரரும் கலந்து கொண்டுள்ளார். போர் முடிந்து திரும்பும் போது, பாளையக்காரருக்கு, இராமப்பய்யன் வெகுமதி, வஸ்திர, பூஷணாதிகளை வாங்கி வழங்கிக் கௌரவித்து தவசிமடுவுக்கு வழி அனுப்பி வைத்துள்ளார். இவர் 42 ஆண்டு காலம் பதவியிலிருந்துள்ளார். இவருக்குப்பின் எட்டாவதாகப் பதவியிலிருந்த சோத்தள நாயக்கர் 40 வருடங்களும், ஒன்பதாவதாகப் பட்டத்திலிருந்த ரெகுராமு சோத்தள நாயக்கர் 45 ஆண்டுகளும் பதவியிலிருந்துள்ளனர். ஒன்பதாவதாகப் பட்டத்திலிருந்தவர் காலத்தில் மதுரையில் சொக்கநாத நாயக்கர் அரசராக இருந்தார். சொக்க நாத நாயக்கர் தஞ்சாவூர் மீது படையெடுத்த போது, கூடாரக் காவலுக்கு தவசிமடு பாளையக்காரர் சென்றுள்ளார். போரில் வெற்றி பெற்றுத் திரும்பியதும், மதுரை நாயக்க மன்னர் தவசிமடு பாளையக்காரருக்கு ஆடை ஆபரணங்களையும் பிற வெகுமதிகளையும் நல்கிக் கௌரவப்படுத்தியுள்ளார்.

பத்தாவதாகப் பட்டமேற்ற சோத்தள நாயக்கர் 33 வருடங்களும், பதினொன்றாவதாகப் பட்டமேற்ற ரெகுநாத சோத்தள நாயக்கர் 31 ஆண்டுகளும், 12வதாகப் பட்டமேற்ற சோத்தள நாயக்ர் 19 வருடங்களும் பதவியிலிருந்துள்ளனர்.

தவசிமடைப் பகுதியிலுள்ள பிற்காலக் கல்வொட்டொன்றில் சிவகிரி பள்ளி வாசலும், சேகான் (Sheik Khan) பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஊரின் பெயர் தவசிமேடு என்றும், தவசிமேட்டைச் சேர்ந்த ஒருவருக்கு விராலிப்பட்டியில் புன்செய்நிலம் வழங்கப்பட்டிருந்ததையும் பிற்காலக் கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

கன்னிவாடிப் பாளையம்

திண்டுக்கல்லிலிருந்து 20 கி.மீ. தொலைவிலும், செம்பட்டியிலிருந்து 13 கி.மீ. தொலைவிலும் திண்டுக்கல் வட்டத்திலுள்ள பலக்கானூத்து குறுவட்டத்திற்குள் சிரங்காடு பகுதியில் அமைந்துள்ள கன்னிவாடி தமிழ் நாட்டிலிருந்த மிகப் பெரிய ஜமீன்களுள் ஒன்றாகத் திகழ்ந்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், இந்த பாளையத்தில் 14 கிராமங்களும், 48 உள்

Koviloor Digital Library

கிராமங்களும் உள்ளடங்கயிருந்தன. இப்பகுதிக்குள் 9 குளங்களும், 327 செய் நன்செய்யும், 38,000 குழி புஞ்செய்யும் உள்ளடங்கியிருந்தன. கி.பி. 1403 துவங்கி இந்தப் பாளையத்தின் பாளையக்காரர்களுடைய மரபுவழிப் பட்டியல் தெரிய வருகிறது. பாளையக்காரர்களின் மரபு வழிப் பட்டியல் கீழ்வருமாறு கூறப்பட்டு வருகிறது.

1. காடுவெட்டி அம்மையப்ப நாயக்கர் – 30 வருடங்கள் (32)
2. தேத்துப்பட்டி சின்னகத்திரி நாயக்கர் – 24 வருடங்கள்
3. மாங்கரை சின்னக் கத்திரி நாயக்கர் – 22 வருடங்கள்
4. திம்மனூத்து சின்னக்கத்திரி நாயக்கர் – 32 வருடங்கள்
5. கன்னிவாடி சின்னக்கத்திரி நாயக்கா – 26 வருடங்கள்
6. கோழிக்கூட்டு சின்ன கத்திரி நாயக்கர் – 26 வருடங்கள்
7. பெச்சின்ன கத்திரி நாயக்கர் – 33 ஆண்டுகள்
8. நடுக்குத்தலை சின்னக்கத்திரி நாயக்கர் – 21 ஆண்டுகள்
9. நரசிம்ம நாயக்கர் – 10 ஆண்டுகள்
10. தொப்பள நாயக்கர் – 40 நாட்கள்
11. ரெங்கண்ண நாயக்கர் – 50 ஆண்டுகள்
12. சின்ன கத்திரி நாயக்கர் – 40 ஆண்டுகள்
13. அவருடைய தம்பி நரசிங்க நாயக்கர் – 60 ஆண்டுகள்
14. அவர் தம்பி பெத்தனூர் நாயக்கர் – 7 ஆண்டுகள்
15. அவர் மகன் நரசிம்ம நாயக்கர் – 40 ஆண்டுகள்
16. அவர் மகன் மலையாண்டி நாயக்கர் – 17 ஆண்டுகள்
17. அவர் மகன் மலையாண்டி நாயக்கர் – 5 ஆண்டுகள்

இந்தப்பட்டியலில் காணப்படும் இப்பெயர்களும், சில ஆண்டுகளும் தவறாக எழுதப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. இராயரின் சமஸ்தானத்தில் பணி செய்து கொண்டிருந்த இவர்கள் பின்னர் பாண்டிய நாட்டிற்கு வந்து காவிரிக்குத் தெற்காகவும், மதுரைக்கு வடக்காகவும், உள்ள குத்திலுப்பை என்ற இடத்திற்கு வந்து தங்கியுள்ளார்கள். அப்போது உடன் பிறப்புகளாக மூவர் குடும்ப சகிதமாக வந்துள்ளனர். இவர்களுள் அப்பண்ணன் என்பவர் பாண்டிய அரசனைச் சந்தித்து வேண்டிக் கொள்ள, பாண்டிய அரசனும் வராககிரி மலைக்கு அருகில் வீடு கட்டிக் கொள்ள அனுமதித்துள்ளார். அதன்படி, கொத்தப்பள்ளி என்ற

Koviloor Digital Library

கிராமத்தை உருவாக்கி, நரசிம்மசுவாமிக்குக் கோவில் கட்டி, அவ்வூரிலேயே குடியமர்ந்துள்ளனர். இவர்கள் இங்ஙனம் கொத்தப்பள்ளி கோட்டையில் குடியிருந்து வரும் நாளில் பாண்டிய அரசனுக்கும், சோழ அரசனுக்குமிடையில் போர் மூண்டது. பாண்டிய அரசனுக்கு உதவுவதற்காக விசயநகரப் பேரரசின் சார்பாக நாகம நாயக்கர் மதுரைக்கு அனுப்பப்பட்டார். கொட்டியம் நாகம நாயக்கர் அப்பண்ணா நாயக்கரை அழைத்து பழனி மலைப் பகுதியில் கள்ளர் பயத்தை ஒடுக்கக் கூறி, பழனிக்குக் கிழக்கும், அரவக்குறிச்சிக்கும் தெற்கும், இராமகிரிக்கு மேற்கும், சிறுமலைக்கு வடக்கும் என இந்த நான்கெல்லைகளுக் கிடைப்பட்ட பகுதியை வழங்கியுள்ளார். உடனே அப்பண்ணா நாயக்கர் தன்னுடைய இரண்டு தம்பிகளுக்கும் சீர்மை பிரித்துக் கொடுக்க அனுமதி பெற்றுக் கொண்டு, அவ்வண்ணமே அவர்களுக்கு சீர்மை பிரித்துக் கொடுக்கவும் செய்தார்.

அடுத்து, தேத்துப்பட்டி சின்ன கத்திரி நாயக்கர் என்பவர் பட்டத்திற்கு வந்துள்ளார். அவர் காலத்தில் விசுவநாத நாயக்கர் தன்னுடைய தந்தையாரான நாகம நாயக்கரைப் போரில் வென்று கைப்பிடியாய்ப் பிடித்துச் சென்று இராயரிடம் ஒப்படைத் துள்ளார். அதன் பின்னர், விசுவநாத நாயக்கர் மதுரை அரசராக நியமிக்கப்பட்டுள்ளார். விசுவநாத நாயக்கராட்சிக் காலத்தில், தென் பாண்டி நாட்டில், திருநெல்வேலிப் பகுதியில், கயத்தாறு என்னும் ஊரைச் சுற்றிச் சிற்றரசர்களாய் ஆட்சி புரிந்து வந்த பஞ்ச பாண்டியர்கள், மதுரை மன்னனுக்குக் கீழ்ப்படிந்து ஆட்சி புரிய விரும்பாமல் கலகம் செய்ததால், அக்கலகத்தை ஒடுக்க வேண்டியதாயிற்று. இந்த போரில் விசுவநாத நாயக்கரின் உத்தரவின் படி, தேத்துப்பட்டி சின்ன கத்திரி நாயக்கரும் பங்கெடுத்துக் கொண்டு பாண்டியனின் தலையை வெட்டிக் கொணர்ந்ததாகக் கூறப்படுகிறது. இதனைக் கண்டு மகிழ்ந்த விசுவநாத நாயக்கர், சின்ன கத்திரி நாயக்கருக்கு மகரக்கொடி, வெட்டுப்பாவாடை, வெண்சாமரம் போன்ற விருதுகளை வழங்கியிருக்கிறார்.

இவருக்கடுத்து பதவிக்கு வந்த இவருடைய மகன் சின்னக்கத்திரி நாயக்கர், மாங்கரை சின்ன கத்திரி நாயக்கர் என்றழைக்கப்பட்டுள்ளார். இவருக்கடுத்து பட்டத்திற்கு வந்த இவருடைய மகன் சின்னக் கத்திரி நாயக்கர், திம்மனூத்து சின்னய்ய

Koviloor Digital Library

நாயக்கரென்றழைக்கப்பட்டுள்ளார். இவரது காலத்தில் திம்மனூத்து என்ற கிராமம் உருவாக்கப்பட்டு சிவன் கோயிலொன்றும் கட்டப்பட்டுள்ளது.

திம்மனூத்து சின்னக் கத்திரி நாயக்கருக்குப் பின், அவரது மகன் சின்னக்கத்திரி நாயக்கன் பட்டமேற்றுள்ளார். இவர் காலத்தில் தான் கன்னிவாடி என்ற கிராமம் உருவாக்கப் பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. அதனால், இவருக்குக் கன்னிவாடி சின்னக் கத்திரி நாயக்கர் என்ற பெயர் வழங்கி வந்துள்ளது. இவர் காலத்திலிருந்துதான் இந்த பாளையத்திற்கும் கன்னிவாடி பாளையம் என்ற பெயர் வழங்கி வந்துள்ளது. இவர் காலத்தில் ஆடனூர், தோனிமலை, மண்ணூர் போன்ற கிராமங்கள் உருவாக்கப்பட்டதாகக் கூறுவர்.

இவருக்கடுத்து பட்டத்திற்கு வந்த சின்ன கத்திரி நாயக்கர் கோழிக்கூட்டு சின்னக் கத்திரி நாயக்கர் என்றழைக்கப்பட்டுள்ளார். இவரைத் தொடர்ந்து பெச்சின்ன கத்திரி நாயக்கர் என்பவர் பதவிக்கு வந்து, ஆசாரப்புள்ளி என்ற ஊரை உருவாக்கியுள்ளார். இவர் மலையோரத்தில், காட்டுப் பகுதிக்குள் ஒரு கோட்டை கட்டிக் கொண்டு அதில் குடியிருந்துள்ளார். அவருடைய மகன் கொத்தள நாயக்கர், தன் தந்தையை விட்டுப் பிரிந்து சென்று சுள்ளெறும்பு என்னும் பகுதியை ஆட்சிசெய்து வந்துள்ளார். பெச்சின்ன நாயக்கர், தம் காலத்தில் சித்தூரு என்ற ஊரை உருவாக்கி, வரதராசப் பெருமாளுக்கொரு கோவிலும் கட்டுவித்துள்ளார். அய்யம்பாளையம் என்ற பெயரில் ஒரு ஊரை, உருவாக்கி, அய்யானாரை எழுந்தருளுவித்து, ஐயனார் வழிபாட்டிற்காக ஒரு பூசாரியையும் நியமித்துள்ளார்.

இவருக்கடுத்து நடுக்குத்தலை சின்ன கத்திரி நாயக்கர் பதவியிலிருந்த காலத்தில் முகிலன் என்பவர் மைசூரிலிருந்து படையெடுத்து வந்து, திண்டுக்கல் கோட்டையைக் கைப்பற்றும் நிலை ஏற்பட்டது. இச்சமயத்தில், நடுக்குத்தலை சின்ன கத்திரி நாயக்கர் தலைமையில் 18 பாளையக்காரர்கள் சேர்ந்து கொண்டு, முகிலனைத் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது. இந்தப் போர் 1620இல் நடைபெற்றதாகவும், அச்சமயத்தில் மதுரை நாயக்க மன்னராக முதலாம் முத்து வீரப்ப நாயக்கரும், மைசூர் வேந்தராக இராசா உடையாரும் இருந்ததாகக் கருதப்படுகிறது. இத்தகவலை

Koviloor Digital Library

மதுரை மன்னரிடம் சென்று கூறியதும், மன்னர் மிகவும் மகிழ்ந்து இவருக்கு 'சின்ன மைசூரார்' என்று பட்டம் சூட்டியதோடு, திண்டுக்கல் காவல் பொறுப்போடு, தாடிக்கொம்பு, ஆத்தூர், குரவர்பூமி போன்ற பகுதிகளையும் வழங்கியுள்ளார்.

இவரைத் தொடர்ந்து, நரசிம்ம நாயக்கர் பதவியேற்றுள்ளார். அந்த சமயத்தில் மன்னர் நாகமலை சரிவிலே வேட்டையாட வந்தார். அச்சமயத்தில் நரசிம்ம நாயக்கரும், அம்மைய நாயக்கரும் நாகமலைக்குச் சென்று, மன்னருடன் சேர்ந்து வேட்டையாடினார்கள்.

இவருக்கடுத்த பட்டமேற்ற இவரது மகன் தொப்பள நாயக்கர் நாற்பது நாட்கள் மட்டுமே பதவியிலிருந்துள்ளார். அதன்பின், அவருடைய மகன் ரெங்கண்ணா நாயக்கர் பதவியிலிருந்துள்ளார். அவர் காலத்தில் சில்வார்பட்டி, சிந்தலக்குண்டு, அளகுபட்டி, போன்ற கிராமங்கள் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. ரெங்கண்ண நாயக்கர் பளையக்காரராக இருந்த போது மதுரையில் நாயக்க மன்னராகத் திருமலை நாயக்கர் இருந்துள்ளார். அச்சமயத்தில் மைசூரை ஆண்டு வந்த சாமராஜ உடையார் ஹரிசூர நந்திராஜா என்ற படைத்தலைவரின் கீழ் பெரும்படை ஒன்றை அனுப்பித் திண்டுக்கல்லை முற்றுகையிடச் செய்தார். மதுரை நாயக்கரின் படை இராமப்பய்யர் தலைமையில் திண்டுக்கலைக் காக்க வந்த போது, ரெங்கண்ண நாயக்கர் 7,000 பொன்னை போர்ச் செலவினங்களுக்காக வழங்கி யுதவியதோடு, தாமும் இராமப்பய்யருடன் சென்று மதுரைக் காதரவாகப் போரிட்டுள்ளார். மதுரை வீரர்கள் மைசூர்ப் படையைப் புறமுதுகிட்டோடச் செய்ததோடு, மைசூருக்குள் புகுந்து அங்கிருந்த கோட்டையையும் முற்றுகையிட்டுப் போரில் வெற்றியும் அடைந்தனர். மதுரை மன்னர் திருமலை நாயக்கர், ரெங்கண்ண நாயக்கரை மிகவும் பாராட்டி, அவர் தமக்குச் செலுத்த வேண்டிய தோப்பாப் பணத்தையும் (கப்பத்தையும்) இனி செலுத்த வேண்டியதில்லை என்று கூறிவிட்டார். அத்துடன் மதுரை மன்னரிடமிருந்து உடுகரையும் பெற்றுக் கொண்டு ரெங்கண்ண நாயக்கர் தம் பாளையத்திற்கு வந்து சேர்ந்துள்ளார். அடுத்து 1637 இல் திருமலை நாயக்கர் சேதுபதியுடன் நடத்திய போரிலும் ரெங்கண்ண நாயக்கர் முக்கியப் பங்கு வகித்துள்ளார்.

Koviloor Digital Library

இராமநாதபுரம் சேதுபதிகளுள் தளவாய் சேதுபதியாகிய சடைக்கத் தேவர் மீது தளவாய் இராமப்பையர் படையெடுத்துச் சென்றபோது, அப்போரில் இராமப்பையருக்குத் துணையாக ரெங்கண்ண நாயக்கரும் சென்றுள்ளார். சடைக்கத் தேவர் இராமேசுவரத்துக்குத் தப்பிச்செல்ல, இராமேசுவரத்திற்குப் பாலமமைத்துச் சென்று, சேதுபதியை வென்று கைது செய்து மதுரைக் கழைத்துச் சென்றனர். மூக்கறுப்புப் போர் என்று பொதுவாகச் சுட்டப்படுகின்ற இரண்டாவது மைசூர் போரிலும் ரெங்கண்ண நாயக்கர் முக்கியப்பங்கு வகித்துள்ளார். திருமலை நாயக்கர் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தில் மைசூர் மன்னன் கந்திரவ நரச ராஜாவின் படை மதுரை மீது படையெடுத்து வந்தது. தளவாய் கம்மையாவின் தலைமையில் நடைபெற்ற இந்த படையெடுப்பில் முதலில் சத்தியமங்கலம் தாக்கப்பட்டது. இப்படை வீரர்கள் தங்கள் கையில் அகப்பட்ட ஆண் பெண் குழந்தைகளின் மூக்குகளை அறுத்துக்கொண்டு வந்தனர். அதன்பின் மதுரைப்படை, திருமலை நாயக்கரின் தம்பி குமார முத்து மற்றும் கன்னிவாடி பாளையக்காரர் ஆகியோரால் நடத்திச் செல்லப்பட்டு மைசூரைத் தாக்கியது. இந்தப் போர் முடிந்து இவங்கள் திரும்பும் முன்பாக திருமலை நாயக்கர் காலமாகிவிட்டார். திருமலை நாயக்கர் காலமானதும், அவருடைய மகன் இரண்டாம் முத்து வீரப்பருக்கு முடிசூட்டப்பட்டது. திருமலை நாயக்கருக்குப் பின்னர் தாமே மன்னராகக் கூடும் என்றெண்ணியிருந்த குமாரமுத்து ஏமாற்ற மடைந்தார். அதனால் குமாரமுத்து இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கருடன் போர்புரிந்து மதுரை அரியணையைக் கைப்பற்ற எண்ணினார். இத்தருணத்தில் கன்னிவாடிப் பாளையக்காரரும் பிறரும் தலையிட்டு இருவருக்குமிடையில் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்படச் செய்து அதன்படி, குமாரமுத்து சிவகாசிச் சீமையையும், திருநெல்வேலியின் சில பகுதிகளையும் முழு உரிமையோடு ஆட்சிபுரிந்து வரச் செய்தனர். இதனால் பெரிதும் மகிழ்ச்சியடைந்த இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் கன்னிவாடிப் பாளையக்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும் உடுகரைகள் வழங்கிப் பாராட்டினார்.

இவருக்கடுத்தபடியாகக் கன்னிவாடி பாளையக்காரராக சின்னக் கத்திரி நாயக்கர் பதவியிலிருந்த காலத்தில், மதுரையில்

Koviloor Digital Library

நாயக்க மரபின் அரசராக இருந்த சொக்கநாத நாயக்கர் (1659 - 1682), தஞ்சை மன்னர் விஜயராகவர் மீது படையெடுத்துச் சென்று முதலில் வல்லத்துக் கோட்டையைக் கைப்பற்றினார். இந்தப் போர் செலவினங்களுக்காக வேண்டி கன்னிவாடி பாளையக்காரர் 5000 பொன் சக்கரத்தை வழங்கியுதவியதோடு, மதுரைப்படைக்குதவியாகத் தானும் தன் படையுடன் அப்போரில் கலந்து கொண்டுள்ளார். இப்போரில் மதுரைப் படையைத் தளவாய் வெங்கிடகிருஷ்ண நாயக்கரும், பேஷ்கார் சின்னத்தம்பி முதலியாரும் வழி நடத்திச் சென்றுள்ளனர். இந்தப் போரில் தஞ்சை மன்னர் விஜயராகவரும், அவருடைய மைந்தரும் வீரப்போர் புரிந்து மரணத்தைத் தழுவியதாகக் கூறப்படுகிறது. கி.பி. 1678 அளவில் மதுரை நாயக்க மன்னர் சொக்கநாதரைப் பதவியிலிருந்து விலக்கி, அவரைச் சிறையிலடைத்து விட்டு, அவருடைய தம்பியான முத்து அழகாத்திரி என்ற முத்துலிங்க நாயக்கர், தம்மை மதுரை மன்னராக்கிக் கொண்டார். முத்துலிங்க நாயக்கர் திருச்சி கோட்டையிலிருந்து வெளியில் சென்றிருந்த சமயத்தில், உருஸ்டம்கான் (Rustam Khan) என்பவர், திருச்சி கோட்டையின் வாயிற்கதவுகளை அடைத்து விட்டு, சொக்கநாத நாயக்கரைச் சிறையிலிருந்து விடுவித்து, அவரைப் பெயரளவில் அரசராக இருக்கச் சொல்லிவிட்டு, ஆட்சியைத் தான் கைப்பற்றிக் கொண்டு தாமே நாட்டை ஆளத்தொடங்கினார். இத்தருணத்தில் தளவாய் கோவிந்தப்பய்யர், கிழவன் சேதுபதி, கன்னிவாடி பாளையக்காரர் சின்னக் கத்திரி நாயக்கர் ஆகியோர், திருச்சிக் கோட்டைக்குள்ளிருந்த சொக்கநாத நாயக்கரின் ஆதரவாளர்கள் உதவியோடு, உருஸ்டம் கானையும், அவரது கையாட்களையும் கொலை செய்து, சொக்க நாதரை மீண்டும் முழு உரிமையுள்ள மதுரை வேந்தராக்கினார்கள்.

விஜயரங்க சொக்கநாதரின் துணைவியாரான மீனாட்சி, திருமலை நாயக்கரின் தம்பி குமார முத்துவின் வழிவந்த பங்காரு திருமலையின் மகன் விஜயகுமாரனை மகன்மை செய்து கொண்டு 1732 இல் மதுரை நாயக்க மரபின் அரசியானார். பங்காரு திருமலை மதுரை நாட்டின் மன்னனாக விரும்பி, தளவாய் வேங்கடாச் சாரியாரின் துணையோடு மீனாட்சியைக் கவிழ்க்க முயன்று கொண்டிருந்தார். இந்த குழப்ப நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஆற்காடு நவாபு தோஸ்து அலிகான், தன் மகன் சப்தர் அலிகான், மருமகன் சந்தா சாகிபு ஆகியோர் தலைமையில்

Koviloor Digital Library

திருச்சியைத் தாக்க படையை அனுப்பினார். பல்வேறு சூழ்ச்சிகளுக்குப் பின்னர் சந்தா சாகிபு மீனாட்சி அரசியைத் திருச்சிக் கோட்டைக்குள் சிறை வைக்க, மீனாட்சி நஞ்சுண்டு மாண்டார். மறுகணமே சந்தா சாகிபுவின் படை குதிரை வீரர்களோடும், காலாட்படை வீரர்களோடும் திண்டுக்கல்லைத் தாக்கியது. அச்சமயத்தில் திண்டுக்கல் பங்காரு திருமலை நாயக்கனின் வசமிருந்து வந்தது. சந்தா சாகிபின் படை திண்டுக்கல்லைத் தாக்கி வெற்றி பெற்று மதுரையை நோக்கி முன்னேறி மதுரை நாடு முழுமையையும் கவர்ந்து கொண்டது. பங்காரு திருமலைக்கு உறுதுணையாகப் பாளையக்காரர்கள் பலரும் போரிட்டும், பங்காரு திருமலை தோல்வியடைந்து சிவகங்கை சென்று விட்டார்.

திண்டுக்கல் பதினெட்டு பாளையப்பட்டுகளுக்கும், கன்னிவாடியே பெரிய பாளையப்பட்டாகையாலே, இப்போரில் கன்னிவாடிப் பாளையக்காரர் முக்கியப் பங்கினை வகித்துள்ளா ரெனலாம். சந்தா சாகிபு தன்னுடைய சகோதரர் சதக் சாகிபுவின் பொறுப்பில் திண்டுக்கல் கோட்டையைவிட்டார். அவர் இறந்த பின்னர் பிர்கி வெங்கடராவ் இப்பகுதியின் பொறுப்பாள ராகியுள்ளார். வெங்கடப்பாவுக்குப் பின் நாமகிரி ராஜாவும் இப்பகுதியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளனர். ஹைதர் அலி விருப்பாட்சிக்கு வர, விருப்பாட்சி எல்லையில் ஹைதர் அலியைச் சந்தித்த விருப்பாட்சி பாளையக்காரரின் பிரதிநிதி ஹைதர் அலி 75,000 சக்கரம் செலுத்திவர இசைவு தெரிவித்தார். அதன்பின்னர், ஹைதர் அலி கன்னிவாடி பாளையத்தைத் தாக்கினார். பாளையப்பட்டின் பாதுகாப்பரணாக இருந்த காடுகளையும் பிற தடைகளையும் அப்புறப்படுத்துவதிலேயே இரண்டு திங்கள்கள் கழிந்தன. அதன் பின்னர், கன்னிவாடி பாளையக்காரர் 3,00,000 சக்கரம் செலுத்த இசைவு தெரிவித்து, அப்பொழுதே 70,000 செலுத்தவும் செய்தார். சுபேதார் வெங்கிடப்பய்யர் ஹைதர் அலியிடம், கன்னிவாடி பாளையக்காரரைப் பிடித்து ஸ்ரீரங்கபட்டினத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ள, ஹைதர் அலியும் கன்னிவாடிப் பாளையக்காரரைக் கைது செய்து ஸ்ரீரங்கபட்டினத்துக்கு அனுப்பிவைத்தார். இங்ஙனம் கைது செய்யப்பட்ட பாளையக்காரரின் கன்னிவாடி பாளையத்தையும், இதற்குமுன் சிறிது காலமாகக் கன்னிவாடி பாளையக்காரரின் கட்டுப்பாட்டிலிருந்து வந்த எறியோடு, சொக்கம்பட்டி,

Koviloor Digital Library

தொட்டியன் கோட்டை, பல்லியப்ப நாயக்கனூர், தேவதானப்பட்டி போன்ற பாளையங்களையும், ஹைதர் அலி தம் பொறுப்பிலெடுத்துக் கொண்டார்

ஆர்க்காட்டு நவாபு அன்வருதீன் மதுரை நாட்டின் மீது தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட தனது மூத்த மகன் மாபுஸ்கானைக் கவர்னராக (ஆளுநராக) நியமித்தார். இந்த மாபுஸ்கானுக்கு எதிராக சூழ்ச்சிகளும், கலகங்களும் ஏற்பட, இவற்றை அடக்க ஆர்க்காட்டு நவாபு சென்னை ஆளுநர் பிகாட்டின் உதவியை நாட, அவர் கான்சாகிபு என்ற யூசுப்கான் (மருத நாயகம் பிள்ளை) தலைமையில் ஒரு படையை அனுப்பியதாகக் கூறப்படுகிறது. அதன்பின்னர் 1759 இல், நவாபின் அனுமதியுடன், சென்னை கவுன்சில், கான்சாகிபை மதுரை ஆளுநராக நியமித்ததாகக் கருதுவர். இங்ஙனம், கான்சாயிபு மதுரைக் கோட்டையில் துரைத்தனம் செய்து கொண்டிருந்த போது, கன்னிவாடி பாளையக்காரராக நரசிம்ம நாயக்கர் இருந்தார். நரசிம்ம நாயக்கர், கான் சாயுபுவிடம் சிறிது நாள் காத்திருந்துள்ளார். அந்த சமயத்தில் திண்டுக்கல் பாளையக்காரரை எதிர்த்து மைசூரார் வத்தலக்குண்டுப் பகுதியில் போரிடுவதாகக் கான் சாயிபுவிற்க்குத் தகவல் வர, கான்சாயிபு நரசிம்ம நாயக்கரிடம் விபரம் கூற கன்னிவாடி பாளையக்காரரும் போரில் கலந்து கொண்டார். இந்த மைசூர்ப் போர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகக் கருதப்படுகிறது. நத்தம்கணவாயைக் கைப்பற்றுவதன் மூலமாக, திருச்சியிலிருந்து மதுரைக்குச் செல்லும் சாலையில் தடையேற்படுத்துவதற்காக இப்போர் நடைபெற்றுள்ளதெனக் கருதுவர். அதனால் தான் முகமுது யூசுபுகான் சாகிபு, 1500 காலாட்படை வீரர்கள் 300 குதிரைப் படை வீரர்கள், 3,000 உதவியாளர்கள் அடங்கிய படை யொன்றினைத் திருநெல்வேலி யிலிருந்து மதுரைக்குக் கொணர்ந்து, மதுரையிலிருந்து திண்டுக்கல்லுக்கனுப்பியுள்ளார். மைசூர் படைவீரர்கள் 1760 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வத்தலகுண்டு கோட்டையை முற்றுகையிட்டுள்ளனர். ஆறு நாட்கள் முற்றுகையிட்ட பின், தாக்குதலைத் துவங்கியுள்ளனர். அதற்கடுத்த நாளில் மதுரையிலிருந்து படைவந்து, வத்தலக்குண்டில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையுடன் இணைந்து கொள்ள, இந்த தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

மங்களூர் உடன்படிக்கையின் படி 1784 சூலைத் திங்களில் திண்டுக்கல் பகுதி திப்பு சுல்தானுக்குரிய பகுதியாகியுள்ளது. பின்னர் திண்டுக்கல் பகுதி சயது சாயிபுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. சயது சாயிபு திண்டுக்கல்லுக்கு வந்ததும், நரசிம்ம நாயக்கரை வரவழைத்து வகையிருப்பை மீண்டும் நிர்ணயித்துள்ளார். 1788 இல் திப்பு சுல்தான் திண்டுக்கல்லுக்கு வந்தபோது, கோம்பை, இடையகோட்டை, மாம்பாரை பாளையப்பட்டுக்கள் நீங்கலாக கந்தப்ப நாயக்கனூர், தேவாரம், போடி - நாயக்கனூர், எரசக்க நாயக்கனூர், பல்லியப்ப நாயக்கனூர், நிலக்கோட்டை, விருப்பாட்சி கன்னிவாடி, மாறனூத்து, எமக்கலாபுரம், தவசு மடை, அம்மைய நாயக்கனூர், தொட்டியன் கோட்டை, போன்ற பல பாளையங்களுக்குரிய பாளையக்காரர்கள், தாங்கள் செலுத்திவர வேண்டிய வகையிருப்பை முறைப்படி செலுத்தாமல் பாக்கி வைத்திருப்பதைக் கண்டறிந்து, அவற்றைத் திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து, தனியாகப் பிரித்தார். மேலும் இவை சந்தா சாகிபின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு, வேறு சில ஆணையர்களின் கட்டுப்பாட்டிற் குட்படுத்தப்பட்டன. 1790 இல் கர்னல் ஜேம்ஸ் ஸ்டூவர்ட் (Colonel James Stuart) திண்டுக்கல் பொறுப்பேற்ற போது, கோம்பை, இடைய கோட்டை, மாம்பாரா, (மாம்பாரை) சந்தையூர் ஆகிய நான்கு பாளையங்கள் மட்டுமே, அவற்றிற்குரிய பாளையக்காரர்களின் வசமிருந்துள்ளன. அலெக்சாண்டர் மக்லியோடு (Alexandar MC Leod) 1790 அளவில் திண்டுக்கல்லின் மாவட்ட ஆட்சித் தலைவராக (Collector of Dindigul) இருந்துள்ளார். விஞ்சிதுரை காலத்தில் (Alexander Wynch) கன்னிவாடி பாளையக்காரர் நரசிம்ம நாயக்கர் காலமானபின், அவருடைய மகன், அப்பைய்ய நாயக்கர் விஞ்சிதுரைக்கு கன்னிவாடி பாளையப்பட்டின் வகையிருப்பாக 10,200, பொன் செலுத்தி வந்துள்ளார்.

பின்னர், ஆர்டீசு துரையவர்கள் காலத்திலும், இதே முறையில் பணம் செலுத்தி வரப்பட்டுள்ளது. ஆர்டிசு துரையவர்கள் நாளில், விருப்பாட்சிப் பாளையக்காரர் தாம் ஆங்கிலேயக் கம்பெனியாருக்குச் செலுத்திவர வேண்டிய பணத்தைச் செலுத்தா திருந்தார். மணப்பாரை இலட்சுமி நாயக்கர், தெல்லிக்கோட்டை யதுல் நாயக்கர், தேவதானப்பட்டி பூசாரி நாயக்கர், மற்றும் தாராபுரம், காங்கேயம், கொழுமம்,

Koviloor Digital Library

சங்ககிரி கரூர் ஆகிய பகுதிகளின் தலைவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடு ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்கக் கூட்டினை உருவாக்கினார். இவரது ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு கூட்டணிக்கு மருது பாண்டியர், திப்புசுல்தான் போன்றோரின் ஆதரவும் கிடைத்தது. இத்தருணத்தில் ஆர்டீசு துரையவர்கள் கன்னிவாடி பாளைக்காரரைத் திண்டுக்கல்லுக்கு வரவழைத்து, விருப்பாட்சி பாளையக்காரர் மேல் போர் தொடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருப்பதைத் தெரிவித்து, அவருடைய ஆட்கள் கன்னிவாடி பாளையப்பட்டுப் பகுதிக்குள் வந்தால் அவர்களைப் பிடித்துக் கட்டின பின்பு தகவல் கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளார். அதன்படி கன்னிவாடிப் பாளையக்காரரும் மலை மார்க்கத்திலும், வன மார்க்கத்திலும் ஆட்களை நிற்கச் செய்து ஆள் நடமாட்டத்தைக் கண்காணிக்கச் செய்துள்ளார். ஆங்கிலேயக் கம்பெனியார்கள் விருப்பாட்சிப் பாளையம் போயிறங்கியபோது, விருப்பாட்சியாரும் தளியாரும், ஓடிப் போனார்கள். அவர்களுடைய குழந்தைகளும், குதிரைகளும் மட்டுமே ஆங்கிலேயர் வசம் சிக்கின. கன்னிவாடிப் பாளையக்காரரும் தமது ஆட்களை வழித்தடங்களில் நிறுத்தி, கையில் கிடைத்தவர்களைப் பிடித்துக் கொடுத்துதவியுள்ளார். கர்னல் இன்னிசு துரையவர்கள் 1801 இல் விருப்பாட்சியைக் கைப்பற்றிக் கன்னிவாடி பாளையக்காரரைச் சரணடையப் பணித்தும், அவர் சரணடையாமல், பாச்சலூர் குன்றுப் பகுதிகளுக்கும், பின்னர் தெல்லிக் கோட்டைக்கும் அங்கிருந்துக் ஆனியூர் நாட்டுப் பகுதிக்கும் பின் வாங்கினார். இறுதியால் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்.

ஊமைத்துரை தலைமையிலான ஆங்கிலேய எதிர்ப்பாளர்கள், திண்டுக்கல் பகுதியில் புதிய போராட்டக் களங்களைத் தேடித் திரிந்து கொண்டிருந்தபோது, மேஜர் பர்ரோஸ் (Major Burrows) அவர்கள் கன்னிவாடி அருகிலுள்ள சங்குளம் பகுதியில் இரண்டாவது படைப்பிரிவை நிறுத்தி அவர்களைக் கட்டுப்படுத்த முயன்றார். ஆங்கிலப்படை எதிர்ப்பாளர்களை 51 மைல் தூரத்திற்கு ஓட ஓட விரட்டிப் போர்புரிந்து இறுதியில் வத்தலகுண்டுப் பகுதியில் ஊமைத்துரையும் அவரது குழுவினர் 65 பேர்களும் கைது

Koviloor Digital Library

செய்யப்பட்டனர். மூன்று நாட்கள் உண்ண உணவின்றி, குடிக்கத் தண்ணீரின்றி போராடிய இக்குழுவில் பலர் மடிந்தனர்.

மாங்கரை

கன்னிவாடி பாளையக்காரராக மூன்றாவது பட்டத்திலிருந்த தேத்துப்பட்டி சின்ன கத்திரி நாயக்கரின் மகனான சின்னகத்திரி நாயக்கர் காலத்தில் இந்த கிராமம் உருவாக்கப்பட்டது. இதனால் இந்த கத்திரி நாயக்கருக்கு மாங்கரை சின்னக் கத்திரி நாயக்கர் என்ற பெயர் வழங்கி வந்துள்ளது.

திம்மனூத்து

கன்னிவாடி பாளைக்காரர்களுள் நான்காவதாகப் பட்டத்திலிருந்த சின்னக் கத்திரி நாயக்கர் திம்மனூத்து என்ற ஊரை உருவாக்கி சிவாலயம் ஒன்றை எடுப்பித்தார்.

தேத்துப்பட்டி

கன்னிவாடி பாளையக்காரர்களில் இரண்டாவது பட்டத்திற்குரியவரான சின்னக்கத்திரி நாயக்கர், தேத்துப்பட்டி என்ற பெயரில் ஒரு கிராமத்தை உருவாக்கியதால், இவர் தேத்துப்பட்டி சின்னக்கத்திரி நாயக்கர் என்றழைக்கப்பட்டார்.

Koviloor Digital Library

4. நத்தம் வட்டம்

நத்தம்

வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்து அண்மைக்காலம் வரை தொடர்ச்சியான வரலாற்றை இவ்வூர் பெற்றுள்ளது. சங்ககாலத்தினைச் சார்ந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முதுமக்கள் தாழிகள் இங்கு கிடைத்துள்ளன. நத்தம் என்பதற்கு விளை நிலம் சார்ந்த மக்கள் வாழ்விடம் என்று பொருள். இன்று இவ்வூர் இரு பகுதிகளாக உள்ளது. திருமணிமுத்தாற்றின் வடகரையில் நத்தம் என்ற பகுதியும் தென்கரையில் பழைய ஊரான நத்தம் கோயில்பட்டியும் உள்ளன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இவ்வூர் இரண்டு பகுதிகளாகப் பிரிந்துள்ளன. ஒன்று பிராமணர்கள் குடியிருப்பாக இருந்துள்ளது. மற்றொன்று வணிகர்கள் குடியிருப்பாக இருந்துள்ளது. பிராமணர்கள் குடியிருப்பு உள்ள பகுதி சுந்தரசோழச் சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பட்டது. வணிகர்கள் வாழ்ந்த பகுதி எறிபடைநல்லூர் என்று அழைக்கப்பட்டது. கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சுந்தரசோழபாண்டியன் பெயரால் நான்கு வேதம்வல்ல பிராமணர்களுக்கு இவ்வூரின் கோயிலைச் சார்ந்த பகுதியும் நிலங்களும் உரியவையாக மாற்றப்பட்டுச் சதுர்வேதிமங்கலமாக ஆக்கப்பட்டது. கி.பி. 12ஆம் நூற்றாண்டளவில் வணிகர் குழுவினரால் வணிகவீரர்கள் காவல் புரிந்த இடமாக மாற்றப்பட்ட பகுதி எறிபடைநல்லூர் எனப்பட்டது. இதற்குரிய வரிகள் கோயிலுக்கு அளிக்கப்பட்டன. இதனால் இது நல்லூர் என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

நத்தமும் அதனைச் சூழ்ந்த பகுதியும் வேளிர்கள் ஆண்ட பகுதியாக இருந்துள்ளது. இது துவராபதிநாடு என்று பெயர்பெற்று விளங்கியது. இதனைப் பாண்டியர்க்குக்

Koviloor Digital Library

கட்டுப்பட்டு துவாரபதிவேளான் என்று அழைக்கப்பட்ட சிற்றரச மரபினர் ஆண்டுள்ளனர். பிற்காலத்தில் இவர்கள் நாட்டுத் தலைவர்களாகவும் பாண்டிய அரசனின் அதிகாரிகளாகவும் மாறினர். கி.பி. 8 ஆம் நூற்றாண்டிற்கும் 14 ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் துவராபதி நாட்டை ஆண்ட துவராபதி வேளான்கள் பற்றிக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நத்தம் கண்மாய் மடைக்கல்வெட்டில் துவராபதிவேளான் ஒருவன் குறிப்பிடப்படுகிறான். கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் சோழருக்கும் இடைக்காலப் பாண்டியர்க்கும் கட்டுப்பட்டு மூன்று துவராபதிவேளான்கள் இருந்துள்ளனர். சுந்தன் கங்கைகொண்டான் ஆன துவராபதிவேளான், சுந்தன் பகைவென்ற கண்டனான துவராபதிவேளான், கண்டன் சுந்தனான துவராபதிவேளான் என்பது அவர்களது பெயர்களாகும். கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அழகப்பெருமாள் சொக்கனார் ஆண்மை அழகியான் துவராபதிவேளான் என்பவன் பாண்டியனது அதிகாரியாக விளங்கியுள்ளான்.

சோழநாட்டிற்கும் பாண்டியநாட்டிற்கும் இடையில் பாண்டியநாட்டின் வடஎல்லையில் இருந்த நாடாக துவராபதிநாடு இருந்தது. அக்காலத்தில் கொடும்பாளுரிலிருந்து சிவபெருமானின் முத்தலை திரிசூலம் போன்று மதுரைக்கு வந்த மூன்று வழிகள் இருந்தன. இவற்றில் வலப்பக்கவழி சிறுமலையின் மேல்புறமாக மதுரைக்குச் சென்றது. இடப்பக்கவழி திருமால்குன்றம் என்றழைக்கப்பட்ட அழகர்மலைவழியாக மதுரைக்குச் சென்றது. நடுவழி துவரங்குறிச்சியிலிருந்து அடர்ந்த காட்டின் வழியாக சிறுகுடி, சமுத்திராபட்டி, நத்தம் முதலிய ஊர்களைக் கடந்து மதுரை சென்றது. இதனால் நத்தம் வரலாற்றுச் சிறப்பும் வணிகச்சிறப்பும் பெற்ற ஊராக விளங்கியுள்ளது.

நத்தத்தினை நாயக்கர் காலத்தில் இலிங்க நாயக்கன் என்றழைக்கப்பட்ட பாளையக்காரர்கள் ஆண்டுள்ளனர். நத்தத்திலிருந்து திண்டுக்கல் செல்லும் வழியில் இலிங்க நாயக்கரால் கட்டப்பட்ட இடிந்த கோட்டை ஒன்று இன்றும் காணப்படுகிறது. நாயக்கமன்னர் காலத்திற்குப் பின்னர் கள்ளர் நாட்டின் முக்கிய ஊராக இது இருந்தது. நத்தம் கள்ளர்கள்

Koviloor Digital Library

இக்கோட்டையைக் காத்துள்ளனர். ஆங்கிலேயர் காலத்தில் இக்கோட்டை அவர்களால் விரிவுபடுத்திக் கட்டப்பட்டு முக்கிய இராணுவத் தளமாக மாற்றப்பட்டது. மதுரையை ஆண்ட கான்சாகிப் கட்டுப்பாட்டிலும் இக்கோட்டை இருந்துள்ளது.

நத்தத்தையாண்ட இலிங்க நாயக்கர் பற்றி கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பல செய்திகளைத் தருகின்றன. மதுரை நாயக்க மன்னரான சொக்கநாத நாயக்கர்க்கு (கி.பி. 1659-1682) இலிங்க நாயக்கன் தளவாயாகப் பணிபுரிந்துள்ளான். சொக்கநாதநாயக்கர் சிறுவனாக இருந்தமையால் இவன் பிரதானி, இராயசம் எனப்பட்ட உயரதிகாரிகளோடு சதியில் ஈடுபட்டு அதிகாரத்தினைக் கைப்பற்றினான். நாயக்கமன்னருக்கு எதிராக பல நடவடிக்கையில் ஈடுபட்டான். அவருக்கு எதிராக சகோசியுடன் சேர்ந்து கொண்டு படையெடுப்பும் நடத்தினான் இறுதியில் சொக்கநாதநாயக்கர் இலிங்க நாயக்கரின் சதியை முறியடித்து போரில் வெற்றிபெற்றார். இலிங்க நாயக்கன் செஞ்சிக்குத் தப்பியோடினான் என்று மதுரைநாயக்கர் வரலாறு கூறுகிறது. இலிங்க நாயக்கர் தங்களை யாதவர் குலத்தைச் சார்ந்தவர்களாகக் கூறுகின்றனர். கி.பி. 17-18ஆம் நூற்றாண்டுகளில் பின்வரும் இலிங்க நாயக்கர்கள் நத்தம் பகுதியை ஆண்டுள்ளனர்.

1. தொந்திலிங்கநாயக்கர் 2. இவர் மகன் முத்துலிங்கநாயக்கர் (கி.பி. 1649) 3. சில்லிங்கய்யநாயக்கர் 4. ஏறுதாதுலிங்கநாயக்கர் (தொந்திலிங்கநாயக்கர் பேரன்) 5. இவர் மகன் குமாரலிங்கநாயக்கர் (கி.பி. 1781) 6. முத்துலிங்கநாயக்கர் (கி.பி. 1791)

வடக்கேயிருந்து மதுரைக்கு வரும் வழியில் அமைந்த முக்கிய இடமாக நத்தம் இருந்தமையால் வடக்கேயிருந்து வந்த படையெடுப்பாளர்கள் பலமுறை நத்தம் வழியாகவே மதுரைக்குப் படையெடுத்து வந்துள்ளனர். இதனால் நத்தத்தில் அவர்களைத் தடுப்பதற்குப் பலபோர்கள் நடைபெற்றுள்ளன. கி.பி. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரைநாயக்க அரசி மீனாட்சி மற்றும் பங்காரு மோதலில் தலையிட்டு மதுரை நோக்கி வந்த சந்தா சாகிப்பைப் பாளையக்காரர்களும் கள்ளர்களும் நத்தத்தில் தடுத்து நிறுத்திப் பின்வாங்கச் செய்தனர். கி.பி. 1744ல் மபூஸ்கான் தலைமையில் வந்த நவாப்பின் படையெடுப்பினை நத்தம் கள்ளர்கள் அங்கு தடுத்து நிறுத்திப் போரிட்டு திருச்சிக்குப்

Koviloor Digital Library

பின்வாங்கச் செய்தனர். பின்னர் முகமதுஅலி தலைமையில் வந்த படை நத்தத்தைக் கடந்து திருநெல்வேலி வரை சென்று நத்தம் வழியாகத் திரும்பும்போது நத்தம் கள்ளர்கள் படை திடீரென்று தாக்கிப் பெருஞ்சேதத்தை ஏற்படுத்தியது. இதில் முகமதுஅலி மயிரிழையில் உயிர்தப்பியோடினான்.

கி.பி. 1757ல் ஜான் கரில்லாடு (Jhon Carilled) தலைமையில் வந்த படையை நத்தம் கணவாயில் கள்ளர்படை தடுத்து நிறுத்தியுள்ளது. இதேயாண்டு அக்டோபர் திங்கள் ஹைதர்அலி மதுரையில் தங்கி நத்தம் திரும்பியபோது மைசூர்படையால் தாக்கப்பட்டு திண்டுக்கல்லுக்குப் பின்வாங்கினான். மதுரையை ஆண்ட கான்சாகிப் நத்தம் கள்ளர்படைகளைச் சேர்த்துக் கொண்டே பாளையக்காரர்களை ஒடுக்கினான். மதுரையிலும் சோழவந்தானிலும் அப்படையை நிறுத்திவைத்து மைசூர் படையெடுப்பைத் தடுத்தான். பின்னர் அரசியல் சூழ்நிலை மாறிய நிலையில்அவர்களை எதிர்த்து ஒடுக்கினான். மேலூர், வெள்ளாளபட்டி முதலிய இடங்களில் கோட்டைகள் கட்டி கள்ளர்படையை மதுரை நோக்கி வராமல் தடுத்தான்.

ஹைதர்அலி மீண்டும் 1760ல் நத்தம் வரை படையெடுத்து வந்து மதுரையோடு நவாப்பின் தொடர்பை துண்டித்துள்ளான். கான்சாகிப் தன்னை எதிர்க்க வந்த ஆங்கிலப்படைகளைத் தடுக்க நத்தம் கோட்டையைக் கள்ளர் உதவிகொண்டு வலிமைப்படுத்தினான். கான்சாகிப் வீழ்ச்சிக்குப் பின்னர் நத்தம் கோட்டை ஆங்கிலேயர் வசம் வந்தது. ஆங்கிலேயருக்கு எதிராக சின்னமருது, ஊமைத்துரை, முதலியோர் கிளர்ந்து எழுந்தனர். இராமநாதபுரம் முத்துக்கருப்பத்தேவர் தலைமையில் எழுந்த படை திருப்பத்தூர் நத்தம் கோட்டைகளை ஆங்கிலேயர் வசமிருந்து கைப்பற்றியது. ஆனால் சிறிது காலத்திற்குப் பிறகு அக்னியூ தலைமையில் வந்த ஆங்கிலப்படை மீண்டும் நத்தம்கோட்டையைக் கைப்பற்றியது. எதிர்ப்பாளர் கிளர்ச்சி வீழ்ச்சியடைந்த பின்னர் நத்தம் கோட்டை தொடர்ந்து ஆங்கிலேயர் வசமே இருந்துள்ளது.

நத்தத்தில் இன்று காணத்தக்க வகையில் கயிலாசநாதர் சிவன்கோவிலும், நத்தம் கண்மாயில் பழைய காலத்து மடைகளும் உள்ளன. இவை தவிர இவ்வூரில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வணிகர்குழு பற்றிய கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது.

Koviloor Digital Library

நத்தம் கோவில்பட்டியில் தமிழ்க் கல்வெட்டு பொறித்த கற்பலகை ஒன்று கண்டறியப்பட்டது. கி.பி.12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வணிகர்குழுவும் துவராபதிநாட்டு ஏறிபடைநல்லூர் (நத்தத்தின் ஒரு பகுதி) நகரத்தினைச் சார்ந்த வணிகர்களும் சேர்ந்து எடுத்த முடிவைப் பற்றி இது தெரிவிக்கிறது. நான்கு திசையாயிரத்து ஐநூற்றுவர், பலமண்டலங்களைச் சார்ந்த நாட்டு செட்டிகள், தன்மசெட்டிகள் பதினெண்பூமி வீரக்கொடியார் என்றழைக்கப்பட்ட வணிகவீரர்கள் ஆகியோர் ஏறிபடைநல்லூரில் இருந்த அறநெறி ஐநூற்றுவன் காவணத்தில் (கூட்டம்கூடிய இடம்) கூடி இம்முடிவை எடுத்துள்ளனர். கல்வெட்டு சிதைந்துள்ளமையால் இவ்வணிகக்குழுவினர் எடுத்த முடிவை முழுமையாக அறியமுடியவில்லை. ஆனால் எறிபடைநல்லூரைக் காத்துநின்ற வீரக்கொடியார் என்ற அணுக்கப்படையினருக்கு ஏதோ ஒரு கொடையும் உரிமையும் அளித்ததாக உய்த்துணர முடிகிறது. இக்கல்வெட்டின் தொடக்கத்தில் பிரான்மலை, சமுத்திராபட்டி போன்ற இடங்களில் காணப்படுவது போன்று வணிகரின் மெய்க்கீர்த்தி பொறிக்கப்பட்டுள்ளது.

நத்தம் கயிலாசநாதர்கோயில் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட பழமையான கோயிலாகும். இது நாயக்கர் காலத்தில் விரிவுபடுத்தப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கருவறை, அர்த்தமண்டபங்களில் பிற்காலப்பாண்டியர் காலக் கல்வெட்டுகள் உள்ளன. கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன், குலசேகரபாண்டியன் கல்வெட்டுகள் இவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இக்கல்வெட்டுக்களில் இக்கோயில் 'கயிலாயமுடைய சிவப்பிரகாச ஈஸ்வரமுடைய நாயனார் கோயில்' என்று குறிப்பிடப்படுகிறது. சோணாடு வழங்கிய சுந்தரபாண்டியன் கல்வெட்டு வீரபுரந்தரன் என்ற குளத்தினைக் கோயிலுக்கு உரிமையுடையதாக விற்றுக் கொடுத்ததைத் தெரிவிக்கிறது. எறிபடைநல்லூரில் இருந்த மலையாள வணிகன் தமர்கூத்தன் என்பவன் வீரபுரந்தரன்குளத்தை வணிகச் சரக்குகள் இருந்த மடிகையில் (மண்டி) இருந்த வியாபாரியிடமிருந்து விலை கொடுத்துக் கோயிலுக்குத் தானமாக அளித்துள்ளான். கோயிலுக்கு வெளிப்புறம் பள்ளிவாசல் பகுதியில் காணப்படும்

Koviloor Digital Library

ஸ்ரீவல்லப பாண்டியன் கல்வெட்டு கொடும்பாளூர் வணிகக்கிராமத்துச் சீங்காணாலையன் இக்கோயிலில் பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளுவித்ததைத் தெரிவிக்கிறது. குலசேகர பாண்டியன் கல்வெட்டு மாது பெரியாளான மங்கையர்க்கரசி என்பவள் சந்தியா தீபம் ஒன்றை இக்கோயிலில் நாள்தோறும் எரிப்பதற்காகப் பதினோரு ஆடுகளை அளித்ததைக் கூறுகிறது.

கி.பி. 1773 ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று நத்தம் பகுதியைச் சில்லிங்கய்யநாயக்கர் ஆட்சி செய்ததாகக் கூறுகிறது. இவரது காலத்தில் நத்தம் கயிலாசநாதர் கோயில் திருப்பணி செய்யப்பட்டு மகாமண்டபமும் சோபான மண்டபமும் திருத்திக் கட்டப்பட்டுள்ளன. இதனை நத்தத்தில் இருந்த வாணியர் ஆயிரவர் என்றழைக்கப்பட்ட வணிகநகரத்தார்களில் அல்லூர்கிழவன் ஆலவாயர், சிற்றம் பூருடையார் வாழமலையார், சூரியதேவர், மதுரைக்கு வாச்சார் ஆகியோர் சேர்ந்துசெய்துள்ளனர். கோயிலில் பூசை முதலியன செய்து வருவதற்குக் கல்யாணம் செய்யும்போது மாப்பிள்ளை இரண்டு பணமும் பெண் ஒரு பணமும் கொடுக்க வேண்டும் என்று கூறி இக்கோயிலுக்கு அளித்துள்ளதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கோயிலில் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முழுமையற்ற மதுரை சுல்தான் கல்வெட்டு ஒன்றும் உள்ளது.

கோயிலின் வாசலில் கி.பி. 1791ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இது பாவிலன் சில்லபநாயக்கன் பட்டியைச் சேர்ந்த தாதன்குளத்தை முத்துலிங்கநாயக்கர் கோவில்பட்டி சத்திரத்திற்கு அளித்ததைக் கூறுகிறது.

கயிலாசநாதர்கோயிலில் இலிங்கநாயக்கர் காலத்து கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சுவர் ஓவியங்கள் கயிலாசநாதர்சன்னதி, அம்மன்சன்னதி முன்மண்டபங்களின் விதானங்களில் காணப்படுகின்றன. சுவாமி கோயில் முன் மண்டபத்தில் இலிங்கமநாயக்கனின் வண்ண உருவம் ஓவியமாக அஞ்சலித்த நிலையில் தீட்டப்பட்டுள்ளது.இதனடியில் தெலுங்கு எழுத்துக்களில் அவரது பெயர் எழுதப்பட்டுள்ளது. இவ்வுருவத்திற்கு அருகே தமிழ்நாட்டிலுள்ள முக்கிய கோயில்களின் தோற்றங்கள் வரையப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

அம்மன்கோயில் முன்மண்டப விதானத்தில் கந்தபுராண ஓவியக்காட்சிகள் இடம்பெற்றுள்ளன. கந்தனின் பிறப்பு தொடர்பான காட்சிகள், சூரனை அவர் வதம் செய்து தனது தேவியை மணம்புரிந்த காட்சிகள் உள்ளன. இவ்வூரில் கிடைத்த செப்பேடு இஸ்லாமிய வணிகர்கள் உள்பட நத்தம் பேட்டை வணிகர்கள் சரக்குகளுக்கு வரிசூலித்துக் கோயிலில் வழிபாடு நடத்த வசதி செய்ததைக் காட்டுகிறது.

சமுத்திராபட்டி

மணிமுத்தாறின் கரையில் நத்தத்திலிருந்து கொட்டாம்பட்டி செல்லும் வழியிலுள்ள இவ்வூர் இடைக்காலத் தமிழ்நாட்டில் முக்கியவணிகத் தலமாக விளங்கியுள்ளது.

நத்தத்திற்கு வடகிழக்கில் மேற்சொன்ன பண்டைய பெருவழியில் சமுத்திராபட்டி அமைந்திருந்தமையால் இடைக்காலத் தமிழ்நாட்டில் முக்கிய வணிகநகரமாக இது திகழ்ந்திருக்கிறது. இதனை இவ்வூரில் கிடைத்த கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விக்கிரம சோழபாண்டியனின் (கி.பி. 1050-79) கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. சமுத்திராபட்டிக்கு இப்பெயர் பிற்காலத்தில் ஏற்பட்ட பெயராகும். அதற்குமுன் இது 'பனியாநாடு' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரந்த அளவில் வணிகம் செய்து புகழ்பெற்ற வணிகக்குழு திசையாயிரத்து ஐநூற்றுவர் என்ற வணிகர் குழுவினர் ஆவர். கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் இவர்கள் சிறப்புடன் இருந்துள்ளனர். இவ்வணிகப் பெருங்குழுவினரும் இப்பெருங்குழுவின் ஒரு பிரிவினராகிய அழகியபாண்டிய பெருநிரவி என்ற குழுவினரும் பனியாநாட்டில் பனியாமலை வடகீழ்வாக்கில் இருந்த அஞ்ஞூற்றுவன் புளி என்றழைக்கப்பட்ட புளியமரத்தின் அடியில் கூடினர். இவர்கள் இருவரும் சேர்ந்து பனியாநாட்டை 'நானாதேசி எறிவீரபட்டணம்' என்ற வீரதளமாக மாற்றினர். அதுமுதல் வணிகவீரர்கள் காவலில் அமைந்த வணிகநகரமாக மாறியது.

சமுத்திராபட்டிக் கல்வெட்டில் திசையாயிரத்து ஐநூற்றுவரின் பெருமையைக் கூறும் தமிழ் மெய்க்கீர்த்தி

Koviloor Digital Library

பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே தமிழ்நாட்டில் கிடைத்த இவ்வணிகர் குழுவின் பழமையான மெய்க்கீர்த்தி கல்வெட்டாகும். மெய்க்கீர்த்தியை அடுத்து சமுத்திராபட்டிக் கல்வெட்டில் பெருவழியில் பயணம் செய்த போது பலரிடம் சண்டையிட்டு வெற்றியுடன் வந்த வணிகரின் வீர வரலாறு கூறப்பட்டுள்ளது. இதில் பங்கு கொண்டு வீரச்செயல் புரிந்த வீரர்களைப் பல வகையில் பெருமைபடுத்திய முறைமை சொல்லப்பட்டுள்ளது. இறுதியில் பனியாநாட்டை அனைவரும் கூடி ஏறிவீரதளமாக மாற்றியதும் அவ்வீர சாசனத்தில கையொப்பம் இட்டவர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே சமுத்திராபட்டிக் கல்வெட்டு தமிழ்நாட்டு வணிக வரலாற்றில் இன்றியமையாத கல்வெட்டு எனலாம். பழனி செல்லும் யாத்திரிகள் தங்குவதற்குரிய நகரத்தார் சத்திரம் ஒன்று இவ்வூரில் உள்ளது.

உலுப்பக்குடி

நத்தத்திலிருந்து திண்டுக்கல் செல்லும் வழியிலுள்ளது இவ்வூர். இவ்வூரின் வடபுறம் கிராம மக்களால் வழிபடப்படும் பழமையான நடுகல் ஒன்று உள்ளது. இதனைச் சுற்றி அண்மைக்காலத்தில் சுற்றுச் சுவர் எழுப்பி வழிபாடு செய்து வருகின்றனர். கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த எழுத்தமைதியில் இதில் தமிழ் கல்வெட்டு காணப்படுகிறது. இடையில் ஆடையணிந்து, தலைமுடியை உச்சியில் முடிந்து, வலக்கரத்தில் குத்துவாளை ஓங்கிப் பிடித்தநிலையில், இடக்கரத்தில் வில்லேந்தி நிற்கும் வீரனது உருவம் புடைப்புச்சிற்பமாக இந்நடுகல்லில் காட்சியளிக்கிறது. அவனுக்கு அருகே அவனது பெருமையைத் தெரிவிக்கும் கல்வெட்டு வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இரணசிங்கத் துவராபதிவேளார் என்ற நாட்டுத்தலைவனின் படைவீரன் காரிச்சாத்தன் என்பவன் உடும்பக்குடிக்குப் படையெடுத்துவந்து அவ்வூரில் இருந்த பசுக்கூட்டத்தைக் (நிரை) கவர்ந்து சென்றான். அப்போது அவ்வூரில் இருந்த 'பள்ளிவேளாசாரிகன்' என்ற படைவீரன் காரிசாத்தனைப் பின்பு தொடர்ந்து சென்று அவனை வீழ்த்தினான். காரிசாத்தன் கவர்ந்து சென்ற பசுக்கூட்டத்தை மீட்பதற்காக நடைபெற்ற இப்போரில் வெற்றிபெற்று வீர மரணமடைந்தான் பள்ளிவேளாசாரிகன் என்று உலுப்பக்குடி

Koviloor Digital Library

நடுகல் தெரிவிக்கிறது. தமிழ்நாட்டின் தென்பகுதியாகிய பாண்டியநாட்டில் கண்டறியப்பட்ட நிரைகவர்தல் மீட்டல் பற்றித் தெரிவிக்கும் பழமையான நடுகல் இதுவாகும். இந்நடுகல் மூலம் உலுப்பக்குடியின் பழைய பெயர் உடும்பக்குடி என்பதை அறிய முடிகிறது. இதுவே இன்று உலுப்பக்குடி என்று மருவி வழங்குகிறது.

அய்யாக்குளம்

நத்தத்திற்குக் கிழக்கே அய்யாகுளம் என்றழைக்கப்படும் சிறிய கண்மாய் ஒன்று உள்ளது. இதிலுள்ள கல்லுமடைக்குக் கிழக்கேயுள்ள வயலில் காணப்படும் பாறையில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் 'வேளைக்காரர்' என்றழைக்கப்பட்ட அரசனுக்காகத் தனது இன்னுயிரையும் தயங்காமல் கொடுத்து காக்கக்கூடிய வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவர்கள் சோழர்களது படைப்பிரிவில் இருந்தவர்கள் என்பதை இவர்களது பெயர்கள் உணர்த்துகின்றன. கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் பாண்டியநாடு சோழர் ஆட்சியில் இருந்தபோது இவர்கள் நத்தம் பகுதிக்கு வந்திருக்க வேண்டும். அவர்கள் பெயர் பொறித்த கல்வெட்டுகள் உள்ள அய்யாக்குளத்தினைச் சீரமைத்தமையால் அவர்களது பெயர்கள் அங்கு பொறிக்கப்பட்டுள்ளன. சோழர்படையில் வலங்கைப் பிரிவைச் சார்ந்த வேளைக்காரர் இருந்துள்ளனர். அய்யாகுளம் கல்வெட்டுகளில் பின்வரும் வேளைக்காரப் படைவீரர் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. 1. கண்டன் வேளைக்காறன் 2. இராசேந்திரசோழன் வேளைக்காறன் கண்டன் 3. கண்டன் வேளைக்காறன் பள்ளிவேழ்மாநம்பி 4. இராசேந்திரசோழன் கிடாரத்தரையன் 5. இராசேந்திரசோழன் வேளைக்காறன் கண்ட தேவப்படைச்சன்.

எறக்காபட்டி (ஊராளிபட்டி)

நத்தத்திலிருந்து சிங்கம்புணரி செல்லும் சாலையின் ஓரத்தில் சில கல்மண்டபங்கள் காணப்படுகின்றன. இவை கி.பி. 18ஆம் நூற்றாண்டில் பயணிகள் தங்கும் சத்திரங்களாகச் செயல்பட்டன. நத்தம் வழியாகப் பழனி செல்லும் சாலையில் இவை உள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சத்திரங்கள் கி.பி. 1781ல்

Koviloor Digital Library

யாதவகோத்திரத்தினைச் சார்ந்த தொந்திலிங்க நாயக்கர் பேரனும் ஏறுதாதுலிங்கநாயக்கர் மகனுமான குமாரலிங்க நாயக்கரவர்களால் தோற்றுவிக்கப்பட்டன. இதனைத் தெரிவிக்கும் கல்வெட்டு பொறித்த கற்பலகை இச்சத்திரங்களாகச் செயல்பட்ட கல்மண்டபம் அருகில் நடப்பட்டுள்ளது. இச்சத்திரங்களில் ஒரு சத்திரம் குமராலிங்க நாயக்கர் தனது தந்தை ஏறுதாதுலிங்க நாயக்கர் பெயராலும் மற்றொன்று அவரது தாயார் தாதம்மாள் பெயராலும் ஏற்படுத்தப்பட்டன. இவை சிறப்புடன் செயல்படு வதற்குரிய நிர்வாகச் செலவினங்களுக்காக அம்மாபட்டியிலும் ஏறக்காபட்டியிலும் நிலங்கள் தானமாகத் தரப்பட்டு அவற்றின் எல்லைகள் விரிவாகக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. பொதுவாக அக்காலத்தில் தானமாக நிலங்கள் தரப்பட்டு அவற்றின் எல்லைகள் குறிப்பிடப்படும்போது கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்று நான்கு திசைகள் குறிப்படப்படும். ஆனால் இக்கல்வெட்டில் நிலத்தின் எல்லைகளாக ஈசானன், அக்னி, நிருருதி, வாயு ஆகிய எண்திசை காவலர்களுக்குரிய நான்கு மூலைகள் குறிப்பிடப்படுகின்றன.

மீனாட்சிபுரம்

நத்தம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள தோப்பில் நத்தம் பாளையக்காரரால் தோற்றுவிக்கப்பட்ட அன்னதானமடம் ஒன்று இருந்துள்ளது. இது வேலன்மடம் என்று அழைக்கப்பட்டது. கி.பி. 1649ல் யாதவர் கோத்திரத்து தொந்திலிங்கநாயக்கர் மகன் முத்துலிங்கநாயக்கர் இம்மடத்தைத் தோற்றுவித்துப் பயணிகளுக்கு அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்தார். இதற்காகப் பூதக்குடிக் கிராமத்தினைச் சார்ந்த பள்ளபட்டி, பனக்குடி குளங்களைச் சார்ந்த நஞ்சை, புஞ்சை நிலங்களைத் தானமாக அளித்தார். இதனைத் தெரிவிக்கும் முத்துலிங்கநாயக்கர் கல்வெட்டு அன்னதானமடம் இருந்த இடத்தில் தனிக்கல்லில் பொறிக்கப்பட்டு இன்றும் காட்சியளிக்கின்றது. இக்கல்வெட்டில் தானமாக அளிக்கப்பட்ட நிலங்களின் எல்லைகள் கூறப்பட்டுள்ளன. இதிலும் நான்கு திசைக்களின் காவலர் மூலைகளான ஈசானியமூலை, அக்னிமூலை, நிருருதிமூலை, வாயுமூலை ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இந்நிலத்தின் எல்லைகளாகப் பூதகுடிமலை, நாளிக்கல், காயாத்திக்

Koviloor Digital Library

கருங்கல்பாறை, கோப்பையம்பட்டி முதலிய இடங்கள் குறிப்பிடப்படுகின்றன.

தனிச்சியம்

நத்தத்திலிருந்து கொட்டாம்பட்டி செல்லும் வழியிலுள்ள வெள்ளாளப்பட்டிக்கு அருகில் இவ்வூர் உள்ளது. இவ்வூரில் பாழடைந்த நிலையிலுள்ள சிவன்கோயில் ஒன்று மலையடிவாரத்தில் இருக்கிறது. இதனை ஒட்டக்கோயில், ஒட்டப் பிள்ளையார்கோயில் என்று அழைக்கின்றனர். இக்கோயிலில் பாண்டியர் மற்றும் விசயநகர வேந்தர் காலத்துத் துண்டுக்கல்வெட்டுகள் உள்ளன. இவை இவ்வூர் பாண்டியர் காலத்தில் வாரணவாசியான சேரநாராயணபுரம் என்ற பெயரில் வணிக நகரமாக விளங்கியுள்ளதைக் காட்டுகின்றன. பிரான்மலையில் உள்ள பதிமூன்றாம் நூற்றாண்டு கல்வெட்டில் இவ்வணிக நகரம் குறிப்பிடப்படுகிறது. பிற்காலத்தில் இவ்வூர் தனிப்புயம் என்று பெயர் பெற்று இன்று தனிச்சியம் என்று வழங்கப்பட்டு வருகிறது. இவ்வூர் புறமலை நாட்டில் இருந்த ஊராக இங்குள்ள கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றது. இவ்வூர் கோயிலில் திருவிளக்கு எரிப்பதற்காகத் திருவிளக்குப் புறமாக பூக்காரனேந்தல் என்ற ஊர் அளிக்கப்பட்டதை ஒட்டக்கோயில் கல்வெட்டு தெரிவிக்கிறது.

சிறுகுடி

நத்தத்திலிருந்து சமுத்திராபட்டியை அடைந்து வடக்கு நோக்கி செல்லும் சாலையில் சென்றால் செந்துறையை அடுத்துள்ள சிறுகுடி கிராமத்தைச் சேரலாம். இவ்வூர் பாண்டியநாட்டின் வடஎல்லையில் சோழநாட்டினை ஒட்டியமைந்துள்ளது. சோழமன்னன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனால் புகழ்ந்து பாடப்பட்ட (புறநானூறு பா. 173) பண்ணன் என்ற சங்ககால வள்ளலின் ஊர் இது என்று சிலர் கருதுகின்றனர். பண்ணனைக் கிள்ளிவளவன் 'யான் வாழ்கின்ற நாளும் பண்ணன் வாழ வேண்டும், பசித்து வருகின்றவர்களுக்குச் சோற்றை இல்லையெனாது வாரி அளிக்கும் பசிப்பணி மருத்துவன்' என்று புகழ்ந்து பாடியுள்ளான். மேலும் மழைகாலம் வருவதை

Koviloor Digital Library

எண்ணி எறும்புகள் உணவு உருண்டைகளை எடுத்துக்கொண்டு வரிசை வரிசையாகக் கூட்டங்கூட்டமாக மேட்டு நிலங்களை நோக்கிச் செல்வது போன்று சிறுகுடிக்கிழான் பண்ணனிடம் சோற்று உருண்டைகளைப் பெற்ற இரவலர்கள் அவற்றை கையில் ஏந்திக்கொண்டு கூட்டமாகச் செல்வர் என்றும் கிள்ளிவளவன் கூறுகின்றான். சோழப்பெருவேந்தன் தனக்கு மிகவும் கீழ்நிலையிலுள்ள கிழான் ஒருவனை அவனது கொடைத்தன்மை கருதிப்பாடியது பண்ணனின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. அகநானூற்றுப் பாடல்கள் 'தனக்கென வாழா பிறர்க்குரியாளன் பண்ணன் சிறுகுடி' என்றும் அவன் ஊரைப் பற்றிப் பேசுகின்றன. (அகநானூறு. பா. 54, 117) மேலும் பண்ணனது சிறுகுடியில் சுவைமிக்க நெல்லிமரங்கள் நிறைந்திருக்கும் என்றும் அகநானூறு கூறுகிறது. வாணன் என்ற தலைவனும் காட்டாற்றுக் கரையில் அமைந்த சிறுகுடியில் வாழ்ந்துள்ளான். என்றும் அகநானூறு தெரிவிக்கிறது.

கோவூர்கிழார் என்ற புலவர் கிள்ளிவளவனின் கொடைத்திறத்தைப் பற்றிப் பாடும்போது (புறம். பா. 70) வறியோர் பண்ணனின் சிறுகுடிக்குச் சென்றால் செல்வத்தைப் பெறலாம் என்று கூறுகின்றார். பண்ணன், தனக்கென்று வாழாத இவ்வுலகில் பிறருக்காக வாழ்ந்த பண்பாளன் பசிப்பிணிமருத்துவன் என்று சங்க இலக்கியம் சிறப்பித்துப் பேசுகிறது. பெருவேந்தரும் பெறாத பெருமையைச் சிறுகுடியில் வாழ்ந்த பண்ணன் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் என்ற புலவரும் சிறுகுடிகிழான் பண்ணனின் கொடைச்சிறப்பைப் புறநானூற்றுப் பாடல் ஒன்றின் (பா.388) மூலமாக எடுத்துக்கூறியுள்ளார். வெள்ளி மீன் தென்திசையில் தோன்றி வயல்கள் விளையாது பஞ்சம் ஏற்பட்ட காலத்திலும் இரவலர் சென்றால் அவர்களுக்கு வேண்டியது அளித்து அவர்கள் துன்பத்தைப் போக்குவான் பண்ணன். அவனைப் பாடாது போனால் பாண்டியன் என்னைக் காக்காமல் போகட்டும் என்று மள்ளனார் சோழனோடு பாண்டியன் ஆதரவும் பெற்ற பண்ணனைச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

Koviloor Digital Library

கோமணாம்பட்டி

இவ்வூரில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் சான்றுகளான முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் இறந்தவர்களின் எலும்புகளை வைத்து மூடியிட்டுப் புதைத்துள்ளனர். இவற்றோடு அவர்களுக்குச் சிறுசிறு கலயங்களில் படையல் பொருட்களும் வைத்துள்ளனர். கோமணாம்பட்டியிலிருந்து எடுத்துவரப்பட்ட தாழிகள் சில மதுரை திருமலைநாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகத்தில் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

5. நிலக்கோட்டை வட்டம்

மேட்டுப்பட்டி

அணைப்பட்டிக்கு அருகிலுள்ள வைகையாற்றின் தென்கரையில் அமைந்த சித்தர்மலை கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் சமணமுனிவர்களின் இருப்பிடமாய் இருந்துள்ளது. இம்மலையை மகாலிங்கமலை என்றும் அழைக்கின்றனர். இம்மலையின் தென்புறம் உயரமான இடத்தில் பஞ்சபாண்டவர் படுக்கை என்றழைக்கப்படும் இயற்கையான குகைத்தளம் ஒன்று உள்ளது. இங்கு சமணமுனிவர்கள் படுப்பதற்கும் அமர்வதற்கும் ஏற்ற முறையில் உருவாக்கப்பட்ட கற்படுக்கைகள் உள்ளன.

இக்கற்படுக்கைகளை உருவாக்கிக் கொடுத்தவர்களின் பெயர்கள் தமிழ்பிராமி எழுத்துக்களில் படுக்கைகளின் தலைப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இக்கல்வெட்டுகள் திண்டுக்கல் மாவட்டத்திலேயே மிகப்பழமையானவை. அந்தை அரிதி, அந்தை இராவாதன், (ம)திர அந்தை விஸ்வன், அந்தை சேந்த அதன், சந்தந்தை சந்தன், பதின்ஊர் அதை, குவிர அந்தை வேய்அதன், குவிர அந்தைவேள் அதன், திடிஇல் அதன் முதலியோர் பெயர்கள் இங்குள்ள படுக்கைகளில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

இங்குள்ள படுக்கைகள் இரண்டு தொகுதிகளாக உள்ளன. ஒவ்வொரு படுக்கையின் தலைப்பகுதியிலும் சிறிய தலையணை அமைப்பு செதுக்கப்பட்டுள்ளது. படுக்கைகள் நன்கு தேய்க்கப்பட்டு வளவளப்பாகச் செய்யப்பட்டுள்ளன. மேலும் குகைத்தளத்தின் முகப்பில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்பிராமி கல்வெட்டு ஒன்று உள்ளது. இது மதிரை அமணன் அத்திரன் என்பவனின் உறைவிடத்தை உதயன்

Koviloor Digital Library

என்பவன் உருவாக்கினான் என்று கூறுகிறது. இக்கல்வெட்டு இக்குகைத்தளத்தில் வாழ்ந்த முனிவர்கள் சமணர் என்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும் பாண்டியரின் தலைநகரமான மதுரையில் கி.மு. இரண்டா ம் நூற்றாண்டளவிலேயே சமண முனிவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கல்வெட்டு காட்டுகிறது. குகைத்தளத்தின் உட்புறம் படுக்கையில் உள்ள கல்வெட்டு ஒன்றும் மதுரை நகரத்தை சார்ந்த அந்தை விஸ்வன் என்பவன் படுக்கை அமைத்துக் கொடுத்ததைக் கூறுகிறது.

சமண முனிவர்கள் வாழ்ந்த இப்பகுதியில் கி.பி. 16ஆம் நூற்றாண்டளவில் ஜாநந்தநாதர் என்ற வைதீகத்துறவி ஒருவரது பாதங்கள் விக்கிரமசோழபுரத்துச் செட்டிப்பிள்ளை செல்வஞானசம்பந்தரால் இங்கு உருவாக்கப்பட்டதை இங்குள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இப்பாதங்கள் குகைத்தளத்தில் பீடம் ஒன்றில் வடிக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். சித்தர்மலையின் உச்சியில் விசயநகரவேந்தர் காலத்தினைச் சார்ந்த சிவன்கோயில் ஒன்று உள்ளது. இதனை மகாலிங்கசுவாமி கோயில் என்று அழைக்கின்றனர். இதில் கி.பி. 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வாணாதிராயர் கல்வெட்டு ஒன்று உள்ளது. இது இக்கோயிலுக்குக் கொடுத்த தானம் பற்றி எடுத்துக் கூறுகிறது.

சித்தர்கள் நத்தம்

இவ்வூர் அணைப்பட்டி அருகில் வைகையாற்றின் தென்கரையில் உள்ளது. சோழவந்தானிலிருந்து நிலக்கோட்டைக்குச் செல்லும் பண்டைய பெருவழியில் அமைந்திருக்கிறது. இவ்வூர் வழியாகச் சென்ற பழைய பெருவழி இங்கு கண்டறியப்பட்ட கி.பி. 13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் ‘சோழகுலாந்தகன் பெருவழி’ என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வூரின் தெற்கே வைகையாற்றின் எதிர்கரையில் சித்தர்மலை அமைந்துள்ளது. இதனால் இது சித்தர்கள்நத்தம் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். இதன் பழையபெயர் பொருந்தல் என்பதாகும். இவ்வூரில் கிடைத்த குலசேகரபாண்டியன் கல்வெட்டு ‘பொருந்தலான தேவேந்திரவல்லவபுரம்’ என்று இதனைக் குறிப்பிடுகிறது .கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் இது தேவேந்திரவல்லபுரம் என்ற மற்றொரு பெயரில் வணிகர்கள் வாழ்ந்த வணிகநகரமாகத் திகழ்ந்திருக்கிறது.

Koviloor Digital Library

பொருந்தில் என்ற ஊர் சங்கஇலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. சங்ககாலத்தில் 'பொருந்தில் இளங்கீரனார்' என்று அழைக்கப்பட்ட சங்கப்புலவர் வாழ்ந்திருக்கின்றார். இவர் அகநானூற்றில் 19, 351 ஆம் பாடல்களையும் புறநானூற்றில் 53ஆம் பாடலையும் பாடியவர் ஆவார். இச்சங்கபுலவர் இளங்கீரனாரின் ஊரே பிற்காலத்தில் பொருந்தல், என்று அழைக்கப்பட்ட ஊராக இருக்க வேண்டும். சித்தர்கள்நத்தம் கல்வெட்டில் இவ்வூர் பொருந்தல் என்றே குறிப்பிடப்படுகிறது. பொருந்தில் என்பதே கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பொருந்தல் என்று மருவியிருக்க வேண்டும்.இப்பெயரும் பிற்காலத்தில் மறைந்து நாயக்கர் காலத்தின் பிற்பகுதியிலிருந்து சித்தர்கள்நத்தம் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

சித்தர்கள்நத்தம் பகுதியில் 'புலிகுத்திதார்' என்று அழைக்கப்படும் இடத்தில் கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குலசேகரபாண்டியன் காலத்து நடுகல் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. கி.பி. 1296ல் 'சோழகுலாந்தகப் பெருவழி' என்று அழைக்கப்பட்ட இவ்வூர் வழியாகச் சென்ற பெருவழியில் இருந்துகொண்டு அதில் பயணம் செய்தவர்களின் உயிரைப் போக்கிவந்த பெருங்கடுவாய் புலி ஒன்றைக் கொன்ற வீரனுக்காக எடுக்கப்பட்ட நடுகல் இதுவாகும். பாகனூர் கூற்றத்துப் பொருந்தலான தேவேந்திரவல்லவபுரத்தில் இருந்த வீரக்கொடியார் என்றழைக்கப்பட்ட வணிகவீரர் குழுவில் குன்றாத பெருமாள் என்ற இவ் வீரன் இருந்தான் என்றும் இவ்வீர மகன் குடும்பத்தினர்க்கு ஒரு மாவரை நிலம் 'உதிரப்பட்டியாக' தானமாகத் தந்தார்கள் என்றும் கல்வெட்டு தெரிவிக்கிறது. பொருந்தலான தேவேந்திரவல்லவபுரம் என்று அழைக்கப்பட்ட வணிகநகரம் (சித்தர்கள்நத்தம்) மதுரையில் இருந்த சிவல்லவப்பெரும்பள்ளி என்ற சமணப்பள்ளிக்குரிய நிலங்களைக் கொண்ட பள்ளிச்சந்தமாக இருந்துள்ளதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

சித்தர்கள்நத்தம் மதுரைநாயக்கர் காலத்தில் அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டு ஊர்களில் ஒன்றாக இருந்துள்ளது. இவ்வூரில் அம்மையநாயக்கனூர் சமீன்தார் கனகயநாயக்கர் காலத்துச் செப்பேடு ஒன்று கிடைத்துள்ளது. இது சித்தர்கள்நத்தம் இராமச்சந்திரக் குடும்பன் மகன் சடையாண்டி

Koviloor Digital Library

குடும்பனிடம் உள்ளது. இச்செப்பேடு கி.பி. 1845ல் எழுதப்பட்டுள்ளது எனலாம். இச்செப்பேட்டின் முதல்பகுதி சித்தர்கள்நத்தம் கிராமத்தினைக் காவல் காப்பதற்காக ஆரியப்பட்டியைச் சார்ந்த மதுரைக்கோட்டை கருத்தவீரதேவன் மகன் குமாரதேவன் மற்றும் இராசத்தேவன் மகன் சின்னவீரத்தேவன் ஆகியோரை நியமித்ததைக் கூறுகிறது. செப்பேட்டின் இரண்டாம்பகுதி இவ்வூரின் பழைய கண்மாயின் கீழ்புறம் அமைந்த புதிய கண்மாயின் தண்ணீர்பாத்திய உரிமை கருப்பணக்குடும்பன் மகன் அய்யாக்குடும்பனுக்கு அளிக்கப் பட்டதைக் கூறுகிறது. அய்யாக்குடும்பனுக்குத் தண்ணீர்ப் பாத்தியமாகக் காணி ஒன்றுக்கு ஒரு கட்டும் முக்குறுணி நெல்லும் கொடுக்க வேண்டும். மேலும் புஞ்சைக் காட்டில் விளைந்தவற்றில் காட்டுக்கு ஒரு தளுக்கும் குருணிதானியமும் ஒரு சேர் மொச்சையும் கொடுக்க வேண்டும் என்று செப்பேடு கூறுகிறது. இச்செப்பேடு ஊர்காவல் செய்கின்றவர்களுக்கு வீடு ஒன்றுக்குக் கூலியாக மூன்றுகுறுணி தானியம் தரவேண்டும். காவலில் இருந்து தப்பி வயல்பகுதியில் பகல்நேரத்தில் மாடு நுழைந்து அழிவு செய்தால் ஏழு பொன்னும், இரவு நேரத்தில் மாடு நுழைந்தால் ஐந்து பொன்னும் தண்டமாகத் தரவேண்டும் என்றும் கூறுகிறது.

இச்செப்பேட்டு வாசகம் கன்னட மொழியில் ஓலைப்பத்திரத்தில் எழுதப்பட்டிருந்தது. இதனைச் சித்தர்கள்நத்தம் ராசயநாயக்கர், சக்கரராமய்யர், மல்லயம்பட்டி வசமப்பண்டாரம், சித்தர்கள்நத்தம் குழந்தைவேல் மணியக்காரன், குண்டலாமாப்பட்டி சாமிசெட்டியார், சித்தர்கள்நத்தம் நாட்டாண்மை மொண்டி கவுண்டன், வாடியில் இருக்கும் ராசன் ஆசாரி ஆகிய எட்டுபேர்கள் சேர்ந்து செப்பேட்டில் எழுதுவதற்காகத் தமிழ்மொழியில் வாசகம் தயாரித்துக் கொடுத்தார்கள். அதனைச் செப்பேட்டில் எழுதியவர் திண்டுக்கல் கருப்பன்செட்டியார் ஆவார் என்ற விவரத்தினையும் சித்தர்கள்நத்தம் செப்பேடு கூறுகிறது.

கண்ணாபட்டி

மஞ்சளாறு வைகையாற்றோடு சேரும் இடத்தில் பண்டைய பெருவழியில் இவ்வூர் உள்ளது. இவ்வூரின் பழம்பெயர் கேரளாந்தகபுரம் என்பதாகும். கேரளாந்தகன் என்பது முதலாம்

Koviloor Digital Library

இராசராசசோழனுக்குரிய பெயராகும். எனவே இராசராசன் காலத்தில் அவனது பெயரால் இவ்வணிக நகரம் உருவாகியிருக்க வேண்டும்.

இவ்வூரில் பழங்காலச் சிவன்கோயில் ஒன்றும் பெருமாள்கோயில் ஒன்றும் உள்ளன. இங்குள்ள கல்வெட்டுகளில் சிவன்கோயில் மதுரோதைய ஈஸ்வரமுடைய நாயனார் கோயில் என்றும், பெருமாள்கோயில் கண்ணுடை விண்ணகர் எம்பெருமான் கோயில் என்றும் குறிப்பிடப்படுகின்றன. சிவன்கோயிலில் கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் ஒன்று முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216-1239) காலத்தில் பொறிக்கப்பட்டதாகும். இக்கல்வெட்டு இவ்விரு கோயில்களுக்கும் வரிநீக்கப்பட்ட நிலம் தேவதானமாகத் தரப்பட்டதைக் கூறுகிறது.

மற்றொரு 13ஆம் நூற்றாண்டு கல்வெட்டு இவ்வூர் வழியாக வணிகச் சரக்குகள் கொண்டு செல்லப்பட்டதையும் கிழக்குதிசை நோக்கி சென்ற சரக்குகளில் பொதி ஒன்றுக்குச் சிவன்கோயிலுக்கு ஒரு புதுக்காசும் பெருமாள்கோயிலுக்கு அரைப்புதுக்காசும் தானமாகக் கொடுக்க வேண்டும் என்று பதினெண் விசைய வணிகர் குழுவினர் முடிவெடுத்ததையும் குறிப்பிடுகிறது. பெருமாள்கோயிலில் உள்ள கி.பி. 19ஆம் நூற்றாண்டு கல்வெட்டு சின்னசாமி நாயக்கர், அழகர்நாயக்கர், கண்ணன், விசைய நாயக்கர் ஆகியோர் செய்த தருமம் பற்றிக் கூறுகிறது.

தாதப்பட்டி (சங்ககால நடுகல்)

அண்மையில் தாதப்பட்டிக் கிராமத்தில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்பிராமி எழுத்துப் பொறிப்புள்ள நடுகல் கண்டறியப்பட்டது. உடைந்துபோன கற்பலகையாய் கிடைத்த இந்நடுகல் தற்போது இவ்வூர் துரைப்பாண்டி அவர்களின் நிலத்தில் சோணைமுத்தையா மரம் அருகில் உள்ளது. இக்கல்வெட்டுள்ள நடுகல் இப்பகுதியில் இருந்த இறந்தவர்களுக்காக எடுக்கப்பட்ட பெருங்கற்படைச் சின்னம் என்றழைக்கப்படும் ஈமக் கல்லறையில் இருந்துள்ளது. கல்திட்டை வகையைச் சார்ந்த ஈமச்சின்னம் ஒன்று அழிவுற்ற நிலையில்

Koviloor Digital Library

அதிலிருந்து இதனை எடுத்து வந்து வழிபாடு செய்கின்றனர். இறந்தவர்களைப் புதைத்தபின்பு அவரைப் புதைத்த கல்லறைக்கு அருகிலேயே அவரது பெயரும் ஊரும் கல்லில் பொறித்து நடுகல்லாக நட்டிருக்க வேண்டும் என்பதைத் தாதப்பட்டி நடுகல் உணர்த்துகிறது. இதுவரை தமிழ்நாட்டில் இதுபோன்ற நடுகல் கிடைத்திருப்பது இரண்டாவது முறையாகும்.

வைகையாற்றின் தென்கரையில் அமைந்த தாதப்பட்டி கிராமத்திற்கு அருகில் அமைந்த புலிமான் கோம்பையில் இதுபோன்ற கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகற்கள் மூன்று கிடைத்துள்ளன. இவையும் தமிழ்ப் பல்கலைக் கழகத்ினரால் அண்மையில் கண்டறியப்பட்டன.

தாதப்பட்டியில் கிடைத்த நடுகல் முழுமையாகக் கிடைக்கவில்லை. இதனால் கல்வெட்டின் முழுமையான செய்தியை அறியமுடியவில்லை. இதில் 'ன்அடிஓன் பாகல் பாளிய் கல்' என்ற வாசகம் காணப்படுகிறது. இப்பகுதியில் வாழ்ந்த தலைவன் ஒருவனின் அடியான் என்பவனுக்காகப் பாகல் என்ற இடத்தில் எடுப்பிக்கப்பட்ட பாளிகல் என்று கல்வெட்டு வாசகத்திற்குப் பொருள் கூறலாம். பொதுவாகச் சமணர்கள் வாழ்ந்த பள்ளிகளைப் 'பாளி' என்று அழைக்கும் வழக்கம் இருந்துள்ளது. ஆனால் இக்கல்வெட்டு மூலம் இறந்தவர்களைப் புதைத்த ஈமக் கல்லறையையும் (பெருங்கற்படைசின்னம்) 'பாளிய்' என்று குறிப்பிடும் வழக்கம் சங்ககாலத்தில் இருந்துள்ளது என்பதை முதன்முதலாக தாதப்பட்டி நடுகல் மூலம் அறியமுடிகிறது.

நிலக்கோட்டை பாளையம்

திண்டுக்கல் சீர்மையிலிருந்த 26 பாளையங்களுள், நிலக்கோட்டையும் ஒன்று. இராயர் சமஸ்தானத்தின் மீது பாதுஷா படையெடுத்து வந்த போது, இராயர் படையின் சார்பாக நிலக்கோட்டை பாளையத்தின் முன்னவராகிய மாக்கள நாயக்கர், தம்முடைய கோத்திரமான பெனாசை வல்லக்கர் கோத்திரத்தாரை உடன் அழைத்துச் சென்று போரிட்டு, இராயருக்கு வெற்றி தேடித் தந்ததால், இராயர் பெரிதும் மகிழ்ந்து, மாக்கள நாயக்கருக்கு வெள்ளைக் குதிரை, வெள்ளை

Koviloor Digital Library

சுருட்டி, வெள்ளைக் குடை, வெள்ளைப் பகர டால், வெண்சாமரம் போன்ற விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளார். அத்துடன், சிறிது ஆபரணங்களையும் வழங்கி மதுரைக்கு மேற்கில் முக்காத வழியில், இடம் நல்கி கோட்டை போட்டுக்கொண்டு குடியிருக்க அனுமதித்தார். அங்ஙனம் அவர் வந்து மண்கோட்டை போட்டுக் குடியிருந்த பகுதியே நிலக்கோட்டை (மண் கோட்டை) என்று பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்த மாக்கள நாயக்கர் 12 ஆண்டுகள் பதவியிலிருந்த பின்னர் அவருடைய மகன் கூளப்ப நாயக்கர் இரண்டாவதாகப் பட்டமேற்று 25 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார். மதுரை நாயக்க மன்னராக விசுவநாத நாயக்கர் பதவிக்கு வந்த பின்னர், வத்தலக்குண்டு, மன்னாடி மங்கலம், ஆத்தூர் போன்ற பகுதிகளின் காவலை வழங்கி, அங்கு போய் இருக்கச் சொல்லியதாகக் கூறப்படுகிறது. பஞ்சபாண்டியரின் மீது விசுவநாத நாயக்கர் தொடுத்த கயத்தாற்றுக் கோட்டைப் போரில் மதுரை நாயக்க மன்னருக்காதரவாக நிலக்கோட்டை பாளையக்காரரும் கலந்து கொண்டுள்ளார்.

விசுவநாத நாயக்கர் ஒரு சமயம் மதுரையிலிருந்து திருச்சிக்குச் சென்றபோது, நிலக்கோட்டை பாளையக்காரரின் ஊர் வழியாக வந்ததாகவும், அத்தருணத்தில் பாளையக்காரர் மதுரை நாயக்க மன்னருக்கும், அவருடன் வந்தோருக்கும் விருந்து வைத்ததுடன், மன்னரை அழைத்துச் சென்று தான் உருவாக்கிய ஊர்களையும், குளங்களையும் காட்ட, மன்னன் மிகவும் மகிழ்ந்து, அவருக்கு ஒன்பதூர் கூளப்ப நாயக்கன் என்று பெயர் வைத்ததாகக் கூறப்படுகிறது.

இவருக்குப் பின்னர் இவருடைய மகன் பெரிய சுத்தம நாயக்கர் மூன்றாவதாகவும், இவரையடுத்து இவருடைய மகன் கூளப்ப நாயக்கர் நான்காவதாகவும் பட்டமேற்றுப் பதவியிலிருந்துள்ளனர். இந்த கூளப்ப நாயக்கர் 2000 பொன் தோப்பாப் பணமாகச் செலுத்தி வந்ததாகக் கூறப்படுகிறது. ஐந்தாவதாகப் பட்டமேற்ற பெரிய நாகம நாயக்கரும், ஆறாவதாகப் பட்டமேற்ற கூளப்ப நாயக்கரும், ஏழாவதாகப் பட்டமேற்ற சித்தம நாயக்கரும் இதே முறையில் தோப்பாப்பணம் செலுத்திக் கொண்டு பதவியிலிருந்து வந்துள்ளனர்.

Koviloor Digital Library

எட்டாவதாகப் பட்டமேற்ற நாகம நாயக்கர் நரசிங்கப் பெருமாளுக்கும், உபய நாச்சியாருக்கும் கோயில் எழுப்பியுள்ளார். ஒன்பதாவதாகப் பட்டமேற்ற பெரிய மாக்கள (நாக) நாயக்கர் காலத்தில் திம்மராயப் பெருமாள் கோயில் கட்டப்பட்டதோடு கோவிலுக்கருகில் மன்னவராதிக் குளமும் உருவாக்கப் பட்டுள்ளது. பத்தாவதாகப் பட்டம் ஏற்ற கூளப்ப நாயக்கர், அழகர் கோயில் கட்டி பிரதிட்டை செய்ததோடு, முத்தலாபுரம் குளத்தையும் உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

பதினொன்றாவது பட்டத்தில் பிட்டு கூளப்ப நாயக்கரும், பன்னிரண்டாம் பட்டத்தில் தண்டு கூளப்ப நாயக்கரும், இருந்துள்ளனர். தண்டு கூளப்ப நாயக்கர் காலத்தில் சீவலச்சிரகில் நரசிம்மப் பெருமாள் கோயில் கட்டிப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. சீத்தாபுர அக்கிரகாரமும், குளமும் உருவாக்கப்பட்டுள்ளன. திருமலை நாயக்கரின் சார்பாக இராமப்பய்யர் சேதுபதி மேல் போர் தொடுத்தபோது, நிலக்கோட்டை பாளையக்காரரும், இராமப்பய்யருக்குதவியாகப் போரில் கலந்து கொண்டுள்ளார். பதின்மூன்றாவது பாளையக்காரராய் பதவிவகுத்த நாகம நாயக்கர் காலத்தில் நக்கனூத்து அக்கிரகாரம் உருவாக்கப்பட்டதோடு, குளமும் வெட்டப்பட்டுள்ளது. நிலக்கோட்டையில் கல்கோட்டையும் கட்டப்பட்டுள்ளது. இவர் காலத்தில் கொங்கர் குளம் கண்மாய் வெட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர் விறலிவிடுதூது கேட்ட நாகம நாயக்கர் என்று சுட்டப்படுபவராவார். பதின் நான்காவதாகப் பட்டத்திலிருந்த கூளப்ப நாயக்கர் காலத்தில் கரியாம்பட்டியும், குளமும், சிரங்கபாடியும், குளமும் உருவாக்கப்பட்டுள்ளன. 25 ஆண்டு காலம் பதவியிலிருந்த இவர் காலத்தில் சிவன் கோயில் ஒன்றும் கட்டப்பட்டுப் பிரதிட்டை பண்ணப்பட்டுள்ளது. பதினைந் தாவதாகப் பட்டத்திலிருந்த சிந்தம நாயக்கர் காலத்தில் திண்டுக்கல் சீர்மை ஹைதர் அலியின் கட்டுப்பாட்டிற்குள் வர, நிலக்கோட்டை பாளையத்திற்கு 5000 பொன் தோப்பாப் பணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இவர் 30 ஆண்டுகள் பதவியிலிருந்த பின்னர், கூளப்ப நாயக்கர் என்பவர் பதினாறாவதாகப் பட்டமேற்றார். இவர் காலத்தில் திண்டுக்கல்லுக்கு வந்த சயது சாயிபு (Syed Saheb) நிலைக்கோட்டை

Koviloor Digital Library

பாளையத்திற்குத் தோப்பாப்பணமாக 5900 பொன் நிர்ணயித்து வசூலித்துள்ளார்.

இவருக்கடுத்து 17வதாகப் பட்டத்திலிருந்த கூளப்ப நாயக்கன் காலத்தில், நிலக்கோட்டை பாளையம் ஆங்கிலேயக் கம்பெனியாரின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது. இவர் தம்மிடமிருந்த ஆயுதங்களைக் கச்சைகட்டி மலையில் மறைத்து வைத்ததைத் தொடர்ந்து, ஆங்கிலேயரின் சினத்திற்கு ஆளானார். அதனால் நிலக்கோட்டை பாளையத்தை ஜப்தி செய்ய ஆங்கிலேயர்கள் முயல கூளப்ப நாயக்கர் தன்னுடைய மனைவியையும், மக்களையும், போடி நாயக்கனூருக்கு அனுப்பி விட்டுத் தாம் மட்டும் மலை வழியாக ஆனையூர் நாட்டுக்குத் தப்பி விட்டார். ஆனையூர் நாட்டிலிருந்து சில பேருடன் நிலக்கோட்டைக்கு வந்து சண்டை செய்து பார்த்து முடியாமல் மறுபடியும் மலை வழியாகக் கூளப்ப நாயக்கன் ஓடிப்போக ஆங்கிலேயர் சினம் மேலும் அதிகமானது. இந்த சமயத்தில், இவரது துணைவியார் ஆங்கிலேயரிடம் கைதாகி விட, கூளப்ப நாயக்கர் மாறுவேடத்தில் வந்து ஆர்டீசு துரையின் காலில் விழுந்துள்ளார். அதன்பின்னர், பேரிசு துரையவர்கள் நிலக்கோட்டை பாளையத்தை அவருக்கே திரும்பவும், வழங்கி, தோப்பா பணமாக 11750-ஐ நிர்ணயித்து 21478 பொன்னையும் அவருக்கு வழங்கியதாகக் கூறப்படுகிறது.

பட்டிவீரன் பட்டி

வத்தலக்குண்டிலிருந்து தாண்டிக்குடி மலைக் கிராமத்திற்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது இவ்வூர். இவ்வூரைச் சேர்ந்தவர் டபிள்யூ, பி.ஏ. சவுந்தரபாண்டியன் அவர்கள் தமிழக நீதிக்கட்சி அரசியலில் பெயர் பெற்று விளங்கியவர். அவர் குடும்பத்தின் பொறுப்பில் ஒரு செப்பேடு இருந்து இ.க.ஆ. 1960-61 ஏ.: 23 எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1808 ஆகஸ்டு 6ம் தேதி ஆகும் (சகம் 1730). தமிழும் கிரந்த எழுத்தும் கலந்து இச்செப்பேடு எழுதப்பட்டுள்ளது. கன்னி வாடிப்பாளைத்திற்குட்பட்ட அய்யம்பாளையம் சேகரத்தில் உள்ள நிலங்கள் மதுரையில் வசிக்கும் நரசிங்கராயருக்குப் பொறுப்பு மானியமாக விடப்பட்டது. இந்நிலத்தின் வருவாயைக் கொண்டு கன்னிவாடியைச் சேர்ந்த மலையாண்டி அப்பைய

Koviloor Digital Library

நாயக்கர் என்பவரால் மதுரை வண்டியூர் சுந்தரராஜமூர்த்தி திருவிழாவில் மண்டகப்படி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இச்செய்தி இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

அம்மைய நாயக்கனூர்

இவ்வூர் மதுரை-திண்டுக்கல் நெடுஞ்சாலையில் வாடிப்பட்டிக்கு அடுத்து அமைந்துள்ளது. இவ்வூரில் கதலி நரசிங்கப்பெருமாள் என்னும் பெயரில் திருமால் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இக்கோயில் சுவர்களில் காணப்படும் பல கல்வெட்டுகள் துண்டுக் கல்வெட்டுகளாகவே உள்ளன. இவற்றில் கிடைக்கும் துண்டுச் செய்திகளைக் கொண்டு இக்கல்வெட்டுகள் கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்பாண்டியர் காலத்தவை எனக் கருதலாம். இவற்றில் காணப்படும் மிழலைக் கூற்றம், வடபாம்பாறு, மல்லி நாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூர், செம்பில நாடு போன்ற தொடர்களும் ஊர்களும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற் பாண்டியர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

இக்கதலி நரசிங்கப் பெருமாள் கோயிலின் அர்த்த மண்டப வலது நிலைக்காலில் 'இத்திருநிலை செய்தான் ஆயன் வில்லியான்னான உத்தம பாண்டிய பல்லவதரையன்' என்ற ஒரு முழுமையான கல்வெட்டு உள்ளது. இதன் எழுத்தமைதிகொண்டு இக்கல்வெட்டின் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு எனக் கணிக்கலாம். எனவே பிற்பாண்டியர் காலத்தில் கருவறை, அர்த்தமண்டபத்தோடு இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும். பின் வந்த நாயக்க மரபினர்,அவர்களின் கீழ் நிர்வகித்த பாளையப்பட்டுத் தலைவர்கள் இதனைப் புதுப்பித்தும் விரிவுபடுத்தியும் கட்டியுள்ளனர். மகாமண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்ட போது ஒவ்வொரு தூணிலும் கொடையளித் தவர்களின் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. சத்தியரா வரதராசன், அம்மையப்பபிள்ளை என்ற ஒரு சில பெயர்கள் தெளிவாகப் படிக்கும் நிலையில் உள்ளன. அண்மைக்காலத்தில் இக்கோயிலின் உட்புறம் மிக நவீனமுறையில் மொசைக் கற்களைக் கொண்டு தளம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

அம்மையநாயக்கனூர் பாளையம்

அம்மையநாயக்கனூர் பாளையப்பட்டின் முன்னவரான

Koviloor Digital Library

பெஞ்சை மாக்கய நாயக்கரவர்கள் கி.பி.1435 அளவில் விசய நகர வேந்தர்களுக்குரிய ராயர் சமஸ்தானத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். விசுவநாத நாயக்கர் மதுரை நாயக்கராகப் பொறுப்பேற்றுக் கொண்ட போது, இவரும் மதுரைக்கு வந்து மதுரைக் கோட்டையிலிருந்த 72 கொத்தளங்களுள் திருமஞ்சன வாசலுக்குப் பிரதட்சணமாக வடக்கு மூலையிலிருந்த கொத்தளத்தின் காவல் பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ளார். இந்த காவல் பணியோடு, மதுரையின் வடமேற்கிலுள்ள சிறுமலையும் அதில் சேர்ந்த கிராமங்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. அவரும் சிறுமலை அடிவாரத்தில் கோட்டையமைத்துக் கொண்டு, அம்மையநாயக்கனூர் பாளையத்தை உருவாக்கி, அதன் பாளையக்காரராகியுள்ளார். வேடர்சந்தையூர், வெள்ளோடு, பச்சைமலன்கோட்டை, சம்புதரைக் கோட்டை, ஒருத்தட்டு கிராமம், பாளையக்கவுண்டன்பட்டி, எத்துலூட்டு, சித்தர்நத்தம், மேட்டுப்பட்டி, மட்டப்பாறை, பள்ளபட்டி, குல்லல்குண்டு, குலசேகரன் கோட்டை, தனிச்சியம் ஆகிய ஊர்கள் இந்த பாளையத்திற்குட்பட்டனவாக இருந்துள்ளன. விசுவநாத நாயக்கர், பெஞ்சை மாக்கய நாயக்கருக்கு வெள்ளைக்குதிரை, வெள்ளைச் சுருட்டி, வெள்ளைப்பாவாடை, வெண்சாமாரம், வெள்ளை டால் போன்றவற்றையும் வழங்கி சிறப்புச் செய்துள்ளார். பெஞ்சை மாக்கய நாயக்கர் 13 ஆண்டுகள் பட்டத்திலிருந்த பின்னர் அவரது மகன் அம்மைய லக்கம நாயக்கர் பட்டமேற்று 22 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார். இவரது துணைவியாரின் பெயர் எர்ரம்மாள். இவர் பட்டத்திலிருந்த காலத்தில் சந்தையூரில் கதரீசுவரருக்குக் கோவில் கட்டி, பூசை நடத்தி வரப்பட்டுள்ளது. இவருக்குப் பின்னர் இவரது மகன் வல்லாள மாக்கய நாயக்கர் பட்டமேற்று 15 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார். இவருடைய துணைவியாரின் பெயர் காமலம்மாள். இவர் பட்டத்திலிருந்த காலத்தில் ஒருத்தட்டுக் கிராமத்தில் குருநாதசுவாமி கோயில் கட்டப்பட்டுள்ளது. சந்தையூர் கிராமத்தில் கதிரி நரசிங்கப்பெருமாள் எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளார். மதுரை வடக்குவாசல் பகுதியில் (அகழி) அகிள் மேட்டில் மேய்ந்து கொண்டிருந்த கர்நாடகத் துரையவர்களுடைய பள்ளையத்துப் பால் பசுக்களைச் சிலர் கவர்ந்து செல்ல, அச்செய்தியை அறிந்ததும், அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டிற்குட்பட்டிருந்த தனிச்சயம்

Koviloor Digital Library

கிராமத்து அஞ்சுகோட்டைச் சேர்வைக்காரர்கள் கள்ளந்திரிக் கருகில் ஊரைச் சுற்றி வளைத்துப் பசுக்களைக் கொண்டு வந்து, கர்நாடகத் துரையவர்களிடம் ஒப்புவிக்க, கர்நாடக துரையும் மகிழ்ந்து அம்மைய வல்லாள மாக்கய நாயக்கரை வரவழைத்து, வெகுமதிகள் செய்து, வெண்டையம், வீரகாண்டாமணி, தண்டிகை, முன்கொடை சிங்கமுகம் போன்றவற்றை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

அத்துடன், கல்லூத்து யோவார்பட்டி, பேதகாலிங்கம நாயக்கன்பட்டி, குய்யமநாயக்கனூர் போன்ற கிராமங்களையும் வழங்கியுள்ளார். மீனாட்சி அம்மன் கோயிலில் சங்கிலி மண்டபம் முதல் கேகுன்னு வார்ங்கோட்டை வரைக்கும் உள்ளபகுதி, மற்றும் வைகை நதித் தீரத்தலிருந்த அரண்மனைக் கிராமங்கள், ஆகியவற்றின் காவல் பொறுப்பும் இவரிடம் வழங்கப்பட்டுள்ளது. மதுரையிலுள்ள கூடலழகப் பெருமாள் கோயிலில் நடைபெறும் இரத உற்சவத்தின் போது, கொடியேற்றப்பட்ட நாள் முதல் இரத உற்சவம் வரைக்கும் இந்த நாயக்கரை வரவழைத்துத் தினமும் மாலைபோட்டுப் பரிவட்டம் கட்டித் தீர்த்தப் பிரசாதமும் வழங்கி வரச் செய்யப்பட்டுள்ளது. இந்த விழாவில் ஒன்பதாம் நாள் தேர்வடம் பிடிப்பதற்கு முன்பாக, அம்மைய நாயக்கனூர் பாளையக்காரர் கையினால் தேங்காய் தொட்டுத் தர, அதன் பின்னர் இரதத்தை ஓடச்செய்கிற மரபும் பின்பற்றிவரப்பட்டதாகக் கூறப்படுகிறது. இரதம் நிலைக்கு வந்து நின்றவுடனே பாளையக்காரருக்கு அறுதிப் பரிவட்டம் கட்டித் தீர்த்தப் பிரசாதமும் மாலையும் வழங்கி உபசாரங்களுடன் அவரை அனுப்பி வைத்துள்ளனர். இவருக்கடுத்து இவரது மகன் (கொந்தி) பொம்ம நாயக்கர் பாளையக்காரராகப் பதவி வகித்துள்ளார். இவரது துணைவியார் வீர முத்தம்மாள், இவர்களுக்குப் பொன்னய நாயக்கர், காமய நாயக்கர் என்று இரண்டு புதல்வர்கள். இவர் காலத்தில் குருவித்துறை சித்திரத்து வல்லவர் சுவாமிக்கு இரதம் உருவாக்கப்பட்டு இரத ஓட்டமும் நிகழ்த்தப்பட்டுள்ளது. இவருக்கடுத்து ஐந்தாவதாக பொன்னய நாயக்கர் பட்டம் ஏற்று 24 ஆண்டுகள் பாளையக்காரராக இருந்துள்ளார். இவருடைய துணைவியார் பெயர் கிருஷ்ணம்மாள். இவருடைய தம்பி காமய நாயக்கரின் துணைவியார் பெயர் சின்ன எர்ரம்மாள்.

Koviloor Digital Library

இவருக்கடுத்துப் பொன்னய நாயக்கருடைய மகன் இலக்கம நாயக்கர் ஆறாவது பாளையக்காரராகப் பட்டமேற்று ஓராண்டு மட்டுமே பட்டத்திலிருந்துள்ளார். அதன்பின்னர் வங்காறு (பங்காரு?) சின்ன நாயக்கர் பட்டமேற்று 20 ஆண்டுகள் பட்டத்திலிருந்துள்ளார். இவருடைய துணைவியார் பெயர் வங்காரம்மாள் (பங்காரம்மாள்?) இத்தம்பதியருக்கு கொன்னவாய்க் கசூரி நாயக்கர், சின்னப்ப நாயக்கர், பொன்னுச் சின்ன நாயக்கர், வங்காறு (பங்காரு?) சின்ன நாயக்கர் என 4 புதல்வர்கள். இவர் பட்டத்திலிருந்த போது மதுரை நாயக்கர் மரபில் மதுரையில் அரசராக இருந்தவர் திருமலை நாயக்கர். அவர் ஒரு முறை மதுரையிலிருந்து திருச்சிக்குச் சென்று மூன்று தினங்களுக்குள்ளாக மதுரைக்குத் திரும்பி வந்து சேர விரும்பினார். பல்லக்குப் போகிகளான ஆனைக்கட்ட அக்கல போயனும், குலவப் போயனும், மூன்று நாட்களுக்குள் அரசரைப் பல்லக்கில் அழைத்துச் சென்று மீண்டும் மதுரைக்கு அழைத்து வந்து சேர்ப்பது சிரமமென்று மறுத்துவிட, அம்மைய நாயக்கனூர் போகிகள் சிரமம் பாராமல் திருமலை நாயக்கரைப் பல்லக்கில் திருச்சிராப்பள்ளிக்கு அழைத்துச் சென்று மீண்டும் அவரை மதுரைக்கழைத்து வந்து சேர்த்தார்கள். அம்மைய நாயக்கனூர் போகிகளின் திறமையைப் பாராட்டிய திருமலை நாயக்கர், அம்மைய நாயக்கனூர் போகியர்களான அழக போயன், கம்ப போயன் ஆகியோருக்கு, அவர்களின் விருப்பப்படி, தங்கையாற்றுப்பகுதியிலும், வைகையாற்றுப்பகுதியிலும் குறிப்பிட்ட பகுதிகளுக்குள் மீன் பிடித்துக்கொள்ளும் உரிமையை வழங்கிச் செப்பேடும் தந்தார்.

இவருக்கடுத்தபடியாக பெரிய சக்கள நாயக்கர் எட்டாவது பாளையக்காரராகப் பட்டமேற்றார். இவரது துணைவியார் பெயர் எர்ரம்மாள். இவர்களுக்குப் பெரிய முத்தள நாயக்கர் சின்ன முத்தள நாயக்கர் என்று இரு புதல்வர்கள். இவர் 25 ஆண்டு காலம் பதவியிலிருந்த பின்னர், இவரது தாயாதிக்காரரான வயித்தியப்ப நாயக்கர் என்பவர் பாளையக்காரராகப் பட்டமேற்று 38 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார். இவருடைய துணைவியார் பெயர் சின்ன எர்ரம்மாள். இவர் காலத்தில் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில், இறைவனுக்குத் தினமும் உச்சிக்காலத்தின் போது அபிடேகம், நெய்வேத்தியம் நடத்திவருவதற்காக மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில்

Koviloor Digital Library

முன்திருச்சுற்றின் வடக்குப்பகுதியில் கடம்ப மரத்துக்குக் கிழக்கில், தெற்குப் பார்த்த அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக வேண்டி உள்தீபமும் செய்தளிக்கப்பட்டுள்ளது. இதற்காக வேண்டி மதுரையில் மூன்று தோட்டங்கள் சுத்தக் கிரையத்துக்கு வாங்கி விடப்பட்டுள்ளன. இதுவரை அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டிற்குட்பட்டு வெள்ளோடு, பச்சை மலன்கோட்டை, சமபுதுக்கோட்டை ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்த உபகிராமங்களான அமட்டரை, கீழ்கோட்டை, தொப்பம்பட்டி ஆகிய மூன்று ஊர்களில் இருந்தவர்கள் துண்டு பாளையப்பட்டொன்றை உருவாக்கிக்கொண்டுள்ளார்கள்.

இவருக்கடுத்துப் பட்டமேற்ற பெரிய சின்னள நாயக்கர் காலத்தில் மதுரை அறக்கட்டளைக்கு உபரிக் கட்டளை உருவாக்கி நடத்திவரப்பட்டுள்ளது. இவருடைய துணைவியார் பெயர் எர்ர நாகம்மாள்.

இவருக்கடுத்துப் பட்டமேற்ற பெத்தன நாயக்கருக்கு 5 ஆண்மக்கள், 2 பெண்மக்கள்.

இவருக்கடுத்துப் பட்டமேற்ற பெரிய முத்தள நாயக்கருக்கு பெரிய காமள நாயக்கர், பெரிய முத்தள நாயக்கர் என இரண்டு புதல்வர்கள். இவர் காலத்தில் கதிரி நரசிங்கப் பெருமாள் கோயிலுக்கு முன்னர் லாகடமும், சந்தையூரில் கன்னிமார் கோயிலும், குருநாதசுவாமி கோயில் முன்புள்ள லாகடமும் கட்டப்பட்டுள்ளன.

இவருக்கடுத்து பதிமூன்றாவதாகக் கதிரி நாயக்கர் பட்டமேற்றுள்ளார். இவருடைய துணைவியார் பெயர் சின்னக்கண்ணம்மாள். இவருக்கு சக்கள நாயக்கர், கதிரி நாயக்கர் என இரண்டு புதல்வர்கள். கதிரி நாயக்கர் பாளையக்காரராக இருந்த காலத்தில், சந்தையூருக்குத் தெற்கிலுள்ள பெருமாள் கோயிலுக்குத் தேரோட்டம் நடத்தப்பட்டுள்ளது. இப்பெருமாள் கோயிலுக்கு முன்னுள்ள தெப்பக்குளத்தில் மைய மண்டபம் கட்டப்பட்டுள்ளது. மதுரையில் கூடலழகியப் பெருமாள் கோயிலிலும் தேரோட்டம் நடைபெற்றுவரச் செய்யப் பட்டுள்ளது.

கொன்னவாய்க் கதிரி நாயக்கர் 14ஆவதாகப் பட்டமேற்றுள்ளார். இவருடைய துணைவியாரின் பெயர் முத்து

Koviloor Digital Library

ரெங்கம்மாள். இவருக்கடுத்தபடியாக, சின்னள நாயக்கர் பட்டமேற்றார். இவரது துணைவியார் பெயர் குமார சின்னம்மாள். இவருக்குக் காமள நாயக்கர், வீர சின்னம்ம நாயக்கர், பாப்பய நாயக்கர், சின்னய்ய நாயக்கர் என நான்கு புதல்வர்கள். வங்காரம்மாள், நாச்சியாரம்மாள் என இரண்டு புதல்விகள்.

குழந்தைவேலு நாயக்கர் 16 ஆவதாகப் பட்டமேற்றுள்ளார். இவரது மனைவியின் பெயர் வள்ளியம்மாள். இவருக்கடுத்து காம நாயக்கர் என்பவர் பதவி வகித்துள்ளார். அவரது துணைவியார் வங்காறு சின்னம்மாள் என்பவர். இவர் பட்டத்திலிருந்த போது, இதற்குமுன் சேஷராயர் கலகத்தால் அடைபட்டிருந்த பெருமாள் கோயிலுக்கு மீண்டும் வழிபாடு துவங்கப்பட்டுள்ளது. இவருக்கு அடுத்தபடியாக வீரசின்னம நாயக்கர் பட்டத்திற்கு வந்துள்ளார். இவரது இல்லத்துணைவியாரின் பெயர் பூச்சம்மாள். இவரைத் தொடர்ந்து நரசிம்மநாயக்கர் பாளையக்காரராகியுள்ளார். இவருடைய துணைவியாரின் பெயர் கண்ணம்மாள். இருபதாவது பாளையக்காரராகப் பட்டமேற்றவர் பெயர் சிங்கு நாயக்கர். இவருக்குக் கிருஷ்ணம்மாள், பாப்பம்மாள் என்று இரு துணைவியர். இவர் பாளையக்காரராக இருந்த போது பழனி தலத்தில் மடங்கட்டி வைத்துள்ளார். இவருக்கடுத்து பெரிய கனக நாயக்கர் பட்டமேற்றார். இவருடைய துணைவியாரின் பெயர் வல்லக் கொண்டம்மாள். இவருக்கடுத்து சக்கள நாயக்கரும், அவருக்கடுத்து சொக்கலிங்க முத்தைய நாயக்கரும் பட்டமேற்றுள்ளனர். 24ஆவதாக சங்கர குமாரு நாயக்கரும், 25 ஆவதாகக் கதரி நாயக்கரும் பட்டம் வகித்துள்ளனர். 26ஆவதாகப் பட்டமேற்ற கனக நாயக்கர் காலத்தில் சந்தையூர் கதிரி நரசிங்கப் பெருமாள் கோயிலுக்குத் திருமதில் கட்டப்பட்டுள்ளது. ஒரு தட்டு கிராமத்தில் குருநாதசுவாமி கோயிலுக்கு வடக்கில் சமுத்திரக்குளம் வெட்டப்பட்டுள்ளது. அதற்குக் கிழக்கில் மறுகாலில் கல்மண்டபமம் உருவாக்கப்பட்டுள்து. குலசேகரன் கோட்டையில் மலைமேல் பொன்னுப் பெருமாள் கோயிலுக்கு கலசக்கம்பம் நாட்டி வைக்கப்பட்டுள்ளது. பழனித்தலத்தில், முன் மண்டபம் திருத்தியமைக்கப்பட்டுக் கெட்டி மச்சு கட்டி வைக்கப்பட்டுள்ளது. 27ஆவதாகக் கதிரி நாயக்கர் பட்டம் வகித்துள்ளார்.

Koviloor Digital Library

ஒருத்தட்டு

நிலக்கோட்டைப் பகுதியில் அம்மை நாயக்கனூர் பொம்மனம்பட்டி, சின்ன காலாடிபட்டி, சொக்கலிங்கபுரம், தர்மபுரி, இடையார்பட்டி, கலிங்கபட்டி, மாறத்தம்பட்டி, நாகையணம்பட்டி, நக்கம்பட்டி ஆகிய ஊர்களுக்கருகில் அமைந்துள்ள இந்த கிராமம், மதுரை நாயக்க மன்னரான விசுநாத நாயக்கர் காலத்தில் அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டுக்குட்பட்டிருந்த கிராமங்களுள் ஒன்றாக இருந்துள்ளது. அம்மைய நாயக்கனூர் பாளையக்காரர்களுள் மூன்றாவது பாளையக்காரராகப் பட்டத்திலிருந்த வல்லாள மாக்கய நாயக்கர் காலத்தில் இவ்வூரின் சாலைப்பாதைக்கு மேற்காகவும், வெள்ளைக்காட்டுக்குக் கிழக்காகவும் குருநாத சுவாமி கோயில் கட்டப்பட்டுள்ளது. அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டில் 26ஆவது பாளையக்காரராகப் பட்டம் வகித்த கனக நாயக்கர் காலத்தில் குருநாத சுவாமி கோயிலுக்கு வடக்கிலுள்ள சமுத்திரக்குளம் வெட்டப்பட்டுள்ளது. அதற்குக் கிழக்கில் மருகாலில் கல்மண்டபம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாளைய கவுண்டன்பட்டி

இவ்வூர் ஒருத்தட்டு குறுவட்டத்தில் உள்ளது. நிலக்கோட்டை பகுதியில் கண்ணாபட்டி, முருக்கத்தூரன் பட்டி, சேத்துப்பட்டி, குளமறைப்பட்டி, சொக்கன் செட்டிப்பட்டி, சங்கராபுரம், சந்தையூர், சொக்கலிங்கபுரம் ஆகிய ஊர்களுக்கருகிலமைந்த மாளையக் கவுண்டன்பட்டி, மதுரை நாயக்க மன்னர் விசுவநாத நாயக்கராட்சிக் காலத்திலிருந்து அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டிற்குட்பட்ட பகுதியாக இருந்து வந்துள்ளது.

சம்புதுரைக்கோட்டை

ஒருத்தட்டு குறுவட்டத்தில் பூதப்புரம், சின்ன விராலிப்பட்டி, காமலாபுரம், காமிநாயக்கன்பட்டி, மண்டப்பட்டி, மெட்டூர், சிர்லிபட்டி, தொப்பி நாயக்கன் பட்டி, ஊத்துப்பட்டி ஆகிய கிராமங்களுக்கருகிலுள்ள சம்புதுரை கோட்டை என்ற இக்கிராமம், மதுரை நாயக்க மன்னர் விசுவநாத

Koviloor Digital Library

நாயக்கராட்சிக் காலத்தில் அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டிற்குட்பட்ட கிராமமாக இருந்துள்ளது.

சந்தையூர்

அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டிற்குட்பட்டிருந்த சந்தையூர் கிராமத்தில், அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டில் மூன்றாவதாக பட்டத்திலிருந்த வல்லாள மாக்கய நாயக்கர் காலத்தில் கதரி நரசிங்கப் பெருமாள் எழுந்தருளுவிக்கப் பட்டுள்ளார். அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டில் 12ஆவதாக பட்டத்திலிருந்த பெரிய முத்தள நாயக்கர் காலத்தில் இவ்வூர் கன்னிமார் கோயில் கட்டப்பட்டுள்ளது. குருநாதசுவாமி கோயில் லாகடம் அமைக்கப்பட்டுள்ளது. 13ஆவதாகப் பட்டம் வகித்த கதிரி நாயக்கர் காலத்தில் சந்தையூருக்குத் தெற்கிலுள்ள பெருமாள் கோயிலுக்குத் தேரோட்டம் நடத்தியதோடு, கோயிலுக்கு முன்புள்ள தெப்பக்குளத்தில் மண்டபமும் கட்டி வைத்துள்ளார். ஷேஷராயர் காலத்தில் பூசையில்லாமல் அடைபட்டுப்போன பெருமாள் கோயிலில் 17ஆவதாகப் பட்டம் வகித்த காம நாயக்கர் காலத்தில் மீண்டும் பூசை துவக்கப் பட்டுள்ளது. அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டில் 26ஆவதாகப் பட்டத்திலிருந்த கனக நாயக்கர் காலத்தில், சந்தையூர் கதிரி நரசிங்கப் பெருமாள் கோயிலின் திருமதில் கட்டப்பட்டுள்ளது.

பச்சைமலையான் கோட்டை

கண்ணன் பட்டி, காமுபிள்ளை சமுத்திரம், ஒட்டுப்பட்டி, பெருமாள் பட்டி, புதுக்கோட்டை, புதுப்பட்டி, புது அக்காலபுரம், இராமசாமி பட்டி, செல்லாயிபுரம், சேதுபட்டி, செம்பட்டி, சுக்காலபுரம், திம்மைய கவுண்டன் பட்டி, உதய கவுண்டன்பட்டி, விடுபட்டி போன்ற கிராமங்களுக்கருகிலமைந்துள்ள பச்சை மலையான் கோட்டை என்ற கிராமம், மதுரை நாயக்க மன்னர் விசுவநாத நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டிற்குட்பட்ட பகுதியாக இருந்துள்ளது.

Koviloor Digital Library

குல்லலக்குண்டு

ஒருதட்டு குறுவட்டத்தில் கல்லுப்பட்டி, கந்தப்ப கோட்டை, கரசப்பட்டி, கட்டக் கூத்தன் பட்டி, பொட்டு செட்டிபட்டி, செங்கம்பட்டி ஆகிய கிராமங்களுக்கருகிலுள்ள குல்லலக்குண்டு கிராமம் மதுரை நாயக்க மன்னர் விசுவநாத நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டிற்குட்பட்ட கிராமமாக இருந்துள்ளது. இதுபோல பள்ளப்பட்டி கிராமமும் மதுரை நாயக்க மன்னர் விசுவநாத நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டிற்குட்பட்ட கிராமமாக இருந்துள்ளது.

எத்துலூட்டு (எத்திலோடு)

பிள்ளையார் நத்தம் குறுவட்டத்தில் ஆவாரம்பட்டி, காமாட்சிபுரம், கருத்தாண்டிபட்டி,கோவில்பட்டி, பொன்னைய பட்டி, முத்து இருளபுரம், பாஞ்சாலங்குறிச்சி, பிள்ளை காளைப்பட்டி, செல்லம்பட்டி, தாதராயன் பட்டி ஆகிய கிராமங்களுக்கருகில் உள்ள எத்துலூட்டு கிராமம், மதுரை நாயக்க மன்னர் காலத்தில் அம்மைய நாயக்கனூர் பாளையப் பட்டுக்குட்பட்டிருந்தது. மட்டப்பாரை கிராமமும் மதுரை நாயக்கர் காலத்தில் அம்மைய நாயக்கனூர் பாளையத்தில் அடங்கியிருந்தது.

பிள்ளையார் நத்தம்

நிலக்கோட்டை வட்டம், பிள்ளையார் நத்தம் குறுவட்டத்திலுள்ள பிள்ளையார் நத்தத்தில் சமீப காலத்தில் நாடக மேடைக்காக மண்ணைத் தோண்டும் போது காசுகள், தங்க நகைகள் அடங்கிய மண்கலயம் ஒன்று புதையலாகக் கிடைத்துள்ளது. இக்காசுகள் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் போது வணிகத்திற்குப் பயன்படுத்தப்பட்ட காசுகளாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. இவற்றுள், 200 ஆண்டுகளுக்கு முந்திய விராகன் நாணயம் அல்லது மிளகாய்ப்பணம் எனப்படும் பொட்டுக்காசும், அம்மன் உருவம் பொறித்த ஒருசாமி பகோடா நாணயமும் உள்ளன. நகைகள், ஜமீன்தார்களால் பயன்படுத்தப்பட்ட நுண்ணிய வேலைப் பாடமைந்த நகைகளாகக் கருதப்படுகின்றன.

Koviloor Digital Library

வத்தலக்குண்டு

நிலக்கோட்டைக்கு மேற்கில் 11 கி.மீ. தொலைவில் வத்தலக்குண்டு அமைந்துள்ளது. இந்தப் பகுதி சந்தையூர் கொப்பை நாயக்கருக்குப் பாதுகாவல் கிராமமாக (காவல் பூமியாக) மதுரை நாயக்க மன்னரால் வழங்கப்பட்டுள்ளது. வத்தலகுண்டு பகுதியில் பன்னிரண்டு கொத்தளங்களுடனும், ஐந்து வாயில்களுடனும் கோட்டை ஒன்று கட்டப் பட்டிருந்தது. கி.பி. 1760 இல் திண்டுக்கல்லிலிருந்து வந்த ஹைதர் அலியின் படைக்கும், மதுரையிலிருந்து வந்த முகமது யூசுப்கானின் கம்பெனிப்படைக்குமிடையில் வத்தலக்குண்டில் போர் நடைபெற்றுள்ளது. இறுதியில் திண்டுக்கல் படையைப் புறமுதுகிட்டோடச் செய்து, வத்தலக்குண்டை முகமது யூசுப்கான் வென்றுள்ளார். வத்தலகுண்டு நகரின் மையத்தில் விசாலாட்சி அம்மன் கோயில் உள்ளது. அதில் 1898ல் ஆயிர வைசிய நகரத்தார் சில திருப்பணிகள் செய்து முன்மண்டபம் கட்டிய செய்தி கூறும் கல்வெட்டுள்ளது. இதில் அவர்களது கோத்திரங்கள் கூறப்படுகின்றன. மருத்துவ மகரிசி கோத்திரம் அகஸ்திய மகரிசிகோத்திரம், அத்ரிமகரிசி கோத்திரம், குபேர வம்சம், ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

இப்பகுதியில் நீண்ட காலமாக வெற்றிலை மிகுதியும் பயிரிடப்பட்டு வருவதால் இவ்வூர் வெற்றிலைக் குண்டென்றழைக்கப்பட்டு, அப்பெயரே வெத்திலைக் குண்டென மருவி பின்னா வத்தலக்குண்டாகியுள்ளது என்பர். ஆங்கிலேயர் வெற்றிலையை பீட்டெல் (Betel) என்றழைப்பதால், இவ்வூர் பீட்டல்குண்டு என்றழைக்கப்பட்டு, அதுவே பின்னர் பட்லகுண்டு, வத்லகுண்டு வத்தலக்குண்டாகியுள்ள தெனவும் ஒரு கருத்துண்டு.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 13601

Koviloor Digital Library

6. பழனி வட்டம்

அய்யம் பாளையம் - ஐவர் மலை

ஐவர்மலை பழனியிலிருந்து கொழுமம் செல்லும் வழியில் உள்ளது. பழனியிலிருந்து தாதநாயக்கன்பட்டி என்ற ஊருக்கு வந்து அங்கிருந்து வடக்காக இரண்டு கிலோமீட்டர் சென்றால் இம்மலையை அடையலாம். சிறிய குன்றாக விளங்கும் இம்மலையின் கிழக்குப்பக்கம் உயரமான இடத்தில் நீண்ட இயற்கையான குகைத்தளமும் அவற்றில் கிராம தெய்வங்களின் கோயில்களும் தற்போது உள்ளன.

இங்குள்ள குகைத்தளத்தில் பஞ்சபாண்டவர் வனவாசத்தின்போது தங்கியதாகக் கூறுகின்றனர். பஞ்சவரான பாண்டவர்கள் ஐவர் தங்கிய மலை என்று கருதி இதனை ஐவர்மலை என்று அழைக்கின்றனர். இங்குள்ள குகைத்தளத்தைப் பஞ்ச பாண்டவர் குகை என்று கூறுகின்றனர். ஆனால் இக்குகைத்தளம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகச் சமண முனிவர்களின் உறைவிடமாகவும் வழிபாட்டுத் தலமாகவும் திகழ்ந்துள்ளது. குகைத்தளத்தின் முகப்புப் பாறையில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ள சமணத்தீர்த்தங்கரர் சிற்பங்களும் அவற்றின் அருகில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இங்குள்ள கல்வெட்டுகளில் இம்மலை 'அயிரைமலை' என்று குறிப்பிடப்படுகிறது. அயிரைமலை என்பது சங்க இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் சேரர்க்குரிய குன்றமாகக் கூறப்படுகிறது. பதிற்றுப்பத்தின் மூன்றாம்பத்தில் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலை கௌதமனார் என்ற புலவர் புகழ்ந்து பாடும்போது அயிரைமலை அவனுக்குரியதாக இருந்தது என்கிறார். பகைவரைத் தடுத்து நிறுத்தும் உயரமான அயிரைமலைக்கு உரியவன் என்று கூறுகின்றார்.

Koviloor Digital Library

முனைகெட விலங்கிய
நேர்உயர் நெடுவரை அயிரை பொருந (பதிற்றுப்பத்து பா. 21)

சங்கப்புலவர்கள் சேர அரசர்களைப் பாடும்போது அவர்களை அயிரைமலை போன்று நீடூழிவாழ வாழ்த்தியுள்ளனர். பதிற்றுப்பத்தில் செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில்கிழாரும் அயிரைமலைபோல் நிலைத்து நின்று நீடுவாழ வாழ்த்திப் பாடியுள்ளனர். அயிரைமலையில் சங்ககாலத்தில் வெற்றியைத் தரும் கொற்றவை என்ற தாய்த்தெய்வத்தின் கோயில் இருந்துள்ளது. இதனைச் சேரமன்னர்கள் போற்றி வணங்கியுள்ளனர். குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை என்ற சேரமன்னன் கொற்றவை குடிகொண்டுள்ள அயிரைமலையைப் போற்றி வழிபட்டான் என்று பதிற்றுப்பத்தில் பெருங்குன்றூர்கிழார் என்ற புலவர் கூறுகின்றார். அயிரைமலை கொற்றவை தெய்வத்திற்கு விழுப்புண்ணிலிருந்து சிதறிய குருதியை வீரர்கள் படைப்பர் என்று அரிசில்கிழார் பதிற்றுப்பத்தில் குறிப்பிடுகின்றார். வானவர் உறையும் வானுலகமும் கேட்கும்படி பறையோசை போன்று ஓசையுடன் வீழும் அருவி அயிரைமலையில் உள்ளது (பதிற்று. பா. 70) என்று கபிலர் கூறுகின்றார். பின்வரும் பதிற்றுப்பத்துப் பாடல்கள் மூலம் அயிரைமலை பற்றிய அரிய செய்திகளை அறியமுடிகிறது.

மாடோர் உறையும் உலகமும் கேட்ப
இழுமென இழிதரும் பறைகுரல் அருவி
முழுமுதல் மிசைய கோடுதோறும் துவன்றும்
அயிரை நெடுவரை (பதிற்று. பா. 70)

தும்பைசான்ற மெய்தயங்கு உயக்கத்து
நிறம்படு குருதி புறம்படின் அல்லது
மடை எதிர்கொள்ளா அஞ்சுவரு மரபின்
கடவுள் அயிரை (பதிற்று பா. 79)

பதிற்றுப்பத்துப் பாடல்கள் மூலம் அயிரைமலை ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே கொற்றவை உறையும் மலையாக இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. இம்மலையே இன்று 'ஐவர்மலை' என்று கொங்குநாட்டில் இருந்து வருகிறது. இம்மலையிலுள்ள பழமையான

Koviloor Digital Library

கல்வெட்டுகளும் இம்மலையை அயிரைமலை என்று குறிப்பிடுவதால் இம்மலை பதிற்றுப் பத்து கூறும் அயிரைமலையாக இருக்க வேண்டும் எனலாம். கால நிலை மாற்றத்தின் காரணமாக தற்போது இம்மலைப்பகுதி வறண்டு காணப்படுகிறது. இன்றும் நீர் சுரக்கும் சுனை இம்மலையில் உள்ளது

கி.பி 8,9,10 ஆம் நூற்றாண்டுகளில் அயிரைமலை சமணமுனிவர்களும் அவர்களது மாணவர்களும் நிறைந்த சமணப்பள்ளியாக இருந்துள்ளது. இப்பள்ளியில் சமணத்தீர்த்தங் கரர் உருவங்களும் அவர்களைக் காக்கும் இயக்கி இயக்கன் உருவங்களும் குகைத்தளத்தின் முகப்பிலுள்ள பாறையில் புடைப்புச் சிற்பமாகச் செய்து வழிபடப்பட்டன. இம்மலையில் இருந்த தீர்த்தங்கரர் 'அயிரைமலைதேவர்' என்று அழைக்கப்பட்டார். பார்சுவநாதர் என்று அழைக்கப்பட்ட இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரர் உருவங்கள் இங்கு சிறப்புடன் வழிபாடு செய்யப்பட்டுள்ளன. கல்வெட்டில் 'திருவயிரைப் பார்சுவப்படாரர்' என்று இவர் குறிப்பிடப்பட்டுள்ளார். இவரது இயக்கியம்மன் 'அவ்வை' என்று குறிப்பிடப்படுகின்றாள். சமணசமய இயக்கிக்குரிய பெயராக 'அவ்வை' என்ற சொல்லைத் தமிழ்நிகண்டுகள் எடுத்துக் கூறுகின்றன. காலப்போக்கில் சமணம் அயிரைமலையிலிருந்து மறைந்தது. தற்போது திரௌபதியம்மன் என்னும் கிராமதெய்வம் இங்குள்ள குகைத்தளங்களில் வைத்து வழிபாடு செய்யப்படுகிறது.

ஐவர்மலையில் கிழக்கு நோக்கிய குகைத்தளத்தின் முகப்பில் தெற்கிருந்து வடக்காக வரிசையாகப் பதினாறு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகப் பாறையில் வடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சிற்பம் மட்டும் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது ஏனைய பெரும்பாலான சிற்பங்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். சில சிற்பங்கள் பத்தாம் நூற்றாண்டில் செய்விக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பார்சுவநாதர் தீர்த்தங்கரர் ஐந்தலைகளையுடைய பாம்புக் குடையின் கீழே நின்றநிலையில் காட்சியளிக்கின்றார். எஞ்சிய பெரும்பாலான சமணத் தீர்த்தங்கரர்கள் தாமரை மலர் மீது முக்குடையின் கீழே அர்த்தபரியங்காசனத்தில் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றனர்.

Koviloor Digital Library

வீரசங்கம் என்றழைக்கப்பட்ட சமணசங்கத்தினைச் சார்ந்த மல்லிசேனப் பெரியார் இத்தலத்திற்கு வந்து தீர்த்தங்கரர் திருமேனி ஒன்றைச் செய்வித்திருக்கின்றார் பெரும்பத்தியைச் சார்ந்த பட்டினிக் குரத்தியார் என்ற சமணப் பெண் துறவியின் மாணாக்கி அவ்வணந்திக் குரத்தியார் என்ற சமணப்பெண் துறவியார் தீர்த்தங்கரர் திருமேனி ஒன்றைச் செய்வித்துள்ளார். இங்கு தீர்த்தங்கரர் சிற்பம் ஒன்றைச் செய்வித்த அச்சணந்தி என்ற சமணமுனிவர் தமிழ்நாடு முழுமையும் பயணம் செய்து ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் சமணத்தினை வளர்த்த பெரியார் ஆவார். இவர் கன்னியாகுமரி மாவட்டத்துச் சிதறாலிலும் (திருச்சாரணத்துமலை) மதுரையைச் சுற்றியுள்ள ஆனைமலை, அழகர்மலை, கீழவளவு, கருங்காலக்குடி, சமணமலை அரிட்டாபட்டி முதலிய இடங்களில் இருந்த மலைப்பள்ளிகளிலும் சமணத்தீர்ங்கரர் உருவங்களைச் செய்வித்தவர் ஆவார்.

இல்லறத்தினைப் பின்பற்றிய சமணர்களில் வடவள்ளி என்ற ஊரைச் சார்ந்த ஆரம்விச்சி வரதபாணி என்பவன் அயிரைமலையில் முக்குடைக்குக் கீழே அமர்ந்த தீர்த்தங்கரர் திருமேனி ஒன்றைச் செய்வித்துள்ளான். வடவள்ளி என்ற ஊர் கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள ஊராக இருக்கலாம். அருப்புக்கோட்டைப் பகுதியில் வெண்புநாடு என்ற உள்நாட்டுப் பிரிவில் இருந்த நால்கூரிலிருந்து வந்த குடியன் மூவேந்தன் என்பவன் அயிரைமலையில் தீர்த்தங்கரர் திருமேனி ஒன்றைச் செய்வித்துள்ளான். வெண்புநாடு கவிரிச்சி நாகன் என்பவனும் திருமேனி ஒன்றைச் செய்வித்துள்ளான். திருவரம்பலத்துப் பாதமூலத்தான் ஆரி என்பவனும் காடன் என்பவனும் உருவங்களைச் செய்வித்துள்ளனர். இத்திருவுருவங்களைச் செய்வித்ததைத் தெரிவிக்கும் கல்வெட்டுகள் அவற்றின் அருகிலேயே பொறிக்கப்பட்டுள்ளன.

இப்பள்ளியில் சாந்தி வீரக்குரவர், மல்லிசேன பெரியார் அவ்வணந்திக் குரத்திகள், அச்சணந்தி, இந்திரசேனன் என்ற சமணத்துறவிகள் வாழ்ந்திருக்கின்றனர். இவர்களில் ஒரு சிலர் இங்கு நிலையாகத் தங்கவில்லை. வேற்றூர்களில் இருந்த சமணப்பள்ளியிலிருந்து வந்து சிலகாலம் இங்கு தங்கிச் சென்றிருக்க வேண்டும். இவர்கள் ஒவ்வொருவரும் இப்பள்ளியில்

ஒரு தீர்த்தங்கரர் திருமேனியைச் செய்வித்திருக்கின்றனர் என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

பெருமடை என்ற ஊரிலிருந்து வந்து அயிரைமலையில் திருமேனிகளைச் செய்வித்துள்ளனர். அயிரைமலை சமணப்பள்ளியிலுள்ள கல்வெட்டுகளில் நான்கு கல்வெட்டுகள் அயிரைமலையில் இருந்த தீர்த்தங்கரர்க்கு அன்றாடம் திருவமுது படைப்பதற்குப் (அவி-அவிப்புறம்) பொற்காசுகளை அளித்துள்ளதைப் பற்றித் தெரிவிக்கின்றன. இவற்றில் இரண்டு கல்வெட்டுகள் இரண்டாம் வரகுணபாண்டியன் காலத்தவையாகும். இக்கல்வெட்டுகளில் ஒன்றில் வரகுணபாண்டியனின் எட்டாவது ஆட்சியாண்டும் சாலிவாகன சகாப்தம் (சகர ஆண்டு) 792 ஆம் ஆண்டும் குறிப்பிடப்படுகின்றன. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இக்கல்வெட்டினைப் பாண்டியர் வரலாற்றில் இரண்டாம் வரகுண பாண்டியனின் காலத்தைக் கணிப்பதற்கு மிகமிக முக்கிய கல்வெட்டாக வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் சக ஆண்டு 792 என்பதைக் கொண்டு வரகுண பாண்டியனின் எட்டாவது ஆட்சியாண்டின் காலம் கி.பி. 870 என்று கணக்கிட்டு வரகுண பாண்டியனின் ஆட்சி கி.பி. 862ல் தொடங்குகிறது என்று உறுதியாகச் சொல்லலாம்.

குணவீரகுரவடிகள் என்ற துறவியின் மாணாக்கர் காழத்தைச் சார்ந்த சாந்திவீரக்குரவர் என்பவர் அயிரைமலையில் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரரான பார்சுவநாதர் உருவத்தையும் அவரது இயக்கி அவ்வை உருவத்தையும் செய்வித்துள்ளதைக் கல்வெட்டு கூறுகிறது. மேலும் இவ்விரு திருமேனிகளுக்குத் திருவமுது படைப்பதற்காகவும் இப்பள்ளியில் இருந்த ஒரு சமயக்குரவரைப் பேணுவதற்காகவும் ஐநூறு பொற்காசுகளை (காணம்) அளித்துள்ளதைத் தெரிவிக்கிறது.

சிதைந்துபோன மற்றொரு அயிரைமலைக் கல்வெட்டிலும் சக ஆண்டு (792) குறிப்பிடப்பட்டு இதே செய்தி கூறப்படுகிறது. திருவயிரைமலைத் தேவர் என்றழைக்கப்பட்ட இம்மலையில் இருந்த தீர்த்தங்கரர் திருமேனிக்குக் குவணசேரியில் இருந்த தட்டார் சமூகத்தினைச் சேர்ந்த சாவிகித்தி வட்டம் வடுகி என்ற பெண் திருவமுது (அவிப்புறம்) படைப்பதற்காக இருகழஞ்சு

Koviloor Digital Library

பொன்னைத் தானமாகத் தந்துள்ளதைக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இதேபோன்று இம்மலையிலுள்ள சிதைவுற்ற மற்றொரு கல்வெட்டு திருவயிரைமலைத் தேவருக்குத் திருவமுது படைப்பதற்கும் மலையில் வாழ்ந்த ஒரு சமணத் துறவிக்கு உணவு அளிப்பதற்கும் இரண்டு கலம் நெல் தானமாகத் தந்துள்ளதை எடுத்துக் கூறுகிறது.

இன்று கொங்கு நாட்டில் உள்ள சமணசமய மலைப்பள்ளிகளில் பழமையான சமணத் திருவுருவங்களையும் கல்வெட்டுகளையும் பெற்றுத் திகழும் பெருமையுடையது அயிரைமலைச் சமணப்பள்ளி. இதன் அருமையும் பெருமையும் கருதி தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமாக இதனை எடுத்துப் பேணி வருகிறது.

இரட்டையம்பட்டி பாளையக்காரராக இருந்த பொடித்தொப்ப நாயக்கர் காலத்தில் அயிரைமலை அருகிலுள்ள அய்யம்பாளையம் கிராமம் உருவாக்கப்பட்டதெனக் கருதப்படுகிறது.

அத்திமரத்துவலசு - நடுகல்

அத்திமரத்துவலசு என்ற இடத்தில் கிடைத்த அச்சுததேவராயர் காலத்து கி.பி. 1514 ஆம் ஆண்டைச் சேர்ந்த நடுகல் ஒன்று பழனி அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. கொங்குநாட்டு நரையனூர்நாட்டு ராசராசபுரத்தினைச் சார்ந்த வீரன் ஒருவன் நீலகிரியில் (ஊட்டி) நடைபெற்ற சண்டையில் விசயநகரவேந்தர் சார்பாகப் பங்குகொண்டு வீரமரணம் அடைந்தான். அவ்வீரனுக்கு நடுகல் எடுத்து அவனது உறவினனுக்கு இரத்தக் காணியாக நிலம் தானம் தந்ததை இந்நடுகல் கல்வெட்டு தெரிவிக்கிறது.

அச்சுதராயர் அதிகாரியான விப்ரகுலதீபன் தெமாசையன் என்பவன் கொங்கு மண்டலத்து நரையனூர் நாட்டு ராசராசபுரத்திலிருந்து அப்பகுதியை நிருவாகம் செய்து வந்தான். அவனது தளவாயாக இருந்த விருப்பைய நாயக்கரான பருவதக நாயக்கரின் சிறிய தகப்பனான மல்லையதேவனார் என்பவரை நீலகிரிமலையில் எதிரியை அழிப்பதற்காக தெமாசையன் அனுப்பி வைத்தான். மல்லையதேவனார் நீலகிரி சண்டையில் வீரமுடன்

Koviloor Digital Library

ஈடுபட்டு எதிரியை அழித்து வெற்றி கண்டு அப்போரில் வீரமரணம் அடைந்தான். அவனது வீரமரணத்தைப் போற்றி அவனது உறவினனான பருவதக நாயக்கர்க்குத் தெமாசையன் பொங்கலூர்கா நாட்டிலுள்ள ஆலங்கயத்துக் காலப்பள்ளியில் கோட்டைத்துறை என்றழைக்கப்பட்ட தலைநீர் பாயும் வயலில் இருபதுமா நிலத்தை இரத்தக்கொடையாக வரிநீக்கித் தானமாகத் தந்து பெருமைப்படுத்தினான் என்று இந்நடுகல்லில் உள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.

கீரனூர்

பழனிவட்டத்தில் அமைந்துள்ள ஊர் கீரனூர். இவ்வூரில் புகழ்பெற்ற வாகீசுவரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் சுவர்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகள் இப்பகுதியின் வரலாற்றை அறிந்து கொள்ள பெரிதும் துணைபுரிகின்றன. இக்கல்வெட்டுகளில் கீரனூரான கொழுமங்கொண்ட சோழ நல்லூர் என்று பெயர் கூறப்படுகிறது. கொழுமம் என்பது பழனிக்கு அருகில் உள்ள மற்றொரு முக்கிய சிவத்தலமாகும். இதனை வெற்றி கொண்ட ஒரு கொங்குச் சோழன் கொழுமங் கொண்ட சோழன் எனப்பட்டான். அவனுடைய பெயரைக் கீரனூருக்குச் சூட்டப்பட்டுள்ளது. கீரனூர் பொங்கலூர்க்கா நாடு என்னும் உள்நாட்டுப் பிரிவுக்குள் அடங்கியதாகவும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. பல்லடம் வட்டத்திலுள்ள பொங்கலூரின் பெயரால் பொங்கலூர்க்கா நாடு அமைந்தது. பல்லடம், தாராபுரம் வட்டங்களின் ஊர்ப்பகுதிகள் இதனுள் அடங்கியிருந்தன. அதனுள் கீரனூரும் ஒரு பகுதியாக இருந்துள்ளது.

இங்குள்ள வாகீசர் கோவிலில் 23 கல்வெட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை கி.பி. 12-13 நூற்றாண்டைச் சேர்ந்தவை கொங்குச் சோழர்களாகிய பரகேசரி வீரநாராயணன் கல்வெட்டு ஒன்றும் வீரராச சோழர் குலோத்துங்கன் காலக் கல்வெட்டுகள் இரண்டும் வீரசோழர் கல்வெட்டு ஒன்றும், வீரராசேந்திரன் கல்வெட்டுகள் 18ம் விக்கிரம சோழன் கல்வெட்டு ஒன்றுமாக அவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

கொங்குச் சோழர்கள் என சிலவரலாற்றாசிரியர்களால் அழைக்கப்படும் சிற்றரசமரபினர் உண்மையில் சோழர்

Koviloor Digital Library

வழிவந்தவர்களுமல்லர். கொங்கு மண்ணின் மைந்தர்களுமல்லர். இவர்களைக் 'கோனாட்டு ஆட்சியாளர்' என்று குறிப்பதே பொருந்தும் என்பார் கே.வி. சுப்பிரமணிய அய்யர். கோனாடு என்பது இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியாகும். இப்பகுதியில் ஆட்சி செய்த இருக்குவேள் மரபின் சிற்றரசர்களே கொங்கு நாட்டிலும் முதலாம் பராந்தக சோழன் காலம் முதல் ஆட்சி செலுத்தியுள்ளனர்.

கிரனூர் கோயில் கல்வெட்டுகளில் இடம் பெறும் முதல் கொங்கு சோழன் பரகேசரி வீர நாராயணன் என்பவன். இவன் கி.பி. 1142ல் பட்டத்திற்கு வந்துள்ளான். இவன் காலத்ததாக ஒரு கல்வெட்டு மட்டும் கீரனூர்க் கோவிலில் இடம் பெற்றுள்ளது. இம் மன்னனது பதினோராவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1153) சோழன் சுந்தனான வீரசோழ அணுத்திரப்பல்லவரையன் என்பவன் இத்தேவர் அமுது படிக்காக ஆறுமா நிலத்தைக் கொடையாக அளித்துள்ளான். மேலும் உவச்சப்புறமாகவும், நிமந்தப்புறமாகவும் நாலரைமா அளவுள்ள நிலமும் அளித்துள்ளான்.

வீரநாராயணனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த ராசகேசரி குலோத்துங்க சோழனின் இரண்டு கல்வெட்டுகள் கீரனூர்க் கோயிலில் உள்ளன. அவனது ஏழாவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1156) இக்கோயிலில் எழுந்தருளியிருந்த நடராசர், உமாசகித மூர்த்தி, விநாயகர் ஆகிய தெய்வங்களுக்கு அமுது படிக்காக தாமரைக்குளம் என்ற கிராமத்தையும், மேலும் சில இடங்களில் உள்ள இரண்டரை மாநிலத்தையும் சோழன் கண்டியான திருவெண்காட்டு நங்கை என்பான் கொடையளித்துள்ளான். இங்குக் குறிப்பிடப்படும் தாமரைக்குளம் கிராமம் பொருந்தலாற்றங்கரையில் அமைந்துள்ள கிராமம் ஆக இருக்கலாம். மேலும் இதே மன்னனின் பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1161ல்) சுந்தன் நிலைஉடையானான குலோத்துங்க சோழ அணுத்திரப் பல்லவரையன் என்பான் இக்கோயில் இறைவர்க்கு அமுது படிக்காக ஒரு மாநிலத்தைக் கொடையளித்துள்ளான்.

வீரசோழன் என்னும் சிற்றரசன் கி.பி. 1183 முதல் 1206 வரை ஆட்சி செய்தவன். இவனது 20ம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று

Koviloor Digital Library

(கி.பி. 1203) கீரனூர்க் கோயிலில் காணப்படுகிறது. இக்கோயில் இறைவர்க்கு நள்ளிரவு பூசைக்காக சுந்தன் சுந்தர பாண்டியனான குலோத்துங்க சோழ அனுத்திரப்பல்லவரையன் என்பான் அரைமா நிலம் கொடையளித்துள்ளான்.

இம்மரபின் அரசர்களில் குறிப்பிடத்தக்கவனும் நெடுங்காலம் ஆட்சிப்பொறுப்பில் இருந்தவனுமான அரசன் வீரராசேந்திரன் ஆவான். கி.பி. 1206 முதல் 1252 வரை ஆட்சி செய்தவன் இவன். இவன் காலத்தனவாக 18 கல்வெட்டுகள் கீரனூர்க் கோவிலில் காணப்படுகின்றன.

ஏழாம் ஆட்சி ஆண்டு முதல் பதினாறாம் ஆட்சியாண்டு வரையான கல்வெட்டுகள் இவை. இம்மன்னனின் 7ஆம் ஆட்சி ஆண்டில் (1213) கீரனூர் அகத்தீசர்கோயிலில் இருக்கும் கூத்தாடுந்தேவர்க்கு (நடராசர் படிமம்) ஞாயிற்றுக்கிழமை தோறும் பிட்டுஅமுது செய்து படைப்பதற்காக குலோத்துங்க சோழ இருங்கோளர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களில் கருவூர் ஆந்நிலை ஆண்டார் கோயில் பணிமகளாக இருந்த கூத்தாடி என்பவள் அரைமா நிலம் கொடையாக அளித்துள்ளாள். கி.பி. 1214ல் இக்கோயில் பள்ளியறை நாச்சியார்க்கு ஞாயிற்றுக் கிழமை தோறும் இச்சிவாலயத்தில் இடவலமாகச் சுற்றி (பிரதட்சிணம் பண்ணி) அமுது படி செய்ய சோழன் கண்டியான திருவெண்காட்டு நங்கை என்பவன் அரைமா நிலம் கொடுத்துள்ளான். இதே ஆள் கி.பி. 1156ஆம் ஆண்டுக் கல்வெட்டிலும் கொடையாளியாய்ப் பேசப்பட்டுள்ளான். எனவே இவன் சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக இக்கோயிலோடு தொடர்புகொண்டு விளங்கியுள்ளான் என்பதை அறியலாம். இதே ஆண்டில் இவ்வூர் வெள்ளாளன் நீலன் புளியன் என்பான் இக்கோயில் திருப்பள்ளியறை நாச்சியார்க்கு ஆடிப்பூர நோன்பு மற்றும் திருவீதிவுலாவுக்காக ஐந்து ஆனை அச்சு (காசு) கொடையளித்தான். மற்றொரு வெள்ளாளன் கழஞ்சியந் தேவனான கொங்கிளங்கோன் என்பவன் நந்தாவிளக்கு ஒன்று எரிக்க பொன் கொடை அளித்துள்ளான்.

வீரராசேந்திரனுடைய பத்தாம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1216) இவ்வூர் இடையன் தழந்நம்பியான அரசகோன் என்பவன் சந்தியாதீபம் ஒன்றுவைக்க துளைகழஞ்சு பொன் ஒன்று

Koviloor Digital Library

கொடுத்துள்ளான். மேலும் இவ்வூர் வெள்ளாளன் காவன் உடையான் என்பவன் சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒரு துளைப்பொன் கொடை அளித்தான். அதனை ஏற்று நடத்தியவன் இவ்வூர்ச்சிவபிராமணன் கவுசிகன் ஆண்டப்பிள்ளை அரியவநாந அபிமான சோழபட்டன் ஆவான். இவ்வூரில் வெள்ளாளர்கள் மேல்மணியர், கிழ்மணியர் என இருபிரிவாகக் கூறப்பட்டுள்ளனர். இது ஆய்வுக்குரியது. இதே ஆண்டில் இவ்வூர்க் குடும்பரில் சுந்தன் அதிசய சோழநாந குலோத்துங்க சோழ இருங்கோளன் கோயிலுக்கு நட்டுவப்புறமாக நிலக் கொடை அளித்துள்ளான். இதன் மூலம் குடும்பர் இனத்தவர் நிலவுடைமையாளராக இப்பகுதியில் இருந்துள்ளனர் என்பது பெறப்படும்.

இவ்வீரராசேந்திரனின் பதினொன்றாவது ஆட்சி ஆண்டில் இவ்வூர் பூலுவர் இனத்தைச் சேர்ந்த செய்யகனில் பொத்தக்கோன் ஆன சேனாவரையன் சந்தியாதீபம் ஏற்ற பொன்கொடை அளித்தான். இதனை ஏற்றவர் கோயில் சிவ பிராமணர் கவுசிகன் ஆண்டப் பிள்ளை அரியவனான சைவ கலாலயச் சக்கரவர்த்தி. குடங்கொண்டு கோயில் புகுவார் என்னும் குழுவினர் இவ்விளக்கை ஏற்ற இசைந்தனர். இப்பகுதியில் பல கல்வெட்டுகளில் குடங்கொண்டு கோயில் புகுவார் என்னும் ஒரு பிரிவினர் கூறப்படுகின்றனர். இவர்கள் யார் என்பது விவாதத்திற்குரியதாகும். குடம் என்பது திருமஞ்சனக்குடம் எனக் கொண்டு இறைவனுக்கு நீராட்ட நீர் கொண்டு செல்லும் பணியாளரே இவர் எனக் கருத இடமுண்டு. இத்தகையவர்கள் விளக்கு ஏற்றும் பணிகளையும் தாமே முன்வந்து ஏற்றுச் செய்திருக்கலாம்.

இதே ஆண்டில் இவ்வூர் வெள்ளாளன் பூசகளில் அரையன் சிறியான் ஆன வேந்த சூளாமணிப் பல்லவரையன் என்பவன் சந்திவிளக்கு ஒன்று எரிக்க ஒரு துளைப்பொன் கொடை அளித்தான். அதனைப் பெற்றவன் காசிபன் பாண்டிய தநிஞ்சி சுந்தரனான குலோத்துங்க சோழபட்டன் என்பான். குடங்கொண்டு கோயில் புகுவார் விளக்கு எரித்தனர். இதே சமகாலத்தில் இவ்வூர் சுந்தன் அதிசய சோழனான குலோத்துங்க சோழ இருங்கோளன் மணவாட்டி இளையாண்டி என்பவள் இக்கோயில் திருப்பள்ளியறை நாச்சியார்க்குப் பொன்னால் ஆன திருச்சரி என்னும் அணிகலன் ஒரு ஜோடி (ஓர் அணை)

Koviloor Digital Library

திருப்பாடகம், மச்சம் ஆகியவற்றைக் கொடை அளித்தாள். இப்பொன் மிகவும் தூய்மையானதும் 14 கழஞ்சு எடை கொண்டதுமாகும்.

இவ்வூரில் வாழ்ந்த குருளந் கூத்தனான உத்தமக் கோன் என்பவன் ஒரு சந்தியாதீபம் ஏற்றுவதற்காக ஒரு துளை கழஞ்சு பொன் கொடை அளித்தான். இவ்வூர் வியாபாரி தூளன் கோவனான சமய சேனாதிபதி சந்திவிளக்கு எரிக்க ஒரு துளைப்பொன் கொடை அளித்தான். இதனையும் சிவபிராமணர் ஏற்றுக் குடங்கொண்டு கோயில் புகும் பணியாள் மூலமாகச் செயல்படுத்தினர்.

மேலும் இவ்வூர் வெள்ளாளன் துட்டன் செல்லன் பியங்கனான அமரபுயங்கப் பல்லவரையன் சந்தி விளக்கு ஒன்று எரிக்க வைத்த துளைப்பொன் ஒன்றை ஏற்றுச் சிவபிராமணர் விளக்கேற்றினர். மேலும் மூன்று விளக்கு எரிக்க முக்கழஞ்சு பொன் தில்லைபிரான் பட்டன் பிள்ளைகளில் ஒருவனாகிய பிச்சன் அகோர சிவன் என்பவன் கொடை அளித்தான். இவ்வூர் கோன் நம்பி சிலம்பன் ஆளவந்தான் என்பவன் சந்திவிளக்கு ஒன்று வைக்க ஒரு துளைக் கழஞ்சு பொன் கொடுத்தான் இம்மன்னனின் 16வது ஆட்சி ஆண்டில் (1222 கி.பி.) இவ்வூர் வெள்ளாளன் கணக்கால் மாறன் முகுதரன் என்பான் சந்திவிளக்கு ஒன்று எரிக்க பொன் கொடை அளித்தான். இக்கோயில் தேவரடியாள் தில்லை பிரான் பட்டர் நம்பி மார்களில் செந்தி ஆன மங்கையர்க்கரசி என்பவள் சந்திவிளக்கு ஒன்று எரிக்க துளைக்கழஞ்சு பொன் ஒன்று கொடை அளித்துள்ளாள்.

மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகளின்மூலம் கீரனூர் கோயில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதும் அடுத்து ஒரு நூற்றாண்டுகாலம் மிகச் சிறப்பான வழிபாட்டிலும் மக்கள் பராமரிப்பிலும் இருந்திருக்க வேண்டும் என்பதும் பெறப்படும். இவ்வூரிலிருந்த வெள்ளாளர், பூலுவர், கோனார், குடும்பர், தேவரடியார், சிவபிராமணர் என அனைத்துப் பிரிவு மக்களும் கோயில் பணிகளில் கவனம் செலுத்தியுள்ளனர் என்பதும் பெறப்படும்.

Koviloor Digital Library

தாமரைக்குளம்

பழனிக்கு அருகில் சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் பொருந்தலாறு என்னும் ஆற்றின் கரையில் அமைந்துள்ள இவ்வூர் வரலாற்றுப் பெருமைமிக்க ஊராகும். இவ்வூரில் பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு பள்ளிக் கட்டிடம் கட்ட மண் தோண்டிய போது முற்பாண்டியர் காலத்தைச் சேர்ந்த திரிபுராந்தகர் செப்புத் திருமேனி ஒன்று கண்டறியப்பட்டது. இதற்கு இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஒரு நடராசர் செப்புத் திருமேனி கண்டறியப்பட்டது. இத்திருமேனி தற்போது பழனியில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இது தவிர இங்கு சுமார் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பைரவர், சப்தமாதர் சிற்பங்களும் செங்கழுநீர் மேடு எனும் இடத்தில் காணப்படுகின்றன.

இவ்வூர் ஊராட்சி மன்றத் தலைவர்க்குச் சொந்தமான கரும்புத் தோட்டத்தில் ஒரு பழமையான கல்வெட்டு உள்ளது. கல்வெட்டின் முடிவில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு குத்து விளக்குகள், ஒரு கலசம் (கும்பம்), ஒரு கலப்பை, ஒரு சுருள் பட்டா (ஆயுதம்) ஆகியவை கோட்டுருவங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. இச்சின்னங்களை வைத்தே இக்கல்வெட்டு வணிகக் குழுவினரோடு தொடர்புடையது என்பது தெரியவரும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் அரசன், பரகேசரி வீரசோழன் கொங்குசோழ மரபினன் ஆவான். வீரசோழனின் ஆட்சிக் காலம் 1183 முதல் 1206 வரையாகும். இவ்வீரசோழன் தென்கொங்கு, வடகொங்கு இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஆட்சி செய்தவன். தாமரைக்குளம் கல்வெட்டின் ஆட்சி ஆண்டு ஒன்பது என்பதால் இது கி.பி. 1192 ஆம் ஆண்டினது என்பது பெறப்படும். இக்கல்வெட்டில் வைகாவிநாடு எனக் குறிப்பிடப்படும் நாடு வைகாவூர் நாடு என்பதன் வேறு வடிவமாகும். பழனியைச் சுற்றியுள்ள பகுதி வைகாவூர் நாட்டுக்குள் அடங்கும். ஊரின் பெயர் அமரபுயங்கச் சதுர்வேதிமங்கலம் எனக் கூறப்பட்டுள்ளது. சதுர்வேதிமங்கலம் என்பதைக் கொண்டு இவ்வூர் அந்தணர் களுக்கு வழங்கப்பட்ட, அந்தணர் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்த ஊர் என்பது அறியப்படும். முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் பாண்டிய நாடு வெல்லப்பட்ட போது பாண்டியர் களின் படைத் தலைவனாக இருந்தவன் அமரபுஜங்கனே. இவனே

Koviloor Digital Library

வெற்றிகண்ட சோழ அரசனுக்குக் கனகாபிசேகம் செய்தவன். இந்த அமரபுஜங்கச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த போசி அரிதாஸந் பொநவில்லியாந ஸ்ரீ காழிப்பிள்ளை என்பவர் பூமி திருத்தி ஐந்நூற்றுவர் குல தலை வசக்கல் என்று பேரிட்டு ஐந்நூற்றுவர்க்கு வழங்கியுள்ளான். இதைக் காப்பதும் ஐந்நூற்றுவர் கடமை என்பது கல்வெட்டின் முடிவில் கூறப்பட்டுள்ளது.

ராசாபுரம்

பழனியிலிருந்து தாமரைக்குளம் செல்வதற்கு முன்பாகவே அரை கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது ராசாபுரம் என்னும் சிற்றூர். இரண்டு ஊர்களையும் பொருந்தலாறு தான் பிரிக்கிறது. இந்த ராசாபுரத்தின் பழைய பெயர் ராசராசபுரம் ஆக இருந்திருக்கலாம். இவ்வூரிலும் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் மண்ணில் பாதி புதைக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. மண்ணில் புதைத்து சிமெண்ட் போட்டு கெட்டிக்கப்பட்டுள்ளது. கல்லின் முடிவில் வாள், கத்தி, கலசம், உடுக்கை ஆகிய சின்னங்கள் செதுக்கப்பட்டுள்ளதன் மூலம் இக்கல்வெட்டும் வணிகர் தொடர்பானது என்பதை அறியலாம.

இக்கல்வெட்டு பதினெண்பூமி (திசை ஆயிரத்து ஐநூற்றுவர்) என்னும் வணிகக் குழுவினர் இவ்வூர் சிவன் கோயிலில் நந்தவனம் அமைத்து பரிவட்டம் சாத்துவதற்குக் கொடை அளித்துள்ள செய்தியைக் கூறுகிறது. மேற்சொன்ன இரண்டு கல்வெட்டுகளும் வணிகர் தொடர்பாக இருப்பதால் பொருந்தலாற்றின் கரை வழியே ஒரு பெருவழி சென்றிருக்கலாம் என்பதும் உய்த்துணரப்படும்.

கலையம்புத்தூர்

பழனிக்கு மேற்கில் மூன்றுகல் தொலைவில் சண்முகநதியின் மேற்குக் கரையில் அமைந்துள்ள இவ்வூருக்கு கலயன்புத்தூர் என்றும் வீரகேரளச் சதுர்வேதிமங்கலம் என்றும் பெயர்கள் வழங்கியுள்ளன. கலயன்புத்தூர் என்ற பெயரே நாளடைவில் பேச்சு வழக்கில் மருவி இன்று கலையம்முத்தூர் என்று வழங்கி வருகிறதெனலாம். இவ்வூரில் கி.பி. 1856இல் ரோமானியத் தங்க நாணயங்கள் கண்டறியப்பட்டுள்ளமை இப்பகுதியின் அமைவிடத்தின் சிறப்பினைப் புலப்படுத்துவதாக உள்ளது.

Koviloor Digital Library

பாலக்காட்டுக் கணவாயிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்ற மூன்று பண்டையப் பெருவழிகளுள் ஒன்று ஆனைமலை, வடபூதி நத்தம், சி. கலையமுத்தூர், பழனி, திண்டுக்கல், மதுரை வழியாக பாண்டிய நாட்டுத் துறைமுகப்பட்டினங்களுள் ஒன்றான அழகன்குளத்தைச் சென்றடைந்துள்ளது.

மேற்குக் கடற்கரையிலிறங்கும் யவன வணிகர்கள், தமிழ் நாட்டின் உட்பகுதியிலுள்ள வணிக நகரங்களுக்கும், கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்கும் குமரி முனையைச் சுற்றிக் கொண்டு சென்றால் காலம் வீணாகும் என்பதால் பாலக்காட்டுக் கணவாய் வழியாகச் சென்ற இது போன்ற பெருவழிகளைப் பெரிதும் பயன்படுத்தலாயினர். சங்க காலத்தில் குடகொங்கிற்குத் தெற்காக பழனியைச் சுற்றியமைந்திருந்த பகுதி நெடுவேள் ஆவிக்குரிய நாடாக இருந்ததால் இப்பகுதி ஆவிநாடு என்றும் வையாவூர் நாடு என்றும் அழைக்கப்பட்டுள்ளது. ஆவியர் பெருமகனான வேள் ஆவிக்கோமான் சேரர்களுடன் மணத் தொடர்புடையவராதலால் சேரநாட்டுக்கு வந்த யவனர்கள் வேள் ஆவிக் கோமானுக்குரிய பழனிப் பகுதிக்கும் பெருமளவில் வந்திருக்க வேண்டும். கலயமுத்தூரில் கண்டறியப்பட்டுள்ள 63 ரோமானியத் தங்க நாணயங்கள் இக்கருத்தினை உறுதி செய்யும் சான்றுகளாக உள்ளன.

சீனியர் டிரசஸ் (Drusus Senior B.C. 8), டைபீரியஸ் (Tiberius A.D. 14-37), கலிகுலா (Caligula 37-41), கிளேடியஸ் (Claudius 41-54), நீரோ (Nero 54-68), டொமிசியன் (Domitian 81;96), நெர்வா (Nerva 96-98), டிராஜான் (Tragan 98-117), ஹாட்ரியன் (Hadrian 117-138), கம்மோடியஸ் (Commodius 180 -193) எனப் பல்வேறு மன்னர்களின் நாணயங்களாக இவையுள்ளன. இக்கால கட்டத்தில் எகிப்திலிருந்து உரோமானியக் கப்பல்கள் தென்னிந்தியாவுக்கு வந்து போய் ஏராளமான பொருட்களைச் செங்கடல் துறைமுகத்தில் குவிக்க, அத்துறைகளிலிருந்து பொருட்கள் நிலவழியாக நடுக்கடல் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து உரோமானியப் பேரரசை அடைந்துள்ளன. கலயமுத்தூர்ப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ள பெருங்கற்சின்னங்கள் மூலம் இப்பகுதி பெருங்கற் காலத்திலேயே மக்கள் வாழ்ந்த பகுதியாக இருந்துள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

Koviloor Digital Library

இவ்வூருக்கு வீரகேரளச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரிருந்துள்ளமையைப் பழனி சுப்பிரமணியர் கோயிலிலுள்ள நிரஞ்சண உடையாரின் கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இந்தச் சதுர்வேதிமங்கலத்தில் செயல்பட்டு வந்த சபையில் உறுப்பினராக இருந்த பெரியபெருமான் நம்பி திருவாழி ஆழ்வார் என்பவர் இளைய நாயினாரின் திருஅமுதுச் செலவினங்களுக்காக வேண்டி நிலக்கொடை நல்கியுள்ளார். விசயநகரவேந்தர் கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக்காலத்தில் கலயமுத்தூர் (கலயம்புத்தூர்) கொங்கு மண்டலத்தின் ஒரு பகுதியான இராஜராஜபுரத்துச் சீர்மையிலிருந்த கரைவழி வைகாவூர் நாட்டிற்குட்பட்ட கிராமமாயிருந்துள்ளது. கிருஷ்ண தேவ மகாராயரிடம் அமைச்சராக இருந்த கொண்டமராசையரின் நலத்திற்காக, வேலாயுத சுவாமிக்கு விழாக்களும் வழிபாடுகளும் நடத்த வேண்டி இவ்வூர் கொடையாக வழங்கப்பட்டுள்ளதைப் பழனி சுப்பிரமணியர் கோயிலின் கருவறைத் தென்சுவரிலுள்ள கல்வெட்டொன்றிலிருந்து தெரிந்து கொள்ளமுடிகிறது.

இரட்டையம்பாடி (ரெட்டியம்பாடி)

இவ்வூர் பழனிக்கருகில் பாப்பம்பட்டிக்கு மேற்கில் இரண்டுகல் தொலைவில் குதிரை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. அயிரைமலைக்குத் தெற்கில் நாலுகல் தொலைவில் உள்ளது. இவ்வூர் அசுரமலைப்பெருவழியை ஒட்டி அமைந்திருந்துள்ளது. அசுரமலைப் பெருவழி கொழுமத்துக்குப் போகிற பெருவழியின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. கொழுமத்துக்குப் போகிற பெருவழி என்பது பழனியில் ஆரம்பித்து கலயமுத்தூர், வேலூர், பாப்பம்பட்டி வழியாகச் சென்று கொழுமத்தைச் சென்றடைந்துள்ளது.

இரட்டையம்பாடி பாளையக்காரர்களின் முன்னோர் டில்லி பாதுஷாவிடம் சர்தாராகப் பணிபுரிந்துள்ளனர். மராட்டியர் வகையில் சின்னபந்து பெரியபந்து என்போர் டில்லி பாதுஷாவுக்குத் தோப்பாப்பணம் கட்டாதிருந்த போது, டில்லி பாதுஷாவுடன் சார்பாகச் சென்று தோப்பாபணம் செலுத்தச் செய்தவர்கள் அதன்பின்னர் விசயநகர வேந்தரிடம் பணிபுரிந்துள்ளனர். மதுரையில் பாண்டிய மன்னன் மீது சோழவேந்தன் போர் தொடுத்தபோது, பாண்டிய மன்னன்

Koviloor Digital Library

விசயநகர வேந்தனின் உதவியை நாட, விசயநகர வேந்தன் கிருஷ்ணதேவராயர் பாண்டியனுக்கு உதவ கொட்டியம் நாகம நாயக்கரை மதுரைக்கனுப்பிய போது, அவருக்குத் துணையாக, இரட்டையம்பாடி பாளையக்காரரும் அவருடன் அனுப்பட்டுள்ளார். அதன் பின்னர் மதுரை நாயக்க மன்னனாகப் பொறுப்பேற்றுக் கொள்ள விசுவநாத நாயக்கர் வந்த போது அவருடன் மதுரைக்கனுப்பப்பட்டுள்ளார். அச்சமயத்தில் விசுவநாத நாயக்கர் பழனிப்பிரவேசமாய் வந்து இரட்டையம்பாடி பாளையத்தை இவர்களுக்கு வழங்கியுள்ளார். பாளையக்காரரான கொசவ தொப்ப நாயக்கர், ஏற்கனவே அப்பகுதியிலிருந்த கரைவழியை மேலுமுண்டு பண்ணி, அழகு நாச்சியம்மன் என்ற பெயரில் பத்ரகாளியம்மனை எழுந்தருளுவித்துள்ளார். அம்பலவாண சுவாமியை ஏற்கனவே இருந்து வந்த அவருக்குரிய ஆலயத்தில் எழுந்தருளுவித்து குடமுழுக்கும் செய்து லெட்சுமிபுரம், குப்பம்(பா)ளை(யம், சங்கிராமதன நல்லூர், மடத்தூர், இலட்சணப்பட்டி இவற்றிற்குட்பட்ட நஞ்சை புஞ்சை ஆகியவற்றைக் கிராம தேவஸ்தான உபயமாக்கியுள்ளார். இவர் காலத்தில் பழனியில் ஒரு மடத்தைக் கட்டி, அம்மடத்துக்கு மானியமும் வழங்கியுள்ளார். அவருக்கு அடுத்து பதவியிலிருந்த அவரது மகன் போடித்தொக்க நாயக்கர் காலத்தில் அய்யம்பாளையம் (அயிரை மலை அருகிலுள்ள கிராமம்) என்ற கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. இவருக்குப்பின் இவரது மகன் அகோளத்தொப்ப நாயக்கர் காலத்தில் வேலை சமுத்திரம் என்ற ஊர் உருவாக்கப்பட்டு, அதற்கு மேற்காக ஒரு பத்திரகாளி யம்மனை எழுந்தருளிவித்துள்ளனர்.

இவருக்குப்பின் இவரது மகன் பொன்னம்பலத் தொப்ப நாயக்கர் காலத்தில் புது ரெட்டையம்பாடி என்ற கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வூரோரமாக அங்காளம்மை சன்னதி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

இவரது மகன் சின்ன ஒபளத் தொப்ப நாயக்கர் நாளில் தம்பட்டக் காடென்ற மலையில் வெங்கிடேசுவரப்பெருமாள் எழுந்தருளுவிக்கப்பட்டது. இவரது மகன் பூசலத் தொப்ப நாயக்கர் பட்டத்திலிருந்த காலத்தில் குதிரையாற்றின் மேற்கில் பட்டி என்கிற பெயரில் ஊர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. எட்டாவது பாளையக்காரராக இவருடைய மகன் சடலுப

Koviloor Digital Library

தொப்ப நாயக்கர் என்பவர் பட்டமேற்று, பட்டத்திலிருந்த காலத்தில் சிறுநாயக்கர் பட்டி என்ற கிராமம் உருவாக்கப்பட்டது. வேணுகோபாலர் சன்னதி என்கிற பெயரில் பெருமாள் கோயிலையும் ஏற்படுத்தி அக்கோயிலின் வழிபாட்டுச் செலவினங்களுக்காக இரண்டு மா நிலத்தையும் வழங்கியிருக்கிறார்.

பதினொன்காவதாக, பாளையக்காரராக இருந்த முக்கண்டகிரித் தொப்ப நாயக்கர் நாளையில் பழனிமலை அடிவாரத்தில் ஒரு மடம் கட்டி, அம்மடத்திற்கு வருகின்ற அன்னிய பரதேசிகளுக்கு நீராகாரமும்,அன்னோதகமும் வழங்கிவர ஏற்பாடும் செய்துள்ளார். இவருக்கடுத்த பாளையக்காரரான இவரது மைந்தர் வேலத் தொப்ப நாயக்கர் காலத்தில் மலையடிவாரத்தில் பெரிய கல் மண்டபம் முக்கண்ட பயிராமடம் என்ற மடம் சரசுவதி மதுராம்பாள் என்ற அம்மன் கோயிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

19வது பட்டமாக முத்துக்காடி தொப்ப நாயக்கர் பட்டத்திலிருந்தபோது அவர் தம்பி இராமசாமி தொப்ப நாயக்கர் இராமேசுவரத்திற்கு யாத்திரை சென்றிருந்தார். அவர், தூரவாசமாய் யாத்திரை சென்றிருந்த சமயத்தில், முத்துக்காடி தொப்ப நாயக்கர் இறந்து போனார். அடுத்து பட்டத்திற்குரியவரை நியமித்தல் தொடர்பாக ஆர்டிசு துரை விசாரணை குறித்து அறியாத நிலையில், இராமசாமி தொப்ப நாயக்கர் வெளியூரிலிருந்ததால் இந்த விசாரணைக்கு அவரால் வர இயலவில்லை. இதனால், இரட்டையம்பாடிப் பாளையம் கும்பினியரால் ஏலம்விடப்பட்டது. இதனை, ஆயக்குடி சமீன்தார் குமாரகொண்டம நாயக்கர் எடுத்து, இரட்டயம்பாடி மிட்டாவுக்கும் தானே உரிமையாளரானார். இதனால் இரட்டையம்பாடிப்பாளையம், ஆயக்குடி பாளையத்திற்குட் பட்ட பகுதியாகிவிட்டது.

ஆயக்குடி (ஆய்குடி)

பழனிக்குக் கிழக்கில் 6கி.மீ. தொலைவிலமைந்துள்ள ஆயக்குடி 'ஆய்' என்ற குலத்தின் பெயரால் உருவான ஊர் என்றும் கருதுவர். புறநானூற்றிலுள்ள 99-ஆவது பாடலில்

Koviloor Digital Library

தென்திசை ஆஅய் குடிபின் றாயின்
பிறழ்வது மன்னோஇம் மலர்தலை உலகே

என மோசியார் ஆய்க்குடியின் சிறப்பினைச் சுட்டுகிறார். ஆயக்குடி சமீன்தாரின் வம்சாவளியைச் சேர்ந்த முன்னோர்கள் டில்லியிலிருந்த பாதுசாவின் சமஸ்தானத்தில் சர்தாராகப் பணிபுரிந்துள்ளனர். தோப்பாப்பணம் செலுத்தாமைக்காக வேண்டி, மராட்டிய தேசத்து மன்னர்களாயிருந்த சின்னபந்து பெரியபந்து மீது டில்லி பாதுசா போர் தொடுத்த போது, டில்லி பாதுசாவின் சார்பாக, ஆயக்குடி சமீன்தாரின் வம்சாவளியில் முன்னோக்கிய பெரி(ய)ஒபள கொண்டம நாயக்கர் படை நடத்திச் சென்று பெரியபந்து சின்னபந்துவைத் தோப்பாப்பணம் கட்டவைத்துள்ளார். இதனைப் பாராட்டி டில்லி பாதுசா நாயக்கருக்கு, உபய வெண்சாமரம், வெள்ளைக்குடை, வெள்ளைக்குதிரை, வெள்ளை டால் ஆகியவற்றை வழங்கியதோடு, அவரது ஊதியத்தையும் உயர்த்தி வழங்கியிருக்கிறார். அதன் பின்னர், பாதுசா, நாயக்கர் வீட்டுப்பெண்ணை மணம் முடிக்க விருப்பம் தெரிவித்ததும், பெண் வழங்க இசையாமல், நாயக்கர் வம்சாவழியினர் அங்கிருந்து இடம் பெயர்ந்து, ஆனை கொண்டி தேசத்திலிருந்த விசயநகரப் பட்டினத்திற்கு வந்துள்ளார்கள். இதனைக் கேள்விப்பட்ட விசய நகரத்து மன்னர் ராயர், இந்த நாயக்கரைத் தம்முடைய இராணுவத்தின் ஒரு பகுதிக்குச் சர்தாராக நியமித்ததோடு, அவருக்குக் சிங்கக்கொடி, மகரக்கொடி, அனுமக்கொடி, கெருடக்கொடி, வெண்டயம், குதிரைக்கு முன்கால் சிலம்பு, முத்துமாலை செலுத்தப்பட்டு சுருட்டி, வெண்படு சுருட்டி, வெள்ளைப்பக்ரடால், சூலடால், குதிரைக்கு முன் செல்லி, பின்செல்லி, அண்டத்துமணி, வீரகாண்டா மணி, கொலுவல்லயத்தில் ஒத்தைமணி கட்டின வாலா போன்ற வெகுமதிகளையும் வழங்கியுள்ளார். அத்துடன், அகோபளம் என்கிற ஊரையும், அதைச் சேர்ந்த நிலவழிக் கிராமங்களையும், அம்பதேவ மகாராயர் சர்வமானியமாகத் தந்துள்ளார்.

இவர்கள் வம்சாவளியில் ஆயக்குடி சமீன்தாராக முதலாவது துரைத்தனம் பண்ணியவர் பெரி(ய) ஒபய கொண்ட நாயக்கர். இவர் துரைத்தனம் பண்ணிய ஆண்டுகள் 31. இவரையடுத்து இவரது குமாரர் ஒபய கொண்டம நாயக்கர் பட்டத்துக்கு வந்தார்.

Koviloor Digital Library

இவர் அகோபளேசுவரப் பெருமாள் கோயிலுக்கு முன்மண்டபம் கட்டினார். மேலப்பள்ளம், பெரும்பள்ளம், கவுஞ்சி என்னும் மூன்று கிராமங்களை உருவாக்கி அங்கு குடிகள் இருக்கும்படி செய்தார். இவர் 25 ஆண்டுகள் பட்டத்திலிருந்த பின்னால், மூன்றாவது பட்டத்திற்கு இவருடைய மகன் கொண்ட நாயக்கர் வந்து, ஒபளாபுரம் என்கிற கிராமத்தை உருவாக்கி ஒபளாபுரம் கோட்டையையும் அமைத்தார். இவர் 40 ஆண்டுகள் பட்டத்திலிருந்த பின்னர், நான்காவது பட்டத்தை அவருடைய மகன் ஒபள கொண்டம நாயக்கர் ஏற்று 18' ஆண்டுகள் துரைத்தனம் பண்ணியுள்ளார். ஐந்தாவதாகப் பட்டமேற்ற குமாரக் கொண்ட நாயக்கர் புதுஆயக்குடி என்ற பெயரில் ஊரை உருவாக்கி, அரண்மனை கட்டி, புதுஆயக்குடி கிராமத்தைச் சுற்றிலும் கோட்டை கட்டி, 'விற்குளம்' என்ற பெயரில் குளமொன்றையும் தோண்டுவித்துள்ளார்.

ஆறாவதாகப் பட்டம் கட்டிக்கொண்ட அவரது மகன் முத்து கொண்டம நாயக்கர், பெரிய குளம், நடுக்குளம் என்ற பெயரில் இரண்டு குளங்களைத் தோண்டுவித்து அக்குளங்களுக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்காக வருதாபட்டினமாற்றில் அணைவாய்க்காலுண்டு பண்ணினார். இவர் காலத்தில் அமரம் பூண்டி என்கிற ஊர் உருவாக்கப்பட்டுக் கோட்டையும் கட்டப்பட்டுள்ளது. இவர் 27ஆண்டுகாலம் பதவியிலிருந்துள்ளார். ஏழாவதாகப் பட்டமேற்று 25 ஆண்டுகள் பதவியிலிருந்த அவரது புதல்வர் பகடால் கொண்டம நாயக்கர் மேல்கோட்டை என்கிற ஊரை உருவாக்கி, குமாரநாயக்கன் குளம் என்கிற பெயரில் குளம் ஒன்றையும் தோண்டச் செய்துள்ளார். அவரது மகனாகிய ஒபள கொண்டம நாயக்கர் எட்டாவதாகப் பட்டமேற்று 11 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார். இவர் காலத்தில் எர்ரம நாயக்கன்பட்டி, கஞ்ச நாயக்கன்பட்டி, உருக்குவாரப்பட்டி, கரிசல்குளம் போன்றவை உருவாக்கப்பட்டுள்ளன. ஒபள கொண்டம நாயக்கரின் மகனாகிய எர்ர கொண்டம நாயக்கர் ஒன்பதாவதாகப் பட்டமேற்றார். இவர் காலத்தில் பொட்டாம்பட்டி என்கிற கிராமமும், ஆயக்குடியைச் சேர்ந்த தேவனாயக்கன் குளமும், உருவாக்கப்பட்டன. பத்தாவதாகப் பட்டமேற்ற முத்தியாலு கொண்டம நாயக்கரின் ஆட்சிக்காலத்தில் கணக்கம்பட்டி கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன், பட்டிக்குளமும், மாப்பிள்ளை நாயக்கன் குளமும் உருவாக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

பதினொன்றாவது பட்டம் வகித்த கொண்டம நாயக்கரின் காலத்தில் சித்தவலசை என்கிற பட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இவரையடுத்துப் பன்னிரண்டாம் பட்டத்திலிருந்த குமார கொண்டம நாயக்கரின் காலத்தில் கோம்பைப்பட்டி என்கிற கிராமமும் ஊமை குமார சேர்வைகாரன் குளம், சொடப்ப நாயக்கன் குளம் போன்ற குளங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. பதின்மூன்றாவதாகப் பட்டத்திற்கு வந்த பெரி(ய) ஒபள கொண்டம நாயக்கர், காடுகளை வெட்டி பல ஆரண்யங்களை சாகுபடிக்கான நிலங்களாக்கினார். பதினான்காவது பட்டமேற்ற குமார கொண்டம நாயக்கர் காலத்தில் பாப்பன்குளம் வாயக்கால் வெட்டப்பட்டுள்ளது. பழைய ஆயக்குடியில் அக்கிரஹாரம் உருவாக்கப்பட்டுள்ளது. பெருமாள்குளம், பச்சள நாயக்கர்பட்டி ஆகியவையும் உருவாக்கியுள்ளனர். அருள்மிகு அகோபள பெருமாள் கோயிலுக்கு கேசவய்யங்கார் என்பவர் ஸ்தானிகமாக நியமிக்கப்பட்டுள்ளார். பெத்துள சாஸ்திரியார், பழனியூர் முத்தைய்யர், சுப்பா சாஸ்திரி, ஸ்ரீரங்கம் வேதவியாச பட்டரய்யங்கார், அண்ணாவையர், சேஷய்யர், பழனியூர் குப்பய்யர் போன்ற பிராமணர்களுக்கு நிலமளிக்கப்பட்டுள்ளது.

இவர் காலத்தில் மதுரை நாயக்க மன்னராக ஆட்சியிலிருந்தவர் திருமலை நாயக்கர். அச்சமயத்தில், மைசூர் மன்னராக இருந்த சாமராஜ உடையார், ஹரிசூரநந்திராஜா என்ற படைத் தலைவரின் தலைமையில் படை ஒன்றை அனுப்பி மதுரை நாட்டைக் கைப்பற்ற முனைந்தார். அப்படை திண்டுக்கல்லை நெருங்கித் திண்டுக்கல்லை முற்றுகையிடத் துவங்கியது. இதனை முறியடிக்க திருமலை நாயக்கர் இராமப்பய்யர் தலைமையில் படை ஒன்றினைத் திண்டுக்கல்லுக்கனுப்பினார். இந்த போர் செலவிற்காக கொண்டம நாயக்கர் ஆயக்குடி சமீன் சார்பாக மூவாயிரம் கலி பணம் வழங்கியுள்ளார். இப்போர் 1630இல் நடந்ததாகக் கருதப்படுகிறது. இராமநாதபுரத்து சீமையை ஆண்டு வந்த கூத்தன் சேதுபதி 1635இல் இறந்த பின்னர் தளவாய் சேதுபதி என்றழைக்கப்பட்ட சடைக்கத் தேவர் சேதுபதி ஆனார். இந்த சடைக்கத் தேவருக்கு வாரிசு இல்லாததால், தனக்குப் பின்னர் தன்னுடைய தங்கை மகன் இரகுநாதனைச் சேதுபதியாக்கப் போவதாக அறிவித்தார்.

Koviloor Digital Library

இதனையறிந்ததும், காலஞ்சென்ற கூத்தன் சேதுபதியின் மகன் தம்பி என்பவர், மதுரை நாயக்க மன்னர் திருமலை நாயக்கரைக் கண்டு, தம்மையே மறவர் நாட்டு மன்னராக்குமாறு வேண்ட, இவ்வேண்டுகோளை ஏற்றுத் தம்முடைய தளவாய் இராமப்பய்யரையும், அவருக்குத் துணைப்படைத் தலைவராக அரங்கண்ண நாயக்கரையும், இராமநாதபுரம் சீமை மீது படையெடுக்கச் செய்தார். இப்போர் செலவுக்காக ஆயக்குடி பாளையப்பட்டின் சார்பாக இரண்டாயிரம் கலி பணம் வழங்கப்பட்டதோடு, இப்போரில் ஆயக்குடி சமீனும் பங்கெடுத்துக் கொண்டது. இவர் 31 ஆண்டுகள் சமீன்தாராக இருந்துள்ளார்.

மதுரை நாயக்க மன்னரின் படைகள் தஞ்சைமேல் போர் தொடுத்த போதும் ஆயக்குடி சமீனும் உடன் சென்று போரிட்டுள்ளார். பதிநான்காவது பட்டத்திலிருந்தவர் 31 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார்.

பதினைந்தாவது சமீன்தாராகப் பட்டமேற்ற கறுத்த கொண்டம நாயக்கர் காலத்தில் ஸ்ரீரெங்கபட்டினத்து அரசர் சமீன்தாரிடம் 4000 கலிபணம் வசூலித்துள்ளார். இவர் 23 ஆண்டுகாலம் பட்டத்திலிருந்துள்ளார். இவர் காலத்தில் மேல்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த வேப்பம்வலசை, செல்லப்பக் கவுண்டன் வலசை ஆகிய இரு கிராமங்கள் ஒன்றாகப்பட்டுள்ளன.

குமார கொண்டம நாயக்கர் என்பவர் பதினாறாவதாகப் பட்டமேற்றுள்ளார். இவர் காலத்தில் இப்பாளையம் ஆண்டொன்றுக்கு 5000 கலிபணம் செலுத்தி வந்துள்ளது. இவர் 21ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார்.

ஆயக்குடியின் 17வது சமீன்தாராக ஒபள கொண்டம நாயக்கர் என்பவர் பதவி வகித்துள்ளார். இவர் பதவியிலிருந்த காலத்தில் மக்லோடு (Mcleod), இராங்ஹாம் (Wrangham), விஞ்ச் (Wynch) போன்றோர் திண்டுக்கல் பகுதியின் மாவட்ட ஆட்சியர்களாக இருந்துள்ளனர். இவர்கள் காலத்தில் ஆயக்குடி சமீன் சார்பாக ஆண்டொன்றுக்கு பதினாறாயிரம் கலிபணம் செலுத்தி வரப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

பெரிய ஒபள கொண்டம நாயக்கர் பதினெட்டாவதாகப் பட்டமேற்றார். இவர் காலத்தில் திப்புவின் மீது ஹைதராபாத்தின் ஆட்சியாளர் நிஜாம் அலியும், லெப்டினென்ட் கர்னல் பிரௌன் அவர்களும் போர் தொடுக்க ஸ்ரீரெங்கபட்டினப் பயணத்திற்காக, தாராபுரம் வந்திறங்கியிருந்த போது, விருப்பாட்சிப் பாளையக்காரரின் தந்தை 500 பேர்களுடன் தாராபுரம் சென்று மாவட்ட ஆட்சியர் ஹீர்தீசு (B.Hurdis) அவர்களையும், லெப்டினென்ட் கர்னல் பிரௌன் அவர்களையும் (lt., col., Brown) சந்தித்து அவர்களுக்காதரவு அளித்துள்ளார். விருப்பாட்சிப் பாளையக்காரர் மேல் ஹீர்தீசும் (B. Hurdis) கர்னர் இன்னிசுதுரை (Ln.col Innes)யும் போர்த்தொடுத்த போதும், இவரது தந்தை ஆங்கிலேயருக்குதவியாகப் பலரை அனுப்பியுள்ளார்.

ஊமத்துரை மருதுபாண்டியரின் உதவியை நாடி வந்தபோது, அவரை சிறுவயதில் இருந்த தம் அரண்மனைக்கு அழைத்துச் சென்றதோடு 1801 சூன் திங்களில் சுதந்திரப் பிரகடனம் செய்து ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுந்ததும், 1801ஆம் ஆண்டு சூலை 30 ஆம் நாள் ஆங்கிலேயர் சிறுவயலைத் தாக்கிக் கைப்பற்றியதோடு அக்டோபர் முதல்நாளில் காளையார் கோயிலையும் கைப்பற்றினர். இப்போரிலும் ஆங்கிலேயருக்கு உதவியாக 300 பேர்கள் ஆயக்குடி பாளையத்தின் சார்பாக அனுப்பப்பட்டுள்ளனர்.

ஆயக்குடி பாளையப்பட்டின் எல்லைகள் கீழ்வருமாறு: கிழக்கெல்லை: விருப்பாட்சி பாளையத்திற்கும், ஆயக்குடி பாளையத்திற்கும் பொதுவான நல்லதங்கா ஓடைக்கு மேற்கு. வடக்கெல்லை: பழனி வட்டம் மறுசலம்பு, பூவலாம்பட்டி எல்லை. தெற்கு மற்றும் மேற்கெல்லை: இடும்பன் மலை கலிங்குப் பாறை, பெருமலை, மேல்மலை கிராமம், இராமபத்திர நாயக்கருக்குரிமையான விட்டிபள்ளம்.

மேற்குறித்த எல்லைகளுக்குட்பட்ட புது ஆயக்குடி கிராமம், அதன் ஐந்து உபகிராமங்கள், அமரம்பூண்டி கிராமம், அதற்குட்பட்ட இரண்டு உட்கிராமங்கள், மேல் கோட்டை கிராமம், அதற்குட்பட்ட 2 உப கிராமங்கள், எர்ரம நாயக்கன்பட்டி கிராமம் அதற்குட்பட்ட உட்கிராமம், கணக்கன்பட்டி கிராமம் அதற்குட்பட்ட உபகிராமம்,

Koviloor Digital Library

பொட்டம்பட்டி கிராமம், அதற்குட்பட்ட உபகிராமம், பச்சய நாயக்கன்பட்டி கிராமம் போன்ற பல கிராமங்கள் ஆயக்குடி பாளையத்தின் கட்டுப்பாட்டிலிருந்துள்ளன.

கி.பி. 1399 (சக ஆண்டு 1321, கலி வருடம் 4500) முதல் கி.பி. 1810 (சக ஆண்டு 1732, கலி வருடம் 4911) வரை 411 ஆண்டுகள் ஆயக்குடி பாளையப்பட்டின் சமீன்தாராகப் பதவியிருந்தவர்களின் பட்டியலாக 18 பேர் சொல்லப்படுகின்றனர்.

பத்தொன்பதாவதாகப் பட்டமேற்றுக் கொண்ட குமார கொண்டம நாயக்கன் கர்னல் மெக்கன்சிக்கு சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்திலிருந்து மேற்குறிப்பிட்டுள்ள செய்திகளைத் தெரிந்து கொள்ளமுடிகிறது. கி.பி. 1810ல் பட்டமேற்றுக்கொண்ட இவர் 16-04-1816ல் (யுவ வருடம் சித்திரைத் திங்கள் 5 ஆம் நாளில்) இவ்விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ளார். பழனி - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பேருந்து நிறுத்தம் அருகில், 10.05.1897 ஆம் ஆண்டில், ஆயக்குடி ஜமீன்தார் குமாரன் முத்துச்சாமி என்பவரின் மனைவி தெய்வானை அம்மாள் அவர்களின் நினைவாக வைக்கப்பட்டுள்ள சுமைதாங்கிக் கல் ஒன்றுள்ளது.

ஆண்டிப்பட்டி

பழனி வட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி கிராமத்தில் சர்வே எண் 10613ஏ இல் உள்ள திருமதி சூ. பார்வதி அம்மாளுக்குச் சொந்தமான நிலத்தில் முதுமக்கள் தாழி கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலம், இக்கிராமத்திற்குத் தென் கிழக்கே சுமார் மூன்று கல் தொலைவில் அமைந்துள்ள மயிலாடும்பாறை என்ற இடத்திற்குத் தென் கிழக்கே அமைந்துள்ளது. இந்த நிலம் அமைந்துள்ள பகுதியில் கறுப்பு சிவப்பு வண்ணப் பானை ஓடுகளும், சிவப்பு வண்ணப் பானை ஓடுகளும், கறுப்பு வண்ணப் பானைகளும் கண்டறியப்பட்டுள்ளன. மயிலாடும்பாறையிலிருந்து குதிரையாற்றுக்குச் செல்லும் சாலையின் கிழக்குப்பகுதியிலும், மேற்குப்பகுதியிலும் கூட தாழியின் பகுதிகளும்,பெருங்கற்காலப் பானை ஓடுகளும் காணப்படுவதால், இப்பகுதியில் சங்க காலத்திலேயே மக்கள் வாழ்ந்துள்ளனர் எனலாம்.

இரட்டயம்பாடி பாளையத்தின் பாளையக்காரராக ஒன்பதாவதாக பட்டமேற்ற நீலகிரிடத் தொப்ப நாயக்கர், மற்றும்

Koviloor Digital Library

பத்தாவதாகப் பட்டமேற்ற அவரது மகன் கட்டாரித் தொப்ப நாயக்கர் காலங்களில் இக்கிராமம் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இக்கிராமம், பிரண்டைக் காட்டுக்கு மேற்காகவும், சக்கிலிச்சி மலைக்குக் கிழக்காகவும் உருவாக்கப்பட்டு குடிகளும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அமரம்பூண்டி

பழனி வட்டத்திலுள்ள ஆயக்குடி குறுவட்டத்திலுள்ள இவ்வூர் தேவத்தூருக்கு மேற்கில் 8 கி.மீ தொலைவிலும், பெருமாநல்லூருக்குத் தென்கிழக்கில் 6 கிமீ. தொலைவிலும் அமைந்துள்ளது. பதின்மூன்றாம் நூற்றாண்டில், கொழிஞ்சிப் பாடியிலுள்ள அழகிய சொக்கநாதர் கோயிலுக்குப் பூசை வினியோகத்திற்காக வேண்டி, பொங்கலூர்க்கா நாட்டு நிம்மணி நஞ்சை புஞ்சை நான்கெல்லைக்கு உள்பட்டவையும், அண்டாவூர் நாட்டு அமரப் பூண்டி நஞ்சை புஞ்சை நான்கெல்லைக்குள் பட்டதுமாகிய இரண்டூர்களும் வழங்கப்பட்டுள்ளன. எனவே இவ்வூருக்கு 'அமரபூண்டி' என்ற பெயர் எழுநூறாண்டுகளாக வழங்கி வருகிறதெனலாம். அமரம்பூண்டியைச் சேர்ந்த கரிசல்குளம், ஆயக்குடி சமீன்தாராக எட்டாவது பட்டத்திலிருந்த ஒபள கொண்டம நாயக்கரால் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

இரவாரூர் (பழனி)

பழனியில் சண்முகநதிக்கரையில் பெரியாவுடையார் கோயில் அமைந்துள்ள கிராமமே இரவாரூர் எனப்படுகிறது. பெரியாவுடையார் கோயிலுக்கு இருவிரால் பரமேசுவரமுடைய நாயனார் கோயில் என்ற பெயர் வழங்கி வந்துள்ளது. இக்கோயிலில், இறைவியை விக்கிரம பாண்டிய கங்க நாராயணச் சக்கரவர்த்தி என்பவர் எழுந்தருளிவித்துள்ளார். இக்கோயிலில் கேரள மன்னர் மரபைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படும் வீர நாராயண வீரகேரளன், வீரகேரள அமரபுஜங்கவர்மன், அதிராஜராஜ ராஜராஜதேவன், பாண்டிய மன்னன் சடையவர்மன் ஸ்ரீவல்லபதேவன், பரமகேசரிவர்மன் பெருமாள் வீரசோழதேவன் (இரு கொங்கையும் இணைத்து ஆண்டவன்) வீர நாராயண அதிசயசோழன், திரிபுவனச்சக்கரவர்த்தி

Koviloor Digital Library

கோனேரின்மை கொண்டான் எனப் பலரது கல்வெட்டுள்ளதால், இக்கோயில் ஏறத்தாழ 10ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை மிகச்சிறப்பான நிலையில் இருந்துள்ளதெனலாம்.

கோதைமங்கலம்

தாராபுரம் சாலையில் பழனிக்கு இரண்டுகல் தொலைவிலுள்ள இரவாரூருக்குக் கிழக்கில் இவ்வூர் அமைந்துள்ளது. பழனிக்கருகிலுள்ள பெரியாவுடையார் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களிலிருந்த இவ்வூருக்கு எல்லசோழச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயர் வழங்கி வந்திருப்பதையும், இவ்வூர் வைகாவூர் நாடு என்ற நாட்டுப் பிரிவிற்குட்பட்டிருந்ததையும் தெரிந்து கொள்ள முடிகிறது.கோதைமங்கலம் என்ற ஊர்ப்பெயரைச் சுட்டுகின்ற கேரள மன்னன் வீர நராயாணன் கேரளனுடைய கல்வெட்டு 10ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படுவதால், இவ்வூருக்கு இப்பெயர் 1000 ஆண்டுகளாக வழங்கி வருவதாகக் கருதலாம்.

பழனி

தமிழகத்தின் மிக முக்கியமான முருகன் கோயில்களுள் பழனிகோயிலும் ஒன்று. ஆறுபடை வீடுகள் முருகனுக்குரியவை. அவற்றில் திருஆவினன்குடி எனும் பெயர் கொண்ட இப்படைவீடும் அடங்கும். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் கேரளம் முதலான அண்டை மாநிலங்களிலிருந்தும் திரளான மக்கள் இத்திருத்தலத்திற்கு வந்து செல்கின்றனர். பெருங்கற்காலச் சின்னங்களான கற்பதுக்கை, முதுமக்கள் தாழி போன்றவை பழனியைச் சுற்றியுள்ள கிராமங்கள் பலவற்றில் கண்டறியப் பட்டுள்ளன. எனவே பெருங்கற்காலந்தொட்டே (கி.மு. 500) இப்பகுதியில் மக்கள் வாழ்க்கை இருந்துள்ளது உறுதிப்படுகிறது.

பெருங்கற்காலத்திற்குச் சமகாலமாகக் கருதப்படும் சங்ககால இலக்கியங்களில் பழனியும், அதனை ஆண்ட அரசர்களும் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. இவ்வூரின் பழம்பெயர் பொதினி என்றும், இப்பகுதியை ஆண்ட மன்னன் ஆவியர் குடியைச் சேர்ந்த வேள்ஆவிக்கோப்பெரும்பேகன் என்றும் அறிகிறோம். இவனைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் பலபடப் பேசுகின்றன.

Koviloor Digital Library

வண்டுபடத் ததைந்த கண்ணி ஒண் கழல்
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள்ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண்

(அகம் பாடல். 1. 1–4அடி)

என்று ஊரும் மன்னனும் அகநானூற்றில் குறிக்கப்படுகின்றனர். பொதினி என்பது பழச்சாறு எனவும் பனை அல்லது தென்னையிலிருந்து கிடைக்கும் பதனி என்றும் பொருள் கொள்ளத்தக்கது.

முழவு உறழ்திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி (அகம் 61 – அடி 15–16)

எனவும் பேசப்படும் பொதினியே பின்னாளில் பழனி என மருவியுள்ளது. பிற்காலத்தில் முருகன் தலமாகச் சிறப்புற்ற போது அறுபடை வீடுகளுள் ஒன்றாக இது கருதப்பட்டது. பழம் ஒன்றின் காரணமாகப் பெற்றோரைப் பிரிந்த முருகக்கடவுள் தனக்கென ஒரு ஊரை உருவாக்கிக் கொண்டு 'பழனி' எனப் பெயரிட்டதாகப் பிற்காலத் திருவிளையாடல் புராணம் மூலம் அறியலாம்.

கடையெழு வள்ளல்களில் ஒருவன் பேகன். இவன் குளிரால் நடுங்கி நின்ற மயிலுக்குப் போர்வை தந்தவன் என்று இவன் கொடைத் தன்மை விதந்து பேசப்படும்.

கொடைத்தன்மையில் எப்படிச் சிறந்தவனோ அத்தன்மை போல் வீரத்திலும் சிறந்தவன் என்று புறநானூறு கூறும் (புறம்.142)

இத்தகைய கொடைச் சிறப்பும், வீரமும் கொண்ட பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து பரத்தையர் மாட்டு ஒழுகினவன் என்று சங்கப்புலவர்கள் அவனை நெறிப்படுத்த எண்ணினர். அதன் காரணமாகக் கபிலர், வன்பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகிய சங்கப் புலவர்கள் பாடியபாடல்கள் புறநானூற்றில் (143,144,145,146,147)இடம் பெற்றுள்ளன. மற்றொரு ஆவியர் குடித்தலைவன் பதுமன் என்ற பெயர்கொண்டுள்ளான்.

இப்பகுதியில் ஆவியர்குடி என்னும் தனிஇனக் குழுவினர் மிகுதியாக இருந்துள்ளனர். எனவே அவர்களின் தலைவன் ஆவியர் கோமான் எனப்பெயர் பெற்றுள்ளான். ஆவி நாடு

Koviloor Digital Library

என்றும் இந்நிலப்பரப்பு அழைக்கப்பட்டுள்ளது. பிற்காலக் கல்வெட்டுகளில் வைகாவி நாடு, வையாவி நாடு வைகாவூர் நாடு என்றும் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இதனை யொட்டியே இப்பகுதி வையாபுரி நாடு என்றும், தற்போது பழனி நகரின் நடுவில் அமைந்துள்ள குளம் வையாபுரிக் கண்மாய் என்றும் பெயர் வழங்குகிறது. ஆயர் இனக் குழுமக்கள் பழனியின் மற்றொரு பகுதியில் வாழ்ந்துள்ளனர். அவர்கள் வாழ்ந்த நாடு அண்டநாடு என வழங்கப்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்தின் நான்கு, எட்டாம் பத்துக்களுக்குரிய பதிகங்கள் 'வேள் ஆவிக்கோ பதுமன் சேரரோடு மணவினைத் தொடர்பு கொண்டிருந்தான் எனக் கூறுகின்றன. வேள் ஆவிக்கோவின் மாளிகை வஞ்சி மாநகரின் அருகாமையில் இருந்தது எனச் சிலப்பதிகாரம் சுட்டும். சேரர்க்கும், ஆவியர்க்கும் இடையே இருந்த மண உறவால் பழனிமலைப் பகுதியில் சேரர் ஆதிக்கம் இருந்தது. கலையமுத்தூரில் கிடைத்த ரோம நாணயங்கள் சங்ககாலத்திலேயே இப்பகுதி வணிகவளமும் செல்வச் செழிப்பும் மிக்கது என்பதைப் புலப்படுத்துகின்றன.

திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டு இலக்கியங்களுள் முதலில் வைத்து எண்ணப்படினும் அதன் காலத்தைக் கடைச் சங்ககாலத்திற்கும் பிந்தியதாகவே கருதுவர். தொடக்ககாலத்தில் மலையே கோயிலாகக் கருதிவழிபடப்பட்டிருக்கலாம். அறுபடை வீடுகளில் அடங்கிய திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருத்தணி ஆகிய இடங்களில் கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பாண்டியர், பல்லவர் கல்வெட்டுகள் உள்ளன.இக்கல்வெட்டுச் சான்றுகள் அவ்வக்கோயிலின் காலத்தை உறுதிப்படுத்த உறுதுணைபுரிகின்றன. ஆனால் பழனியில் உள்ள தண்டாயுதபாணி என்னும் முருகன் கோயிலில் அத்தகைய முற்காலக் கல்வெட்டுகள் இல்லை. எனவே இக்கோயிலின் காலத்தைக் கணிப்பதில் சிரமம் உள்ளது.

தற்போது மலைமீது அமைந்துள்ள கோயிலின் கட்டுமானம் பிற்காலப் பாண்டியர் காலத்ததே என கணிக்கத்தக்கதாய் உள்ளது. பிற்பாண்டியர் கலைக்கே உரிய வெற்றுத் தேவகோட்டங்கள் கொண்டு இதனை உறுதி செய்யலாம். மேலும் கோயில் கருவறையின் வடபுறச் சுவரில் இடம் பெற்றுள்ள

Koviloor Digital Library

சடையவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டும் இக்கோயில் இம்மன்னன் காலத்திற்குச் சிலகாலம் முன்னதாகக் (கி.பி. 13 ஆம் நூ.ஆ) கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது. பாண்டிய நாட்டில் 8-9ஆம் நூற்றாண்டளவில் குடவரைக் கோயில்கள் அமைப்பது பெருவழக்காயிருந்தது. ஆயினும் பழனியில் மலை இருந்தும் இங்கு குடவரைக் கோயில் அமையாதது சிந்திக்கத்தக்க தாயுள்ளது. ஒருவேளை அக்காலத்தில் இப்பகுதியின்பால் பாண்டியர்கள் அதிககவனம் செலுத்த வில்லையோ என எண்ணத்தோன்றுகிறது.

இங்குள்ளகோயிலின் கருவறைச் சுவர்களில் நான்கு கல்வெட்டுகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இவற்றில் ஒன்று கிருஷ்ணதேவராயர் காலத்தைச் சேர்ந்தது (கி.பி. 1520). இக்கல்வெட்டில் தான் ஸ்ரீபழனிமலை வேலாயுதசாமி எனப் பெயர் இடம் பெறுகின்றது. மற்ற கல்வெட்டுகள் இக்கோயில் இறைவனை (முருகனை) இளைய நயினார் என்றே சுட்டுகின்றன. (சிவபெருமானின் இளையமகன்). பரிபாடல் காலத்திலேயே இத்தகைய் கருத்து இருந்துள்ளது.

இங்குக் கருவறையில் அமைக்கப்பட்டுள்ள முருகன் ஆண்டியின் கோலத்தில் கையில் கோல் (தண்டு) ஒன்றை வைத்துள்ள நிலையில் உள்ளார். ஆனால் இச்சிற்பம் மற்ற சிற்பங்களைப் போல கல்லால் செய்யப்பட்டதல்ல. ஒன்பது வகையான மருத்துவப் பொருட்களைச் (நவபாசாணம்) சேர்த்து உருவாக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முன்மண்டபம் ஆகிய அங்கங்களுடன் பிற்பாண்டியர் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும். காலப் போக்கில் பல புதிய கட்டுமானங்கள், மண்டபங்கள், திருச்சுற்று ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

இங்குள்ள நான்கு கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது சடையவர்மன் வீரபாண்டியனின் (கி.பி. 1253 - 83) இருபத்திரண்டாம் ஆட்சியாண்டைச் (கி.பி. 1275) சேர்ந்தது. இக்கல்வெட்டில் பழனிக்கருகில் உள்ள ஆயக்குடி ஊர்க் காரணவர் என்னும் நிர்வாகிகள் கொடுத்த 405 மாக்காணி நிலக்கொடை கூறப்படுகிறது. ஆயக்குடியின் ஒரு பகுதி சுந்தர பாண்டிய நல்லூர் என வழங்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

விசயநகர அரசர் மல்லிகார்ச்சுனர் காலத்தில் (கி.பி. 1446) அவரது பிரதிநிதியாக அன்னமராய உடையார் என்பவர் பழனிபகுதியின் நிர்வாகியாக இருந்துள்ளார். அக்காலத்தில் இளையநயினார் (முருகன்) கோயிலில் மூன்று சந்திகால பூசைக்கும், திருவமுது, நந்தாவிளக்கு, திருமாலை, திருமஞ்சனம் சாத்தவுமான செலவுகளுக்கும் வைகாவூர் நாட்டின் இரவிமங்கலம் கொடையளிக்கப்பட்டுள்ளது. இவ்வூரின் எல்லைகளாகக் கொழுமம் போகிற பெருவழி, பன்றிமலைவழி ஆகியவை கூறப்பட்டுள்ளன. கொடையளிக்கப்பட்ட ஊரான ரவிமங்கலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊராகும். இவ்வூரில் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த முதுமக்கள் தாழிகள், மட்கலங்கள், கிடைத்துள்ளன. கி.பி. 9-10ம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்பாண்டியர் காலப் பாடல் கல்வெட்டு ஒன்று இங்கிருந்து சேகரிக்கப்பட்டு தற்போது பழனி அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கி.பி. 1520ல் விஜயநகர வேந்தர் கிருஷ்ண தேவராயர் காலத்தில் அவருடைய மகாமந்திரியால் சில கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. கல்வெட்டு சிதைந்துள்ளமையால் முழுவிபரம் கிடைக்கவில்லை. இதற்குச் சிறிது காலத்திற்குப் பின்னர் வீரநஞ்சன உடையார் என்னும் பிரதானியின் காலத்தில் பழனி இளையநயினார் கோயிலின் அமுதுபடிக்காகக் கலையமுத்தூர் கிராமம் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. கலையம்புத்தூரில் ரோமானிய நாணயங்களும் முதுமக்கள் தாழியும் கிடைத்துள்ளன. என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட கல்வெட்டுகள் மூலம் பழனி கோயிலுக்கு அருகில் இருந்த மிகப்பழமையான ஊர்களான ஆயக்குடி, இரவிமங்கலம், கலையம்புத்தூர் போன்றவற்றோடு மிகுந்த தொடர்பு இருந்தது பெறப்படும்.

பழனிமலைக்கு இணையாக அதற்கு அருகிலேயே மற்றொரு மலை இடும்பன்மலை என்ற பெயரில் அமைந்துள்ளது. புராணக்கதைகளின்படி இடும்பன் என்னும் ஒருபக்தன் சிவகிரி, சக்திகிரி என்னும் இரண்டு மலைகளைக் காவடி போல் கட்டிவந்ததாகவும் அவையே பழனிமலை, இடும்பன்மலை எனப் பெயர் பெற்றதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.

Koviloor Digital Library

பழனி நகரின் மையத்தில் பெரிய நாயகி அம்மன் என்ற பெயரில் ஒரு பழமையான கோயில் உள்ளது. இக்கோயில் தற்போது முற்றிலும் புதுப்பிக்கப்பட்டுவிட்டது. பழனிமலை மிக முக்கியத்துவம் வாய்ந்த முருகன் தலமாகி விட்டபடியால் பல்வேறு சமூகமக்களும் தங்களுக்கெனப் பல அறக்கட்டளைகளை நிறுவி விழாக்காலங்களில் அவற்றைச் செயல்படுத்துகின்றனர். பல சமூகத்தவர்களும் தங்களுக்கென மடங்களை நிறுவி அதில் அன்னதானம் முதலான அறச்செயல்களை மேற்கொள்ளுகின்றனர்.

பழனியில் கிடைத்த தேவேந்திரகுல வேளாளர் (பள்ளர் - மள்ளர்) சமூகத்தவரின் செப்பேடு ஒன்று அச்சமூகம் பற்றிய சில தகவல்களைத் தருகிறது. இச்செப்பேட்டின் காலம் கி.பி.1528 எனப் பதிப்பாசிரியர்களால் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது தவறானதாக இருக்கலாம். ஏனெனில் செப்பேட்டில் மதுரை திருமலை நாயக்கரின் (கி.பி. 1623 - 59) பெயர் வரை இடம் பெற்றுள்ளதால் இச்செப்பேடு 17-18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக்கொள்வதே பொருந்தும். இச்செப்பேட்டில் தேவேந்திர பள்ளர் இனத்தவர் ஒன்று கூடி பழனியில் மடம் ஒன்று அமைத்து, வரும் பரதேசிகளுக்கு உப்பு, ஊறுகாய், நீராகாரம் தருமம் செய்துள்ளனர். கோயிலுக்கு வேண்டிய திருவிளக்கு, திருமஞ்சனம், தண்ணீர்ப்பந்தல் நந்தவனம் அமைத்துள்ளனர். விநாயக சதுர்த்தி, சரஸ்வதி பூசை, கந்தசட்டி, சங்கராந்தி (தைப்பொங்கல்) சிவராத்திரி ஆகிய விழா நாட்களைக் கொண்டாடியுள்ளனர். இச்செலவுகளுக்காக இவர்களுக்குள் வசூலிக்கப்பட்ட வரிவிபரங்களும் கூறப்பட்டுள்ளன.

பல்வேறு சமூகங்களும் இக்கோவில் விழாக்களிலும், வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு செயல்படுவதால் இவ்வூரும்மிகக் குறிப்பிடத்தக்க சுற்றுலாத் தலமாக வளர்ந்து வருகிறது. இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தில் இயங்கும் இக்கோயிலில் பக்தர்களுக்கு இழுவைரயில், தொங்கும் ரயில் முதலான வசதிகளும் உள்ளன. திண்டுக்கல் மாவட்ட வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஊராகத் திகழ்கிறது பழனி நகரம்.

Koviloor Digital Library

இரவிமங்கலம்

பழனிக்கு மேற்கில் சுமார் 12கி.மீ. தொலைவில், நெய்க்காரப்பட்டி அருகில் அமைந்துள்ள இரவிமங்கலம் குளத்தின் மதகு அருகே, மண்ணில் புதைந்திருந்த 9-10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டொன்று கண்டறியப்பட்டுள்ளது. இக்கல்வெட்டிலிருந்து இப்பகுதியில் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டு காலமாக இந்தக் கண்மாய் பயன்பாட்டிலிருந்து வருவதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

நெய்க்காரப்பட்டி

பழனி வட்டத்திலுள்ள நெய்க்காரப்பட்டி குறுவட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. நெய்க்காரப்பட்டியில் ஓர் அரண்மனையுடன் பல சிற்றூர்களை உடையதாக, ஒரு ஜமீனுக்கு இணையாக, பழனிவட்டத்தில் நெய்க்காரப்பட்டி எஸ்டேட்டின் புகழ் பரந்து விரிந்துள்ளது. குள்ளம நாயக்கர் என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்டு வரும் இக்குடும்பத்தினர் பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் பல திருப்பணிகளைச் செய்திருப்பதோடு பழனியில் சத்திரங்களையும் உருவாக்கி யுள்ளதாகக் கூறப்படுகிறது.

புஷ்பத்தூர் (திருப்பூவனம்)

பழனி வட்டத்திலுள்ள கோரிக்கடவு குறுவட்டத்தில், பழனி உடுமலைப்பேட்டை சாலையில் புஷ்பத்தூர் அமைந்துள்ளது. திருக்களாக்குடியிலுள்ள கல்வொட்டொன்றில் அண்டநாட்டுப் பகுதியைச் சேர்ந்த 'திருப்பூவனம்' சுட்டப்பட்டுள்ளது. இத்திருப்பூவனமே இன்று 'புஷ்பத்தூர்' என்ற பெயரில் வழங்கி வருவதாகக் கருதலாம். இத்திருப்பூவனத்துக் கோயிலுக்குத் தேவதானமாக இருந்த கல்யாண சுந்தர நல்லூரைச் சேர்ந்த வீரபாண்டிய காலிங்கராயருக்கு முள்ளிக்குடியாகிய முடிவழங்கு பெருமாள் நல்லூரின் காராண்கிழமை உரிமை வழங்கப் பட்டிருந்தமையை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டாகையால், இவ்வூர் 13 ஆம் நூற்றாண்டளவிலேயே சிறப்புமிக்க ஊராக இருந்துள்ளதெனலாம்.

Koviloor Digital Library

பெத்தநாயக்கன்பட்டி:

பழனி வட்டம் பெத்த நாயக்கன்பட்டி கிராமத்திற்கு மேற்கில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு அருகில், பெத்த நாயக்கன்பட்டியிலிருந்து ஆத்துமேட்டிற்குச் செல்லும் பாதைக்கருகில் கல்திட்டைகள் கண்டறியப்பட்டுள்ளன. இங்குள்ள கல்திட்டைகள் (Dolmens) நான்கறைகளுடையனவாகக் காணப்படுகின்றன. இவ்வூரின் தென்கிழக்கில் உள்ள சிறிய மேட்டில், தாழியின் உடைந்த பகுதிகளும், கறுப்பு சிவப்பு வண்ணப் பானை ஓடுகளும், கறுப்பு, மற்றும் சிவப்பு வண்ணப் பானை ஓடுகளும் தென்படுகின்றன. ஊருக்கு வடக்கில் உள்ள மில்லுக்கருகிலும் கல்திட்டைகளுள்ளன. இங்கும் தாழியின் உடைந்த வாய்ப்பகுதிகள் காணப்படுகின்றன. அத்துடன், கறுப்பு-சிவப்பு வண்ணப் பானை ஓடுகளும், கறுப்பு வண்ணப்பானை ஓடுகளுமுள்ளன. சண்முக நதியை ஒட்டி அமைந்துள்ள இப்பகுதியில் சங்க காலத்திலேயே மக்கள் வாழ்ந்துள்ளமைக்கு, மேற்குறிப்பிட்ட பெருங்கற்காலத் தொல்பொருட் தடயங்கள் மிகச் சிறந்த சான்றுகள் எனலாம்.

மானூர்

பழனிவட்டத்தில் அமைந்துள்ளது மானூர் என்னும் சிற்றூர். இவ்வூரில் அமைந்துள்ள வீரராஜேந்திர சோளீஸ்வரமுடையார் கோயிலில் சில கல்வெட்டுகள் உள்ளன. அக்கல்வெட்டுகளைக் கொண்டு இவ்வூரின் பழம்பெயர் மானூரான வீரராசேந்திர சோழ நல்லூர் என்றும் இக்கோயிலும் அவன் பெயரால் வழங்கிவருவதையும் அறிகிறோம். இவ்வீரராசேந்திரன் இப்பகுதியை ஆண்ட கொங்கு சோழ மன்னன் ஆவான். (கி.பி.1206 - 12 52) இம்மன்னனின் நான்காம் ஆட்சியாண்டில் (கி.பி. 1210) இக்கோயில் இறைவர்க்கு அமுதுபடி சாத்துப்படி செலவுகளுக்காக பத்துமாநிலம் கொடையளிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் விநாயகர், பிடாரி (பின்னாளில் அழகு நாச்சியார் என அழைக்கப்பட்டாள்) ஆகிய தெய்வங்களுக்கும் அமுதுபடி செலவுகளுக்காக நிலக் கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன. விசய நகர நாயக்கர் காலத்தில் அச்சுத தேவராயர் (கி.பி. 1530 - 1542) காலத்தில் அவருடைய திருமேனிக்கு நன்றாக வேண்டி அவனது நலம் விரும்பிகள் சிலர் நிலக்கொடைகள் செய்துள்ளனர்.

Koviloor Digital Library

வீரபாண்டியபுரமான செல்லூர்

நங்காஞ்சி ஆற்றின் கிழக்குப் பகுதியிலிருந்து குடவனாறுக் கிடைப்பட்ட பகுதியில் அண்டநாடு அமைந்திருந்துள்ளது. தற்போதைய பழனி வட்டத்தில் 'அண்டர்' எனப்படும் ஆயர் மக்கள் வாழ்ந்திருந்த முல்லை நிலப்பகுதியே அண்ட நாடு எனக் கருதுவர். வீரபாண்டியன் தனது ஆட்சியில் இரண்டாமாண்டின் எதிராமாண்டில் (மூன்று) அண்டநாட்டு மின்னுகொடி நெடுமாட வீதி வீரபாண்டியபுரமான செல்லூரில் இருந்தருளி சிவகாசிச் செப்பேட்டை வழங்கியதாக அச்செப்பேடு குறிப்பிடுவதிலிருந்து, வீரபாண்டியன் காலத்தில், வீரபாண்டிய புரமான செல்லூர், மன்னர் வந்து தங்குகின்ற வசதிகளையுடைய சிறப்பான ஊராக இருந்துள்ளதெனலாம். அழகர்கோயிலில் கோயில் அருகிலுள்ள குளத்தின் வடபுற படிக்கட்டொன்றில் காணப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டொன்றிலும் அண்ட நாட்டுச் செல்லூர் குறிக்கப்பட்டுள்ளது (A.R.E. 31/ 1931 - 32).

வேலைசமுத்திரம் (வேலுசமுத்திரம், அய்யம்பாளையம்):

இரட்டையம்பாடி பாளையத்தில் மூன்றாவது பாளையக் காரராகப் பட்டம் வகித்த அகோபளத் தொப்ப நாயக்கர் காலத்தில் வேலைசமுத்திரம் என்ற பெயரில் கிராமம் ஒன்று உருவாக்கப்பட்டு, அக்கிராமத்தின் மேற்குப் பக்கத்தில் பத்திரகாளியம்மன் எழுந்தருளுவிக்கப்பட்டு, அங்கு பூக்குழி இறங்கும் தீமிதித்திருவிழாவும் நடந்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது.

புதுரெட்டையம்பாடி

ரெட்டையம்பாடி பாளையக்காரர்களில் ஐந்தாவது சமீன்தாரான பொன்னம்பலத் தொப்ப நாயக்கா காலத்தில், புதுரெட்டையம்பாடி என்கிற கிராமம், இப்பாளையக்காரர்கள் இதுவரை குடியிருந்து வந்த பகுதிக்குத் தெற்காகவும், கரைவழி அணைத்துறைக்குக் கிழக்காகவும் உருவாக்கப்பட்டு, இவ்வூரில் இவர் குடியிருக்கவும் செய்துள்ளார்.

இவ்வூரின் ஓரமாக அங்காளம்மனுக்காக சன்னதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

சிறுநாயக்கப்பட்டி

ரெட்டையம்பாடி பாளையத்தில், எட்டாவதாகப் பட்டத்திலிருந்த சடலுப தொப்ப நாயக்கர் காலத்தில் சிறுநாயக்கர்பட்டி என்கிற கிராமம் உருவாக்கப்பட்டு, அவ்வூரில் மக்களும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வூரின் தெற்கில் 'வேணுகோபாலர் சன்னதி' என்கிற பெருமாள் கோயில் உருவாக்கப்பட்டு, அக்கோயிலின் பூசைகளுக்காக வேண்டி இரண்டுமா நிலமும் வழங்கப்பட்டுள்ளது.

பெரியகோட்டை

விருபாட்சிக்கும் சத்திரப்பட்டிக்கும் வடக்கில் அமைந்துள்ள இவ்வூரின் பழம் பெயர்கள் ஆழ்வான்கோயில், வீரசோழ தேவநல்லூர் என்பனவாகும். கொங்கு சோழர்களில் 12, 13 ஆம் நூற்றாண்டில் இரு அரசர்கள் வீரசோழன் என்ற பெயரில் இருந்துள்ளனர். இவர்களில் ஒருவர் பெயரால் வீரசோழ தேவ நல்லூர் என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம். இவ்வூரில் சோழீஸ்வரம் உடையார் கோயில் என்ற சிவன் கோயிலும், கதலி நரசிம்மர் கோயில் என்னும் திருமால் கோயிலும் உள்ளன. இவற்றில் கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. சில கல்வெட்டுகளில் பாண்டீசுவரமுடையார்கோயில் என ஒரு சிவன் கோயில் குறிக்கப்படுகிறது. இரண்டு சிவன்கோயிலும் ஒன்றா அல்லது வெவ்வேறா என உறுதிப்படுத்த முடியவில்லை. இவ்வூரில் 18 கல்வெட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை இவ்வூரின் சமய, சமூக வரலாறு தொடர்பான செய்திகளை அறிய உதவுகின்றன.

இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது கோக்கண்டன் குட்டன் என்னும் மன்னன் காலத்திய வட்டெழுத்துக்கல்வெட்டாகும். இம்மன்னன் கொங்குச் சேரமரபினன் ஆக இருக்கலாம். கோக்கண்டனின் மகனாகக் கொள்ளலாம். இது மேலும் ஆய்வுக்குரியது. இக்கல்வெட்டின் காலத்தை கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டு எனக் கருதலாம். பாரதாயன் பிரம்ம ஸ்ரீராஜன் என்பவன் குட்டனின் நான்காம் ஆட்சியாண்டில் இவ்வூரில் உள்ள சிவன்கோயிலுக்கு விளக்குக் கொடை கொடுத்த செய்தி இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

கொங்கு சோழ அரசன் வீரராசேந்திரன் காலத்தியனவாக (கி.பி. 1206 -52) மூன்று கல்வெட்டுகள் சோழீஸ்வரர் கோயிலில் கிடைத்துள்ளன. இம்மன்னனின் 18வது ஆட்சியாண்டில் (கி.பி. 1224) பொங்கலூர்க்கா நாட்டினுள் அடங்கிய புலரியூரில் வாழ்ந்த வெள்ளாளன் பசகணகன் கண்ணப் பேரத்தி என்னும் செயங்கொண்ட காமிண்டன் இச்சோழீஸ்வரர் கோயிலின் திருவாசலில் திருநிலைக்கால் கொடை அளித்துள்ளான். புலரியூர் என்று கல்வெட்டில் கூறப்படும் ஊர்ப்பெயர் இன்று பொருளூர் என மருவி வழங்குகிறது. இக்கோவிலில் வெள்ளாளன் அவிநாசி புளியன் என்பவன் தண்டேசுவரப் பிள்ளையார் சிற்பத்தை அமைத்து, அதற்கு விளக்கு எரிப்பதற்காக பழஞ்சலாகை அச்சு என்னும் காசு ஒன்றையும் கொடையளித்துள்ளான். மேலும் இம்மன்னனின் காலத்திலேயே மகிபாலன் மகள் மல்லம்மை என்பவள் சில காசுகள் கொடையளித்துள்ளாள்.

விக்கிரம சோழனின் (கி.பி. 1273 - 1303) காலத்தியக் கல்வெட்டுகள் மூன்று சோழீஸ்வரர் கோயிலில் காணப்படுகின்றன. இம்மன்னனின் எட்டாவது ஆட்சி ஆண்டில் இவ்வூரில் அமைந்திருந்த திருப்பாண்டீஸ்வரமுடையார் என்னும் இறைவருக்கு ஒருவிளக்கு எரிக்க இவ்வூர் வெள்ளாளன் கரும்பிள்ளை உத்தமன் என்னும் உய்யக் (கொண்டான்) சிரியக்கி பழஞ்சலாகை என்னும் பெயரில் வழங்கிய காசு ஒன்றைக் கொடையளித்துள்ளான். இதனை இக்கோயில் சிவபிராமணர் ஏற்றுச் செயல்படுத்தியுள்ளனர். இம்மன்னனின் இருபதாம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1293ல்) அண்டநாட்டுப் புலரியூரைச் சேர்ந்த வேளாளன் முத்திகளில் மழையன் வேளானான தமிழதரையன் கருவறையில் திருநிலைக்கால் ஒன்றைச் செய்தளித்துள்ளான். மேலும் கி.பி. 1295ல் செயங்கொண்ட சிலைசெட்டி என்பவர் சிரியக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்றைக் கொடையளித்துள்ளார்.

இப்பகுதியில் பிற்பாண்டியர்கள் சிலகாலம் தங்களுடைய ஆட்சியைச் செலுத்தியுள்ளனர். சடையவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுகள் இரண்டும், வீரபாண்டியன் கோனேரின்மை கொண்டான் என்னும் பெயரில் சிலவும் சோழீஸ்வரர் கோயிலில் காணப்படுகின்றன. சடையவர்மன் சுந்தரபாண்டியனின் நான்காம் ஆட்சியாண்டில் திருப்பாக்கியம் என்ற ஊரில் அரியபிராட்டிசுரமுடையார் கோயில் என்னும்

Koviloor Digital Library

சிவன் கோயிலுக்கு வெள்ளாளன் நல்லமங்கைபாகன் பிறைசூடும் பெருமாள் பன்னிரண்டு பணம் கொடையளித்துள்ளான். இதனைக் கொண்டு மார்கழித் திருவாதிரை நாளில் அமுது செய்வதற்கும், ஒரு நாள் திருவீதி உலா எழுந்தருளவும் சிவபிராமணர்கள் இசைந்தனர்.

சுந்தரபாண்டியனின் 29 ஆம் ஆட்சியாண்டில் அண்ட நாட்டு ஆழ்வான் கோயில் பாண்டீசுவர முடையார் கோயிலுக்கு பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த காஞையிருக்கை சோழநல்லூர் பரஞ்சோதி சூரிய தேவன் என்பான் அமுது படிக்கும், சிறுகாலைச் சந்திக்கும் அரிசி வழங்குவதற்காக காசுகள் கொடையளித்துள்ளான்.

வீரபாண்டிய தேவனின் ஐந்தாவது ஆட்சியாண்டில் பாண்டீசுவர முடையார் கோயிலுக்கு மாணிக்கம் பாண்டி என்னும் கைக்கோளன் அச்சு ஒன்று கொடை அளித்தான். அதனை இரண்டு சிவபிராமணர்கள் பெற்று சந்தியாதீபம் ஒன்று ஏற்ற இசைந்தனர். இன்னும் ஓரிரு பாண்டியர் காலக் கல்வெட்டுகள் சிதைந்துள்ளன. அவற்றில் நச்சினார்கினிய நாயனார் என்றும் ஓர் இறைவன் பெயரும் கூறப்படுகிறது. எனவே இவ்வூரில் மூன்று சிவன் கோயில்கள் இருந்திருக்கலாம். அல்லது ஒரே கோயிலில் மூன்று தனித்தனி கருவறைகள் இருந்திருக்கலாம்.

கோனேரின்மை கொண்டான் என்னும் பெயர் தாங்கிய கல்வெட்டு ஒன்று சில தனி நபர் உரிமைகள் பற்றிக் கூறுகிறது. கல்வெட்டுப் பெரிதும் சிதைந்துள்ளதால் செய்திகளை முழுமையாக அறிய முடியவில்லை. வீடுகட்டும் போது இரண்டாம் நிலை (மாடி) கட்டிக் கொள்ளவும், கூடங்கட்டவும், அசைவு இடவும், (Swings), நன்மை, தீமைகளுக்கு உவச்சு கொட்டவும் அனுமதி கொடுத்து கல்வெட்டில் வெட்டப்பட்டுள்ளது. அக்கால சமூக நிலையை, இக்கல்வெட்டு வெளிப்படுத்துகிறது.

மதுரை நாயக்க மரபின் வீரப்ப நாயக்கர் காலத்தில் கதரி நாதப் பெருமாள் கோயில் என்ற கோயிலும், அதனை ஒட்டிய குளமும் உண்டாக்கி பயிர் செய்ய நாலுமா நிலமும் கொடையளிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

திருமலை சின்னப்ப நாயக்கர் தாம் உருவாக்கிய பெரிய கோட்டை கிராமத்தில் கதிரி நாதருக்கும், பாளையக்காரரின் குலதெய்வமான லெகுவம்மனுக்கும், ஈசுவரனுக்கும் கோயில் கட்டியதாகக் கூறப்படுகிறது.

விருப்பாட்சி பாளையக்காரரான திருமலை சின்னப்ப நாயக்கருக்கு அப்பண நாயக்கர், எர்ரண நாயக்கர் என்று இரண்டு தம்பிகள் உண்டு. இவர்கள் இருவரையும் முறையே குத்துலுப்பைக்குத் தெற்காக கொத்தப்பள்ளி தாதம்கோட்டை என்றும், குத்துலுப்பைக்குக் கிழக்காக இடையகோட்டை யென்றும் ஊர் உருவாக்கிக் கொண்டு குடியிருக்கச் செய்துவிட்டு, அவர்களுக்கு மூத்தவனாகிய திருமலை சின்னப்ப நாயக்கர் அவர்களுக்கு மேற்காக ஊர் உருவாக்கி கோட்டை கட்டி குடியிருந்த ஊரே பெரியவரின் கோட்டை என்ற பொருளில் பெரியகோட்டை என்று வழங்கிவருவதாகக் கூறப்படுகிறது.

பெரியகோட்டைப் பகுதியில் கண்டறியப்பட்டுள்ள பெருங்கற் சின்னங்களிலிருந்து, இப்பகுதியில் பெருங்கற் காலத்திலிருந்தே மக்கள் வாழ்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அண்மையில் இங்கு சாலை அமைக்கும்போது முதுமுக்கள் தாழிகள் கண்டறியப்பட்டன.

விருப்பாட்சி பாளையக்காரர்கள் பெரியகோட்டையிலுள்ள லெகுவம்மனையே தங்களது குலதெய்வமாக வணங்கி வந்துள்ளார். தங்கள் குழந்தைகளுக்குப் பாளையக்காரர்கள் லெகுவம்மன் சந்நதியில் மொட்டையடித்துப் பெயர் சூட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளார்கள்.

Koviloor Digital Library

7. வேடசந்தூர் வட்டம்

வேடசந்தூர்

திண்டுக்கல்லிருந்து கரூர் செல்லும் வழியில் பண்டைய முக்கியப் பெருவழியில் அமைந்த ஊர் இது. கொங்குநாட்டைப் பாண்டிய நாட்டோடு இணைக்கும் முக்கிய பெருவழியில் இது உள்ளது. இப்பெருவழியில் அமைந்த இவ்வூர் முக்கிய சந்தை நடைபெறும் இடமாக இருந்து பின்பு பெரிய குடியிருப்பினைக் கொண்ட ஊராகவும் மாறியுள்ளது. வேடர்களோடு தொடர்புடைய சந்தை இவ்வூரில் இருந்தமையால் இது 'வேடர்சந்தையூர்' என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். காலப்போக்கில் இப்பெயரே வேடசந்தூர் என்று மாறியிருக்க வேண்டும்.

இவ்வூர் தமிழ்நாட்டின் வடபகுதியிலிருந்து பழனி செல்லும் பயணிகள் தங்கும் முக்கிய இடமாக இருந்துள்ளது. இவ்வூரில் பழங்காலக் கோட்டை ஒன்று இருந்து அழிந்துள்ளது. இதற்கான தடயங்கள் ஹசரத் சயீது அரபு அப்துர் ரஹிமான் என்ற பெரியார் அடங்கிய தர்காவின் அருகில் காணப்படுகின்றன.

பெரும்புள்ளி

இவ்வூரின் பழையபெயர் பெரும்பள்ளியாகும். இதுவே இன்று பெரும்புள்ளி என்று மருவி வழங்குகிறது. இவ்வூர்ப் பாசன ஏரியின் கரையில் அமைந்த பாறையிலுள்ள கி.பி. 9ஆம் நூற்றாண்டு கல்வெட்டு அவ்வேரியைப் 'பெரும்பள்ளி பெருங்குளம்' என்று குறிப்பிடுகிறது. பெரும்புள்ளிக் கன்னிமார்கோயில் அருகிலுள்ள பாறையிலுள்ள மற்றொரு 9-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு இப்பகுதியை ஆண்ட நாடாள்வார்கள் பற்றி முக்கிய செய்திகளைத் தருகின்றது. முற்காலப் பாண்டியர்களுக்குக் கட்டுப்பட்டுப்பெரும்பள்ளியைச்

Koviloor Digital Library

சுற்றியிருந்த 'பள்ளிநாடு' என்ற சிறுநாட்டுப் பிரிவின் தலைவர்களாக இவர்கள் இருந்துள்ளனர். பாண்டியரின் அதிகாரிகளாகவும், படைத்தலைவர்களாகவும் விளங்கியவர்கள் இந்நாடாள்வார்கள். 'பள்ளிவேளான்கள்' என்று இவர்கள் அழைக்கப்பட்டனர்.

கி.பி. 8,9 ஆம் நூற்றாண்டுகளில் பாண்டியர்க்குப் பல்வகையிலும் துணையாய் நின்ற நான்கு பள்ளிவேளான்களின் பெருமைகளைப் பெரும்புள்ளி கன்னிமார்கோயில் அருகிலுள்ள பாறைக் கல்வெட்டு தொகுத்துக் கூறுகிறது. இவர்களில் கல்வெட்டின் இறுதியில் குறிப்பிடப்படும் பள்ளிவேளான்நக்கன் புள்ளன் இரண்டாம் வரகுணபாண்டியனிடத்துப் பணிபுரிந்தவன். இவனும் இவன் மகன் புள்ளன் நக்கனும் சேர்ந்து பூமிதானமாக நிலம் ஒன்றினைக் கோயில் ஒன்றுக்கு அளித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது.

இக்கல்வெட்டில் பின்வரும் நான்கு பள்ளிவேளான்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

1. பள்ளிவேளான்
2. பராந்தகவேளான்
3. அண்டவேளான் குறும்பராதித்தன் புள்ளன்நக்கன்
4. பள்ளிவேளான் நக்கம்புள்ளன்

இவ்வழிமுறையில் மூத்தவன் முதலாம் இராசசிம்ம பாண்டியனிடத்துப் பணிபுரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் குழும்பூர் போரில் இவன் பங்கு கொண்டு பாண்டியனுக்கு உதவியதாக இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. குழும்பூரில் பல்லவனை இராசசிம்மன் வெற்றி கண்டதாக வேள்விக்குடிச் செப்பேடும் கூறுகிறது.

பள்ளிவேளானின் மகன் பராந்தகவேளான் என்பவன் சோழநாட்டில் உள்ள இடவை என்ற ஊரில் நடைபெற்ற போரில் பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனுக்கு வெற்றியைத் தேடித் தந்தவன். இப்போர் பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் நடைபெற்ற போராகும். இப்போரில் பங்கு கொண்ட பராந்தகவேளானின் மகன் அண்டவேளான் குறும்பராதித்தன் புள்ளனக்கன்

Koviloor Digital Library

ஸ்ரீமாறஸ்ரீவல்லவன் (கி.பி. 815-862) என்ற பாண்டியனிடத்துப் பணிபுரிந்தவன், இம்மன்னனுக்காக இடவை, குடமூக்கு (கும்பகோணம்) முதலிய இடங்களில் பல்லவர்களோடு நடைபெற்ற போர்களில் பங்கு கொண்டவன் குறும்பராதித்தன் புள்ளன்நக்கன் ஆவான். மேலும் இவன் ஆய்வேள் என்ற மலைநாட்டு மன்னருடன் விழிஞம் என்ற கடற்கரைப் பட்டினத்தில் பாண்டியன் நடத்திய போரில் படைத்தலைவனாகக் கலந்துகொண்டான் என்று பெரும்புள்ளி கல்வெட்டு கூறுகிறது. விழிஞம் என்ற கடற்கரைப்பட்டினம் இன்று அரபிக்கடற்கரையில் திருவனந்தபுரத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

குறும்பராதித்தன் புள்ளநக்கனின் மகன் பள்ளிவேளான் நக்கம்புள்ளன் ஆவான். இவன் இரண்டாம் வரகுணன் சிங்கள மன்னருடன் சாளக்கிராமம், சென்னிலம் முதலிய இடங்களில் நடத்திய போர்களில் யானைப்படையைக் கொண்டு சென்று உதவி வெற்றியைத் தேடித் தந்தவன் என்று பல அரிய செய்திகளைப் பெரும்புள்ளிக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. பள்ளிவேளான் நக்கன்புள்ளனும் அவன் மகன் புள்ளன்நக்கனும் சேர்ந்தே வடமதுரைக்கு அருகிலுள்ள இராமநாதபுரம் பாசனயேரியை உருவாக்கியவர்கள் ஆவார்கள்.

எறியோடு கோணக்க முத்துவல்லக் கொண்டம நாயக்கர் காலத்தில் பெரும்பள்ளியில் கோட்டை ஒன்று இருந்தது இதனை முத்துவல்ல கொண்டம நாயக்கர் சண்டையிட்டுக் கைப்பற்றி விரிவுபடுத்தி ஆண்டார் என்று எறியோடு பாளையப்பட்டு வம்சாவளி கூறுகிறது.

இராமநாதபுரம்

வடமதுரையிலிருந்து கானப்பாடி வழியாக சிலுவத்தூர் என்ற கிராமத்தினை அடைந்து அங்கிருந்து வேல்வார்கோட்டைக்குச் செல்லும் வழியில் சென்றால் காட்டாற்று ஓடையின் அருகே பெரிய பாறை ஒன்று இருப்பதைக் காணலாம். இப்பாறையில் கோமாறஞ்சடையன் என்று அழைக்கப்பட்ட இரண்டாம் வரகுண பாண்டியனைக் (கி.பி. 862-885) குறிப்பிடும் தமிழ்க்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

பதினோரு வரிகளில் ஆழமாக இது வெட்டப்பட்டுள்ளது. கல்வெட்டின் அருகே பாண்டியரின் சின்னமாகிய மீனுடன் வில், குத்துவிளக்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுள்ள பகுதி இராமநாதபுரம் வருவாய்க் கிராமத்தில் உள்ளதால் தென்னிந்திய கல்வெட்டு தொகுதி எண். 14ல் இராமநாதபுரம் என்ற ஊரில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முற்காலப்பாண்டியர் அரசியல் வரலாற்றிலும், பொருளியல் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க மிக முக்கியமான கல்வெட்டு இதுவாகும். எனவே தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை இதனைத் தனது வரலாற்றுச் சின்னமாக எடுத்துப் பாதுகாத்து வருகிறது.

இக்கல்வெட்டு இரண்டு இன்றியமையாத செய்திகளைத் தருகின்றது. முதலாவது இரண்டாம் வரகுணன் சோழநாட்டில் கும்பகோணம் பகுதியில் அமைந்த இடவை என்ற ஊரின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றதைக் கூறுகிறது. இரண்டாவது அப்போரில் பங்குகொண்ட பராந்தகப் பள்ளிவேளான் ஆன நக்கம்புள்ளன் கல்வெட்டுள்ள பகுதியில் தனது பெயரால் 'புள்ளனேரி' என்று ஓர் ஏரியைத் தோற்றுவித்து அதற்கு மடையும் அமைத்ததைக் கூறுகிறது.

இரண்டாம் வரகுண பாண்டியனின் கல்வெட்டுகள் சோழநாட்டில் திருநெய்த்தானம், திருச்சி, உறையூர், திருவெள்ளறை, சவந்தினாதபுரம், லால்குடி போன்ற பல இடங்களில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் வரகுணபாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெற்று அங்கு தனது ஆட்சியை நிலைநாட்டியதை உறுதிப்படுத்துகின்றன. இவற்றில் பழமையானது கி.பி. 866ஆம் ஆண்டைச் சார்ந்த திருநெய்த்தானம் கல்வெட்டாகும். எனவே கிபி. 866இல் வரகுணன் சோழநாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெற்று சோழநாட்டில் பல ஊர்களில் தனது கல்வெட்டுகளைப் பொறித்திருக்க வேண்டும் எனலாம். சோழநாட்டில் நடைபெற்ற போர்களில் முக்கியப் போராக இடவை என்ற ஊரில் நடைபெற்ற போர் இருந்திருக்க வேண்டும். எனவே இப்போர் இராமநாதபுரம் கல்வெட்டில் சிறப்பித்துக்

Koviloor Digital Library

கூறப்படுகிறது. அதில் 'சோழநாட்டு இடவை யாத்திரை' என்று இது குறிப்பிடப்படுகிறது.

இடவைப் போரில் முக்கியப் பங்கு வகித்த பராந்தக வேளானான நக்கன்புள்ளன் என்ற அதிகாரி தன் பெயரில் சிலுவத்தூர் பகுதியில் பாசனஏரியை எடுப்பித்துக் கொண்டிருக்கும்போது காலமானான். ஏரியைத் தோற்றுவிக்கும் பணி முடிவடையாமல் குறைப்பணியாக நின்று போனது. அதன்பிறகு அவன் மகன் புள்ளன்நக்கன் தனது தந்தை விட்ட குறைப்பணியைச் செய்து முடித்து வைத்தான். பராந்தகவேளான் இப்பணியைச் செய்த காலத்தில் இப்பணியில் வடுகன் கூற்றன் என்ற தச்சன் ஈடுபட்டான். ஏரியை உருவாக்கும் வேலை நடந்து கொண்டிருக்கும்போதே அவனும் இறந்துவிட்டமையால் அவனது மகனான மற்றொரு தச்சன் பராந்தகவேளான் மகன் புள்ளன்நக்கனிடம் ஊதியம் பெற்று இவ்வேரியைத் தோற்றுவிக்கும் பணியை முற்றுவித்தான். இதற்காக இத்தச்சனுக்குக் காணியாகப் பள்ளிநாட்டின் இரண்டு பகுதிகளிலுமுள்ள ஊர்குளங்களிலிருந்து தலைநீர் பாயும் பதக்கு விதைநெல்பாவும் நிலம் அளிக்கப்பட்டது என்று இராமநாதபுரம் வரகுணபாண்டியன் கல்வெட்டு தெரிவிக்கிறது.

பொதுவாகத் தமிழ்நாட்டில் ஏரிகளை எடுப்பித்த அரசர், அதிகாரிகளின் பெயர்களையே கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஆனால் ஏரிகளைத் தோற்றுவித்த தச்சர்களின் தலைமுறையைத் தெரிவிக்கும் கல்வெட்டு மிகமிகக் குறைவாகும். இந்நிலையில் இராமநாதபுரம் கல்வெட்டு தமிழக வரலாற்றிற்கு, ஏரி செய்யும் தச்சர்கள் பற்றியும் அவர்களது ஊதியம் குறித்தும் மிக முக்கிய செய்தியைத் தருகிறது. கல்வெட்டில் குறிப்பிடப்படும் ஏரி இக்கல்வெட்டின் அருகிலேயே 'பாண்டிக்குளம்' என்ற பெயரில் இன்றும் பாசனக்குளமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

சிங்காரக்கோட்டை

இவ்வூரில் அருணகிரிப்பெருமாள் என்றழைக்கப்படும் பெருமாள் கோவில் ஒன்று உள்ளது. இக்கோயில் கொடிமரம் அருகில் அண்மை காலத்தைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இது அருணகிரிப் பெருமாள் கோயில்

Koviloor Digital Library

கொடிமரத்தை ஈஸ்வர வருடத்தில் கார்த்திகைத் திங்கள் எட்டாம் தேதி சிங்காரக்கோட்டையைச் சார்ந்த கீழப்பெரியூரெட்டிய பட்டியில் உள்ள எ.பூச்சிரெட்டியார் மகன் ரெங்கசாமி ரெட்டியார் செய்து வைத்ததைத் தெரிவிக்கிறது.

இவ்வூரில் 2004ல் தனியார் நிலம் ஒன்றில் செப்புக்கலயம் ஒன்றில் மிளகாய்ப்பணம் என்றழைக்கப்படும் முப்பத்தெட்டு தங்கக் காசுகள் புதைபொருளாய் கிடைத்துள்ளன. இவை கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இக்காசுகளோடு தாலிக்கொடி, வளையல், காதணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடமதுரை

வடமதுரையில் சௌந்தரராஜ பெருமாள் என்றழைக்கப் பட்ட பெருமாள்கோயில் தாயார் சன்னதியுடன் விளங்கி வருகிறது. இக்கோயில் விஜயநகரவேந்தர் காலத்தில் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். கி.பி. 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நாயக்கர்காலம் முடியவுள்ள காலகட்டத்தினைச் சார்ந்த கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இக்கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களின் எல்லைகளும் துவராபதிநல்லூர், பரளிநாட்டுபூவாறு முதலிய ஊர்களும் இவற்றில் குறிப்பிடப்படுகின்றன. கி.பி. 19ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த அம்மன் கோயில் படிக்கட்டிலுள்ள கல்வெட்டு நல்லவ நாயக்கர் மகன் சந்திரப்ப நாயக்கர் செய்த தர்மம் பற்றித் தெரிவிக்கிறது.

நல்லமனார்கோட்டை

இவ்வூரினை ஒட்டி வரட்டாறு என்ற ஆறு ஓடுகிறது. இதன் வடகரையில் நாயக்கர் காலத்தினைச் சார்ந்த தனிக்கல் ஒன்று நடப்பட்டுள்ளது. நல்லபொன்னூர் என்ற ஊரினை அழகர்கோயிலுக்குத் திருவிடையாட்டமாக அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கும் கல்வெட்டு இதில் பொறிக்கப்பட்டுள்ளது. நல்லமனார்கோட்டையில் கோட்டைக்காடு என்ற இடத்தில் நடப்பட்ட கல்லிலும் புதுக்கரட்டுக்குச் செல்லும் வழியின் தென்புறமுள்ள பாறையிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன். இவை தாலவனம் அழகியசேவடியார் என்றழைக்கப்பட்ட

Koviloor Digital Library

பெருமாள்கோயிலுக்குக் கல்வெட்டு பொறித்த இடம் திருவிடையாட்டமாகத் தானமாகத் தரப்பட்டுள்ளதைத் தெரிவிக்கின்றன. திருவிடையாட்டம் என்ற சொல் பெருமாள் கோவிலுக்குத் தானமாகத் தரப்பட்ட நிலங்களைக் குறிக்கும்.

ரங்கமலை

திண்டுக்கல்லில் இருந்து பள்ளப்பட்டி வழியாக கரூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் மேற்கே இம்மலை அமைந்துள்ளது. கூம்பு வடிவில் உயரமாகக் காட்சியளிக்கிறது. இதன் உச்சிக்கு ஏறிச் செல்வது கடினம். இதன் உச்சியில் இப்பகுதி மக்களால் வழிபடப்படும் மல்லீசுரவர் கோயில்உள்ளது. இது பிற்காலப்பாண்டியர் காலத்தில் எடுக்கப்பட்டுப் பின்னர் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதனருகே விளக்குக்கம்பம் ஒன்று உள்ளது. இக்கோயில் அருகேயுள்ள பாறையில் உள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு மூலம் இம்மலையில் பகைமன்னர் படையெடுத்து வருவதைக் கண்காணிக்கும் 'சேமப்படை' இருந்ததை உய்த்துணர முடிகிறது.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தரபாண்டியனின் இக்கல்வெட்டு தென்கரை மணலூர் நாட்டுத் தலையூரைச் சார்ந்த சேமப்படை (உருமப்படை?) வேட்டுவர்களில் குலத்துப்பிள்ளைச் சிறுவனான மேனாப்பனையன் இம்மலையில் சிவனையும் (ஆவுடையாரையும்) சாதிபிள்ளையாரையும (சுப்பிரமணியர்) எழுந்தருளுவித்தான் என்று கூறுகிறது. இக்கல்வெட்டில் இம்மலையின் பெயர் 'பிலங்கன்மலை' என்று குறிப்பிடப்படுகிறது. இதுவே ரெங்கன்மலையாகி இன்று ரங்கமலை என்று அழைக்கப்படுகிறது.

இராமகிரி

திண்டுக்கல்லில் இருந்து குஜிலியம்பாறை வழியாகக் கரூர் செல்லும் சாலையில் உள்ளது. இங்கு கல்யாண நரசிம்மசுவாமி கோயில் என்ற பெருமாள் கோயில் இருக்கிறது. இராமகிரியைச் சாமாநாயக்கர்கள் என்ற குலத்தினர் ஆண்டதாகக் கூறுகின்றனர். இங்கு கோட்டை, அரண்மனை இருந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. இவ்வூரின் அருகே அமைந்த வெள்ளைக்குன்றில் செங்கல்லால் கட்டப்பட்ட மண்டபம் ஒன்று

Koviloor Digital Library

உள்ளது. இதனைத் தர்பார்மண்டபம் என்றழைக்கின்றனர். இரும்பு முறுக்கி சாமாநாயக்கன், தலைவெட்டி சாமாநாயக்கன் என்பவர்கள் இவ்வூரில் இருந்தது பற்றிய கதைகள் வழங்குகின்றன. சாமாநாயக்கர் வழியினர் இராமகிரியிலிருந்து பழனி வரையாத்திரிகர்கள் தங்குவதற்குச் சத்திரம் கட்டியதாகக் கூறுகின்றனர்.

இராமகிரி கலியாண நரசிம்மசுவாமி கோயிலில் கி.பி. 1727ஆம் ஆண்டைச் சார்ந்த செப்பேட்டின் காகித நகல் உள்ளது. இது இப்பகுதியில் நாயக்கத்தனம் பண்ணிய கதிர் சாமைய நாயக்கர் மகன் சாமையநாயக்கன் நரசிங்கசுவாமி கோயில் வழிபாட்டிற்காகவும் கோயில் பணியாளர்கள் ஊதியத்திற்காகவும் திருக்கூர்ணம் என்ற கிராமத்தைத் தானமாக அளித்ததைக் கூறுகிறது. இக்கிராமத்தின் நான்கு எல்லைகளில் உள்ள ஊர்களாக அரவக்குறிச்சி, புங்கம்பாடி,வெள்ளோடு, ஆண்டிப்பட்டி முதலிய ஊர்கள் குறிப்பிடப்படுகின்றன. இக்கோயிலில் பணி செய்யும் அனைத்துச் கொத்துக்களைச் சார்ந்தவர்களாக அர்ச்சகர், பரிசாரகர், நாச்சர், பரிகுளம், வேதபராயணம், அனுசந்தனம், யக்ஞோபவிதம், பஞ்சாங்கம், பெரியமேளத்தார், உள்மேளத்தார், தாசிகள் என்று பலர் செப்பேட்டு நகலில் குறிப்பிடப்படுகின்றனர்.

பிலாத்து

இவ்வூர் பிற்காலப் பாண்டியர் காலத்தில் முக்கிய வணிகநகரமாக விளங்கியுள்ளது. பல்வேறு வணிகர்கள் இவ்வூரில் தங்கியிருந்துள்ளனர். இதனைப் பிலாத்தில் கண்டறியப்பட்ட குலசேகரபாண்டியனின் கி.பி. 1298ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இக்கல்வெட்டு பொறித்த கற்பலகை தற்போது மதுரை அரசு அருங்காட்சியகத்தில் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

பள்ளிநாட்டுப் பிலாத்து வணிகநகரத்தின் வழியாகப் பல்வேறு சரக்குகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இச்சரக்கு களுக்குப் பிலாத்து நகரத்தாரும் பதினெண்விஷையத்தார் என்று அழைக்கப்பட்ட தென்னிந்தியாவில் புகழ்பெற்று விளங்கிய வணிகக்குழுவினரும் இணைந்து வரிவசூல் செய்துள்ளனர்.

Koviloor Digital Library

பிலாத்து நகரத்தார் தங்கள் நகரத்திற்குப் பல்வேறு வணிகச் சரக்குகளின் மூலமாக வந்த மகமைப் பணத்தின் ஒரு பகுதியை (பட்டணப்பகுதி) பதினெண்விஷையத்தாரோடு சேர்ந்து இரண்டு சிவன்கோயில்களின் வழிபாட்டுச் செலவிற்காகத் தானமாக அளித்துள்ளனர் என்று குலசேகரபாண்டியனின் கல்வெட்டு தெரிவிக்கிறது.

வணிகரது தானம் பெற்ற சிவன்கோயில்களில் ஒன்று துவராபதி ஈஸ்வரமுடையார் கோயிலாகும். மற்றொன்று துவரங்குறிச்சிக்கு அண்மையில் அமைந்த ஊர்மன்னுகுறிச்சி உடையார் திருவகத்தீசுவரமுடைய நாயனார் கோயிலாகும்.

பிலாத்துக் கல்வெட்டில் அந்நகரத்தின் வழியாகச் சென்ற சரக்குகளின் பெயர்களும் ஒவ்வொரு சரக்கிற்கும் எவ்வளவு பணம் பட்டணப் பகுதியாக வசூலித்துக் கோயில்களுக்குக் கொடுக்கப்பட்டது என்ற விவரமும் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெயர்		வரியாக வழங்கப்பட்ட பணத்தின் அளவு
மிளகுப்பொதிக்கு	-	அரைமா
பாக்குப்பொதிக்கு	-	அரைமா
மஞ்சள்பொதிக்கு	-	ஒருமா
வெண்காயப்பொதிக்கு	-	ஒருமா
சுக்குப்பொதிக்கு	-	ஒருமா
கடுகுப்பொதிக்கு	-	அரைமா
உப்புப்பொதிக்கு	-	அரைமா
பரும்புடவைபொதிக்கு	-	அரைமா
பரும்புடவைக்கு	-	அரைமா
தென்புடவை கட்டுக்கு	-	அரைமா
அவிழாகட்டுக்கு	-	ஒருமா
நெல்பொதிக்கு	-	அரைமா
அரிசிப்பொதிக்கு	-	ஒருமா
கணபம்பொதிக்கு	-	அரைமா

Koviloor Digital Library

வெண்கலப்பொதிக்கு	-	ஒருமா
கொடிபொதிக்கு	-	ஒருமா
நூல்பொதிக்கு	-	ஒருமா
பரித்திப்பொதிக்கு	-	ஒருமா
பயற்றம் பொதிக்கு	-	அரைமா
ஆமணக்குப்பொதிக்கு	-	அரைமா
அவரைப்பொதிக்கு	-	அரைமா

வணிகச்சரக்குகள் மூலம் வந்த வருமானத்தின் ஒருபகுதியை ஆங்காங்கே இருந்த வணிக நகரத்தாரும் பதினெண்விஷையத்தார் என்றழைக்கப்பட்ட வணிகர் குழுவினரும் சேர்ந்து வணிகச்சரக்குகள் சென்ற பெருவழிகளில் இருந்த கோயில்களுக்குத் தானமாக தந்து உள்ளூர் மக்களின் ஆதரவைப் பெற்றனர். இது போன்ற கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் பல இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன. பிரான்மலை, துவரங்குறிச்சி, சின்னமனூர், கண்ணாபட்டி போன்ற இடங்களிலுள்ள கோயில்களில் இத்தகைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

தொப்பையசாமி மலை

கரூரிலிருந்து திண்டுக்கல் வரும் வழியில் அமைந்த முக்கிய மலை இதுவாகும். வனவிலங்குகள் வாழக்கூடிய நீண்ட உயரம் உடையது. அக்காலத்தில் பாண்டியநாட்டிற்கும் சேரநாட்டிற்கும் எல்லையாகக் கரை ஒன்று கல்லால் நீண்ட சுவராகக் கட்டப்பட்டது. இது மதில்கரை என்று அழைக்கப்பட்டது. தற்போது மதுக்கரை என்று வழங்கி வருகிறது. மதில்கரை தொப்பையசாமி மலை வழியாகச் சென்றமைக்கான தடயங்கள் இன்றும் காணப்படுகின்றன. மாயனூர் மதுக்கரையிலிருந்து இராமகிரி காடுகளுக்கு இடையே மதில்கரை செல்கிறது.

பாடியூர்

இவ்வூரில் சாலையின் வடபுறமுள்ள பாறையில் கி.பி.14-15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மிகவும் சிதைந்துபோன கல்வெட்டு காணப்படுகிறது. இது இப்பகுதியில் இருந்த சிவன்கோயிலுக்கு

Koviloor Digital Library

அளிக்கப்பட்ட நிலக்கொடை பற்றி தெரிவிக்கிறது என ஊகிக்க முடிகிறது. அந்நிலக்கொடை ஆவணத்தில் கையொப்பம் இட்ட பலரது பெயர்கள் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. இவ்வூரின் தனிக்கல்கோட்டை மேட்டில் பிற்காலத்து மந்திரக்கல்வெட்டுகள் சில உள்ளன. இவ்வூரில் சிலர் வீடு கட்டுவதற்காக மண்ணைத் தோண்டிய போது பிற்பாண்டியர் காலப் பானைகள் சில முழுமையாக வெளிப்பட்டுள்ளன. அவை வீட்டுப்பயன்பாட்டிற்கென செய்யப்பட்டவையாகும். இதன் மூலம் இவ்வூர் பிற்பாண்டியர்காலம் முதல் நிலைபெற்றிருந்த ஊர் என அறியலாம்.

எரியோடு (எறியோடு) பாளையம்

வேடசந்தூர் வட்டத்திற்குள் உள்ள எரியோடு குறுவட்டத்திற்குள் உள்ள எரியோடு, திண்டுக்கல் சீர்மையிலிருந்த 26 பாளையங்களுள் ஒன்றாகத் திகழ்ந்துள்ளது. இப்பாளையத்திற்குட்பட்டனவாக, எரியோடு, பாகாநத்தம், (பாகனேத்தம்), பெரும்பள்ளி (பெரும் புள்ளி), நல்லமனார் கோட்டை, பாடியூர், குத்தூர், ஆலத்துவாரப்பட்டி, மாறம்பட்டி, மல்லதுவாரப்பட்டி, சீராமநத்தம், சித்தூர், தென்னம்பட்டி, பேலாத்து (பிலாத்து), கொம்பேறுபட்டி (கொம்பேறிபட்டி) கொல்லம்பட்டி (கொல்லப்பட்டி), சிங்காரக் கோட்டை, வேலாயுதம் பாளையம், புத்தூர், பெரிய கோம்பை, பஞ்சந்தாங்கி, அயிலூர் ஆகிய 21 ஊர்கள் இருந்ததாகக் கருதப்படுகிறது. இக்கிராமங்களுள் பெரும்பாலானவை, வேடசந்தூர் வட்டத்திற்குள் உள்ள எரியோடு குறுவட்டம், வடமதுரை குறுவட்டம். அய்யலூர் குறுவட்டம் ஆகிய மூன்று குறுவட்டங்களுக்குள் அமைந்துள்ளன.

இந்த பாளையத்தின் முதல் பாளையக்காரராகக் கருதப்படும் வல்லக்கொண்டம நாயக்கர், சுக்காம்பட்டி பாளையக்காரரான பாலமுக் கொண்ட முத்தைய நாயக்கருடைய தம்பியாகக் கருதப்படுகிறார். இவர் மதுரை நாயக்க மன்னர் திருமலை நாயக்கரின் சமகாலத்தவர் என்றும் கருதுவர் கன்னிவாடி பாளையக்காரர் அப்பைய நாயக்கரும், எரியோடு கிராம நாட்டாண்மையாக இருந்த காளக் கவுண்டர் என்பவரும் சேர்ந்து வல்லக் கொண்டம நாயக்கருக்கு எரியோடு பாளையக்காரராகப்

Koviloor Digital Library

பட்டம் கட்டி வைத்ததாக கூறப்படுகிறது. மேலும் வல்லக் கொண்டம நாயக்கருக்காக வேண்டி நாட்டாண்மை காளக்கவுண்டரே தம்முடைய சொந்தப் பொருட் செலவில் எரியோட்டில் மண்கோட்டையும், அரண்மனையும் கட்டிக் கொடுத்துள்ளார். முதலில் நல்லமனார் கோட்டை, பாடியூர், குளத்தூர் (கொளத்தூர்), மல்லுவார் பட்டி, ஆலகுவாரப்பட்டி, சிராமனேத்தம், சித்தூர் ஆகிய 10 கிராமங்கள் எரியோடு பாளையத்திற்குட்பட்டனவாக இருந்துள்ளன. இவர் தம் பாளையத்தின் சார்பாக மதுரை நாயக்க மன்னரான திருமலை நாயக்கருக்கு 4000 கலி பணம் செலுத்திக் கொண்டு 30 ஆண்டுகாலம் பதவியிலிருந்துள்ளார்.

இவருக்கடுத்து இவருடைய மகன் கறுங்கண் வல்லக் கொண்டம்ம நாயக்கர் பட்டமேற்றுப் பத்தாண்டுகள் பதவியிலிருந்துள்ளார். இவர் காலத்தில் தென்னம்பட்டி, பாகநேத்தம் (பாகா நத்தம்), கொம்பேராம்பட்டி, பிலாத்து ஆகிய நான்கு கிராமங்கள் இப்பாளையத்திற்கு உட்பட்டுள்ளன. பாகநேத்தம் கிராமத்தில் 12 கொத்தளங்களுடனே கோட்டை கட்டப்பட்டு அதுவே இராசதானி ஆக்கப்பட்டுள்ளது.

இவரைத் தொடர்ந்து இவருடைய மகன் ஆறுமுக வல்லக் கொண்டம நாயக்கர் பட்டமேற்று முப்பதாண்டு காலம் பதவியிலிருந்துள்ளார். இவர் காலத்தில் சிங்காரக் கோட்டை, கொல்லப்பட்டி, வேலாயுதம் பாளையம், புத்தூர், கோம்பை, பஞ்சந்தாங்கி, அயிலூர், போன்ற கிராமங்கள் இப்பாளையத்திற்கு உட்பட்டவையாகியுள்ளன.

இவர் காலத்தில் இப்பாளையம் மைசூராரின் கட்டுப்பாட்டிற்குட்பட்டுள்ளது. தோப்பாப் பணமாக 5000 பணம் செலுத்திவர நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நான்காவது பட்டத்தில் இவருடைய மகன் முத்துக் குமாரவேல் வல்லக் கொண்டம நாயக்கரிருந்துள்ளார். நாற்பதாண்டு காலம் பதவியிலிருந்துள்ள இவர் காலத்தில் தோப்பாப்பணமாக 5000 கலி பணம் திண்டுக்கல்லில் இருந்த ஆரணி இராம நாயக்கரிடம் செலுத்தி வரப்பட்டுள்ளது. இவருக்கடுத்து இவருடைய மகன் முத்துக்குமார வேல் வல்லக் கொண்டம நாயக்கர் பத்தாண்டுகள் பதவியிலிருந்துள்ளார்.

Koviloor Digital Library

ஆறாவது பட்டத்தில் முத்துக்குமாரவேல் வல்லக் கொண்டம நாயக்கரின் மகன் முத்து குமாரவேல் வல்லக்கொண்டம நாயக்கர் பத்தாண்டு காலம் பதவியிலிருந்துள்ளார். இவர் காலத்தில் எரியோடு பாளையம், மீர் சாயுபுவின் (Mir Saheb, the brother in law of Hyder Ali) மேற்பார்வைக்குட்பட்டிருந்துள்ளது. தமக்குச் செலுத்திவரப்பட வேண்டிய தோப்பாப்பணத்தைச் சரிவர செலுத்தி வராத காரணத்திற்காகக் கன்னிவாடி, சொக்கம்பட்டி, தொட்டியன் கோட்டை, பல்லியப்ப நாயக்கனூர், தேவதானப்பட்டி போன்ற பாளையங்களோடு எரியோடு பாளையமும் ஜப்தி செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. சையிது சாயிபு அவர்கள் எரியோட்டின் பேரில் போர் செய்து, முத்துக் குமாரவேல் வல்லக் கொண்டம நாயக்கரைப் பிடித்துக் கொண்டு போய் திண்டுக்கல் மலைமீது ஐந்தாண்டுகள் வைத்திருந்ததாகவும், அப்போது நாயக்கர் 12 வயதுடைய சிறுவனாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. ஆங்கிலேயக் கம்பெனியாரின் சார்பாக மேஜர் மக்லூட்டு துரையவர்கள் திண்டுக்கல்லைக் கைவசப்படுத்திக் கொண்ட பின்னர், வல்லக் கொண்டம நாயக்கர் பேரில் தயவு செய்து, 7000 பணம் தீர்ப்பு செய்து போர்டுக்கனுப்பி வைத்துள்ளார். அடுத்து மேஜர் ஆர்டிசுதுரை அவர்கள், எரியோடு பாளையக்காரரைத் திண்டுக்கல்லுக்கு வரச் சொல்லி ஆணையிட, ஆணையை ஏற்று இப்பாளையக்காரர் ஆர்டிசுதுரையைச் சந்திக்கச் செல்லாதிருக்க திருச்சியிலிருந்து இரண்டு படைக்குழுவினர் போருக்கு வர, பயந்து போன பாளையக்காரர் ஓடிப் போயுள்ளார். இதனைத் தொடர்ந்து எரியோடு பாளையம் ஜப்தி செய்யப்பட, பாளையக்காரர் திண்டுக்கல்லுக்கு வந்து, ஆர்டிசுதுரை அவர்களைச் சந்திந்துள்ளார். ஆர்டிதுரையும் இவரை ஏற்றுக்கொண்டு, மாதத்திற்கு நூறு ரூபாய் ஊதியம் நிர்ணயித்துள்ளார். அத்துடன் உடமைகளையும் விரைவில் வழங்குவதாக உறுதி அளித்துள்ளார். மேஜர் பேரிசு துரையவர்களால் அழைக்கப்பட்டு, அவரைச் சந்திப்பதற்காக, முத்துக் குமாரவேல் வல்லக்கொண்டம நாயக்கர், மதுரைக்குச் சென்றிருந்த போது மதுரையிலேயே மரணமடைந்துள்ளார். இவருக்குப் பிள்ளையில்லாததால், இவருடைய சகோதரரான சின்னசாமி வல்லக்கொண்டம நாயக்கருக்கு மாதம் ரூ 100 சம்பளம் வழங்கி வரப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

எரியோடு பாளையக்காரர்களின் மரபு வழிப் பட்டியல் கீழ்வருமாறு.

1. பாலமுக்கொண்டு கோணக்கழுத்து வல்லக் கொண்டம நாயக்கர் – 30 ஆண்டுகள்
2. கறுங்கன் வல்லக் கொண்டம நாயக்கர் – 10 ஆண்டுகள்
3. ஆறுமுக வல்லக் கொண்டம்ம நாயக்கர் – 30 ஆண்டுகள்
4. முத்துக் குமாரவேல் வல்லக் கொண்டம நாயக்கர் – 40 ஆண்டுகள்
5. முத்துக் குமாரவேல் வல்லக் கொண்டம நாயக்கர் – 10 ஆண்டுகள்
6. முத்துக் குமாரவேல் வல்லக்கொண்டம நாயக்கர் – 10 ஆண்டுகள்

பல்லியப்ப நாயக்கனூர் (கூவக்காபட்டி)

வேடசந்தூர் வட்டத்தில் உள்ள கோவிலூர் குறுவட்டத்திற்குள், திண்டுக்கல்லுக்கு வடக்கில், சுமார் 25 கிமீ தூரத்திலுள்ள கூவக்காபட்டி கிராமத்திற்கு முன்னர் பல்லியப்ப நாயக்கனூர் என்ற பெயர் வழங்கி வந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வூரின் பெயரால் திண்டுக்கல் பகுதியில் பாளையம் ஒன்று செயல்பாட்டிலிருந்து வந்துள்ளது. இப் பாளையத்தின் பாளையக்காரர்களுடைய மரபு வழியைக் கி.பி. 1435 முதல் தெரிந்து கொள்ள முடிகிறது.

கி.பி. 1435 அளவில் டில்லி பாதுஷாவின் படை ராயர் சமஸ்தானத்தின் மீது போர் தொடுக்க மேற்பட்ட போது வல்லாள மாக்கி நாயக்கர், அவருடன் சேர்ந்த ஒன்பது குடைக்காரர்களையும் கூட்டிச் சென்று, டில்லி பாதுஷாவின் படையுடன் போரிட்டு, இராயருக்கு வெற்றி தேடித்தந்துள்ளார். இதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்த விசயநகர வேந்தர், அவரை ஆயிரம் பேருக்குத் தளகர்த்தராக நியமித்துள்ளார். அத்துடன், நிகளங்க மல்லனென்றும், வல்லக்க ராயன் என்றும் சிறப்புப் பட்டங்களை வழங்கியுள்ளார்; மேலும், பலவித ஆடை ஆபரணங்கள், பல்லக்கு, வெள்ளைக் குதிரை, பகல் தீவட்டி போன்றவற்றை ஈந்து சிறப்புச்செய்துள்ளார். மதுரைக்கு வடமேற்கிலுள்ளதும், திண்டுக்கல் சீர்மையைச் சேர்ந்ததுமான அல்லி நகரம், வெல்லம்பட்டி, நத்தம்பட்டி, கூத்தம்பாறை, வக்காப்பட்டி, உசிலம்பட்டி, சீராமநத்தம், மல்லப்பட்டி, குளந்தைப்பட்டி, சாதிலியப்பட்டி, பெறெனப்பட்டி போன்ற

Koviloor Digital Library

ஊர்களடங்கிய பகுதியில் வேடர், கள்ளர் பயம் நீக்கி, பரிபாலனம் செய்துவரும் பொறுப்பும் வல்லாளமாக்கி நாயக்கருக்கு வழங்கப்பட்டது.

இவர் 33 ஆண்டுகள் பதவியிலிருந்த பின்னர், இவரது மகன் இலக்கம நாயக்கர் 42 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார். இவருடைய துணைவியாரின் பெயர் காமலம்மாள். அவருடைய மகன் வல்லாளமாக்கி நாயக்கன், அடுத்து 15 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார். இவருடைய துணைவியார் பெயர் முத்தம்மாள். இந்த வல்லாள நாயக்கர் காலத்தில் மதுரையில் சந்திரசேகர பாண்டியன் ஆட்சியிலிருந்ததாகவும், தம்முடைய பாளையத்திற்குரிய வகையிருப்பாக சக்கரம் நூறு பொன்னை வல்லாள நாயக்கர் பாண்டிய வேந்தருக்குச் செலுத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது.

வல்லாள நாயக்கர் 19 ஆண்டுகாலம் பதவியிலிருந்த பின்னர், அவருடைய மகன் காம நாயக்கன் பட்டமேற்று 23 ஆண்டுகள் பதவியிலிருந்ததாகக் கருதப்படுகிறது. இவருடைய துணைவியார் பெயர் எர்ர சின்னம்மாள், இவர்களுடைய மகன் பெயர் எட்டம்ம நாயக்கர்.

இவருக்கடுத்து பல்லியப்ப நாயக்கர் என்பவர் பட்டமேற்று 41 ஆண்டு காலம் பதவியிலிருந்துள்ளார். இவருடைய துணைவியார் பெயர் வங்காறம்மாள்; மகன் பெயர் கனகய நாயக்கர். பல்லியப்ப நாயக்கர் காலத்தில், புருஷமா நதிக்கு வடக்கில் மண்கோட்டை கட்டப்பட்டுள்ளது. வரதராசப் பெருமாள் கோயில் கட்டப்பட்டுக் கல் மண்டபமும் கட்டப்பட்டு, தினசரி வழிபாடும் நடத்தப்பட்டுள்ளது. விநாயகருக்கும் மண்டபம் எழுப்பப்பட்டுத் தினசரி வழிபாடு நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது.

இவருக்கடுத்த படியாக இவருடைய மகன் கனகய நாயக்கர் பட்டமேற்று 38 ஆண்டுகாலம் பதவியிலிருந்துள்ளார். இவருடைய காலத்தில் இவருடைய துணைவியாரைச் சேர்ந்த பண்ணயத்தில் அல்லிநகரத்தில் வெல்லம்பட்டி ஆற்றில் கல்லினால் அணை கட்டப்பட்டுள்ளது.

அடுத்து கனகய நாயக்கருடைய மகன் காட்டம நாயக்கர் பட்டமேற்று 38 ஆண்டுகாலம் பதவியிலிருந்துள்ளார். இவர்

Koviloor Digital Library

பதவியிலிருந்தபோது, மதுரை நாயக்க மன்னராக விசுவநாத நாயக்கர் இருந்துள்ளார். காட்டம நாயக்கர் மதுரை சென்று, விசுவநாத நாயக்கரைச் சந்தித்துத் தம் பாளையத்தின் சார்பாக மதுரை நாயக்க மன்னருக்கு சக்கரம் இருநூறு பொன் செலுத்திவர இசைவு தெரிவித்துள்ளார்.

காட்டம நாயக்கருக்கு அடுத்தபடியாகப் பல்லியப்ப நாயக்கர் பட்டமேற்றுள்ளார். இவர் காலத்தில் உசிலம்பட்டியில், நரசிங்கப் பெருமாளுக்குக் கோயில் கட்டப்பட்டுள்ளது, இவர் 41 ஆண்டு காலம் பதவியிலிருந்துள்ளார்.

இவருக்கடுத்து சக்களநாயக்கர் பட்டமேற்றுள்ளார். அவருடைய துணைவியார் பெயர் பங்காரு சின்னம்மாள்; இவர் 21 ஆண்டுகள் பதவியிலிருந்த பின்னர் அவைர நாயக்கர் பட்டமேற்று 27 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார். இவர் காலத்தில் புருஷமா நதியில் கல்லணை கட்டப்பட்டுள்ளது.

இவருக்கடுத்து பட்டத்திற்கு வந்த போடி நாயக்கர் காலத்தில் புருசமா நதியில் அணைகட்டி வாய்க்கால் வெட்டப்பட்டுள்து. இவர் காலத்தில் திண்டுக்கல்லில் வரிக்கி வெங்கி(ட)ராயர் இருந்துள்ளதாகக் கூறப்படுகிறது. போடி நாயக்கர் 45 ஆண்டுகள் பதவியிலிருந்த பின்னர், பொம்ம நாயக்கர் 41 ஆண்டுகளும், அவரை யடுத்து கஞ்சி வரத நாயக்கர் 41 ஆண்டுகளும் பதவியிலிருந்துள்ளனர். அடுத்து பதவியிலிருந்த சக்கள நாயக்கர் காலத்தில் இந்தப்பகுதி சையது சாயிபுவின் கட்டுப்பாட்டிற்குள் இருந்துள்ளது. சக்கள நாயக்கருக்குப்பின் அவரது மகன் மூக்கள பல்லியப்ப நாயக்கர் பட்டமேற்று 25 ஆண்டுகள் பதவியிலிருந்துள்ளார். இந்தப் பாளையப்பகுதி ஆங்கிலேயக் கம்பெனியாரின் கட்டுப்பாட்டிற்குள் வந்த பிறகு, தோப்பாப் பணம் சரிவர செலுத்தப்படாததின் காரணமாக ஜப்தி செய்துள்ளார்கள். அதன்பிறகு இந்தப் பாளையக்காரருக்குத் திங்களொன்றுக்கு 65 பணம் கொடுத்துதவி வந்துள்ளனர். இவருக்கடுத்து பெரிய தம்பி பல்லியப்ப நாயக்கர் பட்டத்திலிருந்துள்ளார்.

பல்லியப்ப நாயக்கனூர் பாளையக்காரர்களின் மரபு வழிப் பட்டியல்

Koviloor Digital Library

1. வல்லாள மாக்கி நாயக்கர் – ஆண்டுகள் 33
2. அவர் மகன் இலக்கம நாயக்கர் – ஆண்டுகள் 42
3. அவர் மகன் வல்லாள மாக்கி நாயக்கர் – 15 ஆண்டுகள்
4. வல்லாள மாக்கி நாயக்கர்? – 19 ஆண்டுகள்
5. காம நாயக்கன் – 23 ஆண்டுகள்
6. பல்லியப்ப நாயக்கர் – 41 ஆண்டுகள்
7. கனகய நாயக்கர் – 38 ஆண்டுகள்
8. காட்டம நாயக்கர் – 38 ஆண்டுகள்
9. பல்லியப்ப நாயக்கர் – 41 ஆண்டுகள்
10. சக்கள நாயக்கர் – 21 ஆண்டுகள்
11. அனவர நாயக்கர் – 27 ஆண்டுகள்
12. போடி நாயக்கர் – 45 ஆண்டுகள்
13. பொம்மளு நாயக்கர் – 41 ஆண்டுகள்
14. கஞ்சி வரத நாயக்கர் – 41 ஆண்டுகள்
15. சக்கள நாயக்கர்
16. மூக்கள பல்லியப்ப நாயக்கர் – 25 ஆண்டுகள்
17. பெரியதம்பி பல்லியப்ப நாயக்கர்

சுக்காம்பட்டி பாளையம்

திண்டுக்கல் சீர்மையிலிருந்த பழைய பாளையங்களுள் ஒன்றாகக் கருதப்படும் சுக்காம்பட்டி பாளையம் வேடசந்தூர் வட்டத்தில் அய்யலூரருகிலுள்ள சுக்காம்பட்டியின் பெயரால் அமைந்த பாளையமாகக் கருதப்படுகிறது. இப்பாளையக் காரர்களின் முன்னவராகக் கருதப்படும் பாலமுக்கொண்டு முத்தைய நாயக்கர் கொட்டியம் நாகம நாயக்கரிடத்தில், பணிபுரிந்ததாகக் கூறப்படுகிறது பாதுஷா படையெடுத்து வந்தபோது, கண்டறைக் கோட்டை சின்னதிம்ம நாயக்கருடன், பாலமுக்கொண்டு நாயக்கர் படை நடத்திச்சென்று யானை, குதிரை, ஆயுதம், குடை என்று சிக்கியவற்றையெல்லாம் கொண்டு வந்து விசுவநாத நாயக்கரிடம் வழங்கிப் பாராட்டைப் பெற்றுள்ளனர். விசுவநாத நாயக்கர் மதுரை நாயக்க மன்னரானதும், பாலமுத்திய நாயக்கருக்குத் திண்டுக்கல்லுக்கு

Koviloor Digital Library

வடகிழக்கில் மலையிலிருக்கப்பட்ட நாயக்கர் முத்துணாக் கோட்டை, தாமிரைப்பாடி, கோயிலூர், கன்னிப்பாடி, சித்துவார்பட்டி, பெரியோடு, பாகாநத்தம், தென்னபட்டி போன்ற கிராமங்களை வழங்கி, முத்துனாக் கோட்டை ராசதானியாகக் கோட்டை போட்டுக் கொள்ள அனுமதித்துள்ளார். கொம்பெனுபாடி, பெறும் பள்ளி, பாடிதவூர், குளத்தூர் போன்ற கிராமங்களைச் சாசுவதமாய் அனுபவித்துக் கொண்டு அரண்மனைக்குக் காணிக்கையாக 1500 பணம் செலுத்திவரவும் கட்டளையிட்டுள்ளார்.

அவர் கயத்தாற்றருகில் அருணகிரி என்கிற மலைச்சரிவில் நடந்த போரில் மரணமடைந்துள்ளார். அவருடைய மகனுக்கு மகனாகிய (பேரன்) பாலமுத்தையா நாயக்கர், காடுவெட்டி, சுக்காம்பட்டியை உருவாக்கி, இரண்டு குளங்களை வெட்டிக் கோவில்களும் கட்டியுள்ளார். இவருக்கடுத்தபடியாக பாலமுக்கெண்டு முத்தைய நாயக்கர் என்ற பெயரில் நான்கு பேர் பட்டத்திலிருந்துள்ளனர். இவர்களுக்கடுத்து பட்டத்திற்கு வந்த பாலமுக்கொண்டு முத்யை நாயக்கர் காலத்தில் இராமப்பய்யர் சேதுபதியின் பேரில் போருக்குச் செல்ல, அப்போரில் பாலமுக்கொண்டு முத்தைய நாயக்கரும் கலந்து கொண்டு மரணமடைந்துள்ளார். இதனால் இராமப்பய்யர் இந்த பாலமுக் கொண்டு முத்தைய நாயக்கன் மகனுக்குச் சித்தூர், நானுனீத்தம், மாறம்பாடி, மல்லுவார் பட்டி, ஆலக்கவாரப்பட்டி, தொட்டசை பட்டி, வேலாயுதம் பாளையம், சிங்காரக் கோட்டை, ஆலூர், புத்தூர், கொல்லப்பட்டி, பஞ்சந்தாங்கி, கோம்பை, ரேழியக் கோட்டை, கம்பிளியம்பட்டி போன்ற 15 கிராமங்களை வழங்கியுள்ளார். இக்கிராமங்களைப் பெற்றுக் கொண்ட பாலமுக்கொண்டு நாயக்கருக்குப் பின் பாலமுத்தைய நாயக்கர் என்ற பெயரில் நால்வர் பட்டத்திலிருந்த பின்னர், அடுத்து பட்டமேற்ற பாலமுத்தைய நாயக்கர் காலத்தில் மதுரை நாயக்க மன்னரான சொக்கநாத நாயக்கர், தஞ்சை மன்னரான விசைய ரங்க நாயக்கர் மீது போர் நடத்திச் சென்றபோது இவரும் இப்போரில் கலந்து கொண்டுள்ளார். இவரைப் பாராட்டிச் சொக்கநாத நாயக்கர் இவருக்குச் சிகப்பு ஆடைகளும், முன் ஜல்லி, பின் ஜல்லி, கன்னச் ஜல்லி, துரைக்கு அண்டத்து மணி, பஞ்சவர்ண விருது, காண்டாமணி விருது போன்ற பல்வேறு விருதுகளை

Koviloor Digital Library

வழங்கியுள்ளார். இவருக்குப் பின்னர் நால்வர் பாலமுத்தையா நாயக்கர் என்ற பெயரில் பதவி வகித்தபின்னர், சுக்காம்பட்டி பாளையப்பட்டு ஆங்கிலேயக் கும்பினியாரின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது.

இந்த சுக்காம்பட்டி பாளையக்காரர்களில் பெரும்பாலான பெயர்கள் 'பால முத்தைய நாயக்கர்' என்றே காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

திண்டுக்கல் பகுதியை ஆரணிராமநாயக்கர் நிர்வகித்தார். ஆயினும் பாளையக்காரர்கள் கலகம் செய்தவண்ணம் இருந்தனர். ஹைதர் அலிக்குப்பின் திப்பு சுல்தான் திண்டுக்கல் கோட்டையை வலுப்படுத்தினான். அவன் மதுரையையும் வெற்றி கொள்வதற்காகச் சோழவந்தான் வரை சென்று முற்றுகை யிட்டான். ஆனால் கான்சாகிப் என்னும் முகமது யூசுப்கானின் திறமையால் மதுரை காப்பாற்றப்பட்டது. பின்னர் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி திண்டுக்கல் பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டது. திண்டுக்கல் சீர்மைப் பாளையக்காரர் களும், சிவகங்கை மருது சகோதரர்களும் ஆங்கிலேயர்க்கு எதிராகப் போரிட்டும் வெற்றி பெற இயலவில்லை. திண்டுக்கல் தனிப்பகுதியாகக்கப்பட்டு முதல் ஆட்சியராக (Collector) 'மெக்களூர்' என்னும் ஆங்கிலேயர் நியமிக்கப்பட்டார். கி.பி 1811 முதல் திண்டுக்கல் ஆங்கிலேயரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்திய விடுதலைக்குப் பின் மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கிய திண்டுக்கல் பகுதி 15-9-1985 முதல் புதிய மாவட்டமாகப் பிரிக்கப்பட்டது.

Koviloor Digital Library

பிற்சேர்க்கை

1. பெருங்கற்படை சின்னங்கள் முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்ட இடங்கள்

பெரியகோட்டை	பழனி வட்டம்
கலையம்புத்தூர்	"
நெய்க்காரப்பட்டி	"
அயிரைமலை (அய்யம்பாளயம்)	"
பழனி	"
இரவிமங்கலம்	"
அம்பிளிகை	ஒட்டன்சத்திரம் வட்டம்
ஆண்டிபட்டிகோட்டை	வேடசந்தூர் வட்டம்
கல்வார்பட்டி	"
வேடசந்தூர்	"
கைத்தியன் கோட்டை	"
கல்பட்டி	"
அக்கரைப்பட்டி	திண்டுக்கல்வட்டம்
விராலிபட்டி	"
தவசிமடை	"
நடுப்பட்டி	"
சிறுமலைப்புதூர்	"
நத்தம்	நத்தம் வட்டம்
கோம்னாம்பட்டி	"
தாதப்பட்டி	நிலக்கோட்டை வட்டம்
பெருமாள் மலை	பழனிமலைக் குன்றுப் பகுதிகள் (கொடைக்கானல் வட்டம்)
செண்பகனூர்	"
மாதூர்	"
பழமலை	"

Koviloor Digital Library

அடுக்கம்	கொடைக்கானல் வட்டம்
மச்சூர்	"
பண்ணைக்காடு	"
தாண்டிக்குடி	"
மூலையூர்	"
கதவுமலை	"
மணலூர்	"
கானல்காடு	"
கொடலங்காடு	"
காமனூர்	"
பேத்துப்பாறை	"
பாச்சலூர்	"
ஆலூர்	"
பூலத்தூர்	"
வெள்ளக்கவி	"
கே.சி. பட்டி	"
சோலைக்காடு	"
பெரும்பள்ளம்	"

2. கல்வெட்டுகள் அறியப்பட்ட ஊர்கள்

திண்டுக்கல்வட்டம்

ஊர்		வெளியிடப்பட்ட நூல்	
அகரம்	-	இந்தியகல்வெட்டு ஆண்டறிக்கை எண். 4/1894	
திண்டுக்கல்	-	"	1,2 / 1894
தாடிக்கொம்பு	-	"	291-204 / 1956
தவசிமடை	-	"	323-324 / 1962
ஆவிளிப்பட்டி	-	"	203-204 / 1994
மேட்டுக்கடை	-	"	205 / 1994
பாடி	-	"	206 / 1994
சித்தையன்கோட்டை	-	"	210-218 / 1992
க. பாறைப்பட்டி	-		
வேடப்பட்டி	-		
மேல்கரைப்புத்தூர்	-		
ஆத்தூர்			

Koviloor Digital Library

நத்தம் வட்டம்

ஊர்		வெளியிடப்பட்ட நூல்	
நத்தம்	-	"	250 / 1993
ஊராளிபட்டி (ஏறக்காபட்டி)	-	"	210 / 1994
மீனாட்சிபுரம் (லிங்கமநாயக்கன்கோட்டை)	-		
சமுத்திராபட்டி	-		
உலுப்பக்குடி	-		
அய்யாகுளம்	-		
தனிச்சியம்	-		

நிலக்கோட்டை வட்டம்

மேட்டுப்பட்டி	-	"	44-47 / 1908
	-	"	58-62 / 1910
	-	"	865-869 / 1917
	-	"	246 / 1964
வலையபட்டி	-	"	315 / 1928
அம்மைய நாயக்கனூர்	-	"	486-494 / 1959
கண்ணாபட்டி	-	"	197-199 / 1951
தாதப்பட்டி	-	சங்ககால நடுகல் அண்மையில் கண்டறியப்பட்டது	
சித்தர்கள் நத்தம்	-		
நிலக்கோட்டை	-		

ஒட்டன்சத்திரம் வட்டம்

கொத்தப்புளி	-	இ. கல். ஆ. எண். 489-491/1914	
	-	"	321 / 1962
விருபாட்சி	-	"	57-58 / 1932
கப்பலூர்பட்டி	-		
இடையன் கோட்டை	-		
அம்பிளிக்கை	-	"	97 / 1929
போடுவார்பட்டி	-	"	95,96 / 1929
தேவாத்தூர்	-	"	155 / 1908
	-	"	59 / 1932
பெரியகோட்டை	-	"	449-472 / 1907
	-	"	322 / 1962

S.I.I. Vol XXIII Nos. 455-472

Koviloor Digital Library

பொருளூர்	-	*இ.கல்.ஆ. எண். 154/1908*	
தாசரிபட்டி	-	"	*308-309 / 1960*
வெறியாப்பூர்	-	"	*273 / 1965*
கூத்தம்பூண்டி	-		
கள்ளிமந்தையம்	-		

பழனிவட்டம்

பழனி	-	*இ.கல்.ஆ.எண். 609-612 / 1893*	
	-	"	*371-373 / 1904*
	-	"	*706-721 / 1905*
	-	"	*299-302 / 1956*
			S.I.I. Vol.
ஐவர்மலை	-	*இ.கல்.ஆ. எண். 691-705 / 1905*	
(அய்யம்பாளையம்)			S.I.I. VI. XIV. 22/ 107 - 119
பாலசமத்திரம்	-	"	*94 / 1929*
கீரனூர்	-	"	*586-608 / 1893*
	-	"	*247 -55 / 1964*
	-	"	*234-253 / 1965*
மானூர்	-	"	*150-153 / 1908*
ராசராசபுரம்	-		
நெய்காரப்பட்டி	-		
தாமரைக்குளம்	-		
எல்காம்வலசு	-		

வேடசந்தூர் வட்டம்

நல்லமனார்கோட்டை	-	"	*287-289 / 1956*
பெரும்புள்ளி	-	"	*290 / 1956*
	-	"	*144 / 1957*
வடமதுரை	-	"	*216 / 1994*
வேடசந்தூர்	-	"	*C151 / 1989*
இராமநாதபுரம்	-	"	*690 / 1905*
பிலாத்து	-		
சிங்காரக்கோட்டை	-		
மங்கலப்பள்ளி	-		
ரங்கமலை?	-		

கொடைகானல் வட்டம்

பூம்பாறை	-	"	*3-4 / 1923*
வில்பட்டி	-	"	*371 / 1985-86*
போரூர்	-		
கிழாவரை	-		

Koviloor Digital Library

மஞ்சம்பட்டி	-
தாண்டிக்குடி	-

3. திண்டுக்கல் மாவட்டத்தின் பண்டைய நாட்டுப்பிரிவுகள்

பண்டைய பிரிவு	இன்றைய பிரிவு
1. பொங்கலூர்கா நாடு	பழனி வட்டம்
2. வைகாவூர் நாடு	"
3. அண்டநாடு	ஒட்டன்சத்திரம் வட்டம்
4. ஆற்றூர்நாடு	திண்டுக்கல் வட்டம்
5. அதம்பநாடு	"
6. பூமபாறைநாடு	கோடைகானல் வட்டம்
7. வடகல்லகநாடு	நிலக்கோட்டை வட்டம்
8. தென்கல்லக நாடு	"
9. பாகனூர்க் கூற்றம்	"
10. நெடுங்களநாடு	வத்தலக்குண்டு பகுதி
11. துவராபதிநாடு	நத்தம் வட்டம்
12. புறமலை நாடு	"
13. பள்ளி நாடு	வேடசந்தூர் வட்டம்

4. திண்டுக்கல் மாவட்டத்தை ஆண்ட ஆட்சியாளர்கள்

முற்காலப் பாண்டியர் குடிவழி

1. கடுங்கோன் – கி.பி. 550–600
2. மாறவர்மன் அவனிசூளாமணி – கி.பி. 600–625
3. செழியன் சேந்தன் – கி.பி. 625–650
4. மாறவர்மன் அரிகேசரி – கி.பி. 650–700 (கூன்பாண்டியன்)
5. கோச்சடையன் ரணதீரன் – கி.பி. 700–730
6. மாறவர்மன் முதலாம் ராஜசிம்மன் – கி.பி. 730–767
7. ஜடில பராந்தக நெடுஞ்சடைய வரகுணன் – கி.பி 765–815
8. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் – கி.பி. 815–862
9. இரண்டாம் வரகுணன் – கி.பி. 862–880
10. பராந்தக வீரநாராயணன் – கி.பி. 880–900
11. மாறவர்மன் இரண்டாம் ராஜசிம்மன் – கி.பி. 900–920
12. மாறஞ் சடையன் – கி.பி. 920–946
13. சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் – கி.பி. 946–966

பிற்காலப் பாண்டியர் குடிவழி

1. சடையவர்மன் உடையார் ஸ்ரீவல்லப பாண்டியன் – 1014 – 1031
2. சடையவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் – 1101–1124

Koviloor Digital Library

3. சுந்தர பாண்டியன் மானாபரணன் – 1104–1131
4. சடையவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் – 1131–1143
5. மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் – 1143–1166
6. மாறவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் – 1145 – 1162
7. சடையவர்மன் குலசேகர பாண்டியன் – 1162–1177
8. பராந்தக தேவன்
9. சடையவர்மன் வீரபாண்டியன் 1170–1195
10. சடையவர்மன் ஸ்ரீவல்லப பாண்யன் 1158–1185
11. மாறவர்மன் விக்கிரம பாண்டியன் 1181–1190
12. முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் 1190–1218
13. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் 1216–1244
14. முதலாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் –1218 – 1232
15. இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் – 1237 – 1266
16. இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் – 1238 – 1255
17. முதலாம் சடையவர்மன் விக்கிரம பாண்டியன் – 1241 – 1254
18. இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் – 1250 – 1276
19. முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் – 1250 – 1283
20. முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் – 1254 – 1265
21. இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் – 1254––1265
22. இராஜகேசரி வீரபாண்டியன் – 1266–1286
23. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் – 1268 – 1318
24. இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் – 1277–1294
25. மூன்றாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் – 1278–1301
26. மூன்றாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் – 1281–1289
27. மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியன் – 1297–1342
28. நான்காம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் – 1303–1325
29. மூன்றாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் – 1303 – 1322
30. ஐந்தாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் – 1304–1319
31. முதலாம் மாறவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் – 1308 – 1344
32. முதலாம் சடையவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் – 1308–1341
33. சடையவர்மன் இராஜராஜன் சுந்தர பாண்டியன் – 1310–1332
34. நான்காம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் – 1298–1302
35. இரண்டாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் – 1314–1362
36. முதலாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் –1315–1334
37. ஆறாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் – 1318–1336
38. ஐந்தாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் – 1323–1330
39. ஏழாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் – 1329–1347
40. எட்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் – 1330–1347
41. ஆறாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் – 1337 –1343
42. முதலாம் மாறவர்மன் வீரபாண்டியன் – 1334–1367
43. நான்காம் சடையவர்மன் வீரபாண்டியன் – 1337–1378
44. இரண்டாம் மாறவர்மன் வீரபாண்டியன் – 1341–1388
45. முதலாம் மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் – 1335–1362
46. ஒன்பதாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் –340–1364

Koviloor Digital Library

47. இரண்டாம் சடையவர்மன் விக்கிரமபாண்டியன் – 1334–1352
மதுரை சுல்தானியர் – 1323 – 1371

வீரகேரளர் குடிவழி

1. வீரகேரளன் வீரநாராயணன் – கி.பி. 958–967
2. வீரகேரளன் அமரபுயங்கன் – கி.பி. 967–990
3. வீரநாராயணன் அதிசய சோழன் – கி.பி. 990–1021
4. அதிசய சோழன் வீரநாராயணன் – கி.பி. 1021–1040
5. வீரநாராயணன் வீரகேரளன் – கி.பி. 1040–1069
6. வீரகேரளன் அதிராஜராஜன் – கி.பி. 1069–1092
7. அதிராஜராஜன் ஸ்ரீராஜராஜன் – கி.பி. 1092–1129
8. இராஜராஜன் கரிகாலன் – கி.பி. 1129–1149

கொங்குச் சோழர் குடிவழி

1. முதலாம் வீரசோழன் – கி.பி. 943–980
2. வீரசோழ கலிமூர்க்கன் – கி.பி. 980–1004
3. கலிமூர்க்க விக்கிர சோழன் – கி.பி. 1004–1047
4. அபிமான சோழ ராஜாதிராஜன் – கி.பி. 1085 – 1100
5. ராஜாதிராஜ உத்தம சோழன் – கி.பி. 1100 – 1118
6. இரண்டாம் ராஜாதிராஜ வீரசோழன் – கி.பி. 1118 – 1138
7. உத்தம சோழ வீரநாராயணன் – கி.பி. 1138–1149
8. இராஜகேசரி குலோத்துங்கன் – கி.பி. 1149–1168
9. வீரசோழன் – கி.பி. 1183 – 1206
10. வீரராசேந்திரன் – 1206–1252

மதுரை நாயக்கர் குடிவழி

1. விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529–1564)
2. முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1564–1572)
3. வீரப்ப நாயக்கர் (கி.பி. 1572–1595)
4. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1595–1601)
5. முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.ப. 1601–1609)
6. முத்த வீரப்ப நாயக்கர் (கி.பி. 1609 – 1623)
7. திருமலை நாயக்கர் (கி.பி. 1623 – 1659)
8. முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி. 1659 – 4 மாதங்கள்)
9. சொக்க நாத நாயக்கர் (கி.பி. 1659 – 1682)
10. ரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் (கி.பி. 1682–1689)
11. ராணி மங்கம்மாள் (கி.பி. 1689 – 1706)

Koviloor Digital Library

12. விஜயரங்க சொக்கநாதர் (கி.பி. 1706 – 1732)
13. ராணி மீனாட்சி (கி.பி. 1732 – 1739)

5. திண்டுக்கல் மாவட்டத்திலிருந்த பாளையங்கள்

1. இடையகோட்டை பாளையம் – கம்பளத்து மரபினர் – ஒட்டன் சத்திரம் வட்டம் – புலியூர்நத்தம் குறுவட்டம்.
2. மாம்ப(ா)ரை பாளையம் – கம்பளத்து மரபினர் – ஒட்டன் சத்திரம் வட்டம் – சின்னக்காம்பட்டி குறுவட்டம்.
3. விருப்பாட்சி பாளையம் – பலிஜா மரபினர் – ஒட்டன் சத்திரம் வட்டம் – ஒட்டன் சத்திரம் குறுவட்டம்.
4. பொருளூர் பாளையம் – மேல்கரை தலைய நாட்டு பட்டக்காரர்கள் – ஒட்டன் சத்திரம் வட்டம் தேவத்தூர் குறுவட்டம்.
5. அம்மையநாயக்கனூர் பாளையம் – நிலக்கோட்டை வட்டம் – ஒருத்தட்டு குறுவட்டம் – கம்பளத்து மரபினர்.
6. சந்தையூர் பாளையம் – கம்பளத்து மரபைச் சேர்ந்த தலைமலை இராமச்சந்திரப்ப நாயக்கரின் வம்சா வழியினர் – நிலக்கோட்டை வட்டம் – விருவீடு குறுவட்டம்.
7. தொட்டியன் கோட்டை (தொட்டயன் கோட்டை) பாளையம் – பலிஜா மரபினர் – நிலக்கோட்டை வட்டம் – வத்தலக்குண்டு குறுவட்டம்.
8. பழனி – கம்பளத்து மரபினர் –பழனி வட்டம் – பழனி குறுவட்டம்.
9. இரட்டையம்பாடி பாளையம் – கம்பளத்து மரபினர் – பழனி வட்டம் – பாப்பம் பட்டி (குறுவட்டம்)
10. ஆயக்குடி பாளையம் – பழனி வட்டம் – ஆயக்குடி குறுவட்டம் – கம்பளத்து மரபினர்
11. பல்லியப்ப நாயக்கனூர் (கூவக்காபட்டி) பாளையம் கம்பளத்து மரபினர் – வேடசந்தூர் வட்டம் – கோவிலூர் குறுவட்டம்.
12. சுக்காம்பட்டி பாளையம் – கம்பளத்து மரபினர் வேடசந்தூர் வட்டம் – அய்யலூர் குறுவட்டம்.
13. மடூர் பாளையம் – கம்பளத்து மரபினர் – திண்டுக்கல் வட்டம் – சிலுவத்தூர் குறுவட்டம்
14. மருனூத்து – கம்பளத்து மரபினர் – திண்டுக்கல் வட்டம் – சிலுவத்தூர் குறுவட்டம்.
15. எமக்கலாபுரம் பாளையம் – கம்பளத்து மரபினர் – திண்டுக்கல் வட்டம் – சாணார்பட்டி குறுவட்டம்.
16. தவிசிமடை (தவசி மடு) பாளையம் – கம்பளத்து மரபினர் – திண்டுக்கல் வட்டம் –சாணார் பட்டி குறுவட்டம்.
17. கன்னிவாடி பாளையம் – கம்பளத்து மரபினர் – திண்டுக்கல் வட்டம் – பலக்கானூத்து குறுவட்டம்.
18. அம்பாத்துரை – கம்பளத்து மரபினர்– திண்டுக்கல் வட்டம் – சின்னாளப்பட்டி குறுவட்டம்.
19. நிலக்கோட்டை – நிலக்கோட்டை வட்டம்
20. எரியோடு பாளையம் – வேடசந்தூர் வட்டம் – எரியோடு குறுவட்டம்

6. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அரிய கல்வெட்டுகள்

1. தாதப்பட்டி - சங்ககால நடுகல், கி.மு. 3 ஆம் நூற்றாண்டு - தனிக்கல் (பெருங்கற்கால கற்திட்டையில் இருந்தது)

கல்வெட்டு:

1. ...ன் அடிஒன் பாகல் பாளிய் கல்

2. மேட்டுப்பட்டி சித்தர்மலை - சமணர் குகைத்தளம்- கி.மு. 2.ஆம் நூ.ஆ.

கல்வெட்டு:

அமணன் மதிரை அத்திரன் உறை உதயனஸ

3. உலுப்பக்குடி நடுகல் - கி.பி. எட்டாம் நூற்றாண்டு தனிக்கல்

கல்வெட்டு

1. ஸ்ரீ
2. இரணசிங்க
3. த்துவராபதிவேளார்
4. படை
5. நாயகன் கா
6. ரிசாத்தன்
7. உடும்பகு
8. டி நிரைகொள்ள
9. பின்புசென்று
10. எறிந்து பட்டா
11. ன்
12. பள்ளிவே
13. ளாசாரிகன் சி
14. ய்

4. இராமநாதபுரம் - பாசனயேரிப் பாறைக்கல்வெட்டு - கி.பி. 9 ஆம். நூ.ஆ.

1. ஸ்ரீகோமாறஞ் சடையனோடு சோழ நாட்டிடவை யாத்
2. திரை செய்த பராந்தகப்பள்ளி வேளானாஇன நக்
3. கம்புள்ளன் றன்பேராற் புள்ளினேரி என்று
4. குளமாக்கிக் கற்கோதிக் குமுழி செய்வித்துக் குறை
5. ப்பணி நின்றது முற்றுப் பெறுத்தான் புள்ளந
6. க்கன் னது செய்த தச்சன் வடுகன் கூற்றன் அ
7. வன் மகன் குறைப்பணி முற்றுவிக்க புள்ளந
8. க்கன் அவனுக்குக் காணியாக அட்டின பூமிப் பள்
9. ளிநாட்டிரண்டு கூற்றிலும் ஊர்குளத்துக்கிழ்
10. தலைநீர் பாடுகால் லொரோ வயல் பதக்

Koviloor Digital Library

11. குநெல்.

5. அய்யம்பாளையம்: வரகுண பாண்டியன் கல்வெட்டு, கி.பி. 870

1. சகரயாண்டு எழுநூற்றுத் தொண்ணூற்றிரண்டு
2. போந்தன வரகுணற்கு யாண்டு எட்டு குணவீரக்கு
3. ரவடிகள் மாணாக்கர் காழத்து சாந்திவீரக்
4. குரவர் திருவயிரை பாரிஸ்வ படாரரையு மியக்
5. கி அவ்வைகளையும் புதுக்கி இரண்டுக்கு முட்
6. டாவவியு மோரடிகளுக்கு சோறாக அமைத்தன
7. பொன் ஐந்நூற்றைந்து காணம்.

6. நெய்க்காரப்பட்டி: வட்டெழுத்துக் கல்வெட்டு - கி.பி. 9-10 நூ.ஆ. -தனிக்கல்

1. பொன்மதிற் புகழிஉம் னெ(ழி)
2. அவனெழிற்றடி துவட்டினத் தென்ன
3. வகோனோடு வொரலனழிதரக் காவனங்
4. கொண்டு பெற்றமேதிச் செம்பியன்
5. செங்கொற்ற முழுதுநடத்திக் கொங்
6. கிளங்கோனை கைரே மேவிய ரேய்
7. தியாதேவஞ்சம்பன்செய்ததும் வய
8. லிரவிமங்க இலைதீ புனற்க் குளங்க
9. ரைத் தேம்புரை புனல்வரந் தொழுகுந
10. றும் மென்மொழிம் மீத் தென்னவந்தான்

7. கப்பலூர்ப்பட்டி - கொங்குச்சேரன் - கோக்கண்டன் மாந்தரன் - கி.பி. 9-10 ஆம். நூ.

கல்வெட்டு:

1. ஸ்ரீகோக்கண்
2. டன் மாந்தர
3. னுக்குச் செ
4. ல்லா நின்ற
5. யாண்டாறு
6. இவ்வாண்டு
7. பெருமாள் கி
13. ளான் கூத்தன்
14. காடனிரத தியா
15. ன்நெருப்பறை
16. யாசாரிகள் மகள்
17. இரததி இரதி
18. யாறை நசையாணி
19. யுந் தாயரையு

Koviloor Digital Library

8. ழ் வாழ்ந்தும
9. ழ நாட்டான்மூர்
10. க் கூற்றத்துக் கீ
11. ழ் கூற்றில் புன்
12. கம்பாடி வேள்
20. ஞ்சாத்திச் செ
21. ய் வித்த கிண
22. றும் வட்டு
23. ம்

8. தாமரைக்குளம் - கொங்குச் சோழர் கல்வெட்டு - கி.பி. 1192 - (தனிக்கல்)

முன்பக்கம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப
2. ரகேசசரிபன்மர
3. ாந திரிபுவநசக்ர
4. வத்திகள் ஸ்ரீவீ
5. ரசோழ தேவர்கு
6. த் திருவெழுத்திட்
7. டுச் செல்லாநின்ற
8. திருநல்லியாண்
9. டு ஒந்பதாவது ை
10. வகாவி நாட்டு அம
11. ரபுயங்கச் சதுர்வே
12. திமங்கலத்து போ
13. சி அரிதாஸந் பொந்
14. வில்லியாந ஸ்ரீகாழி
15. ப் பிள்ளையேந் பூமி

பின்பக்கம்

16. திருத்தி ஐன்னூ
17. ற்றுவகுலதலை
18. வசக்க லெந்று
19. பேரிட்டேந் சீகாழி
20. பிள்ளையேந்
21. ஐன்னூற்று
22. வர் ராக்ஷ

9. சித்தர்கள் நத்தம் - நடுகல் - கி.பி. 1296

முன்பக்கம்

1. கோமாறபன்மர
2. ான திருபுவன சக்கரவத்திக
3. ள் எம்மண்டலமுங் கொண்
4. டருளிய ஸ்ரீகுலசேகர தேவற்கு
5. யாண்டு உயஅ வது சோழகு
6. லாந்தகனில் பெருவழியி
7. லே நடந்து வழிநடப்பார்
8. ஆள்பட பலநாளும் கடித்
9. த பெருங்கடுவாய் புலியை
10. மாடக்குளக்கீழ் மதுரை சீவல்ல

Koviloor Digital Library

11. வப் பெரும்பள்ளிக்கு பள்ளிச்
12. சந்தம் பாகனூர் கூற்றத்துப் பொ
13. ருந்தலான தேவேந்தர வல்ல
14. வ புரத்து வீரக்கொடியாரில் குன்றாத
15. ான் தேவப் பெருமானப் புலி
16. யை தனிச்சொட்டை கொ
17. ண்டு களத்திலே பட கொன்
18. று தானுமூரிலே வந்து படுமை
19. கயாலவனைக் கல்லிலே வெ
20. ட்டி நாட்டு வித்தோமிந் நகரத்
21. தோம்

பின்பக்கம்

22. இவன் மகன் வலங்கை நாராய
23. ணதேவனுக்கு உதிரப்பட்டியாக இட்ட
24. நிலம் கருப்பூருடையார் கூற்றில் கரம்பு
25. க்கு மேற்கு மண்டலசுவாமி கூற்று
26. க்கு கிழக்கு நடுவுபட்ட தென்கரை
27. யில் நிலம் ஒருமாவரை இது இவனுக்கும் இவன்
28. வற்க்கத்தார்க்கும் சந்திராதித்தவற் இ
29. றையிலியாக கல்வெட்டி குடு
30. த்தோம் இந் நகரத்தோம்

10. தாண்டிக்குடி – குலசேகரபாண்டியன் கல்வெட்டு – கி.பி. 1280

கல்வெட்டு

முன்பக்கம்

1. ஸ்ரீ எம்மண்
2. டலமுங் கொண்ட
3. ருளிய குலசேகரதே
4. வர்க்கு யக யெதிராவ
5. து மலைமண்டலத்து
6. ஐய்யப்பொழில் பேரூ
7. ரான மணலூரோ
8. முந் தான்றிக்குடி

10. ல் நாங்கள் முன்னா
11. ளுள்ள இன்னாமயு
12. ம் பகையும் அறுத்த
13. ந்து கல்லுவெட்டி நா
14. ட்டினபடியாவது இர
15. ண்டுரை மிஞ்சின
16. ஊரை இரண்டு ருங்க
17.
18. .... மகா. . . .
19. . . . .
20–. . . ம. இர.. . . .
21. டு . . . பகை செய்
22. தான் தங்களம்மைக்
23. கு தானே மிணாளன்
24. இப்படி சம்மதித்து
25. இக்கல்வெட்டி நாட்டி
26. நோம் தான்றிக்குடி
27. ஊரோமும் மண
28. லூ ரோமும் இவ்விரண்
29. டு ரூங் சொல்ல இக்க
30. ல்லு வெட்டினேன் மயிந்தி
31. ரமங்கலத்தில் கல்தச்சரி
32. யான்.

11. ஆத்தூர் ஏரிக்கல்வெட்டு -கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. இவ்வேரி ரா
3. ஜராஜன் அழ
4. கம் பெருமாள்
5. திருநாமம்

Koviloor Digital Library

12. சித்தையன்கோட்டை: - சிவன்கோயில் கல்வெட்டு - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு பதினொன்றாவது நாள் நானூற்றினாள் மது . . . . எழு. . . . .
2. ப்புபோத்தி அஞ்சாதபெருமானான சேதிராயன் இவன் பிதா போத்தியான் சேதிராயன் பேரால் ஆற்
3. றூர் நாட்டு ஆற்றூரான எறிவீரதளத்து மேல்பால் எழுந்தருளுவித்த சேதிராயீ ஈஸ்வரமுடையாற்கு திருப்படி
4. மாற்றுள்ளிட்டு வேண்டு நித்த நிமந்தங்களுக்கு மே னெடுங்களநாட்டு ஆலங்குளத்து வடபால் வீரபுரந்தரன் கு
5. ளத்துக்குக் கீழெல்லை நெடுங்களநாட்டு செட்டிபிராங்காட்டுக்கு
6. மேற்கும் தென்னெல்லை கோரைக்குளத்தி . . . . .

13. கண்ணாபட்டி - சிவன்கோயில் வணிகர்கல்வெட்டு - கி.பி. 13ஆம் நூற்றாண்டு

கல்வெட்டு

1. னத்துக்கும் பலபடி நிமந்தங்களுக்கும் பதினெண் விஷையமும் மதுரமாந
2. கரமும் நாலு நகரமும் இட்டு வீசிவட்டை நடந்து சமையதன்மை இனிது
3. நடாத்துகின்ற பதினெண் விஷையத்தோமும் அமைந்து வைத்துக் குடுத்
4. த சாரிகையாவது கிழக்குப்போம் பொதிக்கு மதுரைஉதைய ஈசுரமுடை
5. ய நாயனாற்குப் பொதிக்கு – ஒரு புதுக்காசும் கண்ணுடை விண்ணகர் எம்பெ
6. ரு மானுக்குப் பொதிக்கு அரைப்புதுக்காசும் இரண்டு பொருளுக்குங் கிழ
7. க்கு நோக்கிப் போகிற பொதிகளிலே கொள்வதாகவும் இப்படி சம்மதித்து க
8. ல்வெட்டி குடுத்தோம் நான்கு திசை தேசித் திசைவிளங்குகின் . . . .

Koviloor Digital Library

14 போரூர் - கோடைமலை - கல்வெட்டு - கி.பி. 14 ஆம் நூற்றாண்டு

கல்வெட்டு

1. தம்பிரானார் சீபாதத்துக்கு பேராலூர் ஊரோம் எங்களில் இசைந்து கல்
2. வெட்டிக்குடுத்த பரிசாவது எங்களை முன்னாளிலே பேராலூரின் நின்றும் இ
3. ரண்டு மன்று பரியாயமாக வெட்டிக் கடத்தி ஊருங்காணியும் அனுபவித்து எங்
4. களுக்குப் புறவாய்ப் போத்த பகைய்குடியான வெபிலன் உட்பட்டாரையு
5. ம் இவ்வூரில் நின்றும் வெட்டிக் கடத்திவிட்டு இவர்களுக்கு இடைக்கரை
6. பூண்டியாகக் குடுத்தளுளி எங்களுக்குப் பேராலூருந் தந்தருளு கையில் தம்பிரானார் திருவங்
7. கிளசமுள்ள அளவும் எங்கள் வங்கிழசமுள்ள அளவும் சிபாதம் தப்பாமல் பணிவிடை செய்வோம்
8. சிபாதம் தப்பினோமாகில் எங்களைக் கருவுறுதியாக வெட்டுவித்துப் போகிட்டருளுவர்
9. எங்களிலே சிலர் சிபாதம் தப்பில் நாங்களே பிடித்துக் கொண்டு நாயனார் சிபாத்திலே
10. வெட்டிக் குடுப்போமாகவும் எங்களில் இந்த அறுதியிடுகையில் இவ்வறுதி தப்பினவன்
11. . . . . . க்குப் பிறந்தோமாகவும் கல்வெட்டிக் குடுத்தோம்
12. ளும் மனைவென்றி கொண்ட பெருமாள் மன்றாட்டியும்
13. . . . . . புல்ல . . . . க. . . . மாள் .. . . கொக்கியும் எழுத்து.

15. பழனி -அரசு அருங்காட்சியகத்திலுள்ள தனிக்கல் - கி.பி. 1541

முன்பக்கம்

1. ஸ்வஸ்திஶ்ரீ மஹாம
2. ண்டலேசுரன் அரியரா
3. யவிபாடன் ஶ்ரீவீர அச்சுத
4. ராயர் காரியத்துக்குக் கட
5. வரான வாரணவாசி வரதப்

Koviloor Digital Library

6. பண்ணகன் ஊழியத்து
7. விப்ர குலதீபன் தெம
8. ாசையன் கொங்குமண்
9. டலத்து நரையனூர் நாட்
10. டு ராசராச புரத்திலிருந்து
11. இராச்சியம் பண்ணுகை
12. யிற் சென்ற கலியுகசகா
13. ற்தம் 1463க்கு
14. மேல் பிலவ வருஷம் கா
15. ற்திகை மாத ய மேற்ப
16. டிலூரில் தளவாய் விரு
17. ப்பையநாயக்கர் பருவ
18. தக நாயக்கற்கு இரத்தக்கொ
19. டை சறுவமானிபங்குடு
20. த்த பரிசாவது இற்றைநா
21. ள் இவரிட சிறிய தகப்பன்
22. மல்லைய தேவனார் நீலகி
23. ரிமலையிற் துட்ட நிக்கிற
24. ஹம் பண்ணுவதாக நாம்
25. அனுப்புகையில் அவன்
26. வினை முகத்தேறியு யித்
27. தஞ்செய்து சமர்பூமியில்
28. மரண பாகையினாலே
29. இவர்க்கு நாம் கற்போ
30. ட்டுக் குடுத்தது தெ
31. ன் பொங்கலூற்கா
32. நாட்டு ஆலங்கய
33. த்துக் காலப் பள்ளி

வலப்பக்கம்

34. ஆலங்ை
35. கயத்து
36. தலைவ
37. யல் இரு
38. பதுமா
39. நிலமுட்
40. பட குடுத்த
41. து காணி
42. யான கோட்டைத்
43. ட்டைத்

Koviloor Digital Library

44. துறையி
45. ந்தக் கோ
46. ட்டைத்
47. துரைக்
48. கெல்லை
49. கிழக்குமே
50. ற்குத் தெற்
51. கு வடக்கு
52. நாற்புரங்
53. கலுங்கு
54. கரையிற்கு
55. வடக்கு
56. தராகப்
57. பட அஞ்சு
58. கல்லுக்கு
59. ட்பட்டந
60. ன் செய்பு
61. ன் செய்ம
62. லையாறு
63. மான்படு
64. காடு மீன்ப
65. டு அணை மே
66. ணோக்கிய
67. மரங்கீணோ
68. க்கிய கிண
69. று தொடிகை
70. பயிர் மற்று
71. ம் உண்டா

(பின்பக்கம்)

72. சைகலக வற்கத்துக்கு
73. ங் கற்தனாக இதுலுண்
74. டான ஆயமலம் பமு
75. த்திரை புகுத்தி விசேஷவிக்
76. கிறையும் வெட்டிகை கா
77. ணிக்கை யுள்வரி பிற
78. வரி மற்றும் எவ்வகைப்
79. பட்ட சகலாதாயமும்
80. உம்பிளிகையாக இவர் பிள்ளை
81. பிள்ளை தலைமுறை சந்தி
82. ராதித்தவரைக்கு அனுப
83. விக்கக் கடவராகவும்
84. இப்படிக்கு யாதோறு
85. இடையூறு பண்ணி
86. னவர் விலகினவ
87. ர்கள் கெங்கை கரை
88. யிலே காராம் பசுக்களை
89. யும் பிராமணரையும் அ
90. சுவங்களையும் ஸ்ரீகளையு
91. ம் பாலரையு மாதா பிதா

Koviloor Digital Library

92. வையுங் குருவையுங் கொ
93. ன்றவர்கள் புகுந்த நரகம்
94. புகுதக் கடவாராகவும் இந்
95. தக் கல்வெட்டு சாதன
96. த்துக்கு வாசகப்பிழை வரி
97. மாற்று எழுத்துக்குற்றம்
98. சொற்குற்றமற்று மெவ்வ
99. கைக் குற்ற முண்டாயினு
100. ங் குற்றமல்லக் கடவ
101. தாகவும் இப்படி சம்மதித்து
102. இந்த யிரத்தக் கோடையு
103. ம் பிளிகற் போட்டுக் குடுத்த
104. மைக்குத் தெமாசையன்
105. பறுவதக நாயக்கற் குடை
106. இப்படிக்கு வரதப்ப அ
107. ண்ணகள் கடை கூட்டுக்க
108. ணக்கு வேலாயுதர் சாட்சி

(இடப்பக்கம்)

109. இரராபுரம்
110. காணிக்கு
111. சங்கரப்ப
112. யன்சாட்சி
113. பட்டணசு
114. வாமி சிம்ம
115. யன் சாட்சி
116. ஆலங்கைய
117. ம் வேளாளர்
118. பவளரில் பெ
119. ரியணன் ஆ
120. ள்வார் சாட்சி
121. கணக்கரில்
122. நல்லணன்
123. சின்னார்
124. சாட்சி
125. வெக்கிலி
126. யாற்பாவல
127. ஏற நாகமுத்
128. த நாயக்கர்
129. சாட்சி வேட
130. ரிற் சின்னோ
131. ப நாயக்கர்
132. சாட்சி இந்தக்
133. கல்வெட்
134. டுக்குப் பிளை
135. ....
136. . . . .
137. ....
138. ....
139. கடற்றூற்
140. கணக்கு
141. மாடல கோ
142. த்திரத்தில்

143. இளைய நயி
144. னார் அவினா
145. சியப்பன்
146. எழுத்து

16. நத்தம் – அன்னதான மடம் கல்வெட்டு – இலிங்கம நாயக்கன்கோட்டை கி.பி. 1571

கல்வெட்டு (முன்பக்கம்)

1. அன்னதான
2. மடத்துக்குச் சிலாதா
3. தனப் பட்டையம் 2
4. சொஸ்த்தஸ்ரீ சாலிவாகனச
5. கார்த்தம் 1571 கலிய
6. த்தம் 4750 இதன் மே
7. ல்ச் செல்லா நின்ற விரோதி
8. கார்த்திகை சோம
9. வாரமும் திறிதிகையும் மூல
10. ா நஷசேத்திரமும் கூடிய சுபதி
11. னத்தில் யாதவகோத்திரெ. . .
12. ாப் பவராகிய தொந்திலிங்
13. கய நாயக்கரவர்கள் புத்திரன்
14. ரர் முத்திலிங்கய நாயக்கரய்ய
15. னவர்கள் வேலன்மடம் அன்ன
16. தான மடதர்ம சாதனம் பண்
17. ணிவிச்சபடி சாதனமாவது
18. பூதகுடி கிராமம் பள்ளபட்டி
19. ப் பனங்குடிக்குளம் இந்தநஞ்
20. சைபுஞ்சை எல்லைக்கு விபரம்
21. பூதகுடி மலை நாளிக்கல் காயா
22. த்திக் கலுங்கல்ப் பாறை இரக்
23. கத்தில் ஈசானிய மூலை கட்டு
24. க்கால் உசிலைமரம் அக்கினி மூ
25. லையில் தொங்காளனை வடக
26. ரை நிருதி மூலையில் ஆத்தோரத்
27. தில் கொப்பையம்பட்டி எல்லை
28. ஆத்திமரம் வாய்வுமூலைக் குளத்
29. துள்வாய் வேப்பமரம் இந்த நான்

Koviloor Digital Library

(வலப்புறம்)

30. கு எல்லை
31. க்குள்ளி
32. ட்ட சூல
33. க்கல்ப்
34. பத்தொ
35. ன்பதுக்
36. குள்ச் சே
37. ர்ந்தநஞ்
38. சைபுஞ்
39. சையி
40. ல் தேவ
41. தாயம்
42. விறுமத
43. ாயம் ம
44. ட தர்மம்
45. நீங்கல
46. ாக புஞ்
47. சைவி
48. ரையடி
49. . . .
50. . . . .
51. நஞ்சை
52. செய்
53. உய
54. கதி
55. ல்ச் சே
56. சற்ந்த
57. அஷ்ட
58. ட போ
59. கதே
60. சசுவ
61. ாமிய
62. ங்கமும்

(இடப்பக்கம்)

63. பன் ஆ
64. சந்திரா
65. ர் த்தவர்
66. தாகிய (இ)
67. ந்தர்ம
68. பரிபா
69. லனம்
70. பண்ணி
71. க்கொ
72. ண்டுவ
73. ருவரா
74. கவும் இ
75. ந்தத்த
76. ர்மம் ப
77. ரிபால
78. ணம்ப
79. ண்ணி
80. னபே
81. ர்க்கு
82. அஷ்சு
83. வமே
84. தயா
85. கபல
86. ன் விக
87. ாதம்ப
88. ண்ணி
89. னபேர்
90. கெங்கை
91. கக் கரை
92. ரயில்க்
93. காராம்
94. பசுவை
95. வயிம்மி
96. சைபண்
97. ணினப
98. லன்.

Koviloor Digital Library

படங்கள்

புதிய கற்காலக் கருவிகள் – பழனிப்பகுதியில் கிடைத்தவை



முதுமக்கள் தாழிகள் – மானூர், ஒத்தையூர் பகுதிகளில் கிடைத்தவை



தாண்டிக்குடியில் கிடைத்த சூதுபவள மணிகள்

Koviloor Digital Library

தமிழ்–பிராமி கல்வெட்டுகள் உள்ள சித்தர் மலை – மேட்டுப்பட்டி

'அமணன் மதிரை அத்திரன் உறை உதயனஸ' என்ற தமிழ்–பிராமி கல்வெட்டு, மேட்டுப்பட்டி

கற்படுக்கைகளும் தமிழ்–பிராமி கல்வெட்டுகளும் மேட்டுப்பட்டி



நந்திநாதர் திருவடிகள் விக்கிர சோழபுரத்து செட்டிப்பிள்ளை அமைத்ததைச் சொல்லும் 13ஆ ம் நூ.ஆ. கல்வெட்டு, மேட்டுப்பட்டி

Koviloor Digital Library



துவாரபதி வேளான் அமைத்தமடையும், நத்தம் கண்மாயும் கி.பி. 9–10 ஆம் நூ.ஆ.



புள்ளிநேரி குமுழி அமைத்த மரம் சோழநாட்டு இடவைப் போரையும் சொல்லும் கல்வெட்டு. இளைமநாதபுரம் கி.பி. 9 ஆம் நூ.ஆ.

சமணப் பள்ளியும், தீர்த்தங்கரர் திருமேனியும், அயிரைமலை அ–யம் பாளையம்

Koviloor Digital Library



வழிபாட்டில் உள்ள முற்காலப் பாண்டியர் நடுகல், உலுப்பக்குடி



சித்தையன் கோட்டை சிவன்கோயில் – இரு தோற்றங்கள்

Koviloor Digital Library



சித்தையன் கோட்டை அஞ்சாத பெருமாள் கல்வெட்டும் நந்தியும்

பிற்காலப் பாண்டியர் நடுகல்
சித்தர்கள் நத்தம்

நடுகல், அத்திமரத்து வலசு,
அருங்காட்சியகம், பழனி

Koviloor Digital Library

நத்தம் சிவன் கோயில் முகப்புத் தோற்றம்



நத்தம் சிவன் கோயில் முகப்புத் தோற்றம்



முருகன் பிறப்புக்கதை காட்டும் ஓவியம், நத்தம் சிவன் கோயில்

Koviloor Digital Library



முருகன் பிறப்புக்கதை காட்டும் ஓவியங்கள் நத்தம் சிவன் கோயில்

Koviloor Digital Library



அன்னதான மடம், நத்தம்



அன்னதான மடம்
கல்வெட்டு சகம் 1571
கி.பி. 1649

லிங்கம நாயக்கர்
கல்வெட்டு கி.பி. 1791,
நத்தம் சிவன் கோயில்

Koviloor Digital Library

நத்தம் கோட்டை

திண்டுக்கல் மலைக்கோட்டை, பொதுத் தோற்றம்

Koviloor Digital Library

திண்டுக்கல் கோட்டை வாயில்

திண்டுக்கல் கோட்டை கொத்தளம்

Koviloor Digital Library

திண்டுக்கல் கோட்டை பீரங்கி

திண்டுக்கல் மலைக்கோயில்

திண்டுக்கல் பெயருள்ள கல்வெட்டுப்பகுதி

Koviloor Digital Library



பெருமாள் கோயில், தாடிக்கொம்பு

Koviloor Digital Library

நடராசர் திருமேனி, கி.பி. 10 ஆம் நூ.ஆ., தாமரைக்குளம்

Koviloor Digital Library

முருகன் தெ–வானை திருமேனிகள், பழனிப் பகுதியில் கிடைத்தவை

அ–யனார் திருமேனி – பழனிப் பகுதியில் கிடைத்தது

அ–யனார் சிற்பம், மட்டப்பாறை – அரசு அருங்காட்சியகம்

Koviloor Digital Library

பழனி மலை பொதுத் தோற்றம்



நிலக்கோட்டைப் பகுதியில் கிடைத்த ஒரு சாமி பகோடா காசுகள்

Koviloor Digital Library

திண்டுக்கல் மாவட்டத் தொல்லியல் நிலைகள்



படம் : செல்வி ஆர்.யமுனாராணி, ஆய்வு மாணவி, தொல்லியல்துறை